# பூக்கள் பூக்கும் தருணம்



அருணா ஹரி

## ஆசிரியரின் பிற வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | திருமகள் தேடி வந்தாள் | 50.00 |
| 2. | வீணையடி நீ எனக்கு | 50.00 |
| 3. | உன்னிடம் மயங்குகிறேன் | 125.00 |

# பூக்கள் பூக்கும் தருணம்

## 1

‘பாக்யலெஷ்மி குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸ்’ என பொன்னிற எழுத்துக்கள் மின்னிய பெரிய வளாகத்தினுள் சற்றும் பொருத்தம் இல்லாமல் ‘ஸ்கூட்டி’ வந்து நின்றது. அதிலிருந்து சுடிதார் அணிந்த பெண் இறங்கினாள். சீராக வெட்டப்பட்ட புல்வெளியை கடந்து கம்பீரமாக நின்ற அந்த கட்டடத்தினுள் நுழைந்தாள்.

வரவேற்பாளினி புன்னகைத்தாள். தன் விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தாள்.

''மேடம்! உங்களை தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். சார் காலந்தவறாமையை சரியாய் கடைபிடிப்பவர். சரியான நேரத்திற்கு நீங்க வந்து விட்டீர்கள். உள்ளே போங்க.''

''நன்றி'' கண்ணாடிக் கதவைத் திறந்தாள். இதமான குளிர்காற்று முகத்தை வருடியது. தன்னம்பிக்கை ஓர் இனிய கம்பீரத்தைக் கொடுக்க உள்ளே அடி எடுத்து வைத்தாள்.

''வணக்கம் சார்'' மரியாதைக்குரிய தோற்றத்துடன் இருந்தவர் புன்னகை மிளிர நின்றிருந்தவளை ஆழ்ந்து பார்த்தார்.

''நான் மீரா கன்ஸ்ட்ரக்ஷனில் இருந்து வருகிறேன்'' என்றவளிடம் புன்னகை பூக்க ''இத்தனை சிறு பெண்ணாய் உன்னை எதிர்பார்க்கவில்லை'' என வெளிப்படையாய் தெரிவிக்க... ''கண்டிப்பாய் எங்கள் வேலை உங்களை பெருமிதப்பட வைக்கும்.''

''ஒன்றும் சொல்லாமல் அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

பின் ''உட்காரம்மா'' என்றார்.

நன்றி சொல்லி அமர்ந்தாள். நுனி நாற்காலியில் அமராமல் நன்கு சாய்ந்து நிமிர்ந்து அமர்ந்தவளின் கம்பீரம் பெண்மையின் நளினத்துடன் மரியாதையுடன் ரசிக்கத் தூண்டியது.

''ம்; சொல்.''

''சார்! நீங்க எங்கள் பைலை பார்த்து இருப்பீர்கள். அதில் நாங்க சொல்லாத இன்னொரு சிறப்பான விஷயம் - குறைந்த கால அவகாசத்தில் தரமான கட்டடம் கட்டித் தருவோம்.''



''ஆனால் கேட்டிருக்கிற தொகை மற்றவர்களைவிட அதிகமாய் இருக்கிறதே?''

''சார்! தரத்தில் நாங்க எந்த சமாதானமும் செய்து கொள்வதில்லை. தர முத்திரையிடப்பட்டப் பொருள்களை பயன்படுத்தும் பொழுது கொஞ்சம் விலை அதிகம் ஆகும். ஆனால் அதன் உத்திரவாதத்திற்கு முன்னால் மற்றவை எல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடும். பொருள்களின் விலைகளும் கட்டி முடிக்கப்படும் வரை ஒரே நிலையில் இருக்கப் போவதில்லை. அவற்றையெல்லாம் திட்டமிட்டுதான் நாங்கள் தொகையை நிர்ணயித்து இருக்கிறோம். மேலும் குறித்த காலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டால் அதுவே உங்களுக்கு பெரிய இலாபத்தை ஈட்டித் தரும்.''

''ம்! மனம் கவரப் பேசுகிறாய்.''

''அப்படியானால் புது ஒப்பந்தத்தை எங்களுக்கு தருகிறீர்களா?''.

''பொறு! உன் பெயர் கூடத் தெரியாது.''

''மன்னிக்கணும் சார்! நான் நித்யரஞ்சனி - ஆர்க்கிடெக். என் விசிட்டிங் கார்டில் அறிந்து இருப்பீர்கள் என எண்ணி விட்டேன். மீரா கன்ஸ்ட்ரக்ஷன் ஹெட்.''

''பார்த்தால் கல்லூரிப் பெண்ணைப் போல் இருக்கிறாய்!''

''என்னை நம்பி ஐம்பது கோடி ரூபாய் ப்ராஜெக்ட்டை எப்படி கொடுக்கிறதுன்னு யோசிக்கிறீங்களா?''

'சட்டென எல்லாவற்றையும் புரிந்து கொண்டு விடுகிறாள்; கெட்டிக்காரப் பெண்தான்.'

"யோசிக்கணும்."

"நல்லா யோசிங்க! எங்கள் செயலை, வேலையைப் பார்த்து விட்டீர்கள் என்றால் நீங்கள் வேறு எங்கும் போகவே விரும்ப மாட்டீர்கள்."

"பார்க்கலாம்; அவசரப்பட்டோ, பரிதாபப்பட்டோ எடுக்க வேண்டிய முடிவல்ல இது. எங்கள் போர்டு மெம்பர்களுடன் யோசித்து எடுக்க வேண்டிய முடிவு."

"நன்றாக யோசித்தே சொல்லுங்கள் சார்! எங்கள் நிறுவனத்தின் முதல் குறிக்கோளே முதலில் யோசிக்க வைப்பது தான். இது எங்கள் நிறுவனத்தின் 'கேட்லாக்' இதை முதலில் பாருங்கள். புதிய கட்டடத்தின் மினியேச்சர் மாடலின் பல்வேறு தோற்றங்களை புகைப்படமாய் எடுத்துத் தயாரித்த 'கேட்லாக்' இப்போது இவை வெறும் மாடல்தான். வருங்காலத்தில் இவை எல்லாம் நிச்சயமாய் கட்டடமாய் மாறும்."

கண்களில் கனவு மின்னப் பேசியவளைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அதே கனவு! அதே உறுதி! சாதிக்கும் மனோ திடம் அவர் முன் மீண்டும் தெரிந்தது.

"அடுத்த வாரம் வந்து பாரேன்."

அதற்கு மேல் நித்யா அங்கே நிற்கவில்லை. தன்னுடைய 'கேட்லாக்' ஃபைலை மட்டும் கொடுத்து விட்டுக் கிளம்பினாள். உலகில் எதுவும் சுலபமாய் கிடைத்து விடுவதில்லை. போராடி முயன்று, நேர்வழியில் சுயமாய் உயரும் பொழுது கிடைக்கும் சந்தோஷத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை. நித்யா ஜெயிக்கப் பிறந்தவள் அல்லவா? கஜினி கொள்ளையடிக்கவே பதினாறு முறை முயன்ற பொழுது அவள் நல்ல விஷயத்திற்கு



முயல்வதை விட்டு விடுவாளா என்ன? மறுவாரம் அவள் அங்கே சென்ற பொழுது அவரை பார்க்க முடியவில்லை. அவசர வேலையாய் வெளிநாடு சென்று இருந்தார். அடுத்த முறை சென்ற பொழுது போர்டு மீட்டிங்கில் இருந்தார். வெகு நேரம் காத்திருந்து விட்டு அவரைப் பார்க்க முடியாமல் தன் அபார்ட்மென்ட்டிற்குத் திரும்பினாள்.

"என்ன நித்யா? காயா? பழமா?"

"ம்! கனிய கொஞ்ச காலமாகும் ரேகா."

"உன் நம்பிக்கைக்கு என் வாழ்த்துக்கள்!"

அவள் உதட்டைப் பிதுக்கிக் கேலியாகச் சொன்னதை நித்யா பெரிது படுத்தவில்லை. மேலும் இரண்டு முறை அந்த அலுவலகத்திற்கு சென்று வந்தாள். அவள் தளராமல் சென்று வருவதைப் பார்க்கப் பார்க்க ரேகாவின் புன்னகை கேலியாய் விரிந்தது. "பேசாமல் வேறு கம்பெனியை நீ போய் பார்க்கலாம்."

"இவர்கள் வேலை மட்டும் நமக்குக் கிடைத்து விட்டால் நிச்சயம் நாம் வெற்றியின் முதல் படிக்கட்டில் ஏறியது போலத்தான். அதனால் அவ்வளவு சீக்கிரத்தில் என் முயற்சியை விடுவதாய் இல்லை."

"ஆனாலும் உனக்கு எருமை பொறுமை ஆகாது."

"சூ! ரேகா என் அருமை நித்யாவைப் பற்றி நீ என்ன சொல்கிறாய்?" என்றவாறு பரத் அங்கே வந்தான்.

"எருமை, இல்லையில்லை... அருமையைப் பற்றி தான் சொல்லிக் கொண்டிருந்தேன் பரத். உன்னை மாதிரி இவளை கண்ணை மூடிக் கொண்டு சப்போர்ட் பண்ணும் ஆள் இருப்பதால்தான் இப்படி வழவழ...

கொழகொழன்னு இவள் இருக்கிறாள். மோசமான உலகத்தைப் பற்றி இன்னும் சரியாய் புரிந்து கொள்ள வில்லை.''

''என்ன ரேகா இன்னும் நீ சாப்பிடவில்லையா? வீட்டிலிருந்து அம்மா செய்த நெய் அதிரசம் கொண்டு வந்திருக்கிறேன். போய் சாப்பிடு. அதனால் எரிச்சல் அடங்கும்.''

''சீ போடா! எனக்கு கோபம் ஒன்றும் இல்லை; அதனால் நீ பேச்சை மாற்றாதே. போ போ! ஏமாறுவதற்கு தயாராய் நீங்கள் இருக்கும் பொழுது எனக்கு என்ன வந்தது? உன் அதிரசத்தை அருமை நித்யாவிற்கே கொடு. அவளுக்குப் பிடிக்கும் என்று கொண்டு வந்துவிட்டு...''

அவள் முடிக்கும் முன் அலைபேசி ஒலிக்க எழுந்து சென்றாள்.

பாக்யலெஷ்மி குரூப் ஆஃப் கம்பெனியிலிருந்துதான் அழைப்பு வந்திருந்தது. செயலாளினி தான் பேசினாள்.

''மேடம்! எங்க எம்.டி. உங்ககிட்ட பேசணும்னு சொன்னார். இருங்க லைனைத் தருகிறேன்'' உடனே பேசினார்.

''மன்னித்துக் கொள்ளம்மா! உன்னை சந்திக்க முடியவில்லை. எங்க போர்டு மெம்பர் யாரும் உனக்கு சாதகமாய் பேசவில்லை. எதற்கும் என் பையன் என்ன சொல்கிறான் என்று பார்க்கத்தான் காத்திருக்கிறேன். உனக்கு வேறு ஏதும் வேலையில்லை என்றால் மாலை ஐந்து மணிக்கு பெசன்ட் நகருக்கு நான் சொல்கிற முகவரிக்கு வர முடியுமா?''



''வருகிறேன் சார்!'' அவர் சொன்ன முகவரியைக் குறித்துக் கொண்டாள்.

குறித்து வைத்த முகவரியைப் பற்றி பரத்திடம் கூறி எப்படிச் செல்வது என விசாரித்து தெளிவாய் திட்டமிட்டு தன் ஸ்கூட்டியில் கிளம்பினாள். சரியான நேரத்திற்கு அங்கே சென்று விட்டாள். வாசலில் இருந்த காவலாளி, 'இன்டர்காம்' மூலம் தொடர்பு கொண்ட பிறகு அவளை உள்ளே செல்ல அனுமதித்தான். பிரம்மாண்ட, ரசனையுடன் கட்டப்பட்டிருந்த அந்த வீடு அவளது கட்டடக் கலை உணர்வை மிகவும் தூண்டுவதாய் இருந்தது. பழமையும், புதுமையும் கலந்தாற் போன்ற கட்டடம் அது. வெளித்தோற்றத்தில் இந்திய கட்டடமைப்பையும், பாரம்பரியத்தையும் வெளிப்படுத்துவதாய் உள்ளமைப்பு நவீன வசதிகளுடன் வெளிநாட்டு கட்டடமைப்புடன் விளங்கியது. புன்னகையுடன் வரவேற்க வரவேற்பாளினி இல்லாத மிக அலங்காரமான வரவேற்பறை. கார்ப்பெட்டில் கால்கள் மெத்தென்று பதிந்தன. கார்ப்பெட், சர விளக்கு அலங்காரமே கோடி ரூபாய் மதிப்பு பெறும் என அவளால் எடை போட முடிந்தது. அவளை இருக்கையில் அமரச் சொல்லி விட்டுச் சென்ற பணிப்பெண் கண்ணாடி டம்பளரில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள். சுவரில் மாட்டியிருந்த அழகான ஓவியங்கள் அந்த வீட்டினரது ரசனையை பறைசாற்றிக் கொண்டிருந்தன. உட்புற மாடி வளைவிலிருந்து அவன் அவளைப் பார்த்தான்.

கள்ளமில்லா குழந்தையின் வெள்ளைச் சிரிப்பைப் போல பளிரீடும் வெள்ளை நிற சுடிதாரும்... சிவப்பும்,

ஆரஞ்சும் கலந்த துப்பட்டா... 'U' வடிவில் வெட்டப் பட்ட அடர்ந்த மென்மையான கூந்தல். நெற்றியில் மிகச்சிறிய ஆரஞ்சு வண்ணப் பொட்டு. காதுகளில் ஆரஞ்சு வண்ண பெரிதும் இல்லாத, சிறிதும் இல்லாத வளையம். கை, கழுத்தில் 'கலம்காரி' டிசைன் அணிகலன். பொன் சிறிது கூட இல்லாமல் எளிமையாய் தங்கம் போல் ஜொலித்தாள். பச்சை வண்ண கார்ப்பெட்டில் பொதிந்திருந்த கால்கள் ரோஜாவாய் பூத்திருந்தன. 'யாரிந்த நிலாப் பெண்?' 'இவளை பார்த்திருக்கிறேன். எங்கே? புகைப்படத்திலா? ஆனால் அதைவிட நேரில் மிக மிக அழகாய் இருக்கிறாள்.' மெதுவாய் கீழிறங்கி வந்தான்.

''ஹாய்'' சட்டென திரும்பியவள் எழுந்து நின்றாள்.

''நான் வினய். நீ...'' என்றவாறே கை குலுக்க கரம் நீட்ட...

''வணக்கம்'' என கைகுவித்தாள்.

''ஓ! நீ ஹார்டுவேரா?'' - கேலி செய்கிறானோ? அவனைப் பார்க்க முகமோ மிக அமைதியாய் இருந்தது. ''உட்கார்'' என்றவாறே எதிரே அமர்ந்தான். ''நீ இன்னும் உன் பெயரைச் சொல்லவில்லை.'' ''நான்... நித்யரஞ்சனி'' ''அப்படியா! நான் நிலாப்பெண் என்று நினைத்தேன்.''

''என்ன விஷயம்?''

''உங்களைப் பார்க்க அப்பா வரச் சொன்னார்.''

''நவீன உலகம்; இதுவும் சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது. பரபரப்பைத் தேடி உயிர்ப்பை தொலைத்துக் கொண்டிருக்கிறோம்.''



''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? இப்பொழுது உங்கள் வீடு கூட நவீனமாய்த்தான் இருக்கிறது. அதற்காக அதில் உயிர்ப்பில்லை என்று ஆகிவிடுமா? இங்கே இருப்பவர் களுக்கு ஆனந்த அலை அடிப்பது போன்ற உணர்வை அல்லவா ஏற்படுத்துகிறது.''

''ம்! என்ன படிச்சிருக்கே?''

''பி.ஆர்க்.''

''எங்கே?''

''நியூ டெல்லி.''

''நியூ டெல்லி மாடர்ன் கேர்ள் மாதிரி தெரியலையே?''

''........''

''ஸ்கூலும் அங்கேயோ?''

''பெங்களூரு இன்டர்நேஷனல் ஸ்கூல்.''

''மிக அழகாய்த்தான் இருக்கிறாய்; பேச்சில் கொஞ்சம் புத்திசாலித்தனம் தெரிகிறது. இதற்காக நான் எதையும் ஒத்துக் கொள்ளவும் முடியாது; விட்டுக் கொடுக்கவும் முடியாது. வாழ்க்கையில் சாதிக்க வேண்டியது எவ்வளவோ உள்ளது. அதை ஒரு பெண்ணின் காலடியில் போட முடியாது.''

''சார்! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''ஓரளவு புரிந்து கொண்டு விட்டாய் போல. நான் உனக்குத் தெளிவாகவே சொல்லி விடுகிறேன். உன்னை என்னால் மணந்து கொள்ள முடியாது. மன்னித்துக் கொள்.''

# 2

வினய் சீனுவுடன் ஹாஸ்பிட்டலில் அமர்ந்திருந்தான். வந்ததில் இருந்து சீனு மிகவும் பதட்டமாகவே இருந்தான். அவனாகவே ஆரம்பிக்கட்டும் என வினய் அமைதியாக இருந்தான். ஏதோ சொல்ல நினைப்பதைச் சொல்ல முடியாமல் தவிப்பதைப் பார்த்து ''என்னடா? ஏதாவது லவ் அபேஃரா?'' என்றான்.

"ம்" என்பதாய் தலையசைக்க ''சூ! அப்பா கிட்டே பேச பயமா? அதுதான் விசாலிக்குக் கல்யாணம் வேறு ஆயிடுச்சு. லைன் கிளியர் ஆகிவிட்டதே. அப்புறம் என்ன? இதில் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?''

''வினய்! ப்ளீஸ்! எனக்கு எதுவும் இல்லை. விசாலி தான் இப்ப பிரச்சனை.''

''தெளிவாகச் சொல். தங்கை கல்யாணம் இரண்டு நாளுக்கு முன் தானே சிறப்பாக நடந்தது? மாப்பிள்ளை சரியில்லையா?''

''இவள் தான்டா பிரச்சனை! அவர் ரொம்ப பாவம். கல்யாணத்திற்கு முன் அவள் தன் விருப்பத்தை வெளியில் சொல்லாமல் மூடி மறைத்து கழுத்தறுத்து விட்டாள். மாப்பிள்ளையிடம் கல்யாணத்திற்கு முன் தான் இன்னொருவனை விரும்பியதையும் இப்பொழுதும்



அவனை விரும்புவதையும் அவனோடு மட்டும் தான் வாழ முடியும் என்றும் கூறி விட்டாள். எல்லாருக்கும் எவ்வளவு அவமானம்! மாப்பிள்ளை ரொம்ப ஆடிப் போயிட்டார். அவள் விருப்பப்படியே வாழட்டும் என்று சொல்லி எங்கள் வீட்டில் கொண்டு வந்து விட்டுட்டார். எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம் அவ மனசு மாறலை. இனிமேல் செய்வதற்கும் எதுவும் இல்லை. எல்லாரையும் தலை குனிய வைத்து விட்டாள். அவமானத்தால் வெளியில் தலைகாட்ட முடியவில்லை. கோர்ட்டில் வழக்கு பதிவு செஞ்சாச்சு. ஆறு மாசம் கழிச்சு விவாகரத்து ஆயிடும். அவ இப்படி பண்ணுவான்னு கொஞ்சம் கூட நினைக்கலைடா.''

நண்பனின் தோளை தட்டிக் கொடுத்தான். ''வருத்தப் படாதே. இதுவும் கடந்து போகும். சில விஷயங்களைத் தவிர்த்து இருக்கலாம். உன் தங்கைக்கு திருமணத்திற்கு முன் தன் விருப்பத்தைத் தெரிவித்துப் போராடும் தைரியத்தை நீங்கள் யாரும் கற்றுக் கொடுக்கவில்லை. நம் கருத்து நியாயமாக இருக்கும்பொழுது போராடத் தயங்கக் கூடாது. அது அவ்வளவு சுலபத்தில் எல்லாராலும் முடிவதில்லை.''

''நாங்க மட்டும் பாதிக்கப் படலை. தப்பே செய்யாத இன்னொரு குடும்பமும் அவமானத்தில் தலை குனிந்து விட்டார்கள். மாப்பிள்ளையும் சரி, அவர் அப்பாவும் சரி ரொம்பவும் பெருந்தன்மையாய் நடந்து கொண்டார்கள். குறையாய் ஒரு வார்த்தை பேசவில்லை. அவ்வளவு நல்ல மனுஷங்களுடன் வாழ அவளுக்கு கொடுத்து வைக்கவில்லை. ஏன்டா பெண்ணுங்களுக்கு அம்மா, அப்பா நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுப்பாங்க என்று

நம்பிக்கை வரமாட்டேன் என்கிறது? ஒவ்வொண்ணை யும் பார்த்து, பார்த்து எது பிடிக்கும்? எது பிடிக்காதுன்னு செய்கிறவர்கள் கல்யாணம் மட்டும் தப்பாவாய் செய்து விடுவார்கள்?''

''எல்லாவற்றையும் விட சுதந்திரம் பெரிதல்லவா? நல்லது, கெட்டதை புரிந்து கொள்ள வைத்து ஆரம்பத் திலிருந்து சுயமாய் முடிவெடுக்கப் பழக்கி இருந்தால் பிரச்சனை வராது. மாற்றங்கள் வரும் பொழுது தடுமாற் றங்களும் இருக்கத்தான் செய்யும். நிலை நிறுத்திக் கொள்வது அவரவர் திறமை, புத்திசாலித்தனம்.''

''சரிடா! நான் ரொம்ப புலம்பி உன்னையும் வருத்தப் பட வைத்து விட்டேன். உன் வெளிநாட்டுப் பயணம் வெற்றிகரமாய் முடிந்ததா? அம்மா நீ ஏன் கல்யாணத் திற்கு வரவில்லை என்று கேட்டார்கள். அதற்குப் பிறகு இந்த கலாட்டா ஆகியதில் ரொம்ப நொந்து போய் விட்டார்கள். உன்னைப் பார்த்தால் கொஞ்சம் ஆறுதல் அடைவார்கள்.''

''கண்டிப்பாய் அம்மாவைப் பார்க்க வருகிறேன். இன்னும் இரண்டு நாட்களுக்கு முக்கியமான வேலை இருக்கிறது. புது பில்டிங் காண்ட்ராக்ட் சம்பந்தப்பட்ட விஷயம்'' என்றவன் ஏதோ நினைத்து முறுவல் செய்தான். சீனு மன உளைச்சலில் இருந்ததால் அதை சரிவர கவ னிக்கவில்லை. இருவரும் கிளம்பி வெளியே வந்தனர். கார் பார்க்கிங் பகுதிக்குச் சென்ற பொழுது, ஒரு பெண் சற்றே தள்ளாடிக் கொண்டே வந்தாள். நேரே வினய் யிடம் வந்து நின்றாள். எதிரில் இருந்த வண்டியின் மீது சாய்ந்து கொண்டு ''எக்ஸ்யூஸ் மீ! ஹேய்! எனக்கு



லிஃப்ட் தர முடியுமா? என்னோட பாய் பிரண்ட் கவுந்துட் டான். இப்போதைக்கு அவனால் எழுந்திரிக்க முடியாது'' என்றாள்.

''ஒரு நிமிடம் காத்திரு'' என அவளிடம் கூறிவிட்டு வினய் கால் டாக்ஸியை அழைத்தான்.

''சீனு நீ முன்புறம் ஏறிக் கொள். இந்தப் பெண்ணை அவள் சொல்லும் இடத்தில் பத்திரமாய் இறக்கி விட்டு போ'' என்றான்.

''ஹேய்! என் கிட்டே பயமா இல்லே உன் மேல உனக்கு நம்பிக்கை இல்லையா? என்னை அழைத்துச் செல்ல இப்படி பயப்படுகிறாய்? எனி வே தாங்க்யூ! ஸீ யூ.''

அவள் போய் காரில் ஏறிக் கொண்டாள்.

''பசங்க தண்ணியடிச்சாலே அம்மாக்கள் எல்லாம் கோபிப்பாங்க. இப்ப பாரு பொண்ணுங்க, பார், சிகரெட் டுன்னு தைரியமாய் ஊரைச் சுற்றிவிட்டு வீட்டிற்குப் போகிறார்கள்'' என புலம்பிய சீனுவுடன் கார் கிளம்பியது.

'இப்படியும் பெண்கள்!' என எண்ணிய பொழுதே வினய் மனசுக்குள் ஓர் வெள்ளை தேவதை வந்தாள். அன்று 'உன்னை நான் மணந்து கொள்ளப் போவதில்லை' என வினய் அறிவித்த வினாடியில் அரை வினாடி ''என்ன?'' என அதிர்ந்தாலும் மெல்லிய குரலில் மிக அழுத்தமாக ''நான் அந்த முட்டாள்தனத்தை எப்பொழு தும் செய்வதாக இல்லை'' நித்யரஞ்சனி தெரிவித்தாள்.

அவள் முகம் மிக அமைதியாய் இருந்தது.

''எதைச் செய்வதாக இல்லை?'' எனக் கேட்டவாறே மகாதேவன் உள்ளே வந்தார். அவள் எழுந்து நின்றாள்.

''நித்யா! இது என் பையன் வினய்.''

''வினய், இவங்க ''மீரா கன்ஸ்ட்ரக்ஷன்'' ஓனர். நம்ம பில்டிங் கட்ட வாய்ப்புக் கேட்டு வந்திருக்காங்க'' என இருவருக்கும் மாறி மாறி அறிமுகப்படுத்தினார்.

அதைக் கேட்ட மறுவினாடி வாய்விட்டுச் சிரித்தான் வினய்.

சிரிப்பு சத்தம் கேட்டு உள்ளிருந்து வந்தார் ஓர் பெண் மணி.

''ஓ! தரகர் சொன்ன மாதிரியே பொண்ணை இங்கேயே அனுப்பிட்டாரா?'' என்றவர் தொடர்ந்து, ''உன்னை பெசன்ட் நகர் அஷ்டலஷ்மி கோவிலில் தான் பார்க்க வேண்டும் என்று நினைத்தோம். ஆனால் கடவுள் நம் பிக்கை இல்லாத... பெண்... உன்னை தப்பாக... சொல்ல வில்லை... சுயநம்பிக்கைவாதி என்றால்... வீட்டிற்கே அனுப்புவதாகத் தரகர் சொன்னார். அதுதான்...''

''இரு இரு ராஜி! நீ தப்பாய் புரிந்து கொண்டாய். இது தரகர் அனுப்பிய பெண் இல்லை. நம்ம புது ஆபீஸ் கட்ட வந்த பொண்ணு.''

''என்ன?'' என தவித்தவரின் உதவிக்கு வந்தான் வினய்.

''அதொன்றுமில்லையம்மா! அவர் பொண்ணு வரும் என்று சொன்னதிற்கும் ஸ்மார்ட்டாய் இவங்க வந்த நேரத்திற்கும் பொருத்தமாய் இருந்ததால்... இதுதான் பொண்ணுன்னு நினைத்து விட்டோம். எப்படியோ உங்களுக்கு ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டும்.



இதோ! இந்தப் பெண்ணை பார்த்து விட்டீர்கள்! போது மல்லவா?''

''ஆகா! இப்ப தேவதை ததாஸ்துன்னு சொன்னால் நல்லாயிருக்கும்.''

''உனக்கு ரொம்ப ஆசை'' என மெதுவாய் தான் இராஜியிடம் தேவன் சொன்னார் என்றாலும் அது எல் லார் காதுகளிலும் நன்றாகவே விழத்தான் செய்தது. சூழ் நிலை வேறு எங்கோ நழுவிக் கொண்டிருப்பதில் நித்யா விற்கு உடன்பாடு இல்லையோ? என்னவோ? கருமமே கண் ஆயினளாய் ''சார்... என்... வேலை...'' என குறுக் கிட்டாள். அவரும் சட்டென உணர்ந்தாற் போல் ''வினய்?'' என மகனைப் பார்க்க,

அவனோ சற்று யோசனை ஆனான். ''புது நிறுவனம், அனுபவமற்ற சிறு பெண்...''

அவன் முடிப்பதற்குள் நித்யா மறுபடியும் குறுக்கிட் டாள்.

''சார்! நீங்க கூட இளைஞர்தான். உங்களைக் கேட்டு முடிவு சொல்வதாக உங்கள் தந்தை சொல்லவில் லையா? அவர் திறமைக்கும், அனுபவத்திற்கும் உங்களைக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. இருந்தாலும், போர்டு மெம்பர்கள் மறுத்த போதிலும்... உங்கள் கருத்தை அறிய அவர் காத்திருக்கிறார் என்றால் அது உங்கள் மேல் உள்ள நம்பிக்கையால்தான். அதே போல வாய்ப்பு கிடைத்தால் தானே எங்கள் திறமையை நிரூபிக்க முடியும்? படிக்கிற காலத்தில் ஜெர்மன் கம்பெனிக்கு கட்டட டிசைன் கொடுத்து பரிசு வாங்கியிருக்கிறேன். வருங்காலத்தில் எங்கள் கட்டடங்கள் காலத்தை வென்ற

வரலாற்றைப் பேசும். இந்தியாவில் பல பிரபல கட்டு மான நிறுவனங்கள் எங்கள் கட்டட டிசைனைப் பாராட்டி இருக்கின்றன. அவர்களுக்குள் டிசைனை வாங்கிக் கொள்ள போட்டியே நடந்து இருக்கின்றன. ஆனால் நாங்கள் விற்பதற்குத் தயாராய் இல்லை.''

''ஓகே மேடம்! ஒரு வாரம் கழித்து இதைப்பற்றிப் பேசலாம். இப்ப நாங்க முக்கியமான விருந்தாளிக்காகக் காத்திருக்கிறோம்.''

சட்டென முறுவலுடன் எழுந்தவள், ''உங்க முடிவு நல்லதாய் இருக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது. நன்றி! உங்களை சந்திக்க வரும் பெண்ணை பிடிப்பதற்கு வாழ்த்துக்கள்!'' எனக் கூறி விடைபெற்றாள்.

''எப்படியம்மா வந்தாய்? காரில் கொண்டு விடச் சொல்லட்டுமா?''

''நன்றி! ஸ்கூட்டியில் சென்று விடுவேன்.''

''பார்த்துப் போம்மா! ரொம்ப வேகம் வேண்டாம்'' என அக்கறையுடன் சொன்னவரை வினய் வியப்புடன் பார்க்க,

அவளோ மென்மையாய் சிரித்தவாறே ''மிக்க நன்றி! நான் ஹெல்மெட் போடாமல் வண்டி ஓட்டுவதில்லை. வேகம் இருந்தாலும் கவனம் இருக்கும் சார்.''

கார் ஹாரன் ஒலித்தது.

''லட்சுமண் சித்தப்பா வந்தாச்சு.''

எல்லார் கவனமும் அங்கே செல்ல...

வினய் நித்யாவின் அருகே வந்து,



''காத்திருந்தது சித்தப்பாவிற்கு தான் எதற்காகச் சொல்லியிருந்தாலும் இந்த அழகான பெண்ணின் வாழ்த்துக்களுக்கு நன்றி'' என்றான் அவளுக்கு மட்டும் புரியுமாறு.

எதற்கு நித்யா தலை குனிந்து கொண்டாளோ?

அது வினாடி நேரம் தான் பொதுவாய் தலையசைத்து விட்டு நாசுக்காய் கிளம்பினாள்.

''வா லட்சுமண்! இந்தியாவில் தான் இருக்கிறாய். ஆனாலும் வருடம் ஒருமுறை வீட்டிற்கு வருவது கூட அரிதாக இருக்கிறது. ப்ரியா எப்படி இருக்கிறாள்? அவளையாவது அடிக்கடி சென்று பார்க்கிறாயா? இல்லையா?''

''எங்க அண்ணா! வேலையே சரியாய் இருக்கிறது. நான் வீட்டிலேயே தங்குவது இல்லை. மாதம் முழுவதும் எல்.என்.டி. கட்டடம் கட்ட இந்தியா முழுசும் சுத்த வேண்டி இருக்கு. வீடு என்ற ஒன்றின் தேவையே இல்லாதது போல் ஹோட்டல், சைட், என தங்கி ஓடிக் கொண்டிருக்கிறேன்.''

''நீ ஊருக்கெல்லாம் கட்டித் தருவாய்! நம்ம தொழில் விஷயத்தை மட்டும் கண்டுக்கவே மாட்டாய்.''

''எங்கள் நிறுவனத்திற்கு ப்ராஜெக்ட் கொடுக்கிற யோசனை இருந்தால் சொல். நானே முடிச்சு தரேன். ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்துக் கொண்டு நானே தனியா ப்ராஜெக்ட் எடுத்துச் செய்யறது சரியில்லை என்று நினைக்கிறேன். தப்பாய் நினைக்காதீங்க.''

''ச்சு! சும்மா சொன்னேன்டா! உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன?

''இப்ப வந்துட்டுப் போன பொண்ணு நித்யா தானே?''

''அட! ஆமாம்! உனக்கு எப்படித் தெரியும்?''

"டெல்லி காலேஜ் - லே கேம்பஸ் இன்டர்வியூ நான் தான் பண்ணினேன். வெரி ஃப்ரில்லியன்ட் கேர்ள். எங்கள் நிறுவனத்திற்கு இவளை செலக்ட் பண்ணி கையிலே ஆர்டரும் கொடுத்தாச்சு. ஏனோ இவள் வேலை வேண்டாம் என்று கூறிவிட்டாள். ஜெர்மனிக்கு கூப்பிட்டாங்க என்று ஓர் செய்தி வேறு. ஆனால் அங்கும் போகவில்லை போலிருக்கு."

"நம்ம கம்பெனி பில்டிங் கட்டித்தரப் போறாங்க சித்தப்பா."

"வெரிகுட்! தனியாய் தொழில் செய்தால் இன்னும் பெரிய ஆளாய் வருவாள். நல்ல உத்வேகம் உள்ள பொண்ணு நம்ம அம்மா மாதிரியே."

"எனக்கும் அவளோட பேசினப்ப நம்ம அம்மா ஞாபகம் தான் வந்துச்சு."

"ரெண்டு பேரும் ஒரு நிமிஷம் இருங்க! எங்கள் பாட்டிக்கு ஈடு எவரும் இல்லை. தனி பெண்ணாய் அவரைப் போல வாழ்க்கையில் போராடி ஜெயித்தவர் யார்? ஒரு படிப்பறிவில்லாத பெண்மணி வாழ்வின் உசரம் தொட்டது. இன்னும் நம்ப முடியாத கதை போலத்தான் இருக்கிறது. தன்னந்தனியாய் அவுரி பயிர் பண்ணி சாயம் காய்ச்சி தொழில் நடத்தி சாதனை செய்த வெற்றிகரமான பெண்மணி. அவங்களோட ஒப்பிட இன்னும் யாரும் வரலை; வருவதும் கடினம். "பாக்ய லெஷ்மியின்" உழைப்பை, நேர்மையை, கௌரவத்தைக் கம்பீரத்தை துணிச்சலை நான் இன்னும் எந்த பெண் கிட்டேயும் பார்க்கலை."

"சரி, சரி! உங்க உசத்தியான பாட்டியை நான் யாருடனும் ஒப்பிடலை போதுமா? ஏழு தலைமுறை பேர் விளங்க வாழ்ந்தவங்களாச்சே!"



அன்றைய நினைவில் காரோட்டிய வினய்க்கு தெரியாத விஷயமும் ஒன்று இருந்தது. நித்யாவிடம் அவன் ஏதோ சொன்னதும் அவள் அதற்கு தலையை குனிந்து கொண்டதையும் தேவன் பார்த்துதான் இருந்தார். அவர் மட்டும்தான் கவனித்ததாக எண்ணிக் கொண்டிருந்த வேளையில் இராஜியும் அதைப் பார்த்ததை அறிந்து கொண்டார். இருவரும் மௌனமாய் பரிமாறிக் கொண்ட செய்தியை லட்சுமண் நித்யாவைப் பற்றி சொன்ன அபிப்பிராயம் சின்ன ஆசை விதையை விதைத்தது. திருமணத்திற்குப் பிடி கொடுக்காமல் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்த மகனை இந்தப் பூ வசப்படுத்துமா? கல்யாணத்திற்கு டிமிக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கும் அன்பு மகனை காதைப் பிடித்து திருக முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் அருமை பெற்றோரின் ஆசை அந்த நித்திய மல்லியை... இல்லையில்லை... நித்ய ரஞ்சனியை கழுத்தைச் சுற்றுவது தான். ஆனால் பூ எங்கே சுற்றப் போகிறதோ? கழுத்திலா? காதிலா? அது யாருக்குத் தெரியும்? கணக்கு போடுபவனுக்கு தெரிந்திருக்கும்! ஆனால் அவன் சொல்வானா?

# 3

வினய் "மீரா கன்ஸ்ட்ரக்ஷன்" அலுவலகத்தை நாடிச் சென்ற பொழுது ரேகா ஒரு தேளை எடுத்து டேபிள் மேல் போட்டாள்.

''ஏய்! தொட்டு விடாதே! நிஜத் தேள்!''

''ஹேய்! என்னாச்சுப்பா? புதிசா தேள் வளர்க்கிற ஹாபி எங்கும் பரவிக் கொண்டிருக்கிறதா?''

''சூ! பயப்படாதே நித்யா! அன்னிக்கு வீட்டைச் சுத்தம் செய்தப்ப இந்த தேள் மாட்டுச்சு! எதுக்கும் இருக் கட்டும் என்று சின்ன பெட்டிக்குள் பிடிச்சுப் போட்டு வச்சிருந்தேன். நேத்து ஆடிட்டிங் விஷயமாய் போயிட்டு பஸ்ல வந்தப்ப ஒருத்தன் சீட்டு இடைவெளியில் மெது வாய் கையை நீட்டினான்... பாரு...'' என்றவள் சிரித்தாள்.

''என்ன பண்ணினே?''

''ம்! மெதுவா தேளை எடுத்து அவன் கையிலே விட்டேன். அது போட்டுச்சு ஒரு போடு. திரும்ப எடுத் துச் சாதுவாய் உள்ளே வச்சுட்டேன். அவன் வலியிலே துடிச்சான் பாரு... இனிமே எந்த பொண்ணு கிட்டேயும் வாலாட்ட யோசிப்பான்.''

''ரொம்ப ஆபத்தான இடத்துக்கு வந்துவிட்டேன் போலிருக்கு.''

குரல் கேட்டு இருவரும் திரும்பினர்.

''வாங்க சார்! ரேகா இவர்தான் மிஸ்டர் வினய். இவங்க எங்க கம்பெனி ஆடிட்டர் ரேகா.''

''ஹலோ'' என்றவன் உடனே நித்யாவிடம் திரும்பி னான்.

''மேடம்! உங்களுக்கு எங்கள் கட்டடம் கட்ட ஏறக் குறைய அனுமதி கிடைச்ச மாதிரி தான். நீங்க எங்க அலுவலகத்திற்கு மாலை ஆறு மணிக்கு வந்துடுங்க. ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடணும்.''



அந்த சின்ன அறையைச் சுற்றி தன் பார்வையைச் சுழல விட்டான். சிறிய மேசை; மூன்று நாற்காலிகள், ஒரு மடி கணினி என மிக எளிமையாக இருந்தது. அவன் பார்வை அவளிடம் திரும்பிய நொடியில் குளிர்பானம் பேப்பர் கப்பில் நீட்டப்பட்டது. விரைந்து செயலாற்றி யதை வியப்பது போல் புருவம் உயர்த்தினான். பின் நன்றியுடன் பெற்றுக் கொண்டான். அவன் கிளம்பும் சமயத்தில் சாரா உள்ளே வந்தாள். ஸ்கர்ட்டும், டாப்ஸு மாய் வெள்ளைக்கார பெண்ணுக்கு இங்கு என்ன வேலை? என யோசித்த நேரத்தில்...

''சாரா! எங்க நிதியமைச்சர்.''

மறுபடியும் அவன் புருவம் ஏறி இறங்கியது. அவன் சென்ற பிறகு ரேகா கேட்டாள்.

''உன்னை வரச் சொல்லி போன் பண்ணியிருக்க லாமே? ஏன் நேரே வந்தார்? அவர் பார்வையில் ஏதோ சுவாரஸ்யம் தெரிகிறது!''

''நீயா ஏதாவது கற்பனை பண்ணாதே! அவருக்கு பெண்கள் என்றாலே பிடிக்காது போலிருக்கு! எச்சரிக்கை யான ஆள்! பெரிய பொறுப்பை கொடுக்கிறோமே ஆளுங்க எப்படி? அலுவலகம் எங்கே? உண்மை எவ்வளவு? நம் பிக்கைக்குரிய ஆட்களா? என்றெல்லாம் எடை போடத் தான் வந்திருப்பார்.''

''ஆகா! கொஞ்சம் முன்னால் நான் வந்திருக்கலாம்.''

''ஓ! சாரா, நல்லா குல்லா தச்சுப் போட்டிருக்கலா மேன்னு வருத்தப்படறியா? கவலைப்படாதே! சாயந் திரம் போய் தைச்சு போட்டு விட்டே வரலாம்.''

''ஆறு மணிக்கு யார் யார் என்னுடன் வருவது?

''நம் லீகல் அட்வைசர் தீப்தி, சாரா, அப்புறம் பரத் வருவாரா?''

''கண்டிப்பாய் வருவான்.''

பேசிக் கொண்டிருக்கும் பொழுது கைப்பேசி ஒலித்தது.

யாரிது? புது எண்?

''ஏய்! மரியாதையாக பி.எல். ஒப்பந்தத்தை விட்டு விலகி விடு; இல்லாவிட்டால் விளைவுகள் கடுமையாக இருக்கும்'' என முரட்டுக்குரல் மிரட்டியது.

நித்யா தன் குழுவினருடன் தங்கள் தரப்பைப் பற்றிப் பேச கான்பெரன்ஸ் ஹாலில் காத்திருந்தாள். ஏறக் குறைய உங்களுக்கு கிடைப்பது போல் தான் என வினய் சொல்லியிருந்ததால் ஒரு விவாதம் இல்லாமல் ஒப்பந்தம் கையெழுத்துப் போட முடியாது என தெளிவாய் உணர்ந் திருந்தாள். அதற்குத் தயாராய் தான் வந்திருந்தாள்.

வினய்-யின் விழி அசைவை உணர்ந்து நித்யா எழுந்து சென்றாள். ''எங்க போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் உங்களிடம் ஒப்படைக்க விரும்பவில்லை. நானும் அப்பாவும் மட்டும் தான் உங்கள் பக்கம்; பாதி மெம்பர் வழக்கமாய் கொடுக்கும் காண்ட்ராக்டருக்கே கொடுக் கலாம் என்கிறார்கள். இன்னும் சிலர் வேறு புகழ் பெற்ற நிறுவனத்திற்கு தரலாம் என்கிறார்கள். பழைய காண்ட் ராக்டரும், வேறு சில நிறுவன பிரதிநிதிகளும் இங்கே வந்திருக்கிறார்கள். உங்கள் சிறப்பை சரியாய் எடுத் துரைத்து வெற்றியை நீங்கள் தான் நிலை நிறுத்த வேண்டும்.''

புன்னகை மட்டும் புரிந்தாள் நித்யரஞ்சனி.



''ஏய்! எனக்கு டென்ஷனாய் இருக்கப்பா! நீ கண்டிப் பாய் ஜெயிக்க வேண்டும். உன்னை நிரூபிக்க நமக்கு இந்த வாய்ப்பு கட்டாயம் வேண்டும்.''

''ரேகா! பதட்டப்படாதே! நம் டீம் மானேஜர் மிஸ். ஸ்மார்ட் எல்லாவற்றையும் சமாளிப்பார்.''

சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே சாரா மறுபடி யும் மற்றவர்களிடம் நினைவு படுத்திக் கொண்டிருந் தாள்.

''யார், யார் என்னென்ன சொல்லணுமோ, அதைப் பற்றி மட்டும் பேசுங்க; அதிகமாய் அடுத்த விஷயத்தில் நுழைய வேண்டாம். முக்கியமாய் நம் திறமை பளீ ரென்று புரிய வேண்டும்.''

''அதாவது தம்பட்டம் இல்லாத விளம்பரமாய் பேச வேண்டும்.''

''முக்கியமான ஆள் இந்த சந்துருவை இன்னும் காணோமே?''

''வாங்க தனியாய் நிற்காமல் ஒவ்வொருத்தர் மனநிலை எப்படின்னு கவனிங்க. சந்துரு வந்துருவான்.''

மகாதேவன் வினய் உடன் மீட்டிங் ஹாலில் வந்து அமர்ந்தார். புது கட்டடம் காண்ட்ராக்ட் தொடர்பாகப் பேச சில நிறுவனங்களை அழைத்திருப்பதாகக் கூறி விட்டு அமர்ந்தார்.

''யாரிடம் அந்த பொறுப்பைத் தரலாம் என்று போர்டு மெம்பர்ஸ் தங்கள் கருத்தைக் கூறலாம்'' என வினய் அறிவித்தவுடன் ஒருவர் எழுந்தார்.

''நாம் எப்பவும் எஸ்.கே. பில்டர்ஸ் கிட்டதானே தருவோம்? இப்ப ஏன் மாற்ற வேண்டும்?''

''யோவ்! புது கதைக்கு வா! இன்னும் சுதந்திர காலத்துக்கு போகாதே. எல்லாவற்றிலும் புது இரத்தம், புத்துணர்வு வேண்டும். உன் துருப்பிடித்த பல்லவியே பாடாதே!'' என ஒருவர் அனைவர் காதிலும் விழுமாறு முணுமுணுக்க இன்னொருவரோ ''எஸ்.கே. பில்டர்ஸ் போன முறை குறித்த காலத்தை விட ஆறு மாசத்திற்கு வேலையை இழுத்து விட்டார்கள்'' என்று இடையில் குறுக்கிட்டார்.

சட்டென கோபமான எஸ்.கே. பில்டர்ஸ் நிறுவன பிரதிநிதி,

''ஆறு மாதம் என்பது கட்டட வேலையில் ரொம்ப தாமதம் இல்லை.''

''ஆனால் அதற்கு இரண்டு கோடி ரூபாய் போட்ட பட்ஜெட்டை விட அதிகமாய் செலவு ஆச்சே!''

''அதுக்கு பேர்தாம்பா நஷ்டம்னு சொல்வாங்க.''

''மன்னிக்கணும். கேலி கிண்டலுக்கு இது நேர மில்லை. ஆக்கப்பூர்வமான விஷயத்திற்கு வாங்க.''

''சரி! புது கட்டடம் கட்டி முடிக்க எவ்வளவு காலம் ஆகும்? எஸ்.கே. பில்டர்ஸ் நீங்க சொல்லுங்க.''

''சார்! இது மழை காலம். எதிர்பார்க்கிற அளவிற்கு சீக்கிரமாய் முடிக்க முடியாது. குறைந்த பட்சம் எட்டு மாசம் ஆகும். இதுவும் உங்களுக்காக நாங்க சிறப்பு கவனம் எடுப்பதால் மட்டுமே முடியும். மற்றவர்களுக்கு பதிமூன்று மாதங்களுக்கு குறைந்து நாங்கள் ஒப்பந்தத் திற்கு ஒப்புக் கொள்ள மாட்டோம்.''



''சன் பில்டர்ஸ், நீங்க என்ன சொல்றீங்க?''

''எஸ்.கே. பில்டர்ஸ் சொல்வது சரிதான். குறைந்த பட்சம் எட்டு மாதம் கண்டிப்பாய் வேண்டும். மணல் மழைக்காலத்தில் கிடைக்காது. செங்கல் விலை ஏறி விற்கும். இப்ப அவசரப்பட்டால் செலவும் அதிகமாகும்.''

''மீரா கன்ஸ்ட்ரக்ஷன் உங்க கருத்தையும் சொல்ல லாமே?''

''சார்! எங்களுக்கு வாய்ப்பு கொடுத்தால் தொண் ணூறு நாட்களில் கட்டடத்தை முடித்துத் தருவோம்.''

''என்னது? தொண்ணூறு நாளா?''

''எப்படி இது சாத்தியமாகும்? கண்டிப்பாய் முடியாது. அனுபவம் இல்லாத கத்துக்குட்டின்னு நிரூபிச்சுட்டாங்க.''

''எங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் நாங்க சொல் வது உண்மைன்னு எங்க வேலை நிரூபிக்கும்.

''எங்க செயல் திட்டம் பற்றி தெளிவாய் இந்த குறுந் தகட்டில் இருக்கிறது. அதை நீங்கள் அனுமதித்தால் விளக்கிச் சொல்ல முடியும்'' என்றாள் சாரா.

''காகிதப் புலி வேட்டைக்கு உதவாது.''

''திட்டமிடாமல் எந்தச் செயலும் வெற்றி பெறாது.''

''எங்க டீமில் மண் பரிசோதனை முதற்கொண்டு கட் டடம் கட்டும் பொருள்களின் தரம் வரை நன்கு பரி சோதித்துப் பார்த்த பின்னரே வேலையைத் தொடங்கு வோம். அதனால் பிரச்சனைக்கே இடமிருக்காது.''

''மேடம்! உங்க ப்ளானை எங்க மெம்பர்ஸுக்கு விளக்கிச் சொல்ல முடியுமா?'' என்ற பொழுது இடையே குறுக்கிட்டு,

''சார், எங்களுக்கு முக்கியமான வேலை இருக்கிறது. நீங்க எங்களிடம் இந்த ப்ராஜெக்ட்டை கொடுப்பதாய் இருந்தால் நாளை மறுநாள் சந்திக்கலாம்'' என சன் பில்டர்ஸ் கிளம்பினர்.

''ஒரு சின்ன பெண்ணை நம்பி செயல்படுவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது மாதிரி சின்னவர் யோசனையான்னு தெரியலை. பெரியவர் இப்படி அனுபவம் இல்லாதவங்ககிட்டே மாட்டிக் கொள்ள விரும்ப மாட்டார். எதுக்கும் நன்றாக யோசனை பண்ணிட்டுச் சொல்லி அனுப்புங்க'' - என எஸ்.கே. பில்டர்ஸ்ஸும் வெளியேறினர்.

சாரா கணினியில் எல்லாவற்றையும் படத்துடன் விளக்கினாள். பரத் கட்டட அமைப்பின் சிறப்பையும், சந்துரு பூகம்பம் ஏற்பட்டால் அதைத் தாங்கிக் கொள்ளும் வகையில் கட்டப்படும் விதத்தையும், மழைநீர் தேங்காமல் வடிகால் வசதி செய்யப்பட்ட கட்டடத்தின் மாதிரியையும் தெளிவாய் விளக்கினர்.

நித்யா குழுவினரின் விளக்கத்திற்குப் பிறகு எல்லார் முகங்களிலும் தெரிந்த மலர்ச்சி நம்பிக்கை ஒளியூட்டியது. தீப்தி சட்டப்படி தேவையான படிவத்தைத் தயார் செய்ய மிக மிக நம்பிக்கையாய் ஒப்பந்தத்தில் நித்யா கையெழுத்திட்டாள்.

தேவன் மகன் முதுகில் மென்மையாய் தட்டிக் கொடுத்தார். நித்யாவை மத்த டைரக்டர்ஸ் முன்னிலையில் நாசுக்காய் தனியாய் அழைத்துப் பேசியது தான் சில உறுப்பினர்களை அவளுக்கு ஆதரவாகப் பேச வைத்தது என்பதை அவர் அறிந்து தான் இருந்தார். அதே எண்ணம் நித்யாவிற்குள்ளும் எட்டிப் பார்த்தது.



'இந்த சின்னப் பெண் சொன்னபடி கட்டி முடிப்பாளா? ஐம்பது கோடியில் கட்டுவது மணல் வீடு அல்லவே? அப்பாவிற்கு எப்படி அத்தனை நம்பிக்கை இவள் மீது வந்தது?'

யோசனையுடன் வினய் அவளைப் பார்த்தான்.

விடைபெறுவதற்காக நித்யா அவனருகே வந்தாள். சுருங்கியிருந்த புருவங்கள் அவன் யோசனையை உணர்த்த.

''என்ன சார்? இன்னும் சந்தேகம் தீரலையா?'' என வினவினாள்.

''ம்ஹூம்! நிஜமாகச் சொல்லு! நீ தரகர் சொன்ன பெண்ணில்லையா? அன்றைக்கு மாப்பிள்ளை பார்க்கத் தானே வந்தாய்?'' என்ற சீண்டலில் நித்யாவின் முகம் பட்டு ரோஜாவாய் சிவந்தது.



# 4

சாரா அலுவலகத்திற்கு வந்ததும் முதல் வேலையாக வேலைகளைப் பிரித்து வரிசைப் படுத்தியிருந்தாள், நித்யரஞ்சனியிடம் அதைக் கொடுத்தாள்.

''சாரா, குவாலிட்டி செக் பண்ணுவதை சந்துருக் கிட்டே கொடுத்துடலாம்.''

''நானும் அதைத்தான் நினைச்சேன்.''

அவர்கள் பேசிக் கொண்டிருந்த பொழுது பரத் உள்ளே நுழைந்தான். பரபரப்பாய் விவாதித்துக் கொண்டிருந்த வேலைத் திட்டம் கண்ணில் பட்டது.

''ஹாய் குட்மார்னிங்! என்ன இராத்திரியே ஆபீஸிற்கு வந்து விட்டாயா?''

''ஏய்! தூங்கு மூஞ்சி, ஒன்பது மணி ஆச்சு!''

''இப்படி ஓடி ஆடி உழைத்து எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போகிறாய்? சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும். மலை ஏறுபவர்களுக்கு முதலில் மென்மையாய் நடக்கத் தெரிய வேண்டும்.''

''விளையாடாதே பரத்! நாம சொன்ன நேரத்தில் வேலையை முடிச்சுக் கொடுக்கணும். இந்த சவாலில் ஜெயிச்சால் தான் நமக்கு லைப்.''

''சாரி மா! நீ சொல்வது எனக்குப் புரிகிறது. ஆனாலும் நீ உடல்நலத்துடன் இருந்தால் தான் சாதிக்க முடியும்.''

''ஆனாலும், உனக்கு ரொம்ப தில்! ஒரு வருடம், எட்டு மாசம் அவகாசம் கேட்ட இடத்தில் எண்ணி தொண்ணூறே நாள்கள் கேட்டாயே? அதற்குள் வேலையை முடித்துவிட முடியுமா?'' என ரேகா கேட்டாள்.

''கவலைப்படாதே ரேகா! நாம் எல்லோரும் மனது வைத்தால் கண்டிப்பாய் முடியும்.''

''எதற்கும் பரத்திடமாவது நீ கொஞ்சம் ஆலோசனை செஞ்சிருக்கலாம். அவனுக்கு சிவில் இன்ஜினியரிங் அனுபவம் நிறைய இருக்கு.''

''ஏய்! சின்னப் பையா, நீ வந்ததே ரொம்ப தாமதம். அதனால் தான் அதை நீ அறிந்து கொள்ளவில்லை. உன்



அக்கா தடாலடியா முடிவை அறிவிக்கிறதுக்கு முன்னால் நான் காட்டிய சிக்னலை நீயும் கவனிக்கலையா?''

''சில சமயம் உடனடியாய் முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும். அப்ப நாம தடுமாறி நிற்கக் கூடாது. நம் குழுவினரின் கருத்தை முழுமையாய் அறிந்து கொள்ள முடியாவிட்டாலும் அவர்களுக்குச் செயலில், முடிவில் உடன்பாடு உண்டா? இல்லையான்னு? அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு முடிவை அறிவிப்பதற்கு முன்னால் நம்மை தயார்படுத்திக்கணும். சம்பந்தப்பட்டவங்க கருத்தைத் தெரிந்து கொள்ள நமக்குள்ளே சின்னச் சின்ன சிக்னல்களைப் பயன்படுத்த வேண்டும்.''

''ஓ! அதான் மூன்று விரல்களால் மூக்கைத் தேய்த்தாரா?''

''குட்! பாயிண்ட்டைப் பிடித்து விட்டாய்.''

''பரத்! இன்னும் பொறியியலாளர்கள் தேவை.''

''நான் ஏற்பாடு செஞ்சிட்டேன் நித்யா! நம்மோட சேர்த்து அஞ்சு பேர் போதுமா?''

''இல்லை. பத்து பேர் வேணும். இரண்டு ஷிஃப்ட் வேலை செய்யணும். இரவு, பகல் இடைவெளி இல்லாமல் வேலை தொடர்ந்தால் தான் குறிப்பிட்ட கால அவகாசத்தில் நம்மால் முடிக்க முடியும்.''

''வொர்க்கர்ஸ் எத்தனை பேர் வேண்டும்?''

''ஆயிரம் பேர் - மார்னிங் ஷிப்ட் 600 பேர், நைட் ஷிப்ட் 400 பேர். நமக்கு இலாபம் குறைந்தாலும் பரவாயில்லை. வேலையாட்களுக்கு சம்பளம் திருப்தியாய் தர வேண்டும்.''

''சரி! வேலையை எப்பொழுது துவங்க வேண்டும்?''

''இன்னிக்கே ஆளைப் பிடி! நாளை காலையில் துவங்கி விடலாம்.''

''ஆரம்பம் நன்றாக இருந்தால் வெற்றிகரமாய் முடிந் தாற் போல தான். அலுவலகம் வரும்போதே மண் பரி சோதனைக்கு அங்கிருந்து மண் எடுத்து வந்தேன்.''

''இது தான் பரத்! வொர்க்கர்ஸ் உடனே கிடைப்பார் களா?''

''ஐந்நூறு பேர் என்னிடம் தயாராய் இருக்கிறார்கள். மீதி பேரையும் திரட்டி விடலாம். அந்தக் கவலை உனக்கு வேண்டாம் அக்கா'' என சந்துரு சொன்னான்.

''குட்! வொர்க்கர்ஸ் கிட்டே மூணு மாச காண்ட் ராக்டில் கையெழுத்து வாங்கிடு தீப்தி.''

சந்துரு, சாரா கொடுத்த பில்டிங் மெட்டீரியல்ஸுக் கான விலைப்பட்டியலையும், பட்ஜெட்டையும் பார்த்தான்.

''எப்படி இவ்வளவு சரியாய் விலை எழுதியிருக் கிறாய்? மொத்தமாய் வாங்கினால் இன்னும் விலை குறைய வாய்ப்புண்டு. நேரடியாய் உற்பத்தி செய்யும் இடத்திலேயே கொள்முதல் செய்தால் இன்னும் சிறப் பாய் இருக்கும்.''

''அதை நான் பேசி விட்டேன். ஸ்டாக் எல்லாம் டீலர் களிடம் அனுப்பி விட்டார்களாம். கம்பெனியிலிருந்து நேரடியாய் வாங்க வேண்டும் என்றால் நாம் இன்னும் ஒரு மாதம் காத்திருக்க வேண்டும்.''

''ம்ஹூம்! இப்போதைக்கு ஒரு மாதத்திற்கு டீலரிடம் வாங்கிக் கொள்ளலாம். அதற்குப் பிறகு கம்பெனியிடம் இருந்து பொருள்களை வாங்க அக்ரிமெண்ட் போட்டுக் கொள்ளலாம்.''



''நித்யா, அஸ்திவாரம் போட வேண்டிய பொருள்கள் எல்லாம் நாளைக் காலை இங்கு இருக்கும். அதற்கு நான் ஏற்பாடு செய்து விட்டேன். உன்னுடைய சிப்பாய்கள் எல்லாம் ஆயிரம் யானைக்குச் சமம். அதனால் பட்டத்து ராணி அடுத்த கட்டத்தை நோக்கி நகரலாம்.''

''மனை பூஜைக்கு மகாதேவன் சாரை வரச் சொல்லி விடுகிறாயா? பரத்.''

''நான் மண் பரிசோதனை விஷயமாய் அரசு பொறி யியல் கல்லூரி வரை போக வேண்டியிருக்கிறது. அத னால் நீயே சொல்லிவிடு. மேலும் அங்கே யாரோ உன்னை... ரொம்ப... சுவாரஸ்யமாய்... எதிர்பார்க்கிறார் களாம்!''

''ஏய்! சீண்டாதே!''

''சூ! அவனுக்கு பொறாமை!''

''ஹேய்! நித்யா சொல்லிடுப்பா! அன்னிக்கு வினய் என்ன சொன்னார்? உன் முகம் அப்படி சிவந்து போயி டுச்சு!''

''ஹேய்! உதைக்கப் போறேன் உன்னை.''

''சொல்லிட்டு உதையேன்'' என ரேகா மறுபடியும் சீண்ட நித்யாவின் அலைபேசி ஒலித்தது.

''என்ன ரொம்ப கனவு கண்டு கொண்டு இருக் கிறாயா? ஒப்பந்தம் உனக்குக் கிடைத்திருக்கலாம். ஆனால் நீ அதை கட்டப் போவதில்லை. என்ன புரியவில் லையா? நீ உயிரோடு இருந்தால் தானே அதைக் கட்ட முடியும்?''

நித்யா பேசுவதற்கு முன் தொடர்பு விட்டுப் போனது.

''யார் இப்படி மிரட்டுவது? முன்பும் இப்படித்தான் ஒரு மிரட்டல் வந்தது. இரண்டும் வேறு வேறு எண்கள். இப்போதைக்கு யாரிடமும் இதைப் பற்றிச் சொல்லி கலவரப்படுத்த வேண்டாம்.''

யோசனையுடன் நின்றவளிடம்,

''மணல் லோடு என்னாச்சுன்னு நான் பார்த்துட்டு வருகிறேன் அக்கா'' என சந்துரு கூறிவிட்டுக் கிளம்பினான்.

''நானும் கிளம்புகிறேன்.''

''இரு பரத்! ஸைட்டைக் கொஞ்சம் பாத்துடுவோம்; வர்றியா?''

''உத்தரவு மகாராணி! சீக்கிரம் கிளம்புங்க மேடம். எனக்கு நிறைய வேலையிருக்கிறது.''

இருவரும் புறப்பட்டனர்.

''சிட்டியை விட்டு வெளியே இருந்தாலும் இன்னும் கொஞ்ச நாளில் இந்த இடமும் பரபரப்பாகி விடும். மகாதேவன் சார் விவரம் இல்லாமலா இவ்வளவு செலவு செய்து புது கட்டடம் கட்டப் போகிறார்?''

''மண் எப்படி இருக்கிறது என்று பார்த்தாயா பரத்?''

''பக்கத்து நிலம் தான் குளத்தை ஆக்கிரமிப்பு பண்ணியது. இது அதிலிருந்து 500 அடி தள்ளி இருக்கிறது. சற்று மேடான பகுதியும் கூட. லூஸ் சாயில் (Loose Soil) இருக்க வாய்ப்பில்லை.''

''களிமண், கரிசல் மண், உவர் மண் - இவற்றில் என்ன மண் அங்கே இருக்கிறது?''



''இதோ! இடமே வந்து விட்டது நீயே பார்.''

''இங்கே தான் மண் பரிசோதனைக்கு மண் எடுத்தாயா?''

''ஆமாம்! ஆறு அடி குழி தோண்டி எடுத்தேன். பக்கத்தில் இருக்கும் அரசு பொறியியல் கல்லூரியில் தான் பரிசோதிக்க கொடுக்க வேண்டும்.''

''மண்ணை கொஞ்சம் உற்றுப் பார் பரத்! செம்மண் மாதிரி தெரியலை?''

பரத் குனிந்து மண்ணை கொஞ்சம் குழியில் கிளறி விட்டுப் பார்த்தான்.

''அட ஆமாம்! இது செம்மண் தான். மேலே தான் கொஞ்சம் களிமண் இருந்தது.''

''களிமண் கரிசல் மண், உலர் மண் இவற்றை விட செம்மண் தான் வீடு கட்ட உகந்த இடம். மண் இறுக்கமாக இருந்தால் தான் வீடு உறுதியானதாக இருக்கும்.''

''வேறு வகை மண் இருக்கும் இடத்தில் வீடு கட்டினாலும் அடிக்கட்டுமானத்துக்கும், சுவர் இடுக்குகளுக்கும் செம்மண்ணைப் பயன்படுத்திக் கொண்டால் போதும்.''

''ரொம்ப சரியாய் சொன்னாய். பாறை மீது வீடு கட்டினால் உறுதியாய் இருக்கும். பொதுவாய் செம்மண் பகுதியில் 3 அடியில் பாறை வந்து விடும். மற்ற மண்ணாக இருந்தால் 10 அடி வரைக்கும் போகும்.''

''மண் பரிசோதனை முடிவில் எத்தனை அடியில் பாறை வரும் என தெளிவாகச் சொல்லி விடுவார்கள்.''

''நித்யா நான் போய் மண் பரிசோதனைக்குக் கொடுத்துவிட்டு வருகிறேன். நீயும் வருகிறாயா?''

"இல்லை. எனக்கு வேறு வேலை இருக்கிறது. பக்கத்தில் பெண்கள் குழாம் மகளிர் தொழிற்பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வந்திருக்கிறார்களாம். அவர்களைப் போய் பார்த்து பேசி வருகிறேன். நமக்கு ஏதாவது விதத்தில் பயன்படுவார்களா? என கூட ஒரு எண்ணம் தோன்றுகிறது."

"எப்படிப் போவாய்? வண்டியில் கொண்டு வந்து விடட்டுமா?"

"அதிக தூரமில்லை. நடந்தே போய்விடலாம். நீ போய் வேலையைப் பார், தாமதிக்காதே."

சொல்லிவிட்டு நித்யா சாலையைக் கடக்க முற்பட... சற்றும் எதிர்பாராமல் மிக வேகத்துடன் 'பைக்' ஒன்று அவளை நோக்கி வந்தது. கண்ணிமைக்கும் வினாடியில் 'பரத்' பாய்ந்து இழுத்திரா விட்டால்... இந்நேரம் அவளே கனவாகிப் போயிருப்பாள். "இடியட்! என்ன வேகம்? போற வழியிலேயே அடிபடப் போகிறான் பார்!"

"விடு பரத்! சபிக்காதே. நான் கொஞ்சம் கவனமாக இருந்து இருக்கலாம். தீதும் நன்றும் பிறர் தர வாரா."

"கொஞ்சமாவது வண்டியை நிறுத்தி ஒரு ஸாரி யாவது சொல்லிட்டுப் போனானா பார்?

அவன் போன வேகத்தைப் பார்த்தால் இது விபத்து மாதிரி தோன்றவில்லை. திட்டமிட்ட சதிச் செயல் போல் தோன்றுகிறது."

"சும்மா கற்பனை செய்யாதே! நீ கிளம்பு."

"சு! அதெல்லாம் முடியாது. உன்னை இறக்கி விட்ட பிறகு நான் சென்று கொள்கிறேன்."

சொன்னபடியே செய்தான் பரத்.



# 5

மனை பூஜைக்கு வினய் சரியான நேரத்திற்கு வந்து விட்டான்.

"அப்பா வந்துவிடுவார்; பூஜையைத் தொடங்கலாம்."

அவர்கள் குடும்பத்திற்கு வழக்கமாய் வருகின்ற சாஸ்திரிகள் பூஜையை ஆரம்பித்தார்.

"அம்மாவை எங்கே இன்னும் காணோம்? நல்ல நேரம் முடியறதுக்குள்ளே வந்துடுவாங்களா? எப்போதும் அம்மா தானே விளக்கு ஏற்றுவார்கள்!"

அப்போது கார் வந்து நின்றது.

மகாதேவன் அதிலிருந்து இறங்கினார். வினயிடம் குனிந்து ஏதோ சொன்னார்.

"அம்மா வரலையா? விளக்கை ஏற்றுங்கள்."

உடனே நித்யரஞ்சனி பக்கம் தேவன் திரும்பினார்.

"நீ ஏற்றும்மா!" அவள் ஒரு வினாடி தன்னையறியாமல் வினயைப் பார்க்க....

அவனோ புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான். அபிராமி அந்தாதியை மனதுக்குள் முணுமுணுத்தாள்.

"தனம் தரும், கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வறியா மனம் தரும்

நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும்

நல்லன எல்லாம் தரும், அன்பர்

என்பவர்க்கே கனம் தரும்

பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.''

ஐந்து முகங்களையும் ஏற்றினாள்.

பூஜை முடிந்ததும் சாஸ்திரிகள்,

''என்ன வழக்கமாய் அம்மாதான் பூமி பூஜைக்கு விளக்கேற்றுவார். இன்னிக்கு வேறு பொண்ணை ஏற்றச் சொல்லி விட்டாரே அப்பா!'' என்றார்.

''பெண்கள் வீட்டை உயிருள்ள பொருளாக நினைப் பார்கள். அதுவும் கட்டடத்தைக் கட்டப் போகும் பெண்ணே விளக்கேற்றினால் எவ்வளவு உளப்பூர்வமாக அதில் ஒன்றி விடுவார்கள் என்பது தான் விஷயம்.''

நித்யரஞ்சனியின் செவிகளில் அவன் கூறியது விழத் தான் செய்தது. ஆனாலும் அவள் பரத்துடன் தன் வேலையில் மும்முரமானாள். சந்துரு வேலை செய்யும் ஆட்களை லாரியில் அழைத்து வர பரபரவென வேலை ஆரம்பமானது.

''இது என்ன கட்சி கூட்டம் மாதிரி திமுதிமுவென ஆட்கள் வருகிறார்கள்'' - வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தவர் கூற,

'இவ்வளவு பேரையும் வைத்து இந்த சின்னப் பெண் ஒழுங்காக வேலை வாங்கி விடுவாளா?' என தேவன் கூட சற்று சஞ்சலப்பட்டார்.

அவரே அப்படி என்றால் வினயைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். அவன் கண்களில் 'நிச்சயம் உன்னால் இது



முடியாது பெண்ணே!' என்ற அவ நம்பிக்கை அப்பட்ட மாய் பிரதிபலித்தது. நித்யா வாழ்வில் தோல்வி களையும், அவமானங்களையும் சந்திக்காத பெண்ணல் லவே! கீழே விழாமல் நடக்க முடிந்த குழந்தை எதுவும் இல்லை. எல்லாரும் கீழே விழுந்த குழந்தையைப் பார்த்துச் சிரித்தாலும் அது என்னவோ அதைப் புரிந்து கொள்வதே இல்லை. தானும் அவர்களுடன் சேர்ந்து கைக்கொட்டிச் சிரிக்கும். அந்த மனநிலையை வாழ்நாள் முழுவதும் ஒருவன் கடைப்பிடித்தால் தோல்வி அவனை துவளச் செய்யுமா? என்ன? அவளும் அப்படித்தானிருந் தாள். புன்னகை மாறாத இதழ்களும், சவால் நிறைந்த கண்களுமாய் இருந்ததை ஆழ்ந்து பார்த்து விட்டு தான் வினய் அங்கிருந்து கிளம்பினான். தேவனும் அவனுட னேயே புறப்பட்டார்.

ஸ்பென்ஸர் பிளாஸாவில் முக்கியமான மனிதரை சந்திக்க வரச் சொல்லியிருந்தான். தேவன் அலுவலகம் செல்ல, அவன் அவரைப் பார்க்கச் சென்றான்.

காரை பார்க் செய்யும் பொழுது தான் ரேகாவை கவ னித்தான். 'அபாயகரமான பெண்' என எண்ணிய பொழுது தான் அதையும் பார்த்தான்.

ரேகாவையே விடாமல் நோக்கிக் கொண்டிருந்த ஒரு வனையும்...

அவளை எச்சரிப்பதற்குள்...

அவன் அவளை நெருங்கி விட்டான். இதோ அவள் திரும்பும் வினாடியில்...

கைப்பையை பிடுங்கி ஓட முயல...

'கப்பென்று' அவன் கையை இறுகப் பிடித்தாள் ரேகா.

தன் கைப்பையின் வெளிப்புற பட்டனைத் திறந்து ஒரு பொருளை வெளியே எடுத்தாள். அதை அவன் கையில் வைத்து அழுத்த... அவன் சூடு தாங்காமல்

''ஐயோ! அம்மா...!'' என்று அலறினான். நிமிடத்திற்குள் லைட்டரால் நாலைந்து இடங்களில் சூடு வைத்து விட்டாள்.

வினய் வாய்விட்டுச் சிரித்தான்.

சிரித்தவன் யாரென்று அவள் பார்க்கத் திரும்பிய பொழுது அவன் திமிறி ஓடினான்.

''என்ன ஆடிட்டர் மேடம் ஐ.பி.எஸ். அவதாரம் எடுத்து விட்டீர்கள்? ஜட்ஜ்மெண்ட்டும் உடனே கிடைச் சுடுச்சு!''

''இவனுங்களுக்கெல்லாம் இப்படி சூடு கொடுத்தா தான் சரியாய் இருக்கும்.''

''அது சரி! அவன் உங்களிடம் மாட்டிய பொழுதே நினைத்தேன். என்ன பாடுபடப் போகிறானோ என்று! அது மிகச் சரியாய் போய் விட்டது. நீங்க எங்கே இங்கே?''

''என்னோட க்ளைண்ட்டைப் பார்க்க வந்தேன். பூமி பூஜை எல்லாம் நன்றாக முடிந்ததா? ரஞ்சனி திட்டம் போடும்போதே பூமி பூஜைக்குரிய நல்ல நாளில் இருந்து திறப்பு விழாவிற்குரிய நல்ல நாள் வரை எல்லாவற்றையும் குறித்து விட்டு தான் தொடங்குவாள்.''

''உங்க தோழி ஏதாவது மகளிர் கட்சித் தலைவியா? கும்பலாய் லாரியில் ஆட்களைக் கூட்டி வருகிறார்கள்?''

ரேகாவின் முகத்தில் கோபம் தெரிந்தது.

''மிஸ்டர்...'' என ஆரம்பிக்கும் பொழுதே,



''ரிலாக்ஸ்! இது ஜஸ்ட் ஜோக் தான்!''

அவன் விடைபெற கோபம் தீராமலே ரேகா கிளம்பினாள்.

''ஹலோ சார்!''

வினய் திரும்ப, ''குட்மார்னிங் சார்!''

''வந்து நேரமாகி விட்டதா? காத்திருக்க செய்ததற்கு மன்னிக்கவும்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. வாருங்கள்! காபி சாப்பிடலாம். எதற்கு என்னைச் சந்திக்க வேண்டும் என்றீர்கள்?''

''சார்! எங்கள் நிறுவனத்திற்கு அனுமதி வாங்க உங்கள் அலுவலகம் வந்தேன். சிலர் அதைத் தடுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். நான் நேர்மையற்ற எந்தச் செயலையும் செய்ய உங்கள் உதவியை நாடி வரவில்லை. நாங்கள் சரியான வழியில்தான் தொழில் செய்கிறோம். வரி ஏய்ப்போ, பிற ஏமாற்று வழிகளோ எதுவும் கிடையாது. அதே போல நேர்மையற்ற தொழில் எதுவும் செய்வதும் இல்லை.''

அவன் பேசும்போது அவர் குறுக்கிட்டார்.

''தெரியும் சார்! பி.எல்.குரூப்ஸ் ஆஃப் கம்பெனி பற்றித் தெரிந்து தான் நீங்க கேட்டதும் மறுக்காமல் உங்களைச் சந்திக்க வந்தேன். நேர்மைக்குப் புறம்பாய் நீங்க கேட்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. உங்க ஃபைலை கொடுத்துட்டுப் போங்க நான் பார்க்கிறேன்.''

''மிக்க நன்றி! அலுவலகத்தில் சந்தித்துப் பேச முடியாத சூழ்நிலை. அதனால்தான் உங்களை இங்கே பார்க்க வேண்டி வந்தது. தொந்தரவிற்கு மன்னிக்கவும்.''

''பி.எல். நிறுவனம் எவ்வளவு பாரம்பரிய மிக்க நிறுவனம். தரம், நேர்மை, உழைப்பு, நாணயம் என்று தலை முறைகளாய் சின்ன அப்பழுக்கின்றி வெற்றிகரமாக தொழில் செய்வது சாதாரண விஷயமா? நல்லவங்களுக்கு நம்மாலான உதவியைச் செய்யணும் என்று எங்க அம்மா சொல்வாங்க. சரி பை.''

அடுத்த நாள் மாலை ஐந்து மணிக்கு மேல் நித்ய ரஞ்சனி என்ன செய்கிறாள்? என பார்க்க வேண்டும் போல் வினய்க்கு தோன்றியது.

நேராய் அங்கே சென்றான். மிக ஆழமாய் அஸ்தி வாரக் குழிகள் தோண்டப்பட்டிருந்தன. கம்பிகள் தட்டப் பட்டும், முறுக்கிக் கட்டப்பட்டும் கொண்டிருந்தன. ஆட்கள் சுறுசுறுப்பாய் குழுக்களாய் பிரிந்து வேலை செய்து கொண்டிருந்தனர். வெட்டி அரட்டை, சோம்பல், நெழுப்பல் இல்லாமல் வேலை நடந்து கொண்டிருந்தது. நித்யா தலையில் தொப்பியுடன் ஆங்காங்கே நடந்து வேலையை கண்காணித்துக் கொண்டிருந்தாள். காலையி லிருந்து வெயிலில் இடைவிடாது வேலை செய்து கொண்டிருப்பதை வியர்த்துக் களைத்த முகம் காட்டியது. ஆனால் கண்கள் மட்டும் மனம் பூரித்த வேலையின் நிறைவாய் மகிழ்ச்சியில் மின்னியது.

''அஸ்திவார குழி ரொம்ப ஆழமாய் இருக்கிறதே?''

''கட்டடம் பூகம்பத்தால் பாதிக்காமல் இருக்கணும்னா அஸ்திவாரம் அதிக ஆழத்தில் அமைய வேண்டும்.



இரட்டை உறுதியுடன் பேஸ்மென்ட்டுக்கான கான்கிரீட் பெல்ட் போட வேண்டும்.''

''ஓ! மேலோட்டமாய் பேஸ்மென்ட் அமைத்தால் தரைத்தளம் அப்படியே நிலத்துக்குள் அமிழ்ந்து விடும். அப்படித்தானே?''

''ரொம்ப சரி! பேஸ்மென்ட்டில் 'பேரிங்' வைத்துக் கட்டினால் பூகம்ப பாதிப்பிலிருந்து தப்பலாம். மேற்கூரை எடை குறைவாய் அமைய வேண்டும்.''

'செயல்களால் மட்டுமே மனிதர்கள் மேன்மை அடை கிறார்கள். செயல்கள் தான் உயர்வையும், தாழ்வையும் ஏற்படுத்துகின்றன. செயல்கள்தான் மனிதனைக் கடவு ளாக ஆக்குவதும், சாத்தான் ஆக்குவதும்! என் பாட்டி தன் செயல்களால் தேவதையாய் உயர்ந்தார். எளிமை யாய் இருந்தாலும் உண்மைகள் எப்போதும் மகத்துவ மானவை. அந்த உண்மை, உழைப்பு என்ற ஏதோ ஓர் புள்ளி இவளிடம் அப்பாவிற்கு புலப்பட்டிருக்குமோ?'

அவனுடன் பேசிக் கொண்டிருந்தாலும் சுணங்காமல் ஆட்களுக்கு உத்தரவு கொடுத்துக் கொண்டிருந்தாள். காபி, சூடான வடை, சமோசா அனைவருக்கும் வழங் கப்பட்டது.

காகிதத் தட்டில் வைத்து அவனுக்கும் ஒருவர் கொடுக்க... அவன் மறுக்க வாய் திறந்த நேரத்தில்,

''மன்னிக்கவும்! இந்த நேரத்தில் நான் எதுவும் சாப் பிடுவதில்லை'' என நித்யாவும் மறுத்தாள். ஆச்சரியப் பார்வை பார்த்தான். ஆனால் அதெல்லாம் அவள் கவனித் தால் தானே? ஒன்பது மணி வரை நித்யா அங்கிருந்து

கிளம்பவில்லை. நைட் ஷிஃப்ட் ஆட்கள் வந்து வேலையைத் துவக்கி இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது. அப்போது பரத் வந்து சேர்ந்தான். குளித்து புத்துணர்வாய் வந்திருந்தான்.

"சாப்பிட்டாயா பரத்?"

"அதெல்லாம் ஆகிவிட்டது. நீ முதலில் கிளம்பு. நான் இனி பார்த்துக் கொள்கிறேன். ஜாக்கிரதையாக போய் விடுவாயா? நான் வேண்டுமானால் கொண்டு வந்து விடட்டுமா?"

"ஹேய்! என்னை சுயசார்பாய் இருக்க விடப்பா! நீ இங்கிருந்து வேலையை கவனி. நான் என் வேலையை பார்த்துக் கொள்வேன், தைரிய லெஷ்மி என்னுடன் எப்போதும் இருப்பாள்!"

அதற்குள் யாரோ ஓர் ஆள் வந்து கலவை விஷயமாய் சந்தேகம் கேட்க பரத் அவளை வற்புறுத்திக் கிளப்பி விட்டு அங்கே சென்றான். வினய் பரத் செய்யும் வேலைகளை கவனித்தான்.

'அடேங்கப்பா! இருவரும் என்னமாய் வேலை செய்கிறார்கள்! ஒருவருக்கொருவர் சளைத்தவரல்ல என்பதை அவர்கள் செய்கின்ற வேலை நிரூபித்தது. பொருத்தமான கூட்டாளிகள். ஒரு நாளில் பன்னிரெண்டு மணி நேரத்தில் நடந்திருக்கின்ற வேலைகளைப் பார்த்தால் பூத கணங்கள் வந்து செய்த வேலையைப் போல் இருக்கிறது! இதே வேகத்தில் வேலை தொடர்ந்தால் அவள் கண்களில் தெரிந்த சவால் வென்று விடும்! பார்க்கலாம்; முயல் ஜெயிக்குமா என்று?'

"சார் ப்ளீஸ் கொஞ்சம் உங்க செல்லில் ஒரு கால் பண்ணலாமா? என்னோடதில் சார்ஜ் போயிடுச்சு."



"ஓ! ஷ்யூர்!" என்ற பொழுது அவன் அலைபேசி அழைத்தது. எடுத்துப் பேசினான். "சைட்டில் தான் இருக்கிறேன்; வந்து விடுகிறேன். அம்மா ப்ளீஸ்! கல்யாணப் பேச்சு வேண்டாம். எனக்கு யாரையும் பிடிக்கவில்லை. உங்களுக்கு மகனாக மட்டும் இருந்துவிட்டுப் போகிறேன். என்னைக் கல்யாணத்திற்கு வற்புறுத்தினால் நான் வெளிநாட்டிற்குப் போய் விடுவேன்."

பேசிவிட்டு வைத்தவன் பரத்தைப் பார்த்தான்.

"நவீன யுக பெண்கள் எப்படி இருக்கிறார்கள்? என்று உங்களுக்கே நன்றாகத் தெரியும். மாற்றம் தேவை தான். ஆனால் அது நல்ல மாற்றமாக இருக்க வேண்டும். உலகத்திற்கே கலாச்சாரம், பண்பாட்டில் எடுத்துக் காட்டாய் வாழ்ந்தவர்கள் நாம். இந்தக் காலத்து பெண்களைப் பாருங்கள்! ஆண்களுக்கு நிகராய் எல்லாவற்றையும் செய்கிறார்கள். பாராட்டுக்கள்! ஆண்கள் செய்கின்ற எல்லா தவறுகளையும் அவர்களும் செய்து பார்க்க ஆசைப்படுகிறார்கள். அது தான் தப்பு! இவர்கள் எனக்கு சரிப்பட மாட்டார்கள்."

பரத்தின் வாடிய முகத்தைப் பார்த்தான்.

"உங்கள் வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட பெண்கள் குறுக்கிட்டு "இருக்கிறார்களா? உங்களைப் பார்த்தால் நித்தியைத் தவிர எந்தப் பெண் பின்னாலும் சுற்றுபவர் போல் தெரியவில்லையே?" என சீண்ட,

சட்டென முகம் மலர்ந்தான்.

"நித்யா அபூர்வமான குறிஞ்சி மலர்! அவளுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம்."

''ம்! யாருக்கோ போன் செய்ய வேண்டும் என்றீர்களே?''

''நித்யாவுக்குத்தான்'' என்றவாறே அவன் அலைபேசியை வாங்கி தொடர்பு கொண்டான்.

''பத்திரமாய் வீட்டிற்குப் போய் விட்டாயா?''

அவளிடம் பேசிவிட்டு அலைபேசியை அவனிடம் நன்றி கூறி கொடுத்தான். வினய் கண்களில் இலேசான கேலி தெரிந்ததோ?

''நேற்று சைட்டைப் பார்த்துட்டு நடந்த பொழுது ஓர் ஆள் ரொம்ப வேகமாய் வண்டியில் வந்து மோத பார்த்து விட்டான். மயிரிழையில் தப்பித்தாள். அதுதான் கொஞ்சம் அவளைப் பற்றி கவலையில் விசாரித்தேன்.''

''என்ன? என்ன? யார் என்று பார்த்தீர்களா? அவனை சும்மாகவா விட்டீர்கள்? போலீஸில் சொல்லி உள்ளே தள்ளி இருக்க வேண்டாமா?''

''யாரோ இடியட்! மப்பில் வந்தானோ? என்னவோ? ரொம்ப வேகமாய் மறைஞ்சுட்டான். பதட்டத்திலும், அதிர்ச்சியிலும் யாரென்று கவனிக்கலை.''

''ஆளைப் பார்த்தால் சிறிதளவேனும் அடையாளம் காண முடியாதா? அல்லது ஏதாவது முக்கியமான அடையாளம் தெரியுமா? வண்டி நம்பர், மாடல்... இப்படி என்னவாவது தெரியுமா?''

''ம்! கண்ணிமைக்கும் வினாடியில் நடந்து முடிந்து விட்டது. அவன் ஹெல்மெட் போட்டிருந்தான். நித்யாவை கவனிக்கும் பரபரப்பில் நான் அதை கோட்டை விட்டு விட்டேன்.''



''ஏதாவது சந்தேகப்படும்படி இருந்ததா?''

''நான் அப்படி நினைக்கவில்லை. நித்யாவிற்கு யாரும் எதிரிகள் இல்லை. எனவே இது தற்செயலான விபத்தாய் தான் இருக்க வேண்டும்.''

''அப்படியே இருக்கட்டும்'' என்ற வினய் யோசனையுடன் புறப்பட்டான்.

'இவர் அந்த விபத்தைப் பற்றி ஏதாவது சந்தேகப்படுகிறாரா? ஏன் இப்படித் தோண்டித் துருவி கேள்விகள் கேட்கிறார்? நித்யாவின் மனதில் அப்படி ஏதேனும் சஞ்சலம் இருந்ததா என்று தெரியவில்லையே? இருந்திருந்தால் அவளே சொல்லி இருப்பாளே? எதுவாய் வேண்டுமானாலும் இருக்கட்டும், எதற்கும் அவளை எச்சரிக்கையாய் இருக்கச் சொல்ல வேண்டும்' - என பரத் எண்ணிக் கொண்டான்.

# 6

வீட்டில் அனைவரும் ஒன்றாக இரவு சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும் என்பது எழுதப்படாத சட்டம். வினய், ராஜி, தேவன் சாப்பிட அமர்ந்தனர்.

''ஏம்மா, பூமி பூஜைக்கு நீ வரலை?''

''இலேசாய் கால்வலின்னு சொன்னேன்; அது தான் சாக்குன்னு உங்கப்பா கழட்டி விட்டுட்டுப் போயிட்டார்.''

''அப்பா, என்கிட்டே வேற காரணம் சொன்னார்.''

''ஏங்க, நான் சொல்லச் சொன்னதை விட்டுட்டு வேற சொல்லி மாட்டிக்கிட்டிங்களா?''

''ரெண்டு பேருக்கும் அந்த பொண்ணு பேரில் அப்படி என்ன சாஃப்ட் கார்னர்? ஏதாவது ரகசிய கனவில் இருக்கிறீர்களா?''

''ம்ஹூம்! கனவு காண கூட உன்கிட்டே அனுமதி வாங்கணுமா?'' ரிமோட்டை அமுக்கி தொலைக்காட்சிப் பெட்டியை உயிர்ப்பித்தான்.

அதில் விளம்பரம் ஓட....

பிரபல குளிர்பானத்தை குடித்து பெண்களை கவருவதாக காட்சி வரு... கடுப்பாகி அதை அணைத்தான்.

''எங்களுக்கு எல்லாம் பொண்ணுங்களை கரெக்ட் பண்ணுவதை விட வேறு வேலை இல்லையா என்ன? வாழ்க்கையில் உயர வேண்டும்; எட்ட முடியாத உயரங்களைத் தொட்டுக் காட்ட வேண்டும். உலகம் வியக்க வளர வேண்டும். இப்படி எல்லா இளைஞர்களுக்குள்ளும் ஓர் கனவு இருக்கிறது. அதைத் தூண்டிவிட, நல்வழி காட்ட நல்ல மனிதர் வேண்டும். அது யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்; அம்மா, அப்பா, ஆசிரியர், நண்பர், முகமறியா மனிதராக இருக்கலாம். வளர வேண்டும். நேர்மையான வழியில் உயர வேண்டும். அதில் நீடித்து நிலைக்க வேண்டும்...''

அவன் முடிப்பதற்குள் அவன் தந்தை கைத்தட்டினார்.

''இளைஞர் சக்தி மகத்தான சக்தி! அவர்கள் மனதில் இருக்கும் தீப்பொறியைக் கிளறி விட்டாலே போதும் வெந்து தணிந்துவிடும் காடு. ஆனால் எங்கும்



பரபரப்பான இளமையைத் தவறாகத் தூண்டி விடுகிற செயல்களே நடக்கின்றன. அதையும் தாண்டி இளைஞர்கள் சாதித்துக் கொண்டே இருக்கிறார்கள். என் மகனைப் போல'' என தன் மனைவியைப் பார்த்து கண் சிமிட்டினார் தேவன்.

''சூ! சூ! காக்கா!''

''சூச்சூன்னு இப்ப விரட்டுவாள்; அப்புறம் சாதத்தை வைத்து விட்டு காகான்னு கூப்பிடுவாள். அதைவிடு சாயந்திரம் சைட்டுக்குப் போனியே வேலை எப்படி நடக்கிறது?''

''புது பில்டர் என்பதால் எப்படி வேலை செய்கிறார்கள் என பார்க்கப் போனேன். உண்மையிலேயே எனக்குக் கொஞ்சம் அவநம்பிக்கை தான். ஆனால்... என்னால் நம்பவே முடியலை அவர்கள் வேகத்தை பார்க்கலாம்! இன்னும் கொஞ்சம் நாட்கள் செல்லட்டும். ஆரம்ப சூரத்தனம் எத்தனை நாளைக்கு இருக்கும் என்று பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.''

''நானும் விசாரிச்சேன்! ஒரு சின்ன மண்டபத்தை லீஸிற்கு எடுத்து ஆட்களை வேலை நடக்கும் இடத்திற்கு அருகிலேயே தங்க வைத்திருக்கிறார்கள். சாப்பாடு, இடம் எல்லாம் கொடுத்து வேலை வாங்கும் அணுகுமுறை வேலையைத் துரிதமாக முடித்துக் கொடுக்க வைக்கும்.''

''இப்படி விருந்து வைத்தால்... வேலை ஒழுங்காக நடக்குமா? போகப் போக ஆட்கள் அவளை ஏமாற்றப் போகிறார்கள்!''

''அவநம்பிக்கைப் படாதே! வயிறு நிறைஞ்சவன் மனசார வேலை செய்வான். உன் பாட்டி முதலில்

வேலைக்கு வருகிறவர்களை சாப்பிடச் சொல்லிட்டு தான் வேலையே வாங்குவாங்க.''

''எனக்குக் கூட அந்தப் பெண்ணிடம் ஏதோ ஓர் பொறி இருப்பது போல் தோணுதுங்க. கண்களில் தெரியும் உறுதி வெற்றிக்கான அறிகுறி போல் இருக்கிறது. அவள் ஜெயிக்க நம்மாலான உதவியைக் கண்டிப்பாய்ச் செய்ய வேண்டும்.''

''பொறு, பொறு! நம் உதவியை அவள் வேண்டும் பொழுது அதைப்பற்றி யோசிக்கலாம். இந்தக் காலத்துப் பெண்களுக்கு அங்கீகாரம் கொடுத்தாலே போதும்; அவர்களுக்கு வேண்டியதை அவர்களே செய்து கொள் வார்கள். சாதிக்கின்ற ஒவ்வொரு பெண்ணையும் கவ னித்துப் பார்! அவர்கள் எவ்வளவு போராட்டங்களை சந் தித்து மீண்டு வந்திருக்கிறார்கள் என்பது கற்பனையை மீறிய உண்மையாய் இருக்கும். கொள்ளென கொடுத்தல் உயர்ந்தது என்றாலும் அவள் வேண்டாம் என்றும் மறுக்கும் வாய்ப்பும் இருக்கிறது. அவள் மேல் நம்பிக்கை வைத்துக் காத்திருப்போம்.''

''வெறும் அரட்டையிலும், வாழ்க்கையை - உருப்படி யாக வேலை எதுவும் செய்யாமல் சும்மா மேம்போக்காக வாழ்ந்து கொண்டிருக்கும் இளைய சமுதாயத்தில் ஒரு சிறு பெண் நேர்மையாய் உழைத்து தொழில் செய்யும் முயற்சிக்கு தடை போடக் கூடாது என்று அப்பா சொன்னதால்தான் அவளுக்கு நம்ம கட்டடம் கட்டும் வேலையைக் கொடுத்தோம். ஆனாலும்... இன்னும் அவள் மேல் முழு நம்பிக்கை வரவில்லை.'' என்ற வினய்யைப் பார்த்து உள்ளுக்குள் நகைத்துக் கொண்டே தேவன் ''என்னப்பா அரசாங்க மேலதிகாரி ஒருவரைப்



பார்க்கப் போவதாகச் சொன்னாயே! விஷயம் காயா? பழமா?''

''நம் வழி எப்பொழுதும் தெளிவாய், சுத்தமாய் இருக் கும்பொழுது நாம் எதற்கும் பயப்பட வேண்டாம். நேர் மையை நம்புகிற, கடைபிடிக்கிற மனிதர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள் அப்பா!''

''உண்மைதான். அதனால்தான் இன்னமும் உலகில் மழை பெய்து கொண்டிருக்கிறது. வரி கட்ட வேண்டியது எல்லாம் முடிந்து விட்டதா?''

''அதெல்லாம் சரியாக நடந்து விட்டது. நம்மிடம் வரி ஏய்ப்பு என்பதே கிடையாது. வாரன் பஃபெட் கருத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அப்பா?''

''உலகத்தின் மூன்றாம் பெரும் பணக்காரரான வாரன் பஃபெட், அமெரிக்க நாடாளுமன்றம், பணக்காரர்கள் ஏதோ அழிந்து வரும் அபூர்வமான உயிரினம் போலவும் அதைக் காப்பாற்ற விதவிதமான சலுகைகளைக் கொடுத்து வருவதாகவும் கிண்டல் செய்திருக்கிறார். தற்போது அமெரிக்கா கடன் சுமையில் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் அதைச் சமாளிக்க அரசு பணக்காரர்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார். தான் நினைப்பது இருக் கட்டும்; உன் கருத்து என்ன? அதிக வரி விதித்தால் தொழிலிலும், வியாபாரத்திலும் முதலீடு செய்வது குறைந்து போகாதா?''

''கண்டிப்பாக குறையாது. முதலீடு குறைந்து போகும் என்று சொல்வது அப்பட்டமான பொய். வாரனே அருமையான பதில் சொல்லி இருக்கிறார். இருபது

முப்பது வருடங்களுக்கு முன்னால் தமக்குப் பெரும் வரி விதிப்பு இருந்த போதும், தாம் பெரும் முதலீடுகள் செய்து லாபமடைந்ததை நினைவுபடுத்துகிறார்.''

''என்ன தங்கம் விலை ஏறினாலும் நகைக்கடைகளில் கூட்டம் வழிந்து கொண்டு தானே இருக்கிறது. அது போல தானே இந்த முதலீடு விஷயமும்!''

''அட்றா சக்கை. உங்க அம்மாவும் அப்பப்ப பாக்கிய லெஷ்மி மருமகள் என்பதை நிரூபித்து விடுகிறாள்.''

அதே நேரத்தில் ரேகாவும், நித்யாவும் தங்கள் ப்ளாட்டில் பேசிக் கொண்டிருந்தனர். காலிங் பெல் ஒலித்தது. சந்துரு தான். ''என்ன சந்துரு?''

''மணல் இன்னும் வந்து சேரலை. டீலரைப் பார்க்க இவ்வளவு நேரம் காத்துக்கிட்டு இருந்துவிட்டு இப்பத் தான் வருகிறேன். எனக்கு என்னவோ அவன் மணல் அனுப்பமாட்டான் என்றே தோன்றுகிறது. நம்மை சும்மா அப்படி இப்படி அலைக்கழிக்கிறான். சரியான பதிலும் இல்லை. அவனைச் சந்திக்கவும் முடியலை. அவனிடம் வேலை செய்பவர்கள் ஆளாளுக்கு வித விதமாய் சாக்கு போக்கு சொல்கிறார்கள். ஒண்ணும் உண்மையாய் தெரியலை. இப்ப மணலுக்கு என் செய்வது?''

''இப்ப மணி பத்து தானே? வா போய் பார்த்து விட்டு வரலாம்.''

''இரு ரஞ்சனி! என்னுடைய காரில் போகலாம். நானும் வருகிறேன்'' என ரேகாவும் கிளம்பினாள்.



''வேண்டாம்பா! புது கார் வாங்கி நீயே இன்னும் வெளியே போகலை.''

''ஹேய்! உனக்கில்லாததா? அதை ஷோகேஸில் வைக்கவா வாங்கினேன். வா போகலாம்.''

மணல் டீலரை நேரே போய் அவர் வீட்டிலேயே பிடித்தனர். அந்த நேரத்தில் அவர்களை அவர் எதிர் பார்க்கவில்லை. போலும்! ஒரு வினாடி திகைத்தவர் சுதாரித்துக் கொண்டார். அவர்களைக் கண்டு கொள்ளாத வராய் காத்திருந்தனர். நித்யா நகரும் எண்ணத்தில் இல்லை என்பதை புரிந்து கொண்டு ''என்னம்மா, வேளை கெட்ட வேளையில் என்னைத் தேடி வந்திருக் கீங்க?'' என்று அலுப்புற்ற குரலில் மொழிந்தார்.

''சார்! மணல் லோடு அனுப்புவதாய் சொன்னீர்கள்; ஆனால் அனுப்பவே இல்லையே?''

''என்ன செய்யறது? மணலுக்கு ரொம்ப டிமாண்ட். மழை சீசன் வேற! நான் உற்பத்தி பண்ணுகிற பொருளா? கேட்டதும் கொடுக்கிறதுக்கு.''

''நீங்க தானே சார் அவசியம் தருகிறேன் என்று சொன் னீர்கள்?''

''நான் இல்லைன்னு சொல்லலையே! மணல் இருந் தால் தானே கொடுக்க முடியும்? என் வீட்டு அடுப்படி யில் இருந்து வருகிற பொருளா என்ன? அதைக்கூட அவசரத்தில் தர முடியாது. மணல் வந்ததும் அனுப்பு கிறேன். அதுக்காக வீடு தேடி வந்தாலும் என்னால் ஒண்ணும் பண்ண முடியாது.''

''இப்ப என்னதான் சொல்கிறீர்கள்? எப்பொழுது மணல் தருவீர்கள்?''

''இப்போதைக்கு மணல் இல்லை.''

''இன்னும் ரெண்டு நாள் ஆகுமா? நாளையோ...? நாளை மறுநாளோ?'

''என்ன... ரெண்டு நாளா? இன்னும் இரண்டு மாசம் கழிச்சு தருவதைப் பற்றிக் கூட யோசிக்க வேண்டும்.''

''சார்! எங்களுடன் ஒப்பந்தம் செய்து இருக்கிறீர்கள். உடனடியாக மணல் தருவதாக பத்திரத்தில் எழுதி கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள்.''

''ரஞ்சனி! அப்புறம் ஏன் இவரிடம் கெஞ்சிக் கொண்டிருக்கிறாய்? நாம் லீகலாய் ஆக்ஷன் எடுப்போம் நஷ்ட ஈடு கேட்டு கோர்ட்டுக்கு இழுத்து இவர் தொழிலையே இழுத்து மூட வைக்கலாம்.''

'என்ன நினைத்தாரோ!' ''கொஞ்சம் இருங்க. ஒரே ஒரு லாரி மணல் தான் இருக்கிறது. அதை வேண்டுமானால் எடுத்துப் போங்க. இனி வேறு ஆளைப் பார்த்துக் கொள்ளுங்கள்.''

''இவ்வளவு சொன்ன பிறகு, மணலின் தரம் பார்க்காமல் நாங்க எடுத்துச் செல்ல முடியாது.''

''நம்மகிட்ட மாவு மாதிரி இருக்கும் பொடிமணல் எல்லாம் கிடையாது. கட்டட வேலைக்கு உகந்த பருமணல் தான் எங்களிடம் இருக்கிறது.''

''இருக்கட்டும் சார்! மணலை நாங்கள் பார்க்க வேண்டும்.''

''சரி போய் பாருங்க. இதைத் தவிர வேறு மணல் எதுவும் என்னிடம் கிடையாது. ஏதோ நீங்க ரொம்ப



கேட்டதால் தருகிறேன். எதிரே நிறுத்தியிருந்த லாரியை நோக்கி ஒன்றும் பேசாமல் நகர்ந்தாள். லாரியில் இருந்த மணலை சிறிது அள்ளி வெளிச்சத்தில் பார்த்தாள். மணலில் பூத்தாற் போல் வெண்படலம் இருந்தது. சந்தேகமாய் ஒரு சிட்டிகை எடுத்து வாயில் போட்டாள். உப்பு கரித்தது. காரில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து வாயை கொப்பளித்தாள்.

''சார்! எங்களுக்கு உங்கள் மணல் வேண்டாம். உங்ககிட்டே நேர்மையே இல்லை. ஆற்று மணல் என்று கடல் மணலைக் கொடுத்து ஏமாற்றப் பார்க்கிறீர்கள்...''

''இந்தாம்மா, வேண்டாம்னா ஒப்பந்த பத்திரத்தைக் கொடுத்துப் பணத்தை வாங்கிக்கிட்டு நடையைக் கட்டுங்க.''

பணத்தை எடுத்து நீட்டினார். அவர்கள் கொடுத்த பத்திரத்தை வாங்கிக் கிழித்துப் போட்டார்.

''கத்துக் குட்டிங்க எல்லாம் பெரிய தொழில் செய்ய வந்துட்டாங்க.''

அந்த ஆள் சொன்னது நன்றாகவே காதில் விழுந்தது என்றாலும் நித்யா கண்டு கொள்ளாமல் புறப்பட்டாள். மூவரும் காரில் ஏறிய பொழுது அவள் அலைபேசி ஒலித்தது.

''என்னம்மா கண்ணு பிழைப்பில் மணல்... இல்லையில்லை மண் விழுந்துடுச்சா?'' என குரல் எக்களித்துச் சிரித்தது.

# 7

''இப்ப என்ன செய்வது அக்கா?''

''சந்துரு உனக்குக் களைப்பாய் இல்லையே? உன்னால் கார் தொடர்ந்து ஓட்ட முடியுமா?''

''முடியும். எங்கே போக வேண்டும் சொல்?''

''நமக்கு கிரானைட் கல் கொடுத்தாரே! அவர் இப் பொழுது எங்கிருப்பாரோ அங்கே போ!''

''இந்நேரத்தில் அவரைத் தொந்தரவு செய்வது சரி யாய் இருக்குமா? காலையில் பார்த்துக் கொள்ளலாமா?''

''யோசிக்க நேரமில்லை! ஒரு முயற்சி செய்து பார்ப் போம். முடியாவிட்டால் காலையில் தொடர்வோம்.''

''இரு! முதலில் அவர் எங்கிருக்கிறார் என்று போன் செய்து தெரிந்து கொள்ளலாம்.

காரை ஓரமாக நிறுத்திவிட்டு போன் செய்தான்.

திரும்பத் திரும்ப அவன் முயற்சி செய்வதைப் பார்த்துவிட்டு,

''என்ன சந்துரு?'' என ரேகா கேட்டாள்.

''லைன் உபயோகத்தில் உள்ளதாம்.''

''சரி விடு. அவர் வீட்டிற்குச் சென்று விசாரித்தால் என்ன?''



''ஆனால் வீடு எங்கிருக்கிறது என்று தெரியாதே! கவலைப்படாதே. அவருக்கு தி.நகரில் ஒரு அலுவலகம் இருக்கிறது. அங்கே விசாரிக்கலாம். அது திறந்திருந்தால் நம் அதிர்ஷ்டம்.''

சொல்லிக் கொண்டே காரின் வேகத்தை அதிகரித் தான். அப்பொழுது தான் அதை மூடியிருப்பார்கள் போல... வாட்ச்மேன் சாவியைக் கொடுத்துவிட்டு வந்து கொண்டிருந்தான்.

சந்துரு விசாரிக்க...

''ஐயாவைப் பார்க்க வந்தீங்களா! அவர் ஊர்ல இல்லீங்க! அவர் பையன் கல்யாணத்துக்கு பத்திரிகை வைக்க கிராமத்துக்குப் போயிருக்காங்க. சின்ன ஐயா வெளியே எங்கேயோ போனாருங்க.''

''பரத் கிட்டே பேசி பாரேன். அவன் வேறு ஏதாவது யோசனை வைத்திருக்கிறானா என்று தெரியும்'' அவர்கள் கிளம்பினர்.

''வேண்டாம் ரேகா. அவனை வேலை நேரத்தில் தொந்தரவு படுத்த வேண்டாம். நாமே ஏதாவது யோசிப் போம்.''

''ஏய்! அங்கே பாருப்பா! ஆம்னி வேன் ஒன்று கவிழ்ந்து கிடக்கிறது.''

''வண்டியை நிறுத்து சந்துரு. ஆள் இல்லாத இடத் தில் விபத்து நடந்து இருக்கிறது. யாருக்காவது உதவி தேவைப்படலாம்.''

''வண்டி கிடப்பதைப் பார்த்தால் யாரும் பிழைத்து இருக்கும் வாய்ப்பு இருப்பதைப் போல் தெரியவில்லை முதலில் போலீஸிற்கு தகவல் கொடு.''

ரேகா சொன்னது சரியாய் இருந்தது. அந்த வேனில் பயணம் செய்திருந்த ஐந்து பேரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். ஆம்புலன்ஸிற்கும், காவல் நிலையத்திற்கும் தகவல் கொடுத்துவிட்டுக் காத்திருந்தனர்.

மெல்ல முனுகல் கேட்க...

''சந்துரு! அந்த பையனுக்கு உயிர் இருக்கிறது. அவனை மெதுவாய் வெளியே எடு.''

கதவு நசுங்கியிருந்ததால் திறக்க முடியவில்லை. ஜன்னல் வழியாக கையை விட்டு கதவை நெம்பி நெம்பி போராடித் திறக்கவும் ஆம்புலன்ஸ் வரவும் சரியாய் இருந்தது.

அதில் உயிர் பிழைத்திருந்த அந்த இளைஞனை ஏற்றி அனுப்பி விட்டு சந்துரு காவல் அதிகாரி வரும் வரை அங்கு காத்திருந்தான். நித்யா ஆம்புலன்ஸில் செல்லும் பொழுதே அந்த இளைஞன் மொபைலில் இருந்து நம்பர் வாங்கி வீட்டிற்குத் தகவல் தந்து விட்டாள். எப்படித்தான் அந்த இளைஞன் மட்டும் சின்னக் கீறல் கூட விழாமல் உயிர் பிழைத்தானோ? அவனுடன் பயணம் செய்த நால்வரும் இறந்து போயிருந்தனர். அந்த அதிர்ச்சிதான் அவனை மயக்கமுறச் செய்து இருந்தது. மருத்துவமனை யில் சிகிச்சையளித்ததில் பெருமளவு தேறி விட்டான். நித்யா கிளம்ப எண்ணிய நேரத்தில் சந்துரு காருடன் அங்கு வந்து சேர்ந்தான்.

''நம்ம வேலை அப்படியே நிற்கிறது. நேரம் வேறு ஆகி விட்டது. நாளைக் காலையில் அவரை போய் பார்க்கலாம். இப்பொழுது வீட்டிற்குப் போகலாம்.''

அப்போது பையனுடைய தந்தை பதறிக் கொண்டு வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்ததும் கடவுளை நேரில்



கண்டது போல நித்யா மகிழ்ச்சியடைந்தாள். அவர்கள் தேடிக் கொண்டிருந்த கிரானைட் கம்பெனி ஓனர் தான். பையனைப் பார்த்து அவன் நலம் அறிந்தார்.

''பெரியவங்க சொல்றதைக் கேட்கணும். வீட்டுக்குத் தெரியாமல், கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிற பெண்ணை பார்க்க நீ கிளம்பி விட்டாய்; இப்ப நடந்ததை பார்த்தாயா. கார் எடுத்துக் கொண்டு போனால் தெரிந்து விடும் என்று நீ நினைத்தாய்; அந்தப் பெண் மேலும் தேவையில்லாமல் பழிச்சொல் வருமே! அதெல்லாம் உங்களுக்கு எங்கே புரியப் போகிறது!''

அந்த இளைஞன் சற்று தலை குனிந்தாற் அமர்ந் திருந்தான். அவனைப் பார்த்து மனதை உணர்ந்ததைப் போல்.

''சரி! சரி! விடு! இதோடு போனதே முன்னோர் செய்த புண்ணியம். உன்னைக் காப்பாற்றியவர்களுக்கு முதலில் நன்றி சொல்ல வேண்டும்.''

நித்யாவை பின்னர் தான் பார்த்தார்.

''நீ எங்கம்மா இங்கே? ஓ! தகவல் கொடுத்தாலும், என் மகனுக்கு உதவியதும் நீதானா? ரொம்ப நன்றிம்மா!''

''நன்றி சொல்லும் அளவிற்குப் பெரிதாக நான் ஒன்றும் பெரிதாகச் செய்து விடவில்லை. உங்களை தேடித் தான் காரில் அலைந்து கொண்டிருந்தோம். அப்போதுதான் உங்கள் மகனுக்கு உதவி செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.''

''என்னம்மா விஷயம்? இந்த இருட்டு நேரத்தில் என்னைத் தேடி அலையணும்னா... ஏதாவது முக்கிய மான விஷயமா? தயங்காமல் சொல்லுங்கள்.''

''சார்! உங்ககிட்டே குவாரி வேஸ்ட் இருக்கா?''

''இல்லை கிரஷரில் உடைக்குபொழுது தூள் தூளாக விழும் கழிவைத் தானே கேட்கிறீங்க? அது ஒரு ஐந்து, ஆறு யூனிட் இருக்கும்.''

''சார்! இப்ப இருக்கிற குவாரி வேஸ்ட்டைக் கொடுங்க. நாங்க விலைக்கு வாங்கிக் கொள்கிறோம்.''

''என் நண்பர் ஒருத்தர் குவாரி கழிவை வாங்க நாளைக் காலை ஆளை அழைத்து வருகிறேன் என்று சொன்னார்.''

''சார்! எங்களுக்கு அவசரத் தேவை இருக்கிறது. இன்னும் வராதவங்களுக்காக ஏன் காத்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்கிற நியாயமான விலையை நாங்க தரத் தயாராய் இருக்கிறோம்.''

''சரிம்மா! உனக்கு நன்றி செலுத்தும் வாய்ப்பாக இதை நினைத்துக் கொள்கிறேன். நண்பர் வருத்தப்படு வார்; விடு! நான் அவரை சமாதானப்படுத்திக் கொள் கிறேன். எல்லா யூனிட்டும் நீங்களே எடுத்துக் கொள் ளுங்கள். மொத்தம் பத்து யூனிட்டும் எடுத்துக்கங்க. யூனிட் வெளியில் என்ன விலை விற்கிறதோ அதையே கொடுத்து விடுங்கள்.''

பணத்திற்கு உடனே 'செக்' எழுதி கொடுத்தாள்.

''சார்! நாளைக்காலை லோடு வந்ததும் பணம் கொடுத்து விட்டு இந்த செக்கை வாங்கிக் கொள்கிறேன். உங்களுக்கு சம்மதம் தானா?''

''ரெண்டு பக்கமும் பாதுகாப்பாய் இருக்கிற வழி. ரொம்ப நல்லது. லோடை இப்பவே அனுப்பணுமா?''



''அனுப்பினால் நன்றாக இருக்கும்.''

அவள் சொன்னதும் அலைபேசியில் யாருடனோ தொடர்பு கொண்டார். பின் முகவரியை அவளிடம் கேட் டுக் கொண்டார்.

''சார்! நீங்க இருந்து உங்க பையனை பார்த்து அழைத்துச் செல்லுங்கள். நாங்களே போய் லோடு அனுப்ப உதவுகிறோம்'' என கிளம்பினர். கூடவே இருந்து ஐந்து யூனிட் அனுப்பிவிட்டு பரத்திற்கு போன் செய்து விவரத்தைச் சொன்னாள்.

''வெரிகுட்! சரி நான் இனி பார்த்துக் கொள்கிறேன். இப்ப மணி என்ன தெரியுமா? பன்னிரெண்டு தொடங்கி அடுத்த நாள் ஆயிடுச்சு. நீ வீட்டிற்குப் போ! சந்துரு கூட இருந்து அனுப்பி வைப்பான்.''

''ரொம்ப நேரமாயிடுச்சு! நீங்க போங்கம்மா! உங்க காம்ரேட் நம்மை கோபித்துக் கொள்வார். மீதியை நான் இங்கேயே இருந்து அனுப்பி வைக்கிறேன்.''

''சந்துரு நீயும் கிளம்பு! இப்ப அவசரமில்லை! காலை யில் ஆறு மணிக்கு வந்து மீதி லோடை ஏற்றிச் செல்ல லாம். காரிலேயே, தூங்கி விட்டிருந்த ரேகாவை, எழுப் பாமல் அலுங்காமல் காரை கிளப்பி வீடு போய் சேர்ந் தனர். படுத்ததும் உறக்கம் ஓடி வந்து தழுவிக் கொண்டது.

''சந்துரு! எழுந்திரு போகலாம்!''

''சூ! அதற்குள் விடிந்து விட்டதா? இன்னும் கொஞ்ச நேரம்... ப்ளீஸ்! ப்ளீஸ்...'' என்றவாறே போர்வையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டு தூங்கலானான்.

ரேகாவிடம் சொல்லிவிட்டு ஸ்கூட்டியில் கிளம்பி விட்டாள். பரத்தை வீட்டிற்கு அனுப்பி விட்டு வேலையைப் பார்க்க வேண்டும். சந்துரு நன்றாக தூங்கிவிட்டு வரட்டும் என்ற முடிவோடு தான் கிளம்பினாள். மண்டபத்திற்குச் சென்று தொழிலாளர்களை கவனித்து விட்டு, ஏதாவது தேவையா? உணவு தரம், சுவை எப்படி இருக்கிறது? என்று கேட்டுவிட்டு கட்டடம் கட்டும் இடத்திற்குச் சென்றாள். பரத் அவள் வருவதற்குள் ஆட்களை வைத்து குவாரி வேஸ்ட்டை சல்லடைகளில் சலித்து மாவு போல் உள்ள பகுதிகளை நீக்கி விட்டு குருணை போல் உள்ளதை தனியாக பிரித்து வைத்திருந்தான். ஆட்களில் ஒரு பிரிவு சலித்து குருணை எடுப்பதும், மறு பிரிவு சிமென்ட்டையும் கல் குருணையையும் கலந்து கலவை தயாரித்துக் கொண்டிருந்தனர். கான்கிரீட் வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ''ஃபிளை ஆஷ் கிடைத்தால் இன்னும் அருமையாக இருக்கும். மேட்டூர் நீர் மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலையம் எல்லாவற்றிலும் நிலக்கரி அதிக அளவில் பயன்படுத்துகிறார்கள். அங்கு கழிவாகக் கொட்டப்படும் நிலக்கரிச் சாம்பல் கிடைத்தால் நன்றாக இருக்கும்.''

''உன் யோசனை நல்லதுதான். ஆனால் அரசு யாருக்கும் அதை தருவதில்லை. ஃபிளை ஆஷை கடலில்தான் கொட்டுகிறார்கள்.''

''அது கடல் வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து தானே?''

''ஆமாம். நாம் ஏதாவது முயற்சி செய்து அதை பெற முடியுமா என்று பார்க்க வேண்டும்.''

''திடீரென்று மணல் காண்டிராக்டர் ஏன் இப்படிச் செய்தார்?''



''பரத். இது யாரோ ஒருவரின் தூண்டுதலாய் இருக்கும் போலிருக்கிறது!''

''என்ன? நம் போட்டியாளர்களின் சதியா?''

''இருக்க வாய்ப்பு உண்டு. அடிக்கடி மிரட்டும் முகமறியா கால் வருகிறது.''

''ஹேய்! ஏன் என்னிடம் சொல்லவில்லை. எத்தனை கால் வந்தது? என்ன சொல்லி மிரட்டினான்? அந்த நம்பரை கண்டுபிடிக்க புகார் கொடுக்க வேண்டும். நீ இனி அவற்றை அலட்சியப்படுத்தாதே! கவனமாய் இரு.''

''சூ! நீ இப்படி கலவரப்படுவாய் என்றுதான் சொல்லவில்லை. இன்னொரு முறை கால் வந்தால் கட்டாயம் உன்னிடம் கொடுத்து விடுகிறேன். கவலைப்படாமல் வேலையைப் பார்.''

பரத் வீட்டிற்குக் கிளம்பிய பிறகு நித்யரஞ்சனி வேலையை கவனிக்கலானாள். எதேச்சையாய் திரும்பிய பொழுதுதான் யாரோ ஓர் ஆள் தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

## 8

''என்னம்மா! இன்னிக்கு முருகனிடம் வேண்டுதல் மிகவும் பலமாய் இருந்தது?''

''பின்னே? எனக்கு இருக்கும் ஒரே கவலை, என் மகன் கல்யாணம் தான். அவன் தான் எதற்கும் பிடி கொடுக்க மாட்டேன் என்கிறானே?''

''ஆனாலும் உன் விக்கிரமாதித்ய முயற்சியை நீயும் தான் விடுவதில்லையே!''

''சீக்கிரம் தயாராகுங்கள். தரகர் சொன்ன பெண் இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவாள்.''

''அட! உன் பையனுக்கு தானம்மா கல்யாணம் என்று சொன்னாய்?''

''உஷ்! அதோ வந்து விட்டார்கள்.''

மாடி வளைவில் இருந்து கீழே ஹாலில் வந்து அமர்ந் தவர்களைப் பார்த்தனர்.

அந்தப் பெண் வெட்டி விட்ட கூந்தலும், டைட் ஜீன் ஸும் கை இல்லாத டாப்ஸுமாய் இருந்தாள். கூடவே சுடிதார் அணிந்து மேக்கப்பால் வயதை மறைக்க முயன்று கொண்டிருந்த நடுத்தர வயது பெண்.

''யாரும்மா அது? இலவச இணைப்பாய்! அவ ளுடைய அக்காவா?''

''உங்க கிண்டலை அப்புறம் வைத்துக் கொள்ளுங் கள். எங்கே நம் அருமை மகன்? விஷயம் தெரிந்தால் நைசாய் வெளியே நழுவி விடுவானே?''

''இன்றைக்கு அவன் சரியாகத்தான்... அதாவது வசமாக மாட்டிக் கொண்டான் என்று தான் நினைக் கிறேன்.'' அவரை மெல்ல இழுக்க...

சின்னச் சிரிப்புடன் இருவரும் கீழே இறங்கினர்.



கால் மேல் கால் போட்டு சோபாவில் அமர்ந்திருந்த சுடிதார் பெண் திரும்பிப் பார்த்தாள்.

''வாங்க, வாங்க.''

''வணக்கம். இது என் பெண் சுஷ்! ஆபீஸிலிருந்து அப்படியே இங்கு வந்து விட்டாள். இது ஒரு சாதாரண மான சந்திப்பு தானே? அது தான் இயல்பாய் இருக்கட் டும் என்று அப்படியே வந்து விட்டோம்.''

''அதனால் என்ன? என்ன சாப்பிடுகிறீர்கள்?''

''ம்ஹூம்; அதெல்லாம் வேண்டாம்; நாங்க டயட்டில் இருக்கிறோம்'' மறுபடியும் அம்மா தான் பேசினாள்.

வினய் அங்கே வர,

''மம்மி! திஸ் கை இஸ் லுக்கிங் வெரி சார்மிங்'' என அவள் முணுமுணுத்தது எல்லார் காதிலும் விழத்தான் செய்தது.

''ஹாய்! கிளாட் டு மீட் யூ!'' என அவள் எழுந்து அவன் கையைப் பற்றிக் குலுக்கினாள். வினயோ திரும்பி தன் தாயைப் பார்த்தான்.

''ஹலோ ஆன்ட்டி! உங்க பையனுடன் நான் கொஞ்சம் தனியாய் பேசலாமா?''

''அம்மா, எனக்கு வெளியே ஒரு முக்கியமான வேலை இருக்கிறது.''

''இரு! இரு வினய். ஓர் அரைமணி கழித்து நீ செல்ல லாம் அல்லவா?'' என்று கூறியவாறே கண்களால் ப்ளீஸ் எனக் கெஞ்சுவது போல் இராஜி தேவனை பார்க்க,

''உன் தோட்டத்தில் போய் பேசுங்களேன்'' - தேவன் உதவிக்கு வந்தார்.

வினய் வீட்டின் உட்புறம் இருந்த புல்வெளியை நோக்கி நடந்தான்.

"நீ வீட்டிற்கு ஒரே பையன் என்று மம்மி சொன்னாங்க. உங்க வீடு பிரம்மாண்டமாய் இருக்கிறது; இது உன் பேரில் தானே இருக்கிறது? கல்யாணத்திற்குப் பிறகு இதை என் பேருக்கு மாற்றி விடுவாயா?"

"என் கல்யாணத்திற்காக நான் ஏன் வீட்டை உனக்கு விற்க வேண்டும்?"

"ஹேய் விளையாடாதேப்பா! என் ஆசையெல்லாம் நிறைவேற்றுவாயா? என் மகிழ்ச்சிக்காக எதையும் செய்வாயா? காலையில் எட்டு மணிக்கு தான் எழுந்திருப்பேன். சமையல் பிரச்சனை உன் வீட்டில் இருக்காது என்று நினைக்கிறேன். வீட்டில் சமைப்பதற்கு ஆள் இருப்பார்கள். அப்புறம் என் அம்மாவும் எனக்கு உதவியாக இந்த வீட்டில் இருப்பார்கள். அது சரி தானே. உன் அம்மாவும், அப்பாவும் வருடத்திற்கு ஒரு பத்து நாள் நம்முடன் வந்து தாராளமாய் தங்கி விட்டுப் போகட்டும்."

"ஏன் இன்றைக்கு உங்க ஆபீஸில் ஏதாவது கெட் டு கெதர் ப்ரோகிராமா?" 'என்ன இவன் சம்பந்தமில்லாமல் ஏதோ கேட்கிறானே?' என அவள் பார்க்க...

"இல்லை; ஏதோ சீரியல் டயலாக் போல இருந்ததா... டிராமா வசனம் பேசிப் பார்க்கிறாய் என நினைத்து விட்டேன்."

"ஹேய்! உனக்கு ஒன்று தெரியுமா? என்னை டி.வி.யில் காம்பயர் பண்ண கூப்பிட்டார்கள். நான் தான் இன்னும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். இந்தக் கல்யாணம் நடக்கா விட்டால் அடுத்து அதைத்தான் ஓ.கே. சொல்ல வேண்டும்."



"ஆறு கோடி மக்களின் கனவு கன்னியாக வேண்டியவள் ஒரு வீட்டிற்குள் சிறைப் படலாமா? என் மனைவி வீட்டிற்குள்ளே இருக்க வேண்டும். அவள் தான் சமைக்க வேண்டும். என்னையும், என் குழந்தைகளையும் அருமையாய் பார்த்துக் கொள்ள வேண்டும். சங்கத் தமிழ் படித்திருக்கிறாயா? அல்லது கேள்வியாவது பட்டிருக்கிறாயா? அதில் வரும் தலைவியைப் போல் இருக்க வேண்டும். அது உனக்கு சரிப்படாது. நீ சுதந்திரப் பறவையாய் பற!"

"ஐயோ! என்னிடம் ப்ரபோஸ் பண்ணினவங்களை எல்லாம் விட்டுட்டு உன்னிடம் அடிமையாய் மாட்டிக் கொள்ள நான் தயாராய் இல்லை குட் பை" என அவள் பரபரவென அங்கிருந்து ஏறக்குறைய தன் தாயை இழுத்துக் கொண்டு வெளியேறினாள்.

"ஏய்! என்னடா சொன்னாய்? அவள் அப்படி ஓடுகிறாள்?"

"விடும்மா! நீ என்ன இன்றைக்கு முருகனுக்கு ரொம்ப நேரம் ஐஸ் வைத்துக் கொண்டிருந்தாய்?"

"ம்! அதுவா? நான் பேரனுடன் தங்கத் தட்டில் சாப்பிட வேண்டுமென்று வேண்டிக் கொண்டிருந்தேன்."

"ஆகா! உன் அம்மா ரொம்ப கெட்டிக்காரிடா! ஒரே வரத்தில் மருமகள், பேரன் என்ற வாரிசு தங்கத் தட்டில் சாப்பிடும் செல்வம், அதுவரை அவளுக்கு நீண்ட ஆயுள் போன்றவற்றை கேட்டு விட்டாள்."

அவர் சொல்லிக் கொண்டிருந்த பொழுது...

இளம் ஊதா வண்ண சுடிதாரில் மென்மையான பூவைப் போல் நித்யா வந்து நின்றாள்.

''சார் வணக்கம்! உங்க மகனிற்கு கட்டட பிளானில் ஒரு சந்தேகம் என்று போன் செய்தார். அது என்ன என்று கேட்டுப் போகலாம் என்று வந்தேன்.''

காதை உரசிய தலைமுடியைப் பார்த்தவாறே வினய் நின்றிருந்தான். 'அன்று போலவே இன்றும் ஓர் துளி தங்கம் அவள் உடலில் இல்லை. இருந்தும் பன்னீரில் நனைந்த ரோஜா போல் இத்தனை அழகாய் இருப்பது எப்படி?' வைத்த விழி அசைக்காமல் பார்த்துக் கொண் டிருந்தவனைக் கண்டு கொள்ளாதது போல் தேவன் ''உட்காரம்மா! வேலை எப்படி போய்க் கொண்டிருக் கிறது?'' என்றார்.

''ம். மிகவும் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது.''

''என்னம்மா! சாப்பிடுகிறாய்? ரொம்ப களைத்துப் போயிருக்கிறாய்!''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் மேடம்.''

''இங்க பாரும்மா! இவங்க எல்லாம் உன் அலுவலக மேலாளர்களாய் இருக்கலாம். சார்! என இவர்களைக் கூப்பிடுவதுடன் நிறுத்திக் கொள். நான் அப்படியில்லை... எனவே என்னை மேடம் என்று கூப்பிடாதே!''

''ஓகே ஆன்ட்டி!''

''அம்மா! நாங்கள் எங்க வேலையைப் பார்க்கலாமா? அப்பா நான் மாடி தோட்டத்திற்கு செல்கிறேன்.''

''வா நித்தி'' என அவன் செல்ல...

புருவத்தால் இருவரும் தங்கள் வியப்பை வெளிப் படுத்திக் கொண்டனர்.



அந்த அழகான வீட்டிற்கு மேலும் அழகு சேர்ப்பதாய் இருந்தது மாடித் தோட்டம். புல்வெளியும் மலர்ச்செடி களுமாய் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த வினாடியே குப்பென்று அவள் இதழ்களில் இனிய புன்னகை மலர்ந்தது. மனசுக்குள் அந்தப் புத்துணர்ச் சியை அனுபவிப்பவள் போல் ஓர் வினாடி கண்மூடி தென்றலை இனிய மணத்துடன் முகர்ந்தாள். தென் றலோ மிக உரிமையுடன் அவள் கூந்தலைத் தொட்டுத் தாலாட்டியது. எல்லாவற்றையும் கைக்கட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான் வினய். ஒருவேளை ரசித்துக் கொண் டிருந்தானோ என்னவோ?

கண்களைத் திறந்தவளிடம் சிறுசிரிப்புடன் அமர்வ தற்கு நாற்காலியைக் காட்டினான். வட்டமான மேசையைச் சுற்றிப் போடப்பட்டிருந்த இரு நாற்காலிகளில் எதிர் எதிரே அமர்ந்தனர்.

''ம்! சொல்லு நித்தி. வரை படம் கொண்டு வந்திருக் கிறாயா?''

''ம்! அதில் என்ன சந்தேகம் உங்களுக்கு?''

''நடுவில் ஒரு அறை காட்டியிருக்கிறாயே? அது எதற்கு?'' அவள் பாட்டிற்கு விளக்கிக் கொண்டிருக்க அவன் கவனம் என்னவோ வேறு எதிலோ?

நடுவே ஒருவன் வந்து எட்டிப் பார்த்தான்.

''வா! வா! ரொம்ப பசி! சீக்கிரம் கொண்டு வந்து வை.'' சீருடை பணியாள் இரு அழகான தட்டுகளில் காஷ்மீரி புலவு - ஸ்பூனுடன் கொண்டு வந்து வைத்தான்.

''நான் சாப்பிடப் போகிறேன்; எனக்கு துணையாக உணவு வருந்துவதில் மறுப்பு ஏதும் இல்லையே?''

என்றவாறே அவளுக்கும் எடுத்து பரிமாறினான். அவள் மறுக்க அவன் வாய்ப்பே தரவில்லை. அடுத்தடுத்து வேலை விஷயமாய் ஏதேதோ கேள்விகள் கேட்டுக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவள் கவனம் முழுவதும் விளக்குவதிலேயே இருக்க... கையோ அனிச்சை செயலாய் உணவை மெதுவாய் உள்ளே செலுத்திக் கொண்டிருந்தது. பழத் துண்டுகள், சூப் இவற்றுடன் விருந்து முடிந்த பொழுது அவன் பேச்சும் முடிந்திருந்தது. உண்மையிலேயே அவளுக்கு மிகுந்த பசி தான் போலும். இரவெல்லாம் அலைந்து பகலில் வேலை முடிக்கும் அவசரத்தில் பகலுணவை மறந்தே போயிருந்தாள். காலியான தட்டுகளைப் பார்த்த பொழுது அவளுக்கே சற்று வெட்கமாய் இருந்தது. ''சாப்பிடு வதற்கு வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.''

''சரி. எனக்கு நிறைய வேலையிருக்கிறது. பரத் வேறு தாமதமானால் கவலைப்படுவான்.''

''ஏன்? இங்கு இருக்கையில் கவலைப்பட அவசியம் என்ன வந்தது? நீ யாரிடமும் சொல்லாமல் வந்தாயா?''

''இல்லை. வரும் வழியில் ஏதாவது பிரச்சனையோ என்று யோசிப்பான்.''

''நான் வேண்டுமானால் கொண்டு வந்து விடட்டுமா?''

''வேண்டாம்.'' இருவரும் பேசிக் கொண்டே கீழிறங்கி வந்தனர். கடைசி வார்த்தைகள் கீழே இருப்பவர்களின் காதில் அரைகுறையாய் விழுந்தே விட்டன. அவர் களுக்கு என்னவென்று ஊகிக்க தெரியாதா என்ன?

'என்ன? உன் பையனுக்கு பெண் கிடைத்து விட் டாளா? உன் முகம் இப்படி மலர்கிறதே?' என தேவன் மௌனமாய் கேட்ட கேள்விக்கு.



''கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவானேன்? நம் குலதெய்வம் காமாட்சி என் எண்ணத்தை ஈடேற்றி வைப்பாள்'' என வாய் விட்டே இராஜி பதில் கூற,

''என்ன ஆன்ட்டி?'' என நித்யா கேட்டாள்.

''இவளுக்கு சண்டை பிடிக்க ஒரு மருமகள் வேண்டு மாம்! நாங்கள் வேலையில் ஆழ்ந்து இருப்பதால் இவ ளுக்கு ரொம்ப போரடிக்கிறதாம். இந்த நிமிஷமே மருமகள் வேண்டும் என்றால் எங்கே போவது?''

''அன்றைக்குக் கூட யாரோ ஒரு பெண்ணை பார்ப்ப தாக இருந்தீர்கள் தானே?''

''இன்றைக்கும் தான்'' என வினய் இடையிட்டுச் சொல்ல,

''என்ன?'' என்றாள் சிறு அதிர்ச்சியுடன்.

''அதற்கு நீ ஏனம்மா அதிர்கிறாய்? காலமும், நேரமும் கூடி வந்தால் எல்லாம் கைகூடும்.''

''நாம் முயற்சி செய்யாமல் எதுவும் தானாய் நடக்காது.''

''என்ன செய்வது? அவனுக்கு வேண்டிய பெண் எங் கிருக்கிறாளோ? இவனோ கழுவுற மீனில் நழுவுற மீனாய் இருக்கிறான். அவன் மனசில் ஏதேனும் வெள் ளைக்காரியை நினைத்துக் கொண்டிருக்கிறானோ? என்னவோ?''

''யாராய் இருந்தாலென்ன? நல்லவளாய் அவன் மன சுக்குப் பிடித்தவளாய் இருந்தால் சரி.''

''அப்புறம், உன் உறவெல்லாம் அவ்வளவு தான். பரவாயில்லையா?''

''உள்ளூரில் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க மட்டும் உறவாட இருக்காங்களா? எந்த ஊரில் இருந்தாலும் அன்பு, பாசமிருந்தால் தூரம் ஒரு பிரச்சனையே இல்லை. நீங்க, உங்கள் தம்பி குடும்பத்துடன் பெயரளவில் தானே உறவாய் இருக்கிறீர்கள்?''

''என்னம்மா செய்வது? எல்லாரும் அவரவர் தொழிலில், வேலையில், வாழ்வில் மும்முரமாய் இருக்கிறோம். முன்னேற்றம் என்கிற ரேஸில் ஓடிக் கொண்டிருக்கும் பொழுது திரும்பிப் பார்க்க நேரமில்லாமல் போய் விடுகிறது.''

''பரபரப்பான வாழ்வால் பாசத்தை இழந்து விடக் கூடாது. என்னிக்கோ இரயில் பயணி போல் பார்த்துக் கொள்வதால் பட்டும் படாமல் பழகுவதால் இடைவெளி அதிகமாயிடும். சொந்தக்காரங்க சுகதுக்கங்களில் பங்கு பெறணும். நாம் மட்டும் முன்னேறினால் போதாது. அவங்க முன்னேறவும் வழி காட்டணும்.''

''இப்ப என்ன சொல்கிறாய்? ஆளாளுக்கு பணத்தை நன்கொடையாய் கொடுக்கணும் என்கிறாயா?''

''அவர்களுக்கு பிச்சைப் போடச் சொல்லவில்லை. வாழ வழிகாட்ட சொன்னேன். பணத்தைக் கொடுத்து யாரையும் திருப்தி செய்ய முடியாது. தொழில் செய்து நேர்வழியில் பணம் சம்பாதிக்க வழி காட்டுங்கள்.''

நித்யாவும், வினயும் இணைந்து கைத்தட்டினார்கள்.

''நன்றிம்மா! நல்ல சிந்தனையுள்ள மனைவி கிடைச்சிருக்கே!'' என தேவனும் பாராட்ட,

சற்றே வெட்கமுற்றுப் போனார் இராஜி.



''நான் கிளம்புகிறேன் ஆன்ட்டி.''

''வருகிறேன் என்று சொல்.''

''வினய்! நீ போய் நித்யாவை விட்டு வா அப்பா. நம்ம டிரைவரை ஸ்கூட்டியை எடுத்து வரச் சொல்கிறேன்.''

''நான் ஆட்டோவில் தான் வந்தேன். ஸ்கூட்டியை சந்துரு எடுத்துச் சென்றிருக்கிறான்.'' என்றவாறே விடை பெற்றவள் வாசலுக்கு வந்ததும்,

''ப்ளீஸ் நானே போய்க் கொள்வேன்'' - என்றாள்.

''சரி! சவாலில் மேலும் ஜெயிக்க வாழ்த்துக்கள்.'' என்றவனிடம் ''வருகிறேன்'' எனக் கூறி விரைந்தாள். அப்போது ஏதோ ஓர் தேவதை ''ததாஸ்து'' என்றது.

## 9

நித்யா வெளியே வந்து ஆட்டோவிற்காகக் காத்திருக்கையில் பரத் வந்து சேர்ந்தான்.

''ஹேய்! என்னப்பா?''

''பின்னே உன்னைச் சுற்றி ஆபத்து நிறைந்து இருக்கையில் என்னால் எப்படி சும்மா இருக்க முடியும்? வா இப்படியே ஹோட்டலில் சாப்பிட்டு விட்டுப் போகலாம்.''

''நான் ஏற்கனவே சாப்பிட்டாகி விட்டது. சார் வீட்டில் தான்; வினய் சாப்பிட வைத்து விட்டார்.''

அவளை திரும்பி முழுசாய் பார்த்தான். பின்,

"குட்! உன்னை வீட்டில் விட்டு விட்டு நான் கிளம்ப வேண்டும். வா சீக்கிரம்" என வண்டியில் அவளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். செல்லும் வழியில் தன்னந்தனியாக இருந்த அடுக்குமாடி குடியிருப்பில் முதல் மாடி சன்னலிலிருந்து இளம் பெண் ஒருத்தி பார்த்துக் கொண்டிருந்தாள்.

'மிகவும் அமைதியான முகம்!' என எண்ணியவாறே "பரத், சீக்கிரம் அங்கே பாரேன்!" என்றாள் வண்டியை நிறுத்தி.

பரத்தும் எதிர் ப்ளாட்டைப் பார்த்தான். "யாரந்த பெண்? தெரியலை. ரொம்ப நேரமாய் அங்கேயே நின்று கொண்டிருப்பாள் போலிருக்கு?"

"ரொம்ப சாந்தமாய் இருக்கிறாள்."

"எனக்குக் கூட அப்படித்தான் தோன்றியது. ஆனால்...

"எனக்குக் கூட அப்படித்தான் தோன்றியது. ஆனால்... கண்களைப் பாரேன் உயிரில்லாதது போல் தோன்ற வில்லை?"

"அடேங்கப்பா! வினாடியில் பார்வையை பிடித்து விட்டாயா? பெண் என்றாலே எகிறிக் குதித்து ஓடிய பரதனா இவன்?"

"ஹேய்! யூ ப்ரூ புரூடஸ்!"

"ஓகே! ஓகே! நான் கேலி செய்யவில்லை. கிளம்பு போகலாம்."

வேலை பரபரப்பாக நடந்து கொண்டிருந்தது. அப் போது அங்கே ஒரு கார் வந்து நின்றது. முறுக்கு மீசையும்



கரை வேட்டியும் அணிந்த ஒருவர் அதிலிருந்து இறங்கி சுற்றிலும் முற்றிலும் பார்வையிட்டார்.

"என்ன பி.கே. கம்பெனியோடது தானே?"

"அண்ணே பாக்யலெஷ்மி குரூப்ஸ் கட்டுகிற கட்ட டம்!"

"நம்ம ரேஞ்சுக்கு யோசிக்கிறார்கள். இதையே நம்ம அண்ணனுடைய தாய் மாற்றிக் கொள்ள வேண்டியது தான்."

"அண்ணே அது பெரிய குரூப் அண்ணே! அவங் களோட மோதுவது மலையோட மோதுவது மாதிரி! ரொம்ப பாரம்பரியமான நிறுவனம் வேறு."

"எவனா இருந்தா என்னடா? நம்ம அண்ணனுக்கு முன்னால் மண்டியிட்டு சலாமடித்து கப்பம் கட்ட வேண்டும். இல்லாவிட்டால் நம்மூரில் தொழில் நடத்த முடியாது."

"இவங்க சினிமா தொழிலில் இல்லை அண்ணே! துணி வியாபாரம்."

"எதுவாய் வேண்டுமானாலும் இருக்கட்டுமடா! நாம ஆசைப்பட்டால் ஓர் ஊசி முனையளவு நிலம் கூட அடுத்தவனுக்கு சொந்தமானதாக இருக்கக்கூடாது. வா இன்றைக்கு பஞ்சாயத்திற்கு ஏற்பாடு செய்து விடலாம்."

இருவரும் கிளம்பினர்.

"யார் சந்துரு இவர்கள்?"

"ஏதோ ஓர் அரசியல்வாதியின் அடியாட்கள் போலி ருக்கிறார்கள். பேசிய தோரணையைப் பார்த்தாய் அல் லவா?"

''சரிதான். எதற்கும் இதைப் பற்றி தேவன் சாரிடம் பேச வேண்டும்.''

''தேவையில்லாமல் பயப்படாதே அக்கா.''

''இது பயம் இல்லை; எச்சரிக்கை!'' என்றவள் வினய் எண்ணை தொடர்பு கொண்டாள். ஆனால் அதுவோ தொடர்பு எல்லைக்கு அப்பால் இருந்தது. அதற்குள் வேலை வந்துவிட அதில் ஆழ்ந்து போனாள்.

பின் நினைவு வந்து தேவனை தொடர்பு கொண்ட பொழுதோ விஷயம் பெரிதாகி இருந்தது. ஏறக்குறைய கட்ட பஞ்சாயத்து போன்ற பேரம் தான் தேவனுடன் ஆளுங்கட்சி பவர்மேன் நடத்திக் கொண்டிருந்தார். எல்லாம் முடிந்து அவர் வீட்டிற்கு கிளம்பிய பொழுது கைப்பேசி ஒலிக்க...

''வீட்டிற்கு தான் வருகிறேன்'' என அணைத்தார். இருந்தும் அவரைத் தேடிக் கொண்டு வினய் எதிரிலேயே வந்து விட்டான்.

''என்னப்பா ஏதாவது பிரச்சனையா?''

''ம்.''

''வழக்கம் போல நிதி கேட்டுத் தொல்லை செய்கிறார்களா.''

''இது வேறு அப்பா.''

''என்ன? தயங்காமல் சொல்லுங்கள்.''

''நீ கோபம் காட்டக்கூடாது. இது அதற்கான நேரமல்ல.''

''சரி! சொல்லுங்கள்.''



''நாம் கட்டடம் கட்டிக் கொண்டிருக்கும் இடம் அவர்களுக்கு வேண்டுமாம்.''

''யார் அப்பன் வீட்டு சொத்து? இப்படி அராஜகமாய் மிரட்டிக் கேட்கிறார்கள்!''

''இவர்கள் எல்லாம் அப்படித்தான்! இப்பொழுது இது இங்கு சகஜமாகி விட்டது.''

''இப்படி எல்லாரும் சகித்துப் போவதால் தான் இவை அதிகரித்து விட்டன. முடியாது என நம் எதிர்ப்பை முழுமையாய காட்ட வேண்டும்.''

''அதிகாரம் அவர்கள் கையில் இருக்கும் பொழுது நாம் மோத முடியாது. பக்குவமாய் காயை நகர்த்த வேண்டும்.''

''சரி! சொல்லுங்கள். அதற்கு எத்தனை தண்டம் அழுதீர்கள்?''

''5 சி!'' ''பணமாகவோ?'' ''இல்லை. செக் தான் கொடுத்து இருக்கிறேன்.''

''ஏனப்பா! மூன்று மாதம் நாம் வேலையை நிறுத்தி போட்டு விட்டு தேர்தலுக்குப் பிறகு வேலையை ஆரம்பிக்கலாமே?''

''மாற்றம் வரும்தான். ஆனாலும் ஒரு சின்னப் பெண்ணின் கனவை, தன்னம்பிக்கையை நான் தகர்க்கத் தயாராய் இல்லை. உன் அம்மா அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு என்னிடம் கோரிக்கை வைத்தாள். ஆனாலும் நான் அவள் பிரச்சனையில் தலையிடவில்லை. ஏன் தெரியுமா? நடை பயிலும் குழந்தை விழுந்து எழுந்து தான் கற்றுக் கொள்ளும். அப்போது அதன் மேல் பரிதாபப்பட்டு உதவப் போய் அதன் சுயசார்பையும், தன்னம்பிக்கையையும் அழித்து

விடக்கூடாது என்பது போல் தான் அவளுக்கு கொடுத் திருக்கிற டார்கெட் பெரிய பில்டர்ஸ் கூட செய்யத் தயங்குவது; இதில் அவள் ஜெயித்து விட்டாள் என்றால் அப்புறம் அவளை அடித்துக் கொள்ள ஆளே கிடையாது. பார்க்கலாம்! கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி என்ன செய்யப் போகிறாள் என்று!''

இருவரும் வீட்டை அடைந்த பொழுது நித்யாவின் ஸ்கூட்டி வந்து நின்றது! வினய் புருவம் உயர்த்த 'இந்நேரத்தில் இங்கே ஏன்?'

''என்னம்மா! ஏதாவது உதவி வேண்டுமா?''

''இல்லை சார்! உங்கள் அலைபேசியில் தொடர்பு கொள்ள முடியவில்லை. அதனால் நேரில் ஒரு விஷ யத்தை சொல்லிவிட்டு போக வந்தேன்.''

''என்ன?'' என்பது போல் பார்க்க...

அன்று சைட்டிற்கு வந்த இருவரைப் பற்றியும் சொன் னாள்.

''ஏற்கனவே வெள்ளம் புயல் கரையைக் கடந்து விட்டது.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''இடத்தை அத்துமீறி எடுத்துக்கொள்ள பேரம் நடத்த ஆரம்பித்து விட்டார்கள்!''

''ஐயோ!''

''கவலைப்படாதே! அதை தடுக்க இரண்டு வழி இருந்தது. ஒன்று எல்லா வேலைகளையும் அப்படியே நிறுத்திவிட்டு விஷயத்தைச் சற்று ஆறப்போட்டு மாற்று ஏற்பட்ட பிறகு ஆரம்பிப்பது. இரண்டாவது



அவனுடன் பேரம் பேசி தண்டம் கொடுத்து வேலையைத் தொடர்வது. அப்பா இரண்டாவது வழியைத் தேர்ந் தெடுத்து விட்டார்.''

நித்யா சட்டென்று கண்ணீர் மல்க கைகூப்பினாள்.

''நீ உன் கடமையைச் செய்கிறாய்; அதே போல் நான் என் கடமையைச் செய்தேன். விடும்மா! நீ ஸ்கூட்டியில் தனியே செல்ல வேண்டாம்.''

''வினய்...'' என்றதும் சட்டென காருடன் அவன் கிளம்பினான். மறுக்க முடியாமல் நித்யா அவனுடன் சென்றாள். காரில் மௌனத்தில் ஆழ்ந்து இருந்தவளை கண்ணாடி வழியாகப் பார்த்தான்.

''மறுபடியும் அதே சிந்தனையா?'' என்றவனைப் பார்க்காமலேயே ''இப்படி ஒரு மனிதரை நான் இதுவரை சந்தித்ததே இல்லை.''

''யாரைச் சொல்கிறாய்?''

''சாரைத்தான் சொல்கிறேன். என்ன ஒரு பெருந்தன்மை! இதை விட உயர்ந்த வார்த்தையை எனக்கு சொல்லத் தெரியவில்லை.''

''இதற்குக் காரணம் என் பாட்டிதான். எங்கள் பாட்டி வீட்டில் பானைகளில் அரிசி கொட்டி வைத்திருப்பார் களாம். யாராவது பசி என்று வந்தால் சிறுமியான என் பாட்டி ஒவ்வொரு பானையிலும் ஒரு கைப்பிடி அரிசி எடுத்துக் கொடுத்து அனுப்பி வைப்பார்களாம்.''

''ஏனாம்?''

''ஒரே பானையில் அரிசி எடுத்தால் வீட்டில் உள்ளவர் களுக்கு தெரிந்து போய்விடுமே! அப்புறம் திட்டுவார்கள்; அடிப்பார்கள். மேலும் யாருக்கும் உதவ முடியாமல்

போய்விடுமே? அதனால் ஒவ்வொரு பானையிலும் கொஞ்சம் கொஞ்சம் அரிசி எடுத்துக் கொடுத்து விடுவார்களாம்.''

''அவர்கள் மாட்டிக் கொள்ளவே இல்லையா?''

''அதெப்படி? பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் இல்லையா? ஒருநாள் அவர்கள் அம்மாவிடம் வசமாக மாட்டிக் கொண்டார்கள். கோபக்கார அப்பாவோ ஒன்றுமே சொல்லவில்லையாம். பாட்டி பயந்து போய் மன்னிப்பு கேட்டபொழுது நல்ல காரியத்தை தைரியமாகச் செய். அதற்காக என்றுமே பயப்படக்கூடாது என்றாராம். அந்த ஜீன் அப்பாவிடமும் வந்துவிட்டது.''

மென்னகை புரிந்தவள், ''சார் எவ்வளவு பணம் கொடுத்து பிரச்சனையைத் தீர்த்தார்?'' என்றாள்.

அவன் ஒன்றும் சொல்லாமல் காரை ஓட்டினான்.

''வினய் ப்ளீஸ்...''

''இது எங்கள் பிரச்சனை! உன் மூளைக்குள் இந்த வேலையையும் நீ ஏற்றிக் கொள்ள வேண்டாம். ஏற்கனவே அங்கே இடப் பற்றாக்குறை வேறு!''

''என்ன?''

''ஆமாம்! நீ சிரிப்பதற்கோ அல்லது வேறுவித பொழுது போக்கிற்கோ நேரம் ஒதுக்குவது போல் தெரியவில்லையே! எந்நேரமும் உள்ளுக்குள் எதிலோ மூழ்கினாற் போல் இருக்கிறாய். இந்த வயதிற்கு உரிய இயல்பில் இருந்தால் என்ன?''

''எப்படி இருக்க வேண்டும்?''

''உன் வயது ஒத்த இளைஞிகளைப் பார்; உனக்கேப் புரியும்.''



''என்னைவிட நீங்கள்தான் அதிகம் அவர்களை கவனிப்பீர்கள் போலிருக்கிறதே?''

''பொறாமையா?''

''ம்ஹூம்'' - ஒரு வினாடி தாமதித்து வந்த பதிலால் திரும்பி அவளைப் பார்த்து சிவந்த முகத்தை ''நம்புகிறேன்'' என மேலும் சீண்டி இன்னும் சிவக்க வைத்தான்.

நல்ல வேளை அவள் ப்ளாட் வந்துவிட்டது.

அவள் அவனுக்கு நன்றி சொல்லி கீழ் இறங்கினாள்.

அப்போது ரேகா கேட்டருகில் நின்ற சிறுவனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள்.

அவனருகே பதறி நித்யா ஓடினாள்.

''என்னாச்சு ரேகா? இவன் என்ன தப்பு செய்தான்? சின்ன பையன் தானே?''

''அக்கா! அக்கா! நிஜமாகவே நான் பணத்தை எடுக்கவில்லை.''

''பொய் சொல்கிறான் பார்! இவன் தான் இப்பொழுது உள்ளே வந்தான். மேசை மேல் வைத்துவிட்டு சென்ற நூறு ரூபாயைக் காணவில்லை. கேட்டால் திருதிருவென முழிக்கிறான். சட்டை பாக்கெட்டில் நூறு ரூபாயை வைச்சிருக்கான். அவன் அம்மாவிடம் சொல்ல வேண்டும். இப்பவே திருட்டு புத்தி!''

''இல்லே அக்கா! சத்தியமாய் நான் எடுக்கலே! என்னை திருடன்னு சொல்லாதீங்க. எங்க அம்மா அழுவாங்க!''

''இதில் பொய் சத்தியம் வேறா?''

வினய் மெல்ல நித்யாவின் கையைப் பற்றி அழுத்தினான்.

''விடு ரேகா! நீ போப்பா!'' என்றாள் நித்யா.

''அக்கா! நம்புங்க. சத்தியமா... அம்மா... சத்தியமா... நான்...'' என விசும்பிக் கொண்டே சென்றான்.

''என்ன நித்யா? இப்போது அவனைக் கண்டிக்காமல் விட்டால் பின்னால் பெரிய தப்பு செய்வான். எவ்வளவு சுலபமாய் பொய் சத்தியம் வேறு செய்கிறான்!''

''ரேகா! அவன் கண்களில் பொய் இல்லை. உண்மையாகவே அவன் தவறு செய்யாமல் இருக்கலாம்.''

''அதெப்படி நீ உறுதியாக சொல்கிறாய்? கையும் களவுமாக மாட்டியிருக்கிறான். அவனிடம் எப்படி நூறு ரூபாய் வந்தது? நாம் கொடுக்கும் ஐந்து ரூபாய்க்காக ஓடி வந்து அவ்வப்போது உதவி செய்பவனிடம் ஏது நூறு ரூபாய்?''

''உன் கேள்விக்கு இப்போது என்னிடம் பதில் இல்லை. ஆனாலும் அவன் தப்பு செய்பவனாக எனக்குத் தோன்றவில்லை.''

''நீ யாராக இருந்தாலும் நம்பி விடுவாய்.''

அப்போது அந்த அடுக்குமாடி குடியிருப்பு காவலாளி அங்கே வந்தான். ''ரேகாம்மா! உங்க வீட்டு சன்னலில் இருந்து பறந்து வந்து இந்த நூறு ரூபாய் விழுந்தது. அதை கொடுக்கலாம் என்று வந்தேன் அதற்குள் பத்தாம் நம்பர் ப்ளாட்டில் கூப்பிட்டார்கள். அங்கே போய் விட்டு வருகிறேன்'' என நூறு ரூபாய் தாளைக் கொடுத்தான். அதில் ரேகாவின் கையெழுத்தும் இருந்தது. ''ஆகா! என் கையெழுத்து இருந்ததை எப்படி மறந்து போனேன்! தப்பு செய்து விட்டேன். உடனே அவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். அவன் ரொம்பவும் அழுதுவிட்டான்.'' என



உடனே ரேகா அவன் வீட்டிற்கு காவலாளியை அழைத்துக் கொண்டு காரில் கிளம்பி விட்டாள்.

''உன் தோழி வயதில் மூத்தவளாக இருந்தாலும் பக்குவம் இல்லாமல் நடந்து கொள்கிறாளே? என நினைத்தேன். கல் மனசுக்குள்ளும் ஈரம் இருக்கிறது. ஏதோ ஓர் வலியின் வெளிப்பாடா? எனத் தோன்றுகிறது. அவளிடம் மனம் விட்டு பேசிப்பார். அவளுடைய இரும்பு மனம் உருகும் என நினைக்கிறேன். பை.'' எனக் கிளம்பியவன் மனதில் நித்யாவைப் பற்றி என்ன நினைப்பு இருந்ததோ?



# 10

செங்கல் தொழிற்சாலை முதலாளியைப் பார்க்க பரத்தும், நித்யாவும் சென்றனர். ''இவர்களும் மணல் காண்டிராக்டர் மாதிரி குளறுபடி செய்ய வாய்ப்பு இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது நித்யா.''

''எனக்குக் கூட அப்படியொரு சந்தேகம் வருகிறது. மாற்று ஏற்பாட்டிற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.''

திரும்பி வரும்பொழுது அதே சாலையோர சன்னல் பெண்ணை பார்த்தனர். ''பரத்! அதே பெண்.''

''ஏய்! அந்தப் பெண் யூனிஃபார்ம் மாதிரி ஒரு வாரமாய் ஒரே டிரஸோட இருப்பாளா?''

"என்ன? இரு! இரு! எங்கேயோ இடிக்குது!"

"ஆமாம்; அவளை நன்றாகப் பார்! அன்றைக்கு இன்று இன்னும் சோர்ந்து இருப்பது போல் தெரிகிறாள்."

"நீ சொல்வது சரிதான். ஏதாவது பிரச்சனையில் மாட்டிக் கொண்டிருப்பாளா?"

"அங்கே பார்! ஏதோ சைகை செய்கிறாள். அவளுக்கு காது கேட்காதா?"

"அப்படி இருக்காது. அவள் சொல்வது யாருக்கும் கேட்கக் கூடாது என்று நினைக்கலாம். நன்றாகக் கவனி. உதடுகளை குவித்து சத்தமில்லாமல் ஏதோ சொல்கிறாள்."

"சேவ்... மீ... சே...வ்.. மீ! சேவ் மீ! என்று தான் சொல்கிறாள்."

"ஐ திங்க் ஷி இஸ் இன் டேஞ்சர் பொஸிஷன். இப்ப என்ன செய்வது? அவள் ப்ளாட்டிற்கே சென்று பார்க்க லாமா?"

"அங்கே சூழ்நிலை எப்படி என்று தெரியாமல் போக முடியாது. வாசலில் வாட்ச்மேன் வேறு நின்று கொண் டிருக்கிறான்."

"ஆனால்.. அந்தப் பெண்ணை அப்படியே விட்டுவிட முடியாது. ஏதாவது செய்தாக வேண்டும். கண்டிப்பாய் நாம் உதவ வேண்டும். நாம் ரிஸ்க் எடுக்கலாம்; அங்கே போய் பார்க்கலாம். வீடு வாடகைக்கு விசாரிப்பதைப் போல நோட்டம் பார்க்கலாம் வா."

பரத் மெதுவாய் போய் வாட்ச்மேனிடம் விசாரித்தான். கடவுளின் அருளோ அல்லது அந்தப் பெண்ணின் அதிர்ஷ்டமோ முதல் தளத்திலேயே ஒரு வீடு காலியாய் இருந்தது.



அதைப் பார்ப்பது போல் சாவி வாங்கிக் கொண்டு அங்கே சென்றனர். அந்தப் பெண் இருந்த வீடு வெளிப் புறம் பூட்டியிருந்தது. கதவருகே ஒரு கண்ணாடி சன்னல் இருந்தது. கதவைத் திறக்க முயற்சி செய்தனர். ஆனால் இறுகப் பூட்டியிருந்தது. அதை மெதுவாகத் தட்டினர். அந்தப் பெண் அதைப் புரிந்து கொண்டாளோ? என் னவோ? உள்ளே ஏதோ ஓர் அசைவு மங்கலாய் தெரிந்தது. கடினமான கண்ணாடி கதவை அவளால் திறக்க முடிய வில்லை போலும்; உள்ளிருந்து ஏதோ ஒரு பொருளால் கண்ணாடி சன்னலை அடிக்க...

அவள் அடித்த வேகத்தில் சிறிய துண்டு உடைந்து விழுந்தது. பரத் எச்சரிக்கையுடன் யாராவது வருகிறார் களா? என சுற்றும் முற்றும் பார்த்தான்.

அந்தப் பெண் மிக மிக வாடிப் போயிருந்தாள். வார்த் தைகள் கூட மிக மிக மெலிதாய் பயத்துடன் வெளிவந்தன.

"இப்ப போயிடுங்க. ஆள் வந்திடுவாங்க. மதியம் 12 மணிக்கு வாங்க! ஆபத்து! ப்ளீஸ்! காப்பாற்றுங்க!" என நல்ல ஆங்கிலத்தில் பேசினாள்.

சொன்னவள் வினாடி கூட தாமதிக்காமல் மறைந் தாள். காலரவம் கேட்டதும் இருவரும் வாடகைக்காக பார்க்க வந்த வீட்டைப் பூட்டுவது போல் பாவனை செய்தனர்.

வந்தவன் நேரே பூட்டியிருந்த வீட்டை நோக்கிச் சென் றான். உடைந்த கண்ணாடித் துண்டை கையிலெடுத் தான். சந்தேகமாய் சன்னலைப் பார்க்க...

"சே! எங்க போனாலும் சின்ன பசங்களோட கிரிக் கெட் தொல்லை. பந்தை வீசி அந்த வீட்டு சன்னலை உடைச்சிட்டு ஓடிட்டான்கள்.

''விளையாடும் வயசும்மா! அப்படித்தான் இருப்பார்கள். பக்கத்து மைதானத்தில் இருந்து அடித்த பந்து இங்கே வந்து விழுகிறது என்றால்... அடித்த பையனை கை குலுக்கிப் பாராட்ட வேண்டும். அதுவும் வாட்ச்மேன் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு சத்தமில்லாமல் பந்தை எடுத்துக் கொண்டு நழுவி விட்டார்கள். ஒருபுறம் கோபம் வந்தாலும் மறுபுறம் போனால் போகிறது என விட்டுவிடத் தோன்றுகிறது.'' என இருவரும் பேசிய வாறே கீழே இறங்கினர்.

சந்தேக விழியோடு சன்னலைப் பார்த்தவன் இருவரும் இயல்பாய் பேசியது காதில் விழுந்த வினாடி சகஜமானான். இருந்தும் உள்ளுக்குள் வாட்ச்மேனிடம் எச்சரிக்கை செய்து வைக்க வேண்டும் என்றும் எண்ணிக் கொண்டான்.

பரத்திற்கும், நித்யாவிற்கும் இறங்கும் பொழுதே உள்ளுக்குள் பல யோசனைகள் ஓடிக் கொண்டிருந்தன.

''என்ன வீட்டைப் பார்த்தீங்களா? பிடிச்சிருக்கா?'' என சாவியை கொடுக்கும் பொழுது வாட்ச்மேன் கேட்க,

''வீடு பரவாயில்லை. தனியா லேடீஸ் இங்க இருக்க பாதுகாப்பு இருக்குமான்னு தெரியலை.''

''ஏன் இப்படிச் சொல்றீங்க? விளக்கமா சொன்னா தானே புரியும்?''

''பக்கத்து ப்ளாட்டில் நமக்கு உதவுபவர்கள் இருந்தால் நன்றாக இருக்கும்.''

''நீங்க பார்த்த வீட்டிற்கு எதிர் ப்ளாட்டில் டாக்டர் சுமன் இருக்கார். நல்ல மனுஷன்; ஓடி வந்து உதவி செய்யும் மனிதர்.''



''அவர் மட்டுமா இருக்கார்?''

''இல்ல சார்! நல்லவங்களை தான் கடவுள் சோதிப்பார். அவரோட மனைவிக்கு பைத்தியம் சார்! படிச்ச அழகான பொண்ணு. சார் ரொம்ப ஆசைப்பட்டு கட்டிக்கிட்டார் போல. அந்த பொண்ணை உள்ளங்கையில் வச்சு தாங்குறார். வேறு ஒருத்தரா இருந்தால் வெட்டி விட்டு வேறு கல்யாணம் பண்ணிக்கிட்டு போயிருப்பாங்க. இவரோ அவங்களை கண்ணும் கருத்துமாய் பார்த்துக்கிறார். ஒரு வேலைக்காரங்க கூட கிடையாது. எல்லா வேலையும் இவரே செஞ்சுகிட்டு அன்பாய் நடந்துக் கொள்வது எவ்வளவு கஷ்டமான காரியம்! மனசே இல்லாமல் அவங்களை வீட்டுக்குள்ளே விட்டுட்டுப் பூட்டிட்டுப் போவார். காலையில் ஆஸ்பத்திரிக்குப் போனால் 11 மணிக்கு வருவார். பின் 12 மணிக்கு போயிட்டு மதியம் 2 மணிக்கு வருவார். அவங்களை சாப்பிட வச்சு தூங்க வச்சிட்டு நாலு மணிக்குக் கிளம்புவார். இராத்திரி ஏழு மணிக்கு திரும்ப வந்துவிட்டு நைட் டியூட்டிக்குப் போயிடுவார். அவரும் வேலையில் கவனத்தைச் செலுத்தி தன் கவலையை ஆத்திக்குவார்.''

''இந்தக் காலத்தில் இப்படியொரு மனுஷனா?''

''ஆமாம் சார்! அவரோட கௌரவத்திற்கு ஏற்றாற் போல் மனைவி அமைஞ்சிருந்தால் நல்லா இருந்திருக்கும். மனைவி அமைவது எல்லாம் இறைவன் கொடுத்த வரம். என்னதான் இருந்தாலும் ஆண்டவன் நம் தலையில் எழுதினதை மாற்ற முடியுமா? கலிகாலத்திலும் இப்படியொரு மனிதர்.''

''உறவுக்காரர் யாரும் அவருக்கு இல்லையா?''

''மனைவி இப்படி இருப்பதால் உறவுக்காரங்க யாரும் வருவதில்லை. அவங்க எதுவும் தன் மனைவியை குறை சொல்லிடக் கூடாதுன்னு டாக்டர் ரொம்ப கவனமாய் இருப்பாருங்க.''

''நாங்க ஒரு வாரம் கழித்து வந்து பார்க்கிறோம். டாக்டர் சுமன் எங்கே கிளினிக் வச்சிருக்கார்?''

''புரசைவாக்கம் எக்ஸ்டென்ஷனில் இருக்கு சார்.''

பரத்தும், நித்யாவும் புறப்பட்டனர்.

''இப்ப அடுத்து என்ன செய்வது?

''நிறைய விஷயம் முரண்படுகிறது பார்! அந்தப் பெண் பேசியது தெளிவாய் இருந்தது. பைத்தியமாக இருந்தால் இப்படிப் பேச முடியுமா? அவசர அவசரமாக விஷயத்தை நம்மிடம் சொல்லிவிட்டு ஓடி விட்டாள். மனநலம் சரியில்லாதவர்களால் தெளிவாகப் பேச முடியாது. முதன் முதலாய் நாம் அவளைப் பார்த்த பொழுதே அவள் நம்மிடம் உதவி கேட்கவில்லை. நம்மைப் பற்றியும் அவளுக்குள்ளும் பயம் இருந்திருக்குமோ? அவள் நம்மிடம் சொல்லிவிட்டு நகர்ந்த வினாடி அவள் கணவன் வேறு வந்து விட்டான். கொஞ்சம் தாமதித்து இருந்தால் மாட்டிக் கொண்டிருப்போம். வாட்ச்மேன் சொல்வதைப் பார்த்தால் அவள் கணவன் சரியான செட்டப் செய்திருக்க வேண்டும். அல்லது உண்மையிலேயே நல்லவனாக இருக்க வேண்டும்.''

''இரு பரத்! நல்லவனாக இருந்தால் உடைந்த கண்ணாடித் துண்டை ஏன் சந்தேகமாக பார்க்க வேண்டும்?



அவரே மருத்துவராக இருக்கும் பொழுது மனைவியை தனிமைப்படுத்தி ஏன் அடைத்து வைத்திருக்க வேண்டும்? நல்ல உணவு உண்பது போல் அவளைப் பார்த்தால் தெரியவில்லை. உடையும் சரியில்லை. ஏதோ தப்பு நடக்கிறது. யாருடனும் அவளைப் பேச அனுமதித்தது இல்லை போலிருக்கிறது! அவளுக்கு இந்த ஊரே ஒருவேளை புதிதாக இருக்கலாம்.''

''புரசைவாக்கத்தில் கொஞ்சம் விசாரிக்கலாம்.''

''அங்கு நாம் போகக்கூடாது. இங்கேயே அவர் நம்மைப் பார்த்த பார்வை சரியில்லை. அங்கே நாமே சென்றால் சந்தேகம் வலுபட்டுவிடும். எனக்கென்னவோ வாட்ச்மேனிடம் கூட அவர் நம்மைப் பற்றி விசாரிக்கலாம் என்றே தோன்றுகிறது.''

''டேவிட் கிட்டே சொல்லி விசாரிக்கலாமா?''

''சரிதான். நாசுக்காய் விசாரிக்கச் சொல். தேவையென்றால் டிடெக்டிவ் ஏஜென்ஸி யாரையாவது அணுகலாம். செங்கலுக்கு பதிலாக ஹாலோ ப்ளாக் கல் பயன்படுத்துவதற்கு மகளிர் சுய உதவிக்குழுப் பத்தி விவரம் கேட்டிருந்தேனே? ஏதாவது தெரிந்ததா?''

''சாரா நெட்டில் கொஞ்சம் விவரம் சேகரித்து வைத்திருக்கிறாள். மகளிர் தொழிற்பயிற்சி முகாமில் நீ வேறு சில குழுக்களின் முகவரியைச் சேகரித்தாய். அவற்றின் மூலம் விசாரிக்கலாம்.''

''உடனே போய் பார்த்துவிட்டு வந்துவிடலாம்.''

இருவரும் ஹாலோ ப்ளாக் கல் செய்யும் மகளிர் சுய உதவி குழுக்களை சந்தித்தனர். பெரிய அளவில்

இயந்திரங்கள் வைத்து கல் தயாரிக்கும் இரு குழுக்களை வெகுநேர அலைச்சலுக்குப் பிறகு கண்டு பிடித்தனர். அவர்களிடம் பேசி தொடர்ச்சியாக கல் எவ்வளவு அனுப்ப முடியும்? தங்கள் தேவைக்கு அவர்களால் கல் தர முடியுமா? எவ்வளவு நாட்களில் தர முடியும்? விலைப்பட்டியல் இவற்றை விசாரித்து கிளம்பினர். சாரா இவர்கள் தந்த விவரங்களை சரி பார்த்துக் கூட்டிக் கழித்து வரும் இலாப நஷ்டங்களைக் கணக்கிட்டாள். பின் அவர்களிடம் ஒப்பந்தமிட்டு கையெழுத்திட்டனர்.

கற்கள் வர ஆரம்பிக்க வேலையோ இரவு பகலாக இடைவிடாமல் நடக்க ஆரம்பித்தது. நித்யா காலை ஷிப்ட் முடிந்து வீட்டிற்கு கிளம்பும் நேரத்தில் டேவிட் வந்து சேர்ந்தான்.

''வா டேவிட்!''

''நீ சொன்ன ஆளைப் பற்றி விசாரித்தேன். ஆள் எதிர்பார்த்ததற்கு மேல் மிக பசையுள்ள பார்ட்டி. ஆனால் ஏன் வாடகை ப்ளாட்டில் குடியிருக்கிறான் என்று தெரியவில்லை. பெரிய கிளினிக் வைத்திருக்கிறான். அது பக்கத்திலேயே லேப் ஒண்ணு பக்காவாய் வச்சிருக் கான். எக்ஸ்ரே - லேபோ என்று விசாரித்தால் அது கலர் லேப். ஃபுல் ஏஸி! அது அவனுக்கு சொந்தமானதாம். நிறைய சொத்து கூட இருக்கு என்று அரசல் புரசல் பேச்சு அடிபடுகிறது. நிறைய பேருக்கு இலவசமாய் வைத் தியம் பார்ப்பதால் எந்நேரமும் கூட்டமும் குவிகிறது. பரம்பரை பணக்காரர் இல்லை என்று உறுதியாகச் சொல்கிறார்கள். இந்த வாழ்வு, வசதி எல்லாம் கடந்த இரண்டு வருடங்களாகத் தானாம்.''



''நித்யா, நான் கூட வழியில் அந்த வாட்ச்மேனைப் பார்த்தேன். அவனே தானாக வந்து பேசினான். அந்த வீட்டிற்கு வேறு யாரோ குடி வந்து விட்டதாகச் சொன் னான். அது பொய்யாகக் கூட இருக்கலாம்.''

''ஒரு நிமிடம் இரு! அது பொய்யா? உண்மையா? என்று கண்டு பிடித்து விடலாம்.''

அலைபேசியில் ஏதோ ஓர் எண்ணை அழுத்தினான்.

''சார்! வாடகைக்கு வீடு வேண்டும். உங்களைத் தொடர்பு கொள்ளச் சொன்னார்கள். வாடகை எவ்வளவு என்றாலும் பரவாயில்லை. வசதியாக இருந்தால் சரி! ஓகே டாக்டர். நான் நேரில் வந்து பார்க்கிறேன்.'' என்று பேசியவன் அலைபேசியை அணைத்ததும் ''அந்த அடுக்குமாடி கட்டடமே அவனுக்குச் சொந்தமானதுதான். வாடகைக்கு இருப்பது போல் ஒரு தோற்றத்தை உரு வாக்கி வைத்திருக்கிறான்.''

''டாக்டருக்கு எதற்கு கலர் லேப்? அந்த ஆள் மேல் சந்தேகம் வலுக்கிறது. டிடெக்டிவ் ஏஜென்சிக்கு சொல்லி வலுவான ஆதாரங்களை திரட்ட வேண்டும். தப்பு செய்யும் ஆளை சும்மா விடக்கூடாது.''

''எனக்கு சந்தேகம் வலுத்ததுமே துப்பறியும் நிறு வனத்திற்கு சொல்லி விட்டேன். இந்நேரம் அவர்கள் செயல்பட ஆரம்பித்து இருப்பார்கள்.''

டாக்டர் சுமனின் கிளினிக்கில் ஓர் இளம் பெண் உடல் நிலை சரியில்லை என சிகிச்சை எடுப்பதற்காக காத் திருந்தாள். வழக்கம் போல் கூட்டம் அதிகமாக இருந்தது. அங்கே வந்த நர்ஸிடம் கேட்டாள். ''டாக்டர் வர நேரமாகுமா? நான் சீக்கிரம் செல்ல வேண்டும். கும்பல்

வேறு அதிகமாக இருக்கிறது. வேறு டாக்டரைப் பார்க்க போகட்டுமா?''

''இரு. இரு போய் விடாதே. எங்க டாக்டர் கைராசிக்காரர். ஒருமுறை இவரைப் பார்த்து விட்டால் மறுமுறை யாரிடமும் செல்ல முடியாது. டாக்டர் இன்னும் வரவில்லை. அவர் வந்தவுடன் உன்னை முன்னே அனுப்பி வைக்கிறேன்.''

சற்று நேரத்திற்குப் பிறகு ''பழைய நோயாளிகள் மட்டும் வாங்க; ட்யூட்டி டாக்டர் கிட்டே காண்பிச்சுட்டு கிளம்புங்க'' என அவள் அறிவித்தாள். ஒரு சில இளம் பெண்களையும், சில புதிய நோயாளிகளாய் வந்த பெண்களையும் தவிர மற்றவர்களை ஒவ்வொருவராக அழைத்து உள்ளே அனுப்பினாள். ''நான் கிளம்புகிறேன்'' என அந்த புதுப் பெண் புறப்பட... ''டாக்டர் இதோ வந்துடுவார். இப்ப தான் போன் வந்துச்சு'' அதற்கு பக்கத்தில் அமர்ந்திருந்த இன்னொரு பெண்ணோ,

''ஏம்மா! போறதுன்னா போயேன். ஏன் கிளம்புறேன். கிளம்புறேன்னு சொல்லிகிட்டு இங்கேயே உட்கார்ந்து இருக்கிறாய். உனக்கு நல்ல நேரம்! அத நீதான் புரிஞ்சுக்கலை'' என்றாள்.

''இந்தாம்மா, என்ன சொல்லி அந்தப் பொண்ணை பயமுறுத்துகிறாய்? டாக்டர் கிட்டே சொன்னால் என்ன ஆகும்னு யோசிச்சுப் பார்!'' என்றாள் நர்ஸ்.

''இனிமே ஆகிறதுக்கு என்ன இருக்கு? இந்த பூச்சாண்டி எல்லாம் என்கிட்டே வேண்டாம்'' என்று அவள் பதிலுக்குச் சீறினாள். அப்போது டாக்டர் சுமன் உள்ளே நுழைய அனைவரும் கப்சிப் ஆயினர்.



# 11

டாக்டர் சுமன் வரும் பொழுதே இன்றைக்கு சற்று டென்ஷனுடன் தான் வந்தார். இன்று பார்த்து அவர் மனைவி தொல்லைப்படுத்தி விட்டாள். சாப்பிடாமல் தட்டை வீசி எறிந்து ஊசி போட அவர் நெருங்க முடியாமல் கதவை மூடிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து விட்டாள். அதிர்ந்து பேசாத அப்பாவி பெண் தான்! அவள் கோபம் கூட கெஞ்சுவது போல் தான் இருக்கும். வீட்டில் ரொம்ப செல்லமாய் வளர்ந்தவள்; கடு சொல் கூட கேட்டிராதவளின் வாழ்க்கையில் திருமணம் என்ற பெயரில் இடியே விழுந்தால் என்ன செய்வாள்?

''ப்ளீஸ்! என்னை விட்டுடுங்க! நான் எங்க அப்பா கிட்டேயே போயிடுறேன்.''

''ஏன் செல்லம்? இங்கே உனக்கென்ன குறைச்சல்? உன்னை நான் எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா?''

''இல்லை; எனக்கு எதுவும் வேண்டாம்! என்னை விட்டுடுங்க. நான் போயிடுறேன்.''

''போகிறேன், போகிறேன் என்கிறாயே! நீ வெளியில் போனால் எனக்கு தான் ஆபத்து தெரியுமா? விஷயம் தெரிந்த உன்னை வெளியே விடலாமா?''

''நான் யாரிடமும் எதுவும் சொல்ல மாட்டேன். இதெல்லாம் எனக்கு ஒத்து வராது. என்னை விட்டுவிடுங்கள்.''

''உனக்கு இன்னமும் முழு விஷயமும் தெரியாது. இருந்தாலும் உன்னை விட முடியாது. நீ இங்கிருந்து தப்பிக்கவும் முடியாது. யாரும் நீ சொல்வதை நம்பவும் மாட்டார்கள். நான் இரண்டு சொட்டு கண்ணீர் விட்டு எந்தப் பொய்யைச் சொன்னாலும் உலகம் நம்பும். இப்பொழுதே எல்லாரிடமும் உன்னை பைத்தியம் என்று தான் சொல்லி வைத்திருக்கிறேன். என்னை மீறி ஈ காக்கா, கொசு கூட உள்ளே வர முடியாது. எதிர் ப்ளாட்டிற்கு குடிவர இருந்தவங்களை கூட வர விடாமல் தடுத்து விட்டேன். எனக்கு ஒரு சிறு சந்தேகம் வந்ததால் உன்னை இப்பொழுது உன் அப்பன் பார்த்தால் கூட பைத்தியம் என்று தான் நம்புவான். உன் உடைகளை கூட ஏன் ஒளித்து வைத்தேன் தெரியுமா? மாற்றுடை இல்லாமல் நீ பிச்சைக்காரியாய் என்னிடம் கெஞ்ச வேண்டும். தப்பிக்கும் எண்ணம் வரக்கூடாது. உன் பைத்தியக்கார வேஷம் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப் பட வேண்டும் என்பதற்காகத்தான்.''

''கடவுளே! நான் என்ன தப்பு செய்தேன்? எனக்கு ஏன் இப்படி ஒரு தண்டனை?''

''நீ என் ரகசியத்தை அறிந்து கொண்டது தான் மிகப் பெரிய தப்பு. அப்பாவி இந்திய மனைவியாக மட்டும் நீ இருந்திருந்தால் பிரச்சனை இருந்திருக்காது. என்ன கொஞ்சம் புத்திசாலியாகவும் இருந்து விட்டாய்! வேலைக்காரப் பெண் ஒரு நாள் சிந்திய கண்ணீரில் உன் புத்திசாலித்தனம் வெளிப்பட்டு விட்டது. நீ வெறும் அழகான பெண்ணாக மட்டும் இருந்திருக்கலாம். எனக்கு அழகான முட்டாள் போதும். இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை; கட்டிய பசுவாக என் இஷ்டத்திற்கு ஏற்ப நடந்து கொண்டால்... எதையும்... கண்டு கொள்ளாமல் வாழப் பழகிக் கொண்டால்... என்... குழந்தைகளை சுமந்து சமூகத்தில் கௌரவமாய் வாழலாம். வசதி எப்படி?''



''தூ! எனக்கு அந்த குப்பை வாழ்க்கை வேண்டாம். என்னால் எப்படியும் வாழ முடியாது. எனக்கு எல்லாம் அருவெறுப்பாக உள்ளது. இது எனக்கு வேண்டாம். ப்ளீஸ்! என்னை நம்புங்கள். நான் உங்களைப் பற்றி எதுவும் பேச மாட்டேன். யாரிடமும் ப்ராமிஸாக எதுவும் சொல்ல மாட்டேன். அப்பாவிடம் கூட இல்லை; வேறு எங்காவது போய் விடுகிறேன். என்னை விட்டுடுங்க! ப்ளீஸ்! ப்ளீஸ்!''

''நீ இப்படிக் கெஞ்சும்போது மனசுக்கு வருத்தமாய் இருக்கிறது செல்லம்மா! ஆனாலும் இரக்கப்பட என்னால் முடியாது. எனக்கு ஆபத்தை நானே தேடிக் கொள் வேனா? கொஞ்சம் பொறுத்துக் கொள்! என்னை விட்டுப் போய்தான் ஆக வேண்டும் என்றால் சற்று காத்திரு. ஒரேடியாய் உலகத்தை விட்டே அனுப்பி வைக்கிறேன். இப்பொழுது வா சாப்பிட்டுவிட்டு இந்த ஊசியைப் போட்டுக் கொண்டு அமைதியாகத் தூங்கு.''

தட்டைத் தட்டி விட்டு அறைக்குள் ஓடி கதவை உட்புறம் தாழிட்டுக் கொண்டாள். மருத்துவமனைக்கு செல்ல நேரமாகிக் கொண்டிருந்தது. மேலும் புது பட்சி வந்திருபபதாக தகவலும் வர, தாமதிக்க விரும்ப வில்லை. டாக்டர் சுமன் மணியை அழுத்தியதும் நர்ஸ் அந்த இளம்பெண்ணை உள்ளே அனுப்பினாள்.

''உட்காருங்க! என்ன பிரச்சனை?''

சரியாய் சாப்பிடவே முடியலை. பசியும் இல்லை. ''சரியாய் சாப்பிடவே முடியலை. பசியும் இல்லை. தூக்கமும் வரமாட்டேன் என்கிறது டாக்டர்.''

''க்ரீன் ரூமிற்கு அழைச்சுக்கிட்டு போ. நான் வந்து டெஸ்ட் செய்கிறேன்'' அருகில் இருந்த உதவியாளினியிடம் சொல்ல அவள் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு அங்கே சென்றாள்.

போகஸ் லைட்டுடன் அறை மிகவும் பிரகாசமாய் இருந்தது. மேலே ஒரு காமிரா இருந்ததை அவள் கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

''டாக்டர் உள்ளே வருவதற்கு முன் உங்கள் உடைகளை கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.''

உதவிப் பெண் கூறினாள்.

அப்போது கைப்பேசி ஒலிக்க...

''என்ன? அப்படியா? உடனே வருகிறேன்'' என அந்த இளம்பெண் அவசரமாய் வெளியே ஓடினாள்.

''என்ன ஆச்சு?'' என டாக்டர் கேட்க...

''மன்னிச்சிடுங்க டாக்டர்! எங்க பாட்டிக்கு ரொம்ப சீரியஸ். உடனே வரச்சொல்லி போன். உங்க பீஸை கொடுத்து விடுகிறேன்!'' என்றவாறே கைப்பையைத் திறந்து நூறு ரூபாய்த் தாளை வைத்துவிட்டுப் பறந் தோடினாள்.

வெளியே காத்திருந்த தன் அலுவலக நண்பனின் வண்டியில் ஏறிக்கொள்ள வண்டி புறப்பட்டது.

''வேகமாகப் போ! அந்த ஆள் சந்தேகப்பட்டு யாரை யாவது அனுப்பி பார்க்கச் சொன்னாலும் சொல்வான்.''



அவன் வளைவின் ஒரு முனையில் சட்டென மறைந்து கொள்ள... அவன் எதிர்பார்த்தது போலவே மருத்துவமனை ஊழியன் ஒருவன் மொபெட்டில் வந்தான். வந்தவன் வளைவின் மறுமுனை வழியாகச் செல்ல... இவர்கள் இருவரும் ஹெல்மெட் ரெயின்கோட்டால் தங்களை முழுவதும் மறைத்துக் கொண்டு புறப் பட்டனர்.

''இந்த டாக்டர் செம கில்லாடிப்பா! செக்கப்பிற்கு வரும் பெண்களை கேமிரா வைத்து தவறாகப் படம் பிடிக்கிறான். அவன் மேசை மேல் ஒரு சி.டி.யைப் பார்த்தேன். அதை நைஸாக லபக்கிக் கொண்டு வந்து விட்டேன்.''

அலுவலகத்திற்குச் சென்று அந்த சி.டி.யை போட்டுப் பார்க்க அனைவரும் அதிர்ந்து போயினர். மருத்துவம் என்ற புனிதப் பணியைத் தன்னுடைய மட்ட ரகமான புத்தியால் கீழ்த்தரமாக அவன் பயன்படுத்தியதின் அப் பட்டமான சாட்சியாய் இருந்தது அது! உடனே அந்தச் செய்தியை பரத்திடம் தெரிவித்தனர் அந்த டிடெக்டிவ் ஏஜென்ஸியினர். பரத் உடனே அந்த அடுக்குமாடி குடியிருப்பை நோக்கி கிளம்பி விட்டான். அந்த சன்னல் பெண்ணை உடனடியாகக் காப்பாற்ற வேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது. எனவே தான் நித்யாவிடம் கூட தெரிவிக்காமல் அங்கே சென்று விட்டான். 'நேரே சென்றால் வாட்ச்மேன் விட மாட்டான். பைப்பைப் பிடித்து மேலே ஏறி சுவர் தாண்டிக் குதிக்கலாமா? என யோசித்தான். இல்லை! இது சரி வராது. வேறு ஏதாவது செய்ய வேண்டும். வாட்ச்மேனின் கவனத்தைத் திசை திருப்பி அவன் ஏமாந்த சமயத்தில் உள்ளே நுழைந்து விட வேண்டும்.'

பரத்திற்கு சாதகமாக...

சூழ்நிலை சற்று பரத்திற்கு சாதகமாக...

யாரோ ஒருவன் வாட்ச்மேனை தேடி வந்தான். அவன் நண்பனோ இல்லை உறவினனோ... எவனோ ஒருவன் இப்போதைக்கு ஆபத்பாந்தவனாக வர அவனிடம் உற்சாகமாகப் பேசிக் கொண்டே வாட்ச்மேன் டீக்கடை நோக்கி நகர... பரத் உள்ளே நுழைந்து விட்டான்.

அதே நேரம் பரத் ஏன் இன்னும் வரவில்லை? என நித்யா யோசித்துக் கொண்டிருந்தாள். சைட்டில் கார் வந்து நின்றது. நித்யா திரும்பாமலே ''பார், இன்றைக்கு இரவு வலது புறம் சுவர் முழுவதும் முடிந்து விடும் தானே?'' என்றாள்.

''பூதக்கணத் தலைவி இருந்தால் எல்லாம் முடிந்து விடும்.'' என பதில் வர திரும்பிப் பார்த்தாள்.

வினய் சிரித்தவாறே நின்றிருந்தான்.

''நான் பரத் என்று நினைத்தேன்!''

''எங்கே உன் பெட்டர் ஹாப்பை காணோம்?''

''பெஸ்ட் பிரெண்ட் என்று சொல்லுங்கள்.''

''இப்போது நன்றாக விளங்கிக் கொண்டேன். இனி மேல் சரியாகப் பேசுவேன்.''

அவன் சொன்னதை கவனிக்காதது போல் அலை பேசியில் பரத்தை தொடர்பு கொண்டாள்.

''என்ன? ஆபத்தில் மாட்டிக் கொள்ளாதே...'' பேசிக் கொண்டிருக்கும் பொழுது தொடர்பு விட்டுப் போனது. வினய் என்னவென்று விசாரித்தான். இவனிடம் ஏதாவது உதவி கேட்கலாமா? என யோசித்துக் கொண்டே விவரம் சொன்னாள். அங்கே சந்துரு வர.



''சந்துரு! நீ இங்கேயே இரு. நான் போய் பரத்தைப் பார்த்து விட்டு வருகிறேன்.''

''ஆமாம்! இவங்க லேடி ஜாக்கிசான்! போய் டிஷ்யூம் டிஷ்யூம் போட்டு எல்லாரையும் காப்பாற்றி விடுவார்கள். இரு நானும் வருகிறேன்.''

''அப்ப நீங்க தான் ஜாக்கிசானா? அக்கா தான் ஜூலியா?''

''உன் அக்கா ஜூலிதான்! குழந்தை போல யோசிக்கிறாள். எல்லாவற்றையும் சினிமா சாகசம் போல் நாமே செய்ய முடியாது'' என்றவன்,

காவல் நிலைய அதிகாரிக்கு போன் செய்தான். அவர் நேரே வரச் சொல்ல... நித்யாவுடன் கிளம்பினான். அதற்குள் துப்பறியும் நிறுவனத்தையும் தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்த ஆதாரத்துடன் காவல் நிலையம் வரச் சொன்னாள்.

போலீஸ் உயர் அதிகாரியுடன் அனைத்து விஷயங்களையும் எடுத்துச் சொல்ல...

''இது பெரிய அளவில் போகும் விஷயம். குற்றவாளியை தப்ப விடாமல் சரியாய் நம் வலையில் விழ வைக்க வேண்டும். புரசைவாக்கம் கிளினிக்கை ஒரு டீம் சுற்றி வளைக்கட்டும். வீட்டிற்கு இன்னொரு டீமை அனுப்பலாம்.''

அவர்கள் பேசிக் கொண்டிருந்த நேரத்தில்,

பரத் வீட்டின் சன்னலை உடைத்து உள்ளே நுழைந்தான்.

''ஹலோ! மேடம்! வேர் ஆர் யூ! ஐ வான்ட் டூ ஹெல்ப் யூ!'' என குரல் கொடுத்துக் கொண்டே தேட

ஆரம்பித்தான். அறைக்கதவை மூடிக் கொண்டிருந் தவளின் காதுகளில் அது விழுந்தது. 'யாரிது? புதுக்குர லாய் இருக்கிறதே! நம்பலாமா?' என யோசிக்கும் பொழுதே மறுபடியும் குரல் கொடுத்தான். ''நாங்கள் தான் அன்றைக்கே வந்தோம். நீங்கள் போய்விட்டு மதியம் 12 மணிக்கு வரச் சொன்னீர்கள்'' என்றதும்,

சட்டென்று கதவைத் திறக்க நினைத்தவள் மறுபடி யும் தயங்கினாள்.

'அன்றைக்கு சன்னல் உடைந்ததற்கு அவர் துருவித் துருவி எத்தனை கேள்விகள் கேட்டார்? எல்லாவற்றிற் கும் ஒரே பதிலாய் தெரியாது என திரும்பத் திரும்ப எத்தனை முறை சொல்ல வேண்டியிருந்தது.'

''மேடம்! ப்ளீஸ் நம்புங்கள்! உங்கள் கணவர் நல்லவர் அல்ல. அவர் தப்பான தொழில் செய்கிறவர். அவரிட மிருந்து உங்களைக் காப்பாற்ற ரிஸ்க் எடுத்து வந்திருக் கிறேன். தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் ஆபத்து தான். உங்களையும் காப்பாற்ற முடியாது. நானும் சிக்கிக் கொள்ள வேண்டி வரும். வாட்ச்மேன் வந்தால் பிரச் சனை ஆகிவிடும்.'' என ஆங்கிலத்தில் பரத் பேசிக் கொண்டிருந்த பொழுது,

''யார் அங்கே?'' என சந்தேகத்துடன் உரத்துக் கேட்டது அவள் காதுகளிலும் விழுந்தது.

உடனே தாமதிக்காமல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். வாடிய மலராய் இருந்தவளிடம் ''வாருங்கள்; சீக்கிரம் இங்கிருந்து செல்ல வேண்டும்.''

''ஸாரி. அதனால் ஒரு பயனும் இல்லை. பேசிக் கொண்டிருக்க நேரமில்லை கிளம்புங்கள்.''



அவளுக்கு எதுவும் எடுத்துக் கொள்ளக்கூட தோன்ற வில்லை. அங்கிருந்து ஓடினால் போதும் என்ற உணர்வுடன் அவனுடன் வெளியே வந்தாள். இருவரும் படிக்கட்டு வழியாக இறங்க எத்தனிக்கும் பொழுதே எதிரே டாக்டர் சுமனுடன் வாட்ச்மேன் வந்து கொண் டிருந்தான்.

இருவரும் ஒரு ஸ்தம்பித்துப் போயினர்.

அவளோ தன்னையறியாமல் பரத்தின் கையை இறுகப் பற்றியவாறு அவன் பின்னால் ஒளிந்தாள்.

'ப்ளீஸ்! என்னை கைவிட்டு விடாதீர்கள்' என அவளது நடுங்கிய கை கெஞ்சியது.

''வாட்ச்மேன்! இவனைப் பிடித்துக் கட்டு'' பொறுக்கி! என் மனைவியை கடத்திப் போக வந்திருக்கிறான்.'' டாக்டர் சுமன் ஆக்ரோஷமாய் கத்த...

பரத் அவளைப் பற்றி இழுத்துக் கொண்டு மறுபுறம் ஓடினான். நல்லவேளை மறுபுறமும் மாடிப்படி இருக்க... விடுவிடென்று இறங்கினர். அவளால் வேகமாக இறங்கவோ, ஓடவோ முடியவில்லை. ஏறக்குறைய பரத் அவளை தரதரவென்று இழுக்காத குறையாய் பற்றிக் கொண்டு ஓடினான்.

''பிடி அவனை! விடாதே பிடி!''

சுமனும், வாட்ச்மேனும் பின்னாலேயே ஓடி வந்தனர். லிஃப்டிற்காக அவர்களும் காத்திருக்கவில்லை. ஓரிருவர் மட்டுமே என்ன விஷயம்? என்பது போல் வேடிக்கைப் பார்க்க... மூடியிருந்த கதவை நோக்கி பரத் ஓடினான். கதவு பூட்டியிருந்தது. பரத் வேகமாக கதவை இழுக்க, மதில் சுவரின் இரும்புக் கதவு பூட்டப்படாமல்

சாத்தியிருந்ததால் கிரீச் சென்ற சத்தத்துடன் திறந்தது.

''ஏய்! அவர்களை தப்பிக்க விடாதே!'' என்றவாறே கீழே கிடந்த கல்லை பரத் மேல் விட்டு எறிந்தான். அது குறி தவறி அந்தப் பெண் மேல் பட...

''அம்மா'' என அலறியவாறு அவள் கீழே விழுந்தாள். பரத் கைக்கொடுத்து அவளைத் தூக்கி விட்டான்.

''நீங்க தமிழா?'' அவள் பதிலை எதிர்பாராமல் வெளியே ஓடினர். ஆனால் பாய்ந்து வந்த பரத்தை எட்டிப் பிடித்தான் சுமன். உதறிக் கொண்டு ஓட முடியாமல் மறுபுறம் வாட்ச்மேன் வந்து பிடிக்க...

''நீங்கள் ஓடுங்கள்'' என, அந்தப் பெண் எதிர்ப்புறம் ஓடினாள்.

''பைத்தியக்காரி; எவ்வளவு தூரம் ஓடுவாள்? அவளுக்கு இது என்ன ஊர் என்றே முதலில் தெரியாது. முதலில் இவனைப் பிடித்துக் கட்டு. அவளை அறைந்து இழுத்து வருகிறேன். இரண்டு அறைக்குத் தாங்க மாட்டாள்.''

''பாவி! அவளை விட்டு விடடா! நல்லப் பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்காதே!''

அவனோ அவனை சட்டை செய்யாமல் ஓடிய பெண்ணைப் பிடிக்க ஓடினான். சொன்னது போலவே பிடித்து இழுத்தும் வந்தான்.

''பார் செல்லம்! உனக்கு நல்லது கெட்டது தெரியாதும்மா! நான் உனக்கு நல்லது தான் சொல்வேன். பேசாமல் வீட்டிற்குள் போ'' அவள் பயந்து வெடவெட என்று நடுங்கினாள்.



''வேண்டாம் போகாதீர்கள்! அப்புறம் உங்களை மீட்கவே முடியாது. பயப்படாதீர்கள்! இவர்களால் எதுவும் முடியாது. உண்மைதான் என்றைக்கும் ஜெயிக்கும். இங்கு சுற்றிலும் மனிதர்கள் இருக்கிறார்கள். சுயநலம் இல்லாமல் ஓடி வந்து உதவும் மனிதர்கள் இன்னும் அழிந்து விடவில்லை. முதலில் இந்த மாதிரி அயோக்கியனுக்கு பயப்படாதீர்கள். ரௌத்திரம் பழக வேண்டிய நேரம்! பாதகம் செய்பவரை மோதி மிதித்து விடு பாப்பா! அவன் முகத்தில் உமிழ்ந்து விடு என சின்ன வயதில் படித்தது இல்லையா? அவனால் உன்னை எதுவும் செய்ய முடியாது. முதலில் உன் சக்தியை நம்பு.''

''என்னடா ரொம்ப ஓவராய் பேசுகிறாய்?'' என ஓங்கி பரத்தை அறைந்தான்.

''ஏய் விடுடா அவரை!'' என அவள் பாய்ந்து சுமனைப் பிடித்துத் தள்ளினாள்.

''ஏய்! பைத்தியம்! உன்னை என்ன செய்கிறேன் பார்!'' என அவளை நோக்கிப் பாய்ந்தான்.

அவள் சட்டென்று விலகிக் கொள்ள சுமன் தடுமாறி விழுந்தான்.

இன்னும் அவன் மூர்க்கமானான்; வெறியுடன் அவளை நோக்கி வர நடுவில் ஒரு கார் வந்து நின்றது.

நித்யா வினய் அதிலிருந்து இறங்கினர்.

நித்யா பரத்தைப் பார்க்க, வினய் அந்தப் பெண்ணை பார்த்தான். ''ப்ரியா'' என....

குரல் கேட்டதும் திரும்பியவள்,

''அண்ணா'' என பாய்ந்தோடி அவனை கட்டிக் கொண்டாள். சுமன் அவனைப் பார்த்ததும் ஆடித்தான் போய் விட்டான். 'இவன் எப்படி இங்கே வந்தான்? எப்படி யாவது சமாளிக்க வேண்டும!' ''இவளுக்கு கொஞ்சம் மனநிலை சரியில்லை. அதைப் பயன்படுத்தி இவன் அவளைக் கடத்திப் போக வந்தான்...''

சுமன் முடிக்கக்கூடவில்லை வினய் அவன் முகத்தில் ஓங்கி ஓர் குத்து விட்டான். மேலும் ரசபாசமாகி விடுவ தற்குள் போலீஸ்காரர்கள் வந்தனர்.

''மிஸ்டர் சுமன் நாங்கள் உங்களை கைது செய்கிறோம். இதோ அரெஸ்ட் வாரண்ட்!'' என அவனைப் பேச விடா மல் இழுத்துச் சென்றனர்; கூடவே வாட்ச்மேனையும் கைது செய்தனர். நடப்பது, நடந்தது எதுவும் புரியாமல் செய்த பாவத்தின் தண்டனையை அனுபவிக்கச் சென் றான். கண்ணீரில் தவித்தவளின் தலையை ஆதுரத் துடன் தடவிக் கொடுத்தான் வினய்.

''என்னடா ஆச்சு? நீ எப்பொழுது விஜயவாடாவில் இருந்து சென்னை வந்தாய்?''

''இது சென்னை என்பதே எனக்குத் தெரியாது அண்ணா'' என அழுது கொண்டிருந்தவள் தலையைத் தூக்கிச் சொல்லிவிட்டு மீண்டும் விசும்ப...

''படித்த பெண் நீ! சாதாரண பெண்ணிற்கு இருக்கும் விழிப்புணர்வு கூட உன்னிடம் இல்லாமல் போனது எப்படி?''

''அவர்களைத் தப்பு சொல்லாதீர்கள்! பொத்தி பொத்தி வளர்க்கப்படும் பெண்ணிற்கு எப்படி உலகம் புரியும்?



வீட்டில் உள்ளவர்களை போலவே எல்லாரையும் எண்ணி நம்பிவிடத் தோன்றவிடும்'' - என்ற பரத்தை நித்யா பார்த்தாள். உதடு சற்று வீங்கினாற் போலிருந்தது. முன்பின் அறிமுகம் இல்லாத பெண்ணிற்காக எவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்திருக்கிறான்? தன்னைப் பற்றியோ, தன் வாழ்வைப் பற்றியோ கவலைப்படாமல் எதையும் எதிர்பாராமல் உதவி செய்ய எத்தனை பேரால் முடியும்? அவனை எண்ணி அவளுக்குப் பெருமிதமாய் இருந்தது. அவள் பார்வையை ஒட்டியே வினய்யின் பார்வையும் அமைந்தது. இருவரின் கருத்துக்களும் இசைந்தன என்பது போல் வலக்கரத்தால் பரத்தின் கையைப் பற்றிக் கொண்டான்.



## 12

பேண்ட்டும், மடித்துவிட்ட புல் கை ஷர்ட்டும் தலையில் தொப்பியுமாய் நித்யா வேகாத வெயிலில் நின்று ஆட்களிடம் வேலை வாங்கிக் கொண்டிருந்தாள். விடுவிடென்று கட்டடம் எழுப்பிக் கொண்டிருந்தது; நம்ப முடியாத வேகத்தில் இரவு பகல் பாராமல் அதிசயத் தக்க விதமாய் தொடர்ந்து இடை விடாது நடந்து கொண் டிருந்தது.

''கலவையை சரியாய் போடுங்கள்! சரியான விகிதத் தில் இருந்தால்தான் கட்டடம் உறுதியாய் இருக்கும்.''

என சொல்லிக் கொண்டே பின்னோக்கி நகர்ந்தவள் யார் மேலோ மோதிக் கொண்டாள்.

''ஸாரி'' என சொல்லிக் கொண்டே திரும்பினாள். உள்ளார்ந்த புன்னகையுடன் வினய் நின்றிருந்தான்.

'இது மாற்றமா? தடுமாற்றமா?

நெஞ்சிலே பனி மூட்டமா?'

எங்கிருந்தோ ஒலித்த பாடல் வரிகள் யார் மனதை பிரதிபலித்ததோ?

மூச்சை உள்ளிழுத்து நிதானமாய் வெளிவிட்டு இரண்டு மூன்று முறை தொடர்ச்சியாக செய்துவிட்டு,

''கட்டட வேலை எப்படி நடக்கிறது? என பார்க்க வந்தீர்களா?'' என்றவள் தொடர்ந்து ''ப்ரியா எப்படி இருக்கிறாள்?'' என்றாள்.

''கொய்ட் வெல்! இது பரத்திற்கு நன்றாகத் தெரியுமே? அவன் சொல்லவில்லையா? ப்ரியா பற்றிய விஷயம் என்னைவிட அவனுக்குத்தான் நன்றாகத் தெரியும்! ஏன் என்றால் நான்தான் ஒரு வாரமாக ஊரிலேயே இல்லையே!'' எனச் சொல்லி இலேசாக கண்ணைச் சிமிட்டினான். ஏனோ நித்யா சட்டென்று தலையை குனிந்து கொண்டாள். ''கட்டட வேலை நன்றாக நடக்கும் என்று எனக்குத் தெரியும். அதைப் பார்க்க நான் வர்வில்லை.''

'பின் எதற்காக வந்தீர்கள்?' என அவள் கேட்கவில்லை.

''பரத்திற்கும், உனக்கும் நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். எங்கள் வீட்டுப் பெண். இன்றைக்கு



திரும்ப கிடைத்திருக்கிறாள் என்றால் அது உங்களால் தான். யாரோ எப்படியோ போனால் என்ன? என நினைக்காமல் நீங்கள் உதவியதால் தான் எங்கள் வீட்டில் நிம்மதி நிலைத்திருக்கிறது. சித்தப்பா மிகவும் ஆடிப் போய் விட்டார். அவரை தேற்றுவதற்கு மிகவும் சிரமமாகி விட்டது. ப்ரியா இந்த காலத்துப் பெண்; டேக் இட் ஈஸியாக எடுத்துக் கொள்ள வைக்க பரத் தான் உதவினான். இரண்டு நாள்கள் டாக்டர் ட்ரீட்மெண்ட்டுடன். பரத் கொடுத்த கவுன்ஸிலிங் அவளை பாஸிட்டிவ்வாக யோசிக்க வைத்திருக்கிறது. வேலைக்குச் செல்வதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாள்.''

''வெரிகுட்!''

''நீ வேலை தருவாயா? இப்போதைக்கு நாளுக்கு நாள் நீதான் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ஜ் மாதிரி வாய்ப்பை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறாய்!''

''இன்டர்நேஷனல் கார்மெண்ட்ஸ் குடும்பப் பெண்ணிற்கு நான் வேலை தருவதா?'' என்றவள் ஏதோ சந்தேகம் கேட்டவருக்கு பதில் சொல்ல நகர்ந்தாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

முன்னைக்கு இளைத்து சற்றுக் கறுத்துப் போயிருந்தாள். ஆனாலும் அவள் அழகு கூடியிருந்தது! தன்னம்பிக்கை தந்த அழகோ? வானவில் கூட அவளிடம் அழகை கடன் வாங்கி இருக்குமோ? அட! அவன் கூட கவிஞனாக மாறிக் கொண்டிருக்கிறானா? என்ன இரண்டு நாட்களாக வெயில் மிக கடுமையாக வாட்டிக் கொண்டிருக்கிறது. எதைக் கண்டும் அஞ்சுபவளாக அவள் இல்லை. இலக்கை மட்டும் குறி வைக்கும் அர்ஜுனனைப் போல் அவள் சிந்தனை, செயல், மூச்சு எல்லாமே

அந்தக் கட்டடம் எழுப்புவதிலேயே இருக்கிறது என்பதை அவனால் உணர முடிந்தது. அவனுக்குள்ளும் சிற்சில மாற்றங்கள! அது அவள் உள்ளத்திலும் எதிரொலிக் குமா? எத்தனை நேரம் தான் வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருப்பது? அவன் வேலைகளை யார் பார்ப்பது? சுதாரித்துக் கொண்டவனாய் கிளம்பினான்.

செல்லும் முன் அவளிடம் சென்று,

''கட்டட வேலை செய்வதால் எந்நேரமும் இறுகிப் போய் தான் இருக்க வேண்டும் என்பதில்லை; கொஞ் சம் இயல்பாயும் இருக்கலாம். ஸீயூ!'' எனக் கூறிவிட்டு புறப்பட்டவனை அவள் விழி எடுக்காமல் மறையும் வரை பார்த்தாள்.

அவளுக்காக தேவன் பணத்தைக் கொடுத்ததை அறிந்த தீப்தி கொடுத்த செக்கிற்கு ஆதாரத்தை சேகரித்து வைக்கச் சொன்னாள். அதனுடன் ஒரு முக்கிய ஆலோ சனை ஒன்றையும் கூறினாள். ''நடந்த சம்பவங்களை உயிலாய் எழுதி ரெஜிஸ்டர் பண்ணச் சொன்னாள்.''

'அது முக்கிய எவிடென்ஸாக பின்னால் உபயோகப் படும்' என தீப்தி கூறியபடி தேவனும் வினய்யும் செய்து முடித்தனர்.

தீபாவளிக்கு புது விதமான பட்டுப் புடவை ரகங்களை உருவாக்குவதில் வினய் தீவிரமாகி விட்டான். இலே சான பட்டுப்புடவைகளை இளம் தலைமுறை விரும்பு வார்கள் என சரியாக கணக்குப் போட்டான். உடுத்த கனமான பட்டுப் புடவைகளுக்கு மாற்றாக லைட் வெய்ட் டான மாடர்ன் டிரெண்ட்டில் புடவைகளை தயாரித் தான். ரிவர்சிபிள் பட்டு, பத்திக் பிரிண்டிங் செய்த பட்டு,



ஜர்தோஸி வேலைப்பாடும், கண்ணாடி வேலைப் பாடுகள் செய்த பட்டு, ஓவியங்கள் நிறைந்த பட்டு, காலை, மதியம், மாலை, இரவு ஒளிக்கேற்ப நிறம் மாறி பளீரிடும் வானவில் பட்டு என பலவிதமான பட்டுக் களை உற்பத்தி செய்ததுடன் அதை சரியான முறையில் விளம்பரப் படுத்தி பி.எல். பட்டுப் புடவைகளுக்கு அனைவரையும் போட்டி போட வைத்தான். உலகமே வியக்கும் அளவிற்கு தொழில் துறையில் முன்னேற வேண்டும் என ஆசைப்பட்டான். அது வெற்றுக் கனவாக இல்லாமல் அவன் உழைப்பில், செயலில் உண்மையான சாதனையாக மாறிக் கொண்டிருந்தது. முழுமையான முயற்சி தோற்றதாக சரித்திரமில்லையே!

வெளிநாடுகளில் இருந்து கூட எதிர்பாராத அளவில் மிகப் பெரிய ஆர்டர்கள் வந்தன. ப்ரியா டெக்ஸ்டைல் டிசைன் டிப்ளமா கோர்ஸில் சேர்ந்தாள். மற்ற ஓய்வு நேரங்களில் புடவை தயாரிக்கும் இடத்திற்குச் சென்று பார்த்தாள். சிற்சில ஆலோசனைகள் சொல்லி அவை வரவேற்கப்படவே ஆர்வத்துடன் கொஞ்ச கொஞ்சமாக அந்த வேலையில் ஈடுபட்டு தீவிரமானாள். ஏற்றுமதித் தொடர்பான விஷயமாக வினய் அலைந்து கொண் டிருந்த பொழுது வருமான வரித்துறையை சேர்ந்த ஒருவர் அவர்களின் ஜவுளி நிறுவனத்திற்கு குடும்பத் துடன் வருகை புரிந்தார். ஆளாளுக்கு புடவை கடை யையே அலசி புடவைகளை தேர்ந்தெடுத்தனர். புடவை மூட்டைகளை கட்டிக் கொண்டு பணம் கொடுக்காமல் கிளம்பினர்.

''சார் கிட்டத்தட்ட இரண்டு இலட்ச ரூபாய்க்கு வாங்கிக் கொண்டு இப்படி பணம் கொடுக்காமல் கிளம்ப முடியாது!'' என மேலாளர் மறுக்க...

''நீங்க எவ்வளவோ வரி ஏய்ப்பு செய்வீர்கள்! இதெல்லாம் கொஞ்சம் கண்டுக்காமல் விட்டால் தான் உங்களுக்கும் நல்லதாக இருக்கும்!''

''இங்க எந்தவிதமான வரி ஏய்ப்பும் இல்லை. ஏனென்றால் நாங்கள் என்றைக்கும் பொய் கணக்கும் எழுதுவதில்லை. நேர்மையான பொருள்தான் நிலைக்கும் என்பதை தலைமுறை தலைமுறையாக கடைபிடித்து வருபவர்கள்! எங்கள் பாரம்பரிய கௌரவமானது. அதனால் பில்லுக்கு பணத்தை கொடுத்துவிட்டு பொருளை எடுத்துச் செல்லுங்கள்'' என கறாராகக் கூறிவிட அவர் வேறு வழியின்றி பணத்தைக் கொடுத்து விட்டுக் கிளம்பினார்.

''சே! கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை எங்கே பார்த்தாலும் ஊழல் பெருத்துப் போச்சு! எப்படி கூசாமல் லஞ்சம் கேட்கிறார்கள். இலஞ்சமும், ஊழலும் தேசிய தொழிலாய் போச்சு! இதுக்கு விடிவு காலம் உண்டா? ரேஷன் கார்டு, சாதிச் சான்றிதழ் வாங்குவதில் இருந்து டிரான்ஸ்பர் வரை சகலத்திலும் லஞ்ச ஊழல் இருக்கிறது. நாடே ஊழலில் மூழ்கிப் போய் கிடக்கிறது. பாரத தேசம் ஊழல் தேசமாகிப் போச்சு! நல்லவேலை, நல்ல முதலாளி, நல்ல சம்பளம் கிடைக்கிறதுக்கு புண்ணியம் பண்ணி இருக்கணும் என்று சொல்வார்கள். அரசாங்க உத்யோகத்தில் இருந்துக்கிட்டு இப்படி இலஞ்சம் வாங்குகிறார்களே? மனசாட்சி உறுத்தாதா?'' என புலம்பிய மேலாளரைப் பார்த்து புன்னகைத்தான் வினய்.

''ஊழலை வெறுக்கும் நல்ல மனிதர்களும் இருக்கிறார்கள். எத்தனை இளைஞர்கள் ஊழலைக் கண்டு கொதித்துப் போய் இருக்கிறார்கள் தெரியுமா? அவர்களுக்கு வேண்டியது ஒரு நல்ல தலைமைதான். யாராவது ஊழலை எதிர்த்து குரல் கொடுத்தார்கள் என்றால் நாடே அணி திரண்டு விடும். கொலை, கொள்ளை மாதிரி ஊழலும் ஒழிக்கப்பட வேண்டியதுதான். கண்டிப்பாய் ஒரு நாள் வெடித்தே தீரும். மக்கள் புரட்சிக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஆட்சியாளர்கள் திணறத்தான் போகிறார்கள்'' வினய் சொல்லிக் கொண்டிருந்த பொழுது சந்துரு அங்கே வந்தான்.

''சார்! நீங்க சொல்வது ரொம்ப சரி! நான் வெளியூர் செல்ல வேண்டியிருக்கிறது. இரும்பு கம்பிகள் வாங்க வேண்டும்; தரத்தைச் சோதித்துப் பார்த்து வாங்க நேரில் சென்றால் தான் முடியும். திரும்பி வர எப்படியும் ஒரு வாரம் ஆகலாம். அதனால் பரத்திற்கு வேலை அதிகமாக இருக்கும். இங்கே வர முடியாது என்று சொல்லச் சொன்னார்.''

''சரி, சரி! ப்ரியாவிடம் நான் சொல்லிக் கொள்கிறேன். அதற்குத்தான் வந்தீர்களா? நல்ல சிபாரிசு பிடிக்கிறீர்கள்!''

''வெறுமனே சொல்வது என்றால் போனிலேயே சொல்லியிருப்பார் பரத்! அவர் இப்பொழுது தான் ஓரளவு தேறி வருவதால் கொஞ்சம் கவனமாக பார்த்துக் கொள்ளச் சொன்னார்'' எனக் கூறி கண்ணைச் சிமிட்டி சிரித்தான்.

''உத்தரவு!'' என கூடச் சேர்ந்து வினயும் சிரித்தான்.

சந்துரு சென்று கம்பிகளின் தரத்தை சோதித்து விலை பேசி லாரியில் ஏற்றி விட்டு தானும் அதிலேயே கிளம்பினான். திட்டமிட்டதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே வேலை முடிந்து விட்டது. வட இந்திய எல்லையை

கடந்து தென்னிந்திய எல்லைக்கருகே வந்த பொழுது சாப்பிடுவதற்காக ஒரு மோட்டல் முன் வண்டி நின்றது.

சாப்பிட்டு விட்டு டிரைவர் மட்டும் எழுந்து பாத்ரூம் செல்ல... சந்துரு வெளியே வந்தான். அங்கே பல வகையான லாரிகள் சாமான்களுடன் நின்று கொண்டிருந்தன. லாரியை அடையாளம் கண்டு அதனருகே சென்றான். 'ஏதோ மாற்றம்?' என்பதாய் ஓர் உள்ளுணர்வு தோன்ற லாரியைச் சுற்றி வந்தான்.

'அதே எண்; அதே பொருள்கள் தான்! ஏன் மனசுக்குள் என்னவோ தப்பு எனத் தோன்றுகிறது?' என யோசித்தபொழுது டிரைவர் வர...

''என்ன புறப்படலாமா?'' அவன தலையசைத்தான்.

''ஏன்? என்னாச்சு? மப்ளர் சுற்றிக் கொண்டு வருகிறாய்?''

கரகரப்பான குரலில் ''கொஞ்சம் காய்ச்சல்! குளிருது'' என்றான். ''குரலும் ஒரு மாதிரி இருக்கிறதே!'' என்றவனுக்கு பதில் கூறாமல் லாரியில் ஏறி ஸ்டார்ட் செய்தான்.

''முதலில் வண்டியை விட்டு நீ கீழ் இறங்கு! உடம்பு சரியில்லாமல் வண்டி ஓட்ட வேண்டாம். வேறு டிரைவர் யாரையாவது போன் செய்து கூப்பிடலாம்'' - என அவன் அலைபேசியை அமுக்க,

''வேண்டாம்! என்னால் ஓட்ட முடியும். நீங்க வாங்க'' என்றவனை பார்த்த சந்துருவிற்கு சந்தேகம் பொறித் தட்டியது.

''ஏய்! யார் நீ?'' என அதட்ட,



அவன் வண்டியிலிருந்து கீழே குதித்தான். ஏதோ தோன்ற வண்டி நம்பரை சென்று மறுபடியும் உற்றுப் பார்த்தான். கைகளால் அதை வருட உறுத்தலாய் நுனி தட்டுப்பட நகத்தால் கீறி அதை இழுக்க கையுடன் அந்த போலி ஸ்டிக்கர் வெளி வந்தது. அது அவன் பொருள்களை ஏற்றி வந்த லாரி அல்ல. தரமற்ற பொருள்களுடன் அவர்கள் பொருள்களை கடத்திப் போக வந்த லாரி. விநாடி கூட தாமதிக்காமல் 'இங்கே தான் அந்த லாரியும் நிற்க வேண்டும்' என பரபரப்பாகத் தேடினான்.

சரியாக கண்டு பிடித்தும் விட்டான். அதன் எண் மேலும் போலி ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு இருந்தது. அதை கிளம்புவதற்கு முன் தடுக்க வேண்டும் என்று லாரி ஓனருக்கு தகவல் தந்துவிட்டு விரைந்து ஸ்டிக்கரைக் கிழித்தான்.

''யோவ்! யாருய்யா வண்டியில் இருப்பது? இறங்கு மரியாதையாய்! மாமியார் வீட்டிற்கு அழைத்துச் செல்ல போலீஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள்'' என்றதும் உள்ளிருந்தவன் எட்டிப் பார்த்தான். போலீஸ்காரர்கள் காக்கி உடையில் நிற்பதைக் கண்டதும் இருவரும் அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடினர். லாரியின் டிரைவரை தேட வாயில் துணி அடைத்து கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் கண்டு பிடித்தனர். அவனை விடுவித்த பொழுது லாரியின் முதலாளி வந்து சேர்ந்தார். அவர்தான் கிளம்புவதற்கு முன் போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்து இருந்தார். சற்று காவல் நிலையத்திற்கு பழக்கமான ஆளாய் இருந்ததால் உடனடியாகச் செயல்பட முடிந்தது.

''எவ்வளவு தைரியம் இருந்தால் என் லாரியையே கடத்த முயற்சிப்பார்கள்? இதை சும்மா விடக்கூடாது.'' என அவர் சொல்லிக் கொண்டிருந்தபொழுது அலைபேசி ஒலித்தது. எடுத்துப் பேசினார். ''அண்ணே! சரிங்கண்ணே! நான் பார்த்துக் கொள்கிறேன்.''

பின், சந்துருவிடம் ''தம்பி! லாரி ஸ்டிரைக் அறிவித்து இருக்கிறார்கள். அதனால் வண்டி கிளம்பாது. நீ வேறு ஏற்பாடு பண்ணிக் கொள்ள முடிந்தால் செய்து கொள். இல்லாவிட்டால் ஸ்டிரைக் முடியும் வரை காத்திருக்கத் தான் வேண்டும்'' என்றார்.

''என்னிக்கு சார் ஸ்டிரைக் முடியும்? இப்படி திடீர்னு ஸ்டிரைக் என்றால் எப்படி? எங்கள் பொருள் உடனடியாய் போய் சேரணும். இல்லாவிட்டால் நாங்கள் இலட்சக் கணக்கில் நஷ்டப்பட நேரிடும்.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அரசாங்கம் கோரிக்கைக்கு இணங்கி டீசல், பெட்ரோல் விலையை குறைத்தால் தான் ஸ்டிரைக் வாபஸ் ஆகும்.'' என அவர் கூறிவிட சந்துரு திகைத்தான்.

வேறு வழியின்றி நித்யாவிற்கு போன் செய்தான்.

## 13

நித்யா சந்துருவிடமிருந்து செய்தி வந்ததுமே பரபரப்பாகச் செயல்பட்டாள். அவர்கள் இருக்கும் இடத்திற்கு



அருகில் இருக்கும் லாரி டீலரை பிடித்து புதிதாக ஒரு லாரியை விலைக்கு வாங்கச் சொன்னாள்.

''ஹேய்! நன்றாக யோசிப்பா! லாரி வாங்குவது புத்திசாலித்தனமான முடிவாய் எனக்குத் தெரியவில்லை. அதெல்லாம் சரிப்படுமா? என்ன பரத் நீயும் ஒன்றும் சொல்லவில்லை?''

''ஆடிட்டர் என்ற முறையில் கணக்கு உதைக்கும் என்பதை உணர்த்த நீ இப்படிச் சொல்கிறாய். நித்யாவின் கணக்கு என்றைக்கும் தப்பாகாது. அவள் ரிஸ்க் எடுக்கும் பொழுது நூறு சதவீதம் நாம் அவளை நம்ப வேண்டும் ரேகா! அதுதான் அவளை நன்கு செயல்பட வைக்கும்.''

நித்யா அவர்கள் பேச்சை நின்று கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அடுத்தடுத்து யார் யாருடனோ போன் பேசிக் கொண்டிருந்தாள். விரைந்து செயலாற்றும் சமயோசிதப் புத்தி அவளுக்கு மட்டுமல்ல. அவள் டீமிற்கே இருந்ததால் விறுவிறு என செயல் தொடங்கியது. புது லாரி வாங்கி அதில் பொருள்களை மாற்றி ஏற்றிக் கொண்டு சந்துரு வந்து சேர்ந்தபொழுது நள்ளிரவிற்கு மேல் ஆகி விட்டது. பொருள்களை பத்திரமாக இறக்கிய பின் காரில் வந்து இறங்கியவரிடம் ''சார்! இது புத்தம் புதிய லாரி! நேற்றிரவு தான் வாங்கினோம். இனி இது எங்களுக்கு வேண்டாம். நீங்கள் விலைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்'' என விலை பேசி விற்றாள். சில ஆயிரம் தள்ளி விற்றாலும் நேரம், வாடகை இவற்றை கணக்கு செய்தால் அது அவளுக்கு இலாபம் தான். ''இது இது தான் நித்யா?'' என அவள் கைப்பற்றி பரத் குலுக்கும் பொழுது வினய் வந்து சேர்ந்தான்.

''என்ன விஷயம்?'' என விசாரிக்க, நடந்ததைச் சொன்னான் பரத்! ''வெரிகுட்!'' என்றவன்,

''உனக்கு ரிலாக்ஸ்சேஷனே கிடையாதா நித்தி? எந்நேரமும் வேலை சிந்தனை தானா?'' என கேட்க,

'ஏன்?' என்பதாய் அவனை அவள் பார்க்க....

''இப்படி ஊன், உறக்கம் இல்லாமல் வேலை பார்த்து எதை சாதிக்கப் போகிறாய்? யார் பாராட்டைப் பெறப் போகிறாய்? அது தான் ஏற்கனவே எல்லார் நம்பிக் கையையும் பெற்றாகி விட்டதே! இனி என்ன?''

''வாக்கு கொடுத்தால் அதைக் காப்பாற்ற வேண்டும்! இது எனக்கு நானே வைத்துக் கொள்ளும் சோதனை!''

''அது சரி! இதற்கு நான் அனுமதிக்க முடியாது. கொஞ்சமாவது வேறு எதிலாவது பொழுது போக்காய் கவனத்தைச் செலுத்து.''

''அக்கா! சாமியாரிணி என நினைத்து விடாதீர்கள். அவளுக்கு பாட்டென்றால் மிகவும் இஷ்டம். சூப்பர் ஸிங்கர் நிகழ்ச்சியை மிஸ் பண்ணாமல் பார்ப்பாள்.''

''அப்படியா! நம்ப முடியவில்லை. என்னுடன் வரு கிறாயா? நிகழ்ச்சியை நேரிலேயே கலந்து கொண்டு பார்க்கலாம்.''

''ஏன்? பாடகர் சந்தோஷ் உங்களுக்கும் நண்பரா?''

''பொறாமையில்லாமல் நட்புடன் போட்டி போடத் தெரிந்தவர்கள் என்னுடன் தோழமை காட்ட மாட்டார் களா என்ன? நிஜமாகத்தான் சொல்கிறேன். போக லாமா?''

''என்ன சார் அழைப்பு நித்யாவிற்கு மட்டும் தானா?''



''உங்களை எல்லாம் அழைத்துப் போனால் அப்புறம் வேலையை யார் பார்ப்பதாம்? அதனால் நாங்கள் மட்டும் செல்கிறோம்.''

''ஆகா! ஆகா! என்ன அக்கறை? இப்பொழுது தான் யாரோ ஒரு மகான் இடைவெளியில்லாமல் வேலை பார்க்கக்கூடாது என்று சொன்னார்; அதற்குள் அவர் எங்கு மறைந்து போனார்?''

''யாருப்பா அங்கே? பரத்தா! இந்த வாலுப் பையனை கொஞ்சம் அந்த புறமாக அழைத்துச் செல்கிறீர்களா? பெரியவங்க பேசும் பொழுது மூக்கை நுழைக்கிறான்.''

''பெரியவங்களா? பிடிச்சவங்களா?'' என்றவனை பரத் பேச விடாமல் இழுத்துச் சென்றான்.

புன்னகையுடன் கட்டை விரலை உயர்த்தியவாறே,

''உண்மையிலேயே பரத் நல்ல நண்பன் தான்!''

நித்யா வீட்டிற்குக் கிளம்ப...

''நான் கொண்டு வந்து விடட்டுமா?''

''இல்லை! நானும், சந்துருவும் செல்கிறோம். நீங்கள் முக்கிய வேலை இருந்தால் பாருங்கள்.''

'அதைத்தானே பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என மனசு சொன்னாலும் உதடு வேறு ஒன்று சொன்னது.

''ஸ்ரீநிவாஸை பார்க்கப் போக வேண்டும். நாளை வருகிறேன்; தயாராய் இரு; மியூசிக் ப்ரோகிராம் செல்ல'' எனக் கூறிவிட்டுக் கிளம்பினான்.

வீட்டிற்குச் சென்றவள் சில மணித் துளிகள் மட்டும் உறங்கி எழுந்து உடை மாற்றி சைட்டிற்குக் கிளம்ப...

ரேகா கேட்டாள். ''ஏய்! என்னப்பா! சந்துரு ஏதோ சொன்னான். பயர் பத்திக்கிச்சா?''

''என்ன சொல்கிறாய் ரேகா?''

''இதுதானே வேண்டாங்கிறது? நிஜமாலுமே உனக்குப் புரியவில்லையா? நாளைக்கு நீ வினய் கூட எங்கோ செல்லப் போகிறாயாமே? நீ மாறி விட்டாயா? இந்த ஆம்பிளைகளை எல்லாம் நம்பாதே! ஏமாந்து போய் விடுவாய்!''

''நாளைப் பற்றிய கவலையை பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் இன்றைக்குச் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய குவிந்து கிடக்கின்றன. அதை முடிக்கச் செல்கிறேன்'' என கிளம்பி விட்டாள்.

ஆட்கள் முன்பைவிட இரண்டு மடங்காகி விட்டனர். அத்தனை பேரையும் திறம்பட வேலை செய்ய வைக்கத் திறமையான சாமர்த்தியமான நிர்வாகம் தேவைப் பட்டது. எனவே வினாடித் துளிகளைக் கூட வீணாக் காமல் வேலையில் கவனத்தை செலுத்தினாள். ஞாயிறு மாலை சுடிதாரில் பளீரென்று சைட்டிற்குச் செல்லாமல் வெளியே கிளம்பியவளை கோபத்துடன் உறுத்துப் பார்த்தாள் ரேகா. ஆனாலும் கிளம்பும் போது ஏதும் கேட்கக் கூடாது என்று வாயை மூடிக் கொண்டாள். அவளை ஓரக் கண்ணால் பார்த்தாள்; பின் சின்ன சிரிப் புடன் ''ரேகா! நான் வினய் கூட வெளியே செல்ல வில்லை. மெரீனா கடற்கரையில் அண்ணா ஹசாரேவுக்கு ஆதரவாய் நடக்கும் பேரணியில் கலந்து கொள்ளச் செல்கிறேன்'' - என்றாள்.

''ஹேய்! முன்னாடியே சொல்லியிருந்தால் நானும் கிளம்பியிருப்பேனே!''



''அட! இப்பொழுதும் ஒன்றும் குறைந்து விட வில்லை. நீயும் கிளம்பி வா. நான் காத்திருக்கிறேன்'' சற்று நேரத்தில் அவளும் கிளம்பி வர இருவரும் சென்றனர்.

''லஞ்ச ஊழலுக்கு நான் எதிரி'' என்ற வாசக அட் டையை எங்கிருந்தோ கொண்டு வந்தாள் ரேகா. அதை அவள் பிடித்துக் கொண்டு நடக்க...

சுடர்விடும் மெழுகுவர்த்தியை ஏந்திக் கொண்டு திவ்ய ரஞ்சனி சென்றாள்.

''அடேங்கப்பா! எவ்வளவு கூட்டம்! நான் இவ்வளவு பேரை எதிர்பார்க்கவில்லை. ஊழலை எதிர்த்து இத்தனை ஆயிரக்கணக்கான மக்களை நான் எண்ணிப் பார்க்கவே இல்லை'' என்றவள், உற்சாகத்துடன்,

''வேண்டும்! வேண்டும் ஜன் லோக்பால் சட்டம் வேண்டும்'' என உரக்க கூவினாள்.

''மக்களாட்சி என்றால் பதவியில் அமர்ந்து மக்களை ஆட்சி செய்கிறோம் என எஜமானர்கள் நடந்து கொள்வது இல்லை. தங்கள் பிரதிநிதியாகத்தான் சிலரை தேர்ந்து எடுத்து மக்கள் ஆட்சியை ஒப்படைத்து இருக்கிறார்கள் என்பதை ஆட்சியாளர்கள் மறந்து விடக்கூடாது. இவர்கள் எப்படி சட்டத்தைப் பற்றி பேசலாம்? உருவாக்கலாம். அதற்கு இவர்களுக்கு உரிமை இல்லை, என்று கூறுவது ஏமாற்று வேலை.'' என ஒருவர் பேச...

''ஹாய் நித்தி!'' குரல் கேட்டதுமே அவளுக்குப் புரிந்து போயிற்று வினய் தான் என்று!

''என்னப்பா! மியூசிக் ப்ரோகிராமை இங்கே இடம் மாற்றி விட்டாயா? இந்த எட்டாயிரம் பேர் கூடிய கூட்டத்தில் உன்னை மட்டும் எப்படி சரியாகக் கண்டு பிடித்தாய்? ரெண்டு பேருக்கும் நடுவில் ஏதாவது டீகோடு இருக்கிறதா?''

அவள் பதில் சொல்வதற்குள் அருகே வந்தவன்,

'என்ன அப்படிப் பார்க்கிறாய்? கோடி பேர் இருந்தாலும் உன்னை நான் கண்டு பிடித்து விடுவேனாக்கும்!' என எண்ணியவாறே ''ஊழல் எதிர்ப்பு பேரணியில் நீங்கள் மட்டும்தான் கலந்து கொள்வீர்களாக்கும்? ஏன் நாங்கள் கலந்து கொண்டால் இப்படி ஆச்சரியமாய் பார்க்கிறீர்கள்'' என்றான்.

''அப்ப நீங்களும் ஜன் லோக் பால் தேவை என்கிறீர்களா?''

''இங்கே வந்திருப்பவர்களை பாருங்கள் ரேகா! சாதாரண மக்களில் இருந்து ஐ.ஐ.டி. மாணவர்கள், வயதான பெரியவர்கள், ஆட்டோ டிரைவர்கள், உங்களைப் போன்ற பெண்கள் வரை எத்தனை எத்தனை வகையினர்? இவ்வளவு பேரும் நினைப்பதைத் தானே நானும் நினைப்பேன்.''

''ஆமாம்! உங்களைப் போன்ற இளைஞர்கள் இந்த ஊழல் எதிர்ப்புப் போராட்டத்திற்கு பெரும் ஆதரவு வழங்க ஆரம்பித்து விட்டார்கள். ஆர்குட், ட்விட்டர், ஃபேஸ்புக் மின் அஞ்சல், குறுஞ்செய்தி எனத் தகவல் தொழில் நுட்பத்தின் அனைத்து வழிகளிலும் போராட்டத்தை ஒருங்கிணைத்து வருகிறார்கள்'' என அருகில் இருந்த ஒருவர் கூற,



''ஏன் இந்த மக்கள் கடந்த பத்தாண்டுகளாக ஆயுத படைகளுக்கு வழங்கிய சிறப்பு அதிகாரச் சட்டத்தை திரும்பப் பெறக்கோரி பட்டினிப் போராட்டம் நடத்தி வரும். இரோம் ஷர்மிளாவுக்கு ஆதரவு அளிக்கவில்லை; பாஸ்கோ திட்டத்துக்கு எதிராக கடந்த ஆறு வருடங்களாகப் போராடி வரும் ஜகத்சிங்பூர் மக்களை ஏன் ஆதரிக்கவில்லை. சுரங்கத் தொழிலால் கங்கை ஆறு மாசுப்படுகிறது என பட்டினி போராட்டம் நடத்தி செத்துப்போன நிகரமானந்துக்கு ஆதரவு தரவில்லை? நியாம்கிரி மலையில் வேதாந்தர நிறுவனம் நடத்தி வரும் சுரண்டலை எதிர்க்கும் பழங்குடியினரை ஆதரிக்கவில்லை? கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராகத் தொடர் உண்ணாவிரதம் இருப்பவர்களுடன் இணைந்து நிற்கவில்லை. ஹரியானாவிலும் நொய்டாவிலும் தற்கொலை செய்து சாகும் விவசாயிகளைக் கண்டு ஏன் மனம் கொதிக்கவில்லை. நர்மதா அணையால் இடப் பெயர்வுக்கு உள்ளாகும் ஆதிவாசிகளின் நிலையை உணரவில்லை? இதற்கு மட்டும் எப்படி மக்கள் ஆதரவு என்று கூறுகிறார்களே? என அருந்ததி ராய் கேட்டிருக்கிறாரே! படித்தீர்களா?''

''லஞ்ச ஊழலால் ஒவ்வொரு மனிதரும் நேரிடையாகவோ, மறைமுகமாவோ பாதிக்கப்பட்டிருக்கிறார். அதனால் போராட்டம் வலுக்கிறது. மேலும் சொன்ன விஷயம் இன்னும் எல்லா மக்களையும் சென்று அடையவில்லை. அவற்றைப் பத்தி ஒரு சில பத்திரிகைகள் தான் எழுதுகின்றன. மீடியா வெளிச்சம் அவற்றின் மேல்

விழுந்து மக்களிடையே கொண்டு செல்லப்பட்டால் நிச்சயம் மாற்றம் வரும்! இளைஞர்கள் இவற்றை நன்கு புரிந்து கொண்டால் தகவல் தொழில் நுட்பத்தின் வழியாய் அனைவரிடமும் கொண்டு செல்ல முயற்சிப் பார்கள்.''

''குற்றவியல் தடுப்பு சட்டம், குண்டாஸ் ஆக்ட், தடா, பொடா இருந்தும் குற்றம், கொலை, கொள்ளை, பயங்கர வாதம் குறைந்து விட்டதா?''

''அப்படியெல்லாம் பார்த்தால் எதையும் செய்ய முடியாது. ஜன் லோக் பால் என்பது ஊழலைக் குறைக்க கொஞ்சமாவது பயமுறுத்தி தடுக்கப் பயன்படும். எனவே இந்தச் சட்டம் வேண்டாம் என மறுக்கக் கூடாது. மேலும் அதில் இருந்து யாருக்கும் விதி விலக்குத் தந்து விடவும் கூடாது.''

வினய் கருத்தை நித்யாவும் ஆமோதித்தாள்.

பேரணி முடிந்து கிளம்பியவர்களை தடுத்து தன் னுடன் வர கூப்பிட... நித்யா சற்றே தயங்க

''என்ன ரேகா? உங்களை எண்ணி தோழி யோசிக் கிறாரா? அவருக்கும் உங்களிடம் பயமா?''

''எங்கே உங்களுடன் வரவேண்டும்? வா நித்யா போகலாம்.'' உள்ளுக்குள் சிரித்திருப்பான் என்றே நித்யாவிற்குத் தோன்றியது.

ஸ்டார் ஹோட்டல் முன் காரை நிறுத்தினான். உள்ளே பண்டிகை கால பட்டுப் புடவை அறிமுக விழா நடந்து கொண்டிருந்தது. தேவன் மேடை மேலே அமர்ந்திருக்க விதவிதமான அழகிகள் பட்டுப் புடவையில் அன்னப் பறவைகளாய் பவனி வந்தனர். புடவைகளின் தரம்,



கலைநயம், வேலைப்பாடு பற்றி வர்ணிப்பாளர் கலகலப் பாய் எடுத்துரைக்க...

''வானவில்லின் வர்ணஜாலப் பட்டு... இதை கட்டு பவர் என்றும் எல்லார் கண்களுக்கும் இனிமையாய்

காட்சியளிப்பார் - நித்யரஞ்சனி பட்டு.'' என அவர் சொல் லும் பொழுது உள்ளே நுழைந்த நித்யாவை தேவன் கண்கள் மட்டுமா பார்த்தன?

ரேகாவின் விழிகளில் என்ன உணர்வு கலந்து இருந் ததோ? வினயை ஏறிட்டுப் பார்த்தாள் நித்யா. 'ஆமாம்! இப்படி ஒரு பெயரை பட்டுப் புடவைக்கு வைத்தது யார்? இது உங்கள் வேலை தானா?'

'சரியாய் வைத்திருக்கிறேனா? இல்லையா?'

தேவன் இறங்கி வந்தார். ''வினய்! அறிமுகம் எல்லாம் முடிந்து விட்டது. பத்திரிகை நண்பர்களுக்கும், விருந்தினர்களுக்கும் பார்ட்டி மட்டும் பாக்கியிருக்கிறது. நீ பார்த்துவிட்டு, நித்யாவை பத்திரமாய் அவள் இடத்தில் சேர்த்து விட்டு வா. நான் கிளம்புகிறேன், வரேன்மா!''

''சரி அப்பா'' ரேகா எங்கே நகர்ந்தாளோ? நித்யா அவளை கண்களால் தேடிக் கொண்டிருக்க தட்டில் வைக்கப்பட்ட உணவுடன் அவளருகே வந்தான் வினய். ''நான் சாப்பிட்டுக் கொள்கிறேன். நீங்கள் போய் வந்திருக்கும் விருந்தினரை கவனியுங்கள்!''

''நான் அதைத் தானே செய்து கொண்டிருக்கிறேன்.''

''என்ன?''

''இப்படி விழி விரிக்காதே! புடவை பெயருக்குரி யவள் தானே சீஃப் கெஸ்ட்!''

''ஏன் இப்படிச் செய்தீர்கள்?''

''நீ எப்படி கேட்பாய்? என பார்க்கத்தான்! உண்மையி லேயே அந்தப் புடவை உன்னைப் போல அழகாய் இல்லை!''

''இந்த ரேகா! எங்கே போய் தொலைந்தாள்?'' என அவனுக்கு பதில் கொடுக்க முடியாமல் மழுப்பினாள்.

எதிரே ஸ்ரீநிவாஸ் வர,

''அட! ஸ்ரீநிவாஸ். வாங்க, வாங்க!''

''பத்திரிகை நண்பருடன் வந்தேன். மற்றபடி புடவை யில் ஈடுபாடு இல்லை.''

''ஏன்? வீட்டில் அம்மாவிற்கோ, மனைவிக்கோ எடுத்து கொடுக்கலாமே?''

''இரண்டிற்கும் வாய்ப்பே இல்லை! ஒருவர் வாழ்ந்து முடித்து சொர்க்கத்தில் இருக்கிறார். இன்னொருவர் சொர்க்கத்தில் இருந்து தான் என் வாழ்க்கைக்கு வர வேண்டும்...

''வாவ்! விரைந்து வந்திட வாழ்த்துக்கள்!''

''நன்றி! யார் இவர்கள்? எனி திங் ஸ்பெஷல்?''

''வெரி வெரி ஸ்பெஷல் தான்...'' என்றவன் சற்று நிறுத்தி அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்துவிட்டு ''இவங்க தான் என்...'' என்று மீண்டும் அவளை, 'என்ன சொல்லப் போகிறானோ?' என பதற வைத்தாள்.

''என்ன நித்தி! சொல்லி விடட்டுமா?''

''வினு ப்ளீஸ்!''



''ஓகே! கண்ணம்மா!'' என அவளிடம் கூறிவிட்டுத் திரும்பி நிவாஸிடம் ''இவங்க எங்க பில்டில் கன்ஸ்ட் ரக்ஷன் செய்கிறவர்கள்!'' என்றான்.

''ஓ! கண்ணம்மா கன்ஸ்ட்ரக்ஷன்! வெரிகுட்! வெரி குட்! கோ அஹெட்!''

நித்யா அங்கிருந்து மெல்ல நழுவினாள். ரேகாவைக் கூட்டத்தில் ஒரு வழியாய் கண்டு பிடித்தாள். ''ஹேய்! வாப்பா கிளம்பலாம். உன் ஆளுக்கு ஒரு மெசேஜை தட்டி விட்டுப் புறப்படு.''

''சரிதான்! ஆட்டோ பிடித்து போய் விடலாம்'' - என இருவரும் வெளியே வந்து ஆட்டோவில் ஏறும் பொழுது வினய்க்கு குறுஞ்செய்தி அனுப்ப... அப்போது யாரோ ''அம்மு அம்மு'' எனக் கூப்பிடும் குரல் கேட்டது. ''ரேகா, யாரை கூப்பிடுகிறார்கள்?''

''அது யாருக்குத் தெரியும்? ஆட்டோ புறப்படுங்கள்,'' என்றாள் ரேகா. ''அம்மு'' என கூப்பிட்டுக் கொண்டே விரைந்து வந்த நிவாஸை தோளில் தட்டிக் கூப்பிட்டான் வினய்.

# 14

''யாரைக் கூப்பிட்டீர்கள் நிவாஸ்?''

''இப்பொழுது ஆட்டோவில் சென்றார்களே! அதில் ஒரு பெண்.''

''யார் சென்றார்கள்? நான் கவனிக்கவில்லையே!''

''உங்கள் நித்தியுடன் சென்ற பெண்.''

''யார் ரேகாவா? அது நித்தியுடைய ஆடிட்டர். இருவரும் ஒன்றாகத்தான் தங்கியிருக்கிறார்கள்.''

''ப்ளீஸ்! வினய். நான் உங்களுடன் நிறைய பேச வேண்டும். உங்கள் உதவி எனக்கு கிடைக்குமா?''

''நிச்சயமாக! சொல்லுங்கள் நிவாஸ்.''

''இன்றைக்கு வேண்டாம். நாளைக்குப் பேசலாமா?''

''கண்டிப்பாக.''

நிவாஸ் அவனிடமிருந்து விடைபெற்று சென்ற பிறகும் அவரிடம் இருந்த பரபரப்பையும், குரலில் மறைந் திருந்த ஏக்கம் நிறைந்த உற்சாகத்தையும் நன்றாகவே உணர முடிந்தது.

மறுநாள் நிவாஸ் அவனுக்கு போன் செய்த பிறகு கிளம்பிச் சென்றாள். தன்னை விட வயதில் பெரியவராக இருந்தாலும் இன்றைக்கு அவரது பேச்சும், செயலும் சிறு பையனை ஒத்து இருந்தன.

''வாங்க வினய்! உங்களுக்கு தொந்தரவு கொடுப்ப தற்கு மன்னிக்க வேண்டும். இது தான் என் அப்பா!'' என ஒரு போட்டோவைக் காட்டினார்.

''அட! உங்களைப் பார்த்தால் அவரை பார்க்க வேண் டாம்! அதே நிறம், கம்பீரம், ஆண்மை எல்லாம் இருக் கிறதே?''

''ஆமாம், நான் உருவத்தில் அப்பா போலத்தான். ஆனால் குணத்தில் என் அருமை அம்மாவைப் போல. என் அம்மா எல்லா விஷயத்திலும் திறமைசாலி. அவர்



எது செய்தாலும் அதில் ஒரு நேர்த்தியும், அழகும் இருக்கும். எத்தனை திறமை இருந்தும் என் அப்பாவிற்கு அவரது அழகற்ற தோற்றம் தான் உறுத்தியது. அவரிடம் என் அம்மா மிகவும் கஷ்டப்பட்டார். மன ரீதியாக, உடல் ரீதியாக நிறைய துன்பமடைந்தாலும் எல்லாவற்றையும் என் நல்வாழ்விற்காகப் பொறுத்துக் கொண்டார். இருந்தும் அப்பா இன்னொரு பெண்ணுடன் வாழச் சென்றதை அம்மாவால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உறவினர் எவரையும் நாடிச் செல்லவில்லை; தன்னந் தனியே போராடி எனை வளர்த்தார். எனக்கு என் அம்மா தான் உசத்தி! அவர் மனம் நோக ஒரு நாளும் நான் நடந்து கொண்டதில்லை. எங்கள் வாழ்க்கையில் விதி தான் விளையாடியது. அதைத் தவிர சொல்வதற்கு எதுவும் இல்லை!'' என்றவர் ''வினய் இது என் அம்மா வின் டைரி! படித்துப் பாருங்கள் புரியும்'' என ஒரு பழைய டைரியைக் கொடுத்தார்.

அதே சமயம் ரேகாவை நித்யா கவனித்துக் கொண்டே இருந்தாள். கோபமும், எரிச்சலும், வெறுப்பும் அவளது ஒவ்வொரு செயலிலும் நிறைந்து இருந்தது. ஒன்றும் பேசாமல் பொறுமையாக நித்யா இருக்க, இருக்க அவ ளால் தாள முடியவில்லை.

''அம்முவாம் அம்மு! இவன் ஏன் இப்பொழுது வந்து தொலைந்தான். அப்போ ஒழிந்தது போலவே ஒழிந்து போயிருக்க வேண்டியது தானே? அந்த அம்மு என் றைக்கோ செத்துப் போனாள்!''

''அவர் யார்? ஆட்டோவில் ஏறிய பொழுது அம்மு என்று அழைத்தது உன்னைத் தானா?''

''அவர் என்ன வேண்டி கிடக்கு? அவன் தான்! நீயும், வினய்யும் பேசிக் கொண்டிருந்தபொழுது இடையில் வந்து பேசினாரே!'' தன்னையறியாமல் மரியாதை அவள் பேச்சில் வர.

''ஸ்ரீநிவாஸ் மரியாதைக்குரிய மனிதராகத்தான் தெரிகிறார்'' என நித்யா கூற அவள் எள்ளும் கொள்ளு மாக வெடித்தாள்.

வினய் அந்த டைரியின் பக்கங்களை மிக மென்மை யாக புரட்டினான். கோணல் மாணலான எழுத்துக்கள் தான். ஆனால் அதில் வாழ்க்கையின் புரட்டல், ஏமாற்றம், ஏக்கம், ஆசை, அன்பு தன் வெறுப்பு கூட இருந்தது.

''எத்தனையோ நாள்கள் நான் ஏன் உயிரோடிருக் கிறேன் என யோசித்து இருக்கிறேன்; என் மகன் தான் என்னை வாழ்வுடன் பிணைத்து வைத்திருக்கும் கயிறு. அவன் அன்பு மட்டும் இல்லையென்றால் நான் உலகத் தில் இருக்கவே மாட்டேன். நான் நேசித்த கணவர் என்னை விரும்பவில்லை. அவரையே உரித்து வைத் திருக்கும் என் மகனாவது என்னை மிகவும் விரும்பு கிறானே! அவனுக்கு எல்லாவற்றிற்கும் நான் தான் வேண்டும். என்றைக்கு தன் பிஞ்சுக் கரங்களால் என் கண்ணீரைத் துடைத்தானோ? அன்றிலிருந்து நான் அழுவதை நிறுத்தி விட்டேன். அவன் வாழ வேண்டும்; ஆல மர விழுதாய் தழைக்க வேண்டும். என் மகன் தந்தையாக வேண்டும். அவனுக்கு மிகப் பொருத்தமாய் பெண் பார்க்க வேண்டும். அழகின்மை அவன் வாழ்வில் குறுக்கிடக் கூடாது என்றாலும் பேரழகியோ, ஆரவார மான அழகோ தேவையில்லை. அடக்கமான பெண் தான் வேண்டும். மிக அழகானவளுக்கு என்னை எப்படி



பிடிக்கும்? எனக்கும், என் மகனுக்கும் இடையில் போட்டியாய் இருந்து விடக்கூடாது. அவனிடம் பேச வேண்டும்.''

வினய் அடுத்த பக்கத்தைப் புரட்டினான்.

''தரகர் கொண்டு வந்து கொடுத்த படத்தில் சிறு பெண்ணாக தெரிகிறாள். பாவாடை தாவணியில் அடக்க மாக இருக்கிறாள். படத்தை சீனியிடம் காட்டி பிடித் திருக்கிறதா? எனக் கேட்டேன். ஆனால் அவனோ படத் தையே பார்க்கவில்லை. 'அம்மா உனக்கு பிடித்திருந் தால் சரி. நான் பார்க்கத் தேவையில்லை' எனக் கூறி விட்டுச் சென்று விட்டான். அவனை மிகவும் வற்புறுத்தி பெண் பார்க்க சம்மதிக்க வைத்தேன். ஆனால் கண்டிஷ னுடன் தான் சம்மதித்தான். பெண் பார்ப்பது இயல்பாய் இருக்க வேண்டும். பார்க்கின்ற முதல் பெண்ணையே மணந்து கொள்வது என்று! அவனை நினைத்தால் எனக்கு மிகவும் பெருமையாய் இருக்கிறது. பெண்ணை கோவிலில் வைத்து பார்க்கலாம் என முடிவு செய்தேன். கடைசி நிமிடத்தில் கூட அம்மா நான் அவசியம் வரவேண்டுமா? எனக் கேட்டான். 'ஏய் கல்யாணம் உனக்கு தான்டா!' என கலாட்டா செய்தேன். கிளம்பும் நேரத்தில் போன் வர அவசர அவசரமாக கிளம்பி வெளியே போனான். அம்மா வந்து சொல்கிறேன் எனக் கூறிக் கொண்டே சென்று விட்டான். பெண் பார்க்கச் செல்லும் நேரத்தில் அப்படி என்ன முக்கியமான வேலை? என்று எனக்குக் கோபம் வந்தது.''

அந்தப் பக்கத்தை முடித்துவிட்டு நிலாவைப் பார்க்க...

''அன்றைக்கு என் நண்பன் ஒரு இக்கட்டில் மாட்டிக் கொண்டான். வீட்டிற்குத் தெரியாமல் அவன் கல்

யாணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணிற்கு மோதிரம் வாங்க நகை கடைக்குச் சென்றான். நகை வாங்கிய பிறகு அங்கே வந்த அவன் அம்மா, தங்கையிடம் மாட்டிக் கொண்டான். அது நான் வாங்கி வரச் சொன்னதாக மழுப்பி விட்டான். அவர்கள் நம்பாமல் என்னை வரச் சொல்லி விசாரிக்க... நான் தான் என் நண்பனை காட்டிக் கொடுக்காமல் தலையசைக்க மோதிரம் என் பாக்கெட்டிற்கு வந்து விட்டது. அப்புறம் அம்மா கோபிப்பார்களே என்று வீட்டிற்குக் கிளம்பி விட்டேன் என்றான் நிவாஸ்.

ரேகா நித்யாவிடம் இத்தனை நாட்கள் தன் மனத்தில் அடைத்திருந்த வெறுமையை வெளியே கொட்டத் தொடங்கினாள். ''ரொம்ப காலத்திற்குப் பிறகு வரமும், தவமும் இருந்து பெற்ற பெண் நான். எல்லாவற்றிலும் எனக்குச் செல்லம் தான். கேட்டது கிடைக்கும்; நினைத்தது நடக்கும்; ஆசைப்பட்டது அமையும். ஏமாற்றம், தோல்வி, துக்கம் என்பதே என் வாழ்வில் இருந்தது இல்லை. பெற்றோருக்கு தாமதமாய் பிறந்த பெண் என்றதால் எனக்கு பதினெட்டு வயதிலேயே மணமுடிக்க நினைத்தார்கள். எனக்கும் புதிது புதிதாய் ஆடை, அணிகலன் கிடைக்குமே என்ற உற்சாகம் வேறு. அதனால் வேகமாக தலையசைத்து விட்டேன். என் தோழிகள், உறவுப் பெண்கள் எல்லாம் உரிமையாய் கேலி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

''அம்மு! உன் மாப்பிள்ளை உனக்கு ஏத்த மாதிரி இருப்பாரா? இந்த வீட்டு இராஜகுமாரியை கைப்பிடிக்க யாருக்கு அதிர்ஷ்டமோ?''



''நீயும் தான் பார்க்கப் போகிறாயே?''

''நான் அவசரமாய் அக்கா வீட்டிற்குப் போக வேண்டி இருக்கிறது! அதனால் உனக்கு ஒண்ணு சொல்லிட்டுப் போறேன். மாப்பிள்ளையைப் பிடிச்சிருந்தால் உடனே சரின்னு சொல்லிடு.''

''பிடிக்கலேன்னா...''

''ம்... பிடிக்கலேன்னா, அந்த மரத்தில் பிடிச்சுக் கட்டி வச்சுடு. நாங்க வந்து கவனிச்சுக்கிறோம்.'' எல்லாரும் கொல்லென்று சிரித்தனர்.

''சரி, சரி சீக்கிரம் புடவையை கட்டிக்கிட்டு கோவிலுக்குக் கிளம்பு. காசு மாலையில் கோவில் சிலை போலவே இருந்தாள். தங்கக் கொலுசு சிணுங்க கோவிலைச் சுற்றி வரும் பொழுது மாப்பிள்ளையின் அம்மா தன் உறவினர்களுடன் மூலஸ்தானத்தில் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்தார். பெண்ணின் பெற்றோர் அவரை வரவேற்று, ''பெண்ணை கூட்டி வரட்டுமா? அவள் அடிபிரதட்சணம் செய்து கொண்டிருக்கிறாள்.''

''இருக்கட்டும், இருக்கட்டும்! என் பையன் வந்த பிறகு நானும் பார்த்துக் கொள்கிறேன். அதற்குள் மற்ற சன்னதியை கும்பிட்டு வந்து விடுகிறேன்.'' என அவரும் கிளம்பி விட்டார்.

வினய் அடுத்த பக்கத்தைப் படித்தான்.

நான் கண்ணை மூடி சாமி கும்பிட்ட பொழுது சின்ன பெண்களின் அரட்டை காதில் விழுந்தது. ''ஏய்! மாப்பிள்ளையை ஆரம்பத்திலேயே உன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்.''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். உன்னைப் பார்த்தாலே அவர் உன் காலடியில் விழுந்து விடுவார். நீ ஒன்றும் சிரமப்பட வேண்டியதில்லை.''

''அப்படி எண்ணி ஏமாந்து விடாதே! சாமர்த்தியம் இருந்தால் தான் கைக்குள் போட்டுக் கொள்ள முடியும்! எத்தனை அழகான பெண்கள் ஏமாந்து போயிருக்காங்க தெரியுமா?''

''இப்ப என்ன பண்ணனும் என்கிறாய்? அவரை என் விருப்பப்படி ஆட வைக்கணும் அவ்வளவு தானே? பார்! பார் அவரை ஸ்டெப் போட்டு வெஸ்ட்டர்ன் டான்ஸே ஆட வைக்கிறேன்.''

சொன்னவளை நிவாஸின் அம்மா வெறித்துப் பார்த்தார்.

'ம்ஹூம்! இந்தப் பெண் என் மகனிற்கு சரிப்பட மாட்டாள். நல்லவேளை அவன் இன்னும் வரவில்லை. சகுனம் சரியில்லை என்று கூறிவிட்டுக் கிளம்பிவிட வேண்டும்' என எண்ணிக் கொண்டு நான் கிளம்பிய பொழுது தெரிந்தவர் வந்துவிட அவரிடம் பேச வேண்டியதாயிற்று.

அதே சமயம் உள்ளே நுழைந்த நிவாஸ் விநாயகர் சன்னதியில் சிலர் தேங்காய் உடைக்க... அதில் ஒரு சில்லு அடிபிரதட்சணம் முடித்த அம்முவின் நெற்றியில் பட்டுத் தெறித்தது. ''ஸ்! அம்மா!'' என நெற்றியை பிடித்துக் கொண்டாள். சின்னதாய் இரத்தப் பொட்டு தோன்ற... நிவாஸ் பதறிப் போனான்.

''ஸாரி! ஸாரி!'' அவனை நிமிர்ந்து பார்த்தாள்.



''பரவாயில்லை சார்! பெரிதாக ஒன்றும் இல்லை. நான் வருவேன் என்று உங்களுக்குத் தெரியாது. நானாவது கவனித்து இருக்க வேண்டும். நீங்கள் போங்கள். ஒன்றுமில்லை'' என படபடவென்று கூறி விட்டு துள்ளி ஓடிவிட்டாள்.

''ஏய் கல்யாணப் பெண் இப்படி ஓடி வரக்கூடாது. இது என்ன? நெற்றியில் காயம்; இரத்தம் வருகிறதே!''

''அதெல்லாம் ஒன்றுமில்லை அம்மா! இலேசாய் இடித்துக் கொண்டேன்'' என அவள் கூறிக் கொண்டிருந்த பொழுதே நிவாஸும், அவன் அம்மாவும் எதிர் எதிர் புறங்களில் இருந்து அங்கே வந்தார்கள்.

''வாங்க மாப்பிள்ளை! இதோ அம்மாவும் வந்து விட்டார்கள்! அம்மு வணக்கம் சொல்லிக் கொள்ளம்மா!''

''வணக்கம்'' என்றவளை நிவாஸ் பார்த்துக் கொண்டே இருந்தான். அவளுக்கும் அவனைப் பார்த்ததும் மிகவும் பிடித்துப் போனது. 'கடவுளே! என் மனசுக்குப் பிடிச்சவராய் இருக்க வேண்டும் என்று இப்போது தான் வேண்டிக் கொண்டேன். வேண்டியது உடனே பலித்து விட்டது.

மெய்மறந்து நின்றவர்களைப் பார்த்து அம்முவின் அம்மாவும், அப்பாவும் மிகவும் சந்தோஷமானார்கள்.

மதுரை பக்கத்தில் இருக்கும் அந்த கிராமத்திற்கு சென்னைப் பட்டின மாப்பிள்ளை பெண் பார்க்க வந்ததே உலக அதிசயமாய் இருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் மிகப் பொருத்தமாய் இருந்ததும், அவர்கள் இருவர் மனமும் ஒன்றியதும் பெற்றோருக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

''என்னம்மா! மாப்பிள்ளையைப் பிடித்திருக்கிறதா?''

''போங்கப்பா!'' என ஓட முயன்றவளை அவள் உறவுப் பெண்ணொருத்தி தடுத்து நிறுத்த...

''மாப்பிள்ளை உங்களுக்கு...''

அவர் முடிப்பதற்குள் ''ரொம்ப பிடிச்சிருக்கு மாமா.'' என்றவாறு தன் பாக்கெட்டினுள் கைவிட்டு மோதிரத்தை எடுத்து அவள் தன் மெல்லிய விரல்களை மென்மையாகப் பற்றி மோதிர விரலில் போட்டு விட்டான்.

நிவாஸின் அம்மா முகம் இறுகிப் போய் விட்டிருந்தது.

''சம்பந்தி அம்மா! நல்ல நாளாய் பார்த்துச் சொல்கிறோம். நீங்க பாவம் சிரமப்பட வேண்டாம்! எல்லா வேலையையும் நாங்களே பார்த்துக் கொள்கிறோம். சுபகாரியத்தை சீக்கிரமே நடத்த வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். முதலில் வரும் முகூர்த்த தேதியிலேயே திருமணத்தை நடத்தி விடலாம்., முதல் நாள் பரிசம் போடும் நிகழ்ச்சியை வைத்துக் கொள்ளலாம். ஏங்கம்மா முகம் வாடினாற் போல் இருக்கீங்க? கவலைப்படாதீங்க! பவுனு, நகை சீர்வரிசையில் நாங்க எந்தக் குறைவும் வைக்க மாட்டோம். எல்லாரும் மூக்கில் விரல் வைக்குமாறு அசத்திப்புடுவோம்.''

''அட! ஆமாம்! என்னம்மா ஆச்சு?'' என்று கேட்டவன்,

''எங்க அம்மா ரொம்பப் பெருந்தன்மையானவங்க! பணம், காசை வைத்து மதிப்பிட மாட்டார்கள்'' - என

''தலைவலி மண்டையை பிளக்குதப்பா.''

''மாமா! நான் அம்மாவை அழைத்துக் கொண்டு கிளம்புகிறேன். ஓய்வு எடுத்தால் தான் சரியாகும்.''



''சரிங்க மாப்பிள்ளை! அம்மு'' என அழைக்க அவனையே பார்த்துக் கொண்டு நின்றவளை நெருங்கி,

''நீ சும்மாவே அழகு தான். அதனால் இவ்வளவு நகையெல்லாம் போடாதே!'' என மெல்ல கூறிவிட்டு ''வரட்டுமா?'' என விடைபெற்றான்.

எல்லாவற்றையும் பார்க்கப் பார்க்க அவன் தாய்க்கு பொறுக்க முடியவில்லை. தலையைப் பிடிப்பது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியே சென்று காரினில் ஏறினார்.

நிவாஸ் வழக்கமான வேகத்தில் தான் நடந்தான். ஏனோ அவன் மெதுவாக நடப்பதாகத் தோன்றியது அவன் அம்மாவிற்கு.

'பெண் பார்க்கவே வரமாட்டேன் என அடம் பிடித்த என் மகனா இவன்? இவனும் அவன் அப்பா போல் தானா? அழகான பெண்ணைக் கண்டதும் மதிமயங்கி காலில் விழுந்து விட்டானே! எனக்குத் திறமை இல்லையா? இப்படி ஒவ்வொருவரிடமும் ஏமாந்து கொண்டிருக்கிறேனே, என்னிடம் ஒரு வார்த்தை கூட கேட்கவில்லையே! மோதிரம் போட்டு நிச்சயமே செய்து விட்டானே! அப்படியென்றால்... ஏற்கனவே திட்டம் போட்டு எல்லாம் செய்திருக்கிறான். அவனிடம் இந்தப் பெண் வேண்டாம் என்றால் ஏற்றுக் கொள்வானா? எனக்குத் தெரியாமல் பதிவுத் திருமணமே செய்து கொண்டு விடுவான். சரி, பார்க்கலாம்; அவள் திருமணம் செய்து கொண்டு இங்கே தானே வரவேண்டும்! இருபதா, அறுபதா? என பார்த்துவிடலாம்.

அம்முவின் அப்பாவிற்குப் பெருமை பிடிபடவில்லை. ஊரே வியக்கும் வண்ணம் திருமணத்தை

நடத்தத் திட்டம் போட்டார். அவர்கள் வீட்டிற்கு அருகிலேயே இருந்த இடத்தில் மிக பிரம்மாண்டமாய் பந்தல் போட்டார். வடுவூர்க்காரர் பந்தல் மிகவும் புகழ் பெற்ற தரமான பந்தல் ஆகும். அவர்களை வரவழைத்து மாநாடு பந்தல் போல் அமைத்தார். அடுத்த பதினைந்து நாளில் திருமணம் என நாள் குறிக்கப்பட்டிருந்தது. பத்திரிகை கல்யாணப் பெண், மாப்பிள்ளை போட்டோ வுடன் அச்சடிக்கப்பட்டு வந்திருந்தது. அதை சம்பந்தி யிடம் காண்பிப்பதற்காக வந்திருந்தார்.

''சம்பந்தி அம்மா, இரு வீட்டார் அழைப்பு என்று போட்டு உங்களுக்கும் சேர்த்து அடிச்சிட்டோம். மாப்பிள்ளை உங்க முக்கியமான சொந்தக்காரங்க பேரை எல்லாம் சொன்னார். அதெல்லாம் சின்ன பத்திரிகையில் போட்டு அடிச்சிட்டேன். இந்தப் பெரிய பத்திரிகையில் நம்ம இரண்டு குடும்பத்தின் பெயரும், தங்கள் நல்வரவை விரும்பும் உறவினர்கள், மற்றும் நண்பர்கள் - என்று போட்டு விட்டேன்.''

பத்திரிகையை ஒன்றும் சொல்ல முடியாமல் வாங்கிப் பார்த்தவர் அதிர்ந்து போனார். மைசூர் சில்க் புடவையில் மெலிதான நகையில் மிகவும் அழகாய் இருந்தாள் அம்மு. அவளருகே இலேசாய் அவளை உரசியபடி சிவப்பு நிற டீ ஷர்ட்டில் பளிச்சிடும் புன்னகையுடன் நிவாஸ். பார்ப்பவர்கள் கண்டிப்பாய் கண் போடுவார்கள்.

'இந்த போட்டோ எப்பொழுது எடுத்தான்? எனக்குத் தெரியாமல் இன்னும் என்னென்ன நடக்கிறது? தினமும் அவளை சந்திக்கிறானா? சே! இருக்காது; சென்னையில் இருந்து மதுரைக்கு எப்படி எனக்குத் தெரியாமல் செல்ல



முடியும்? அதெப்படி வழக்கம் போல் சரியான நேரத் திற்கு வீட்டிற்கு வர முடியும்?'

அப்போது நிவாஸ் அம்முவுடன் அங்கே வந்தான்.

''அம்மா! இன்றைக்கு அம்முவின் பிறந்த நாள். அதனால் அவளை அழைத்துச் சென்று அவளுக்குப் பிடித்தமான புடவை வாங்கினேன். உங்களிடம் ஆசீர் வாதம் வாங்க வேண்டும் என்று சொன்னாள். அதற்காகக் கூட்டி வந்தேன்.''

காலில் விழுந்து வணங்கியவளை வாழ்த்தக் கூடத் தோன்றாமல் நின்றார்.

'இவள் எப்பொழுது மதுரையிலிருந்து இங்கே வந்தாள்?'

''என் அக்கா வீடு சென்னையில் இருக்கிறது. கல் யாணத்துக்கு வேண்டிய நகை, புடவைகளை இங்கேயே வாங்கி விடலாம்; அதுவும் அவளுக்குப் பிடித்ததாய் இருக்க வேண்டும் என்று அவளையும் அழைத்துக் கொண்டு வந்து விட்டேன். அம்மு ஒரு வாரமாய் சென்னையில் தான் இருக்கிறாள். மாப்பிள்ளைக்குத் தெரியுமே! அவர் உங்களிடம் சொல்ல மறந்து விட்டார் போல!''

''அத்தை உங்களுக்கும் பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' என்ற அம்முவை திகைத்துப் பார்க்க,

''ஆமாம் அம்மா! உங்க பிறந்த நாள் அன்றைக்கு தான் இவளுக்கும் பிறந்த நாள். இரண்டு பேரும் ஒரே ராசி! ஒரே நட்சத்திரம். உங்களுக்குப் பிடித்தது எனக்குத் தெரிந்ததால் நானே புடவை எடுத்து விட்டேன்.

பிடித்திருக்கிறதா பாருங்கள்! பிறந்த நாள் வாழ்த்துக்களைக் கூட நான் சொல்வதற்கு முன் அவள் தான் சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.''

''எனக்கென்ன? அம்முவிற்கு பிடித்த மாதிரி மட்டும் நீ நடந்து கொண்டால் போதும். இனி அவள்தான் உனக்கு எல்லாம்! என் கடமைகளை எல்லாம் நன்றாக செய்து முடித்து விட்டேன். நிம்மதியான உறக்கம் எனக்குப் போதும். புடவை, நகையெல்லாம் எதற்கு?''

அவர் பேசிக் கொண்டிருக்க அதை நிவாஸ் சரிவர கவனிக்கவில்லை. அங்கே குடும்பத்துடன் வந்த தன் நண்பனை மகிழ்ச்சியுடன் உபசரிக்கக் கிளம்பி விட்டான்.

''அன்றைக்கு நான் வாங்கிய மோதிரம் உனக்கு எப்படி உதவியது பார்த்தாயா?'' என மெதுவாய் கூற,

''ஆபத்துக்கு கை கொடுப்பான் தோழனில்லை; அவசரத்துக்குக் கல்யாண மோதிரம் கொடுப்பான் நண்பன்! அப்படித்தானே!'' அவன் தோளில் தட்டிச் சிரித்தான்.

''ஹேய்! உன் மேட்டரை வீட்டில் ஓப்பன் செய்து விட்டாயா?''

''ஏறக்குறைய கல்யாணமே முடிந்தாற்போலத்தான்! எல்லாரும் சம்மதம் தெரிவித்து விட்டார்கள்.''

அம்மாவுடன் நண்பனின் தாய் பேசிக் கொண்டிருக்க இவர்கள் அம்முவின் அப்பாவைப் பார்க்க நகர்ந்தனர்.

தினம் தினம் நிவாஸின் தாய் மனவேதனை அதிகரித்துக் கொண்டுதான் இருந்தது. அது கல்யாண கனவில் இருந்த நிவாஸின் கண்களில் தென்படவில்லை. கொஞ்சம் முகம் வாடியிருந்தாலே 'என்



னம்மா?' என தவித்துப் போகும் மகன் இப்பொழுதெல்லாம் தாயின் முகம் பார்க்கவே நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருந்தான். திருமணத்திற்கு விடுப்பு எடுக்க வேண்டியிருந்ததால் வேலைகளை தேக்கி வைக்காமல் முடித்துவிட விரும்பி இரண்டு மணி நேரம் கூடுதலாக வேலை செய்து கொண்டிருந்தான். ஆனால் அந்த நேரம் எல்லாம் அவன் அம்முவுடன் சுற்றிக் கொண்டிருப்பதாக எண்ணியும், வேலை என்று தன் மகன் மழுப்புவதாகவும் பாதிக்கப்பட்ட தாயின் மனம் உறுதியாக நம்ப ஆரம்பித்தது. மாதத்தில் ஒரு நாள் தாயை வெளியே அழைத்துச் சென்று ஊர் சுற்றுவது அவனது வழக்கம். மாலை நேரத்தில் தான் கிளம்புவார்கள். அன்றைக்கு என்று மதியமே வந்து விட்டான். வந்ததும் வராததுமாய் 'கிளம்பு கிளம்பு' என்று அவசரப்படுத்தினான். நேரே காரை பத்திரப் பதிவு அலுவலகம் நோக்கி செலுத்தினான். அங்கே ரேகாவின் அப்பா காத்திருந்தார். ''என்ன விஷயம்? அம்மு அப்பா ஏன் இங்கே நிற்கிறார்? நீ ஏன் இங்கே வந்தாய்?''

''கல்யாணத்திற்காக அவர் பெண் பெயரில் சென்னையில் புது வீடு வாங்கித் தருகிறார் மாமா. அந்த பத்திர பதிவிற்காகத் தான் நாம் இங்கே வந்திருக்கிறோம்.''

''ரேகா என்ற பெயரில் தானே பதிய வேண்டும்?'' என பதிவாளர் கேட்க,

''அப்பா என் பெயரில் வேண்டாம். அவர் பெயரில்... ஸ்ரீநிவாஸ் என்ற பெயரில் பதிவு செய்யுங்கள்.''

"ஹேய் ரேகா! என்ன இது?"

"அம்முக்குட்டி சமத்து என்று நிரூபித்து விட்டாள். நீ சொன்னபடியே செஞ்சுர்லாம்" என அவள் தந்தை முத்தாய்ப்பு வைக்க...

"மகளும், மருமகனும் வாழப்போகும் வீட்டை இவர் பார்த்து பார்த்து எப்படி வாங்கினார் தெரியுமா? மகள் என்றால் உசிரு இவருக்கு!" என சாட்சி கையெழுத்துப் போட வந்திருந்தவர் கூற...

'அப்படியென்றால்... ஒட்டு மொத்தமாய் என் மகனை இவர்கள் விலைக்கு வாங்குகிறார்களா? சின்ன வயதில் எனக்கு தாயன்பு கிடைக்கவில்லை. கல்யாணம் செய்த பிறகு கணவர் அன்பு கிடைக்கவில்லை. ஏதோ அன்பு மகன் கிடைத்திருக்கிறானே? என எண்ணினேன். என் மகன் அன்பும் இனி எனக்குக் கிடைக்காதா? வர வர சாப்பிடக்கூடப் பிடிக்கவில்லை. தனியே வெட்ட வெளியே வெறித்துக் கொண்டு எவ்வளவு நேரம் இருப்பது?'

"அம்மா சாவியை உங்கள் மருமகள் கையில் கொடுங்கள்! ரேகா அம்மா ரொம்ப ராசியானவர்கள்! அவர் தொட்டது துலங்கும்."

சாவியை அவர் கைப்பிடித்துக் கொடுக்க, அது கை நழுவி கீழே விழுந்தது.

குனிந்து ரேகாவின் தந்தை அதை எடுத்து தன் மகளின் கையில் கொடுத்தார். அடிக்கடி உடல் நலமில்லை, தலைவலி, கால்வலி, உடல் அசதியென அம்மா படுத்துக் கொள்ள... புடவை எடுப்பதில் இருந்து தாலி வாங்குவது வரை ரேகா குடும்பத்தின் உதவியுடன்



நிவாஸ் செய்ய வேண்டி இருந்தது. மணநாள் நெருங்கி விட்டிருந்தது. மறுநாள் காலை கல்யாணம்; நிச்சய தார்த்தம் இன்றைய மாலை ஐந்து மணிக்கு கையில் போட்டிருந்த மெஹந்தி மிக அழகாய் சிவந்திருந்தது. உள்ளங்கையில் நிவாஸின் பெயரை மருதாணியில் எழுதியிருந்தாள்.

பெண் பார்க்க வந்த பொழுது ஊருக்குச் சென்றிருந்த உறவுப் பெண் விவரமானவள். நிவாஸின் அம்மா முகத்தைப் பார்த்ததும் ஏதோ சரியில்லை என புரிந்து கொண்டாள்.

"ஏய்! ரேகா, ஏன் அந்த பொம்பிளை முகத்தை உச்சாணிக் கொம்பில் தூக்கி வைத்துக் கொண்டு இருக்கிறது?"

"உனக்கு பொறாமையாய் இருந்தால் நீயும் அங்கே போய் முகத்தை வைத்துக் கொள்" என அவள் விளையாட்டாய் பேசினாள்.

"ஏ! ஒழுங்கா சொல். உன் ஆள் எப்படி?"

"ஓ! அவரா?" என்றவாறே தன் உள்ளங்கையைப் பார்த்தாள்.

"அவர் என் கைக்குள்ளே இருக்கிறார்! நான் என்ன சொன்னாலும் கேட்பார்! எனக்காக எது வேண்டுமானாலும் செய்வார். என்னுடனே எங்கும் வந்து விடுவார். கொஞ்ச நாளுக்குப் பிறகு அப்பா, அம்மாவை என்னுடனே வைத்துக் கொள்ளப் போகிறேன். அதற்கு கூட அவர் சரியென்று சொல்லி விட்டார். எங்களுக்கு இடையில் யாரும் கனவில் கூட வரமுடியாது."

''அவர் அம்மா பிள்ளையாமே!''

''இருக்கட்டும்! நாளையிலிருந்து பாரேன். அவர் அம்முவின் அருமை கணவராகி விடுவார். எனக்கு அவர் எத்தனை பரிசுகள் கொடுத்திருக்கிறார் தெரியுமா? அது எல்லாவற்றையும் விட நான் அவரைத்தான் பெரிதாக மதிக்கிறேன். இனி அவர் அம்மா கூட சும்மாவாகி மூலையில் உட்கார வேண்டியதுதான்.''

இவர்கள் பேசிய எல்லாவற்றையும் தெளிவாய் சன்னலுக்கு வெளியே இருந்து நிவாஸின் அம்மா எதேச்சையாய் கேட்டு விட்டார்.

'போச்சு! போச்சு! எல்லாம் போச்சு! என் குடியே மூழ்கிப் போய்விட்டது. என் மகனை உயிரோடு பழி கொடுத்து விட்டேன். இனி யாருக்காக நான் வாழவேண்டும்? இப்பொழுது இங்கிருந்து சென்று விட வேண்டும்.' என யாருக்கும் தெரியாமல் அங்கிருந்து வெளியேற முயன்றவரின் தோள்களில் யாருடைய கையோ விழுந்தது.

# 15

திரும்பிப் பார்க்க அம்மு என்ற ரேகாவின் அம்மா நின்று கொண்டிருந்தார். ''சம்பந்தி அம்மா எங்கே போறீங்க? இன்னும் கொஞ்ச நேரத்தில் பரிசம் போடணும்.''



''நான் இங்கே தான் இருக்கிறேன். என் பையன் நன்றாக உங்கள் மகளுடன் வாழ வேண்டியவன். இந்த நிகழ்ச்சியை முன்னின்று நடத்தக்கூடாது. நான் வாழும் உங்களைப் போன்றவர்கள் தான் நடத்த வேண்டும். இவள் என் தூரத்து உறவினள். நிவாஸுக்கு அக்கா முறை வேண்டும். இவள் முன்னின்று நடத்துவாள்.'' என ஒரு பெண்ணைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்தினார்.

''என்ன இருந்தாலும் மாப்பிள்ளை உங்களைத்தான் தேடுவார்.''

''அட! போங்கம்மா! உங்கள் மாப்பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியாதா? அவன் என்னைத் தேடுவான் தான்; ஆனால் எல்லாம் முடிந்த பிறகு தான் தேடுவான். வேறு ஒன்றுமில்லை. அவனும் பிஸி அல்லவா?'' என்றார் சிரித்துக் கொண்டே.

அவர் என்ன சொல்கிறார்? என சரியாகப் புரியாவிட்டாலும் சிரித்துக் கொண்டே சொன்னதால் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் நகர்ந்தார்.

நிவாஸின் அம்மா யார் கண்ணிலும் படாமல் மெதுவாய் வெளியே வந்து உறவினரை அழைத்து வருவதற்காக ஒதுக்கியிருந்த காரில் ஏறி மதுரையில் இருந்த வீட்டிற்கு விரைந்தார். மதுரையிலிருந்து பெண்ணின் கிராமம் அரை மணி நேரம் பயண தூரத்தில் இருந்தது. மதுரையில் மாப்பிள்ளை வீட்டார் தங்கியிருப்பதற்காக ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்திருந்தனர். அந்த வீட்டிற்கு அம்மா வந்து சேர்ந்தார். தன்னுடைய உணர்வுகளை எல்லாம் டைரியில் கொட்டிவிட்டு அழுது கரைந்தார்.

''இனி நான் யாருக்காக வாழ வேண்டும்?'' இந்த கேள்வி மட்டும் பூதாகாரமாய் திரும்பத் திரும்ப கண் முன் எழுந்து கொண்டிருந்தது. 'என் மகன் அன்பை இழந்து என்னால் வாழ முடியுமா? அவன் என் கண் முன்னே இன்னொருத்தியின் பின் செல்வதை என்னால் எப்படி சகிக்க முடியும்? அதைப் பார்த்துப் பார்த்து துடித் துத் துடித்து பைத்தியம் பிடித்து ஊன் உறக்கமில்லாமல் அலைவதை விட சகிக்க முடியாத பிச்சைக்காரி நான் சாவதே மேல்! எல்லாரிடமும் அன்பை யாசித்து நின்ற நான் உண்மையிலேயே பிச்சைக்காரி தான். அவன் வாழ்வு நன்றாக இருக்கட்டும்! நான் தான் தேவையற்ற குப்பைக் காகிதம்! எனக்கு இனி எதுவும் வேண்டாம்; யாரும் வேண்டாம்! என் மகனும் வேண்டாம்! இந்த உயிரும் வேண்டாம்!'' என உறுதியாக முடிவெடுத்து அறைக்கதவைத் தாழிட்டார்.

அங்கே மேடையில் வரிசையாக ஒவ்வொரு நிகழ்ச் சியும் நடந்து கொண்டிருந்தது. நிவாஸ் தன் அம்மாவை முதலில் கவனிக்கவில்லை. நண்பர்களும், உறவினர் களும் அவனைச் சுற்றிக் குழுமியிருந்தனர். அவன் உறவுப் பெண் எல்லா வேலைகளையும் கவனித்துக் கொண்டிருந்ததால் யாரும் அவனைத் தொந்தரவு செய்யவில்லை. அவளுக்கு போடுவதற்கு மெல்லிய, வைர லாக்கெட்டுடன் கூடிய கழுத்தணியை நிவாஸ் வாங்கி வைத்திருந்தான். வெளிர் இராமர் நீலத்தில் மஞ்சள் பொன் நிறத்தில் பார்டர் போட்ட புடவையும் அதற்கு மிக அழகாய் தைக்கப்பட்டிருந்த ஜர்தோஸி வேலைப்பாடு செய்த ரவிக்கையும் ரேகாவிற்கு மிக



அழகாய் இருந்தது. அதுவும் துள்ளித் திரியும் சந்தோஷ மான வயது அவளை மேலும் அழகூட்டியது. நூறு வகை சீர்த்தட்டுகளையும் பந்தலில் வைத்து மேளதாளத்துடன், கைத்தலம் பற்ற வைர லாக்கெட்டை அணிவித்து நிச் சயம் செய்தான். அப்போது தான் தன் தாயைத் தேடி னான். ''அக்கா! அம்மா எங்கே காணோம்? அவர்களை முதலில் கூப்பிடுங்கள்.''

''இங்கே தானே இருந்தார் இதோ கூப்பிடுகிறேன்'' என ஆள் மாற்றி ஆள் சொல்லி அவரை தேட ஆரம் பித்தனர். இருந்தால் தானே கண்ணில் படுவதற்கு? அதற்குள் பெண்ணையும், மாப்பிள்ளையையும் சாப்பிட அழைக்க, இருவரும் எழுந்து சென்றனர். ஆனாலும் அவன் மனது சாப்பாட்டில் நிலைக்கவில்லை. ஏதோ சங்கடம் மனதில் பிசைய... சாப்பிட்டோம் என பேர் பண்ணி விட்டு எழுந்தான். அக்கா அவசரமாய் அருகே வந்தாள்.

''டேய் தம்பி! அம்மாவை எங்கேயும் காணோம்டா. வெளியிலிருந்த கார் டிரைவர் யாரையோ மதுரையில் நாம் தங்கியிருந்த வீட்டில் இறக்கி விட்டதாகச் சொல் கிறார். அது அம்மாவாக இருக்குமோ? இப்ப என்னடா பண்றது? என்ன பிரச்சனை? அம்மா ஏன் அங்கு போனார்?''

''சரி அக்கா! சத்தம் போடாதே! நான் என்ன பிரச்சனை என்று பார்க்கிறேன். ஒருவேளை அம்மாவுக்கு உடம்பு கிடம்பு சரியில்லையோ? அதனால் தான் இங்கிருந்து யாரிடம் சொல்லாமல் சென்று விட்டார்களா? என்னிட

மாவது, சொல்லி இருக்கலாமே! ஏன் இப்படிச் செய்தார் கள்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! உன்னிட மாவது ஏதாவது சொன்னார்களா?''

''இல்லை. நீதான் முன் இருந்து எல்லா காரியத் தையும் செய்ய வேண்டும் என்று மட்டும்தான் சொன் னார்கள்.''

''இது ஏதோ சீரியஸான பிரச்சனை போலிருக்கிறது. உடனே நான் காரை எடுத்துக் கொண்டு கிளம்புகிறேன். இது யாருக்கும் தெரிய வேண்டாம்'' எனக் கூறியவன் ரேகாவிடம் மட்டும் சொல்லி வர அருகே செல்லும் பொழுது அவளைச் சுற்றி உறவினர் கூட்டம்.

''என்ன மாப்பிள்ளை? பெண்ணை சுற்றிச் சுற்றி வர்றீங்க? இன்னிக்கு ஒரு பொழுது பொறுத்துக் கொள் ளுங்கள். நாளைக்கு இந்நேரம் அவள் உங்கள் பின்னால் இருப்பாள். நாங்களும் தடை ஏதும் சொல்லப் போவ தில்லை'' எனக் கூறிச் சிரித்தனர்.

நிவாஸ் ஒன்றும் சொல்ல முடியாமல் கண்ணால் விடை பெற்றான். காரில் ஏறி மிக விரைவாக மதுரையை அடைந் தான். வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டு உள்ளே ஓடி னான். எங்கும் அவன் தன் அன்னையைக் காணவில்லை. ஒரு அறைக்கதவு மட்டும் தாழிடப்பட்டிருக்க...

''அம்மா, அம்மா'' என பதட்டத்துடன் தட்டினான். பதில் வராது போகவே கதவை பந்தல் போட கொண்டு வந்திருந்த கடப்பாரையினால் ஓங்கித் தட்டி உடைத் தான். உள்ளே அவன் கண்ட காட்சி...



''அம்மா'' என அலறியவாறு பாய்ந்து சென்று மின் விசிறியில் இருந்த புடவையை அறுத்து விட்டான்.

நல்லவேளை இன்னும் கொஞ்சம் தாமதித்து இருந் தால் எதுவும் நடந்திருக்கும். கட்டிலில் படுக்க வைத்து, முகத்தில் தண்ணீரைத் தெளித்தான். இலேசான மயக்கம் தான். கழுத்து சுருக்கத்தில் இலேசான துடிப்பு இருந்தது.

அதை மெல்லத் தடவி விட்டான். மெல்ல கண் விழிக்க...

''ஏம்மா? இப்படி பண்ணுனீங்க? உங்க மனசில் என்ன குறை? தயவு செஞ்சு சொல்லுங்க! இப்படி வாழ்க்கையே வெறுத்து... என்னை விட்டுட்டுப் போக உங்களுக்கு எப்படி மனசு வந்துச்சு? அப்படி என்ன தப்பும்மா நான் செஞ்சேன்? என் மேல் தப்பிருந்தால் ஓங்கி ரெண்டு அறை கொடுப்பதை விட்டு விட்டு இவ்வளவு பெரிய தண்டனையை கொடுக்க எப்படித் துணிஞ்சீங்க? அம்மா ப்ளீஸ்! நான் என்ன செய்யணும்? அதையாவது சொல்லுங்க? நீங்கள் இல்லாமல் என் னால் இருக்க முடியாதம்மா!''

கண்களில் கண்ணீர் வழிய புலம்பிய மகனை ஆழ்ந்து பார்த்தார். ''நான் என்ன சொன்னாலும் மறுக்காமல் கேட்பாயா?''

''சொல்லுங்கள் அம்மா! நான் என்ன செய்ய வேண் டும்?''

''இந்தக் கல்யாணம் வேண்டாம்! இந்தப் பெண் வேண் டாம்!'' பலகீனமாய் இருந்தாலும் வார்த்தை அழுத்தம் திருத்தமாய் வெளிவந்தது. அப்படியே நிவாஸ் அதிர்ந்து

போனான். டைரியை படித்துக் கொண்டிருந்த வினய் கூட அப்படித் தான் அதிர்ந்து போனான்.

''எப்படி நிவாஸ் இது நியாயம் ஆகும்? இது ஒரு பெண்ணின் வாழ்க்கை பிரச்சனை! கல்யாண பந்தலில் உற்றார் உறவினர் முன்னிலையில் ஒரு பெண்ணை நிராகரிப்பது வலிமிகுந்த வேதனைக்குரிய விஷயம் அல்லவா? யாருமே இதை மன்னிக்க மாட்டார்கள்.''

''அது எனக்குமே நன்றாகத் தெரியும். நான் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலையில் இருந்தேன். என் வாழ்வை விட அம்மாவின் உயிரைக் காப்பாற்றுவது தான் எனக்கு முக்கியமாகத் தெரிந்தது.''

''வெறும் உங்கள் வாழ்வு மட்டுமல்ல. அதனுடன் ஓர் அப்பாவி பெண்ணின் வாழ்வும் அல்லவா சம்மந்தப்பட்டிருக்கிறது.''

''உண்மைதான்! மேலும் அவளை என் உயிராக நேசித்தேன். அதற்குப் பிறகு அம்மாவிடம் இருந்து ஒரு வார்த்தை வெளிவரவில்லை. ஏதாவது பேசினால் தானே சமாதானப் படுத்த முடியும்? நான் சொல்வதை சொல்லி விட்டேன். இது தான் என் இறுதி முடிவு என்பது போல் மௌனம் சாதித்து விட்டார். இங்கிருந்தால் எதுவும் செய்ய முடியாது என உடனே கிளம்பச் சொல்லி அம்மா வற்புறுத்தியதால் புறப்பட்டு விட்டோம். எங்கு செல்வது? தெரிந்தவர்கள் யாருமில்லாத ஊருக்குப் போகலாம் எனச் சொல்ல, ஹைதராபாத் சென்று விட்டு இருபது நாட்கள் கழித்துதான் திரும்ப வந்தோம்.

அதே நேரம் நித்யாவிடம் நடந்ததை சொல்லிக் கொண்டிருந்த ரேகா அன்றைய நினைவில் கண்ணீர் விட்டாள்.



''அன்றைக்கு என்ன நடந்தது தெரியுமா நித்யா? மாப்பிள்ளையை காணோம் என்று எல்லாரும் தேட ஆரம்பித்தார்கள். யாருக்குமே எந்தவொரு சந்தேகமும் வரவில்லை. முதலில் அவர் அம்மா காரில் சென்றதும், பின் இவர் புறப்பட்டுச் சென்றதும் தெரிய வந்ததும் அப்பா பதறிப் போனார். உடனே சென்னை அத்தை மாமாவை மதுரையில் மாப்பிள்ளை தங்கியிருந்த வீட்டிற்கு அனுப்பி பக்குவமாய் பேசி அழைத்து வரச் சொன்னார்கள். போன மாமா இடியுடன் திரும்பி வந்தார். ''வெற்று வீடும், உடைந்து கிடந்த அறைக்கதவும், மின் விசிறியில் தொங்கிக் கொண்டிருந்த சேலையும் பற்றி அவள் தந்தையிடம் மட்டும் இரகசியமாக சொல்லி விட்டு பாக்கெட்டிலிருந்து வீட்டிலிருந்து எடுத்து வந்த நிவாஸின் கடிதத்தை எடுத்து அவரிடம் நீட்ட ரேகா அருகே வந்தாள்.

''என்னப்பா? அவர் எங்கே?''

வெற்றுப் பார்வையுடன் அந்தக் கடிதத்தை ரேகாவிடம் தந்தார். அது அவளுக்குத்தான் எழுதப்பட்டிருந்தது.

*''அம்மும்மா,*

*என்னை மன்னித்து விடு. இந்தக் கல்யாணம் நடக்காது. நான் செல்கிறேன்.''*

*- நிவாஸ்.''*

ரத்தின சுருக்கமாய் தான் இருந்தது. துளி விஷமும் உயிரை மாய்க்குமே! ''இது நிஜமா? அப்பா, அவர் இப்படி எழுதி இருக்க மாட்டார். என்னால் நம்ப முடிய

வில்லையே? மாமா, நீங்களாவது சொல்லுங்களேன்! இது பொய் தானே?''

ஒன்றும் சொல்லாமல் கண் கலங்கிய மாமாவிடம் ''ஏன்? ஏன்? அப்படி நான் என்ன தவறு செய்தேன்? நம்ப வைத்து... கனவை வளர்த்து... அப்பா... அப்பா... ஏம்பா விட்டுட்டுப் போனார்?'' என மார்பில் சாய்ந்து கொண்டு விசும்ப.

''ஏன்னா? அவள் உன் அப்பனில்லையம்மா! என் பெண்ணோட அருமை எனக்குத்தான் தெரியும்! இவ னில்லா விட்டால் இன்னொருவன். அதே முகூர்த்தத் தில் கல்யாணத்தை நடத்திக் காட்டுகிறேன்.''

''வேணாம்பா! வேணாம்! எனக்கு எவனும் வேண் டாம். நான் உங்க பெண்ணாகவே இருந்து விடுகிறேன்.''

''ஐயோ! என் அருமைப் பெண்ணின் வாழ்வே வீணாகி விட்டதே! நான் என்ன செய்வேன்? என்ன செய்வேன்?'' அவள் தாய் ஓடி வந்தாள்.

''பாவி மகளே! நாங்க என்ன பாவம் செய்தோமோ? அது உன் தலையில் விடிஞ்சிடுச்சே! கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்தோமே! தவமாய் தவமிருந்து வரமாய் வரம் வாங்கி பிறந்த பெண்ணிற்கு இந்த நிலையா வரவேண்டும்? எந்த பாவிக்கண்ணு பட்டுச்சோ? ஊரைக் கூட்டி வச்சு நம்மை அவமானப்படுத்திவிட்டு ஓடிப் போனவங்க நல்லா இருப்பாங்களா? பெத்த வயிறு பத்தி எரியுது! என்னங்க? என்ன ஆச்சு? ஐயோ யாரா வது ஓடி வாங்களேன்! அவரு நெஞ்சை புடிச்சுக்கிட்டு கீழே விழுகிறாரே!''

எல்லாம் பத்து பதினைந்து நிமிடங்களில் நடந்தேறி விட்டன. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விழுந்தவர்



திரும்ப எழவே இல்லை. ஆடி, ஓடி மருத்துவரிடம் காண்பித்தும் பலனில்லை. பிறகுதான் நிலைகுத்தி சுவரில் சாய்ந்திருந்த அவளது தாயைப் பார்த்தனர். இருவருமே அவளை அனாதை ஆக்கிவிட்டுச் சென் றிருந்தனர்.

ஒரே நேரத்தில் தாயையும், தந்தையையும் பறி கொடுத்து இருந்தாள். ஒரு உயிரை காப்பாற்ற நிவாஸ் முயல... இரண்டு உயிர் பிரிந்திருந்தன.

கதறி கண்ணீர் விட்டு ஏங்கிக் கிடந்தவளை தேற்று வார் எவருமில்லை. ஒரு நாளுக்கு முன்னால் ஊரே பொறாமைப்பட்டு பார்த்தது என்ன? ஒரு பன்னிரெண்டு மணி நேரத்தில் அனைத்தையும் இழந்து நின்ற பதினெட்டு வயதுப் பெண்ணை இன்று பரிதாபப்பட்டு பார்ப்பது என்ன? யாரை நொந்து கொள்வாள்? எல்லா வற்றையும் பொறுமையாக ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வந்த வயதல்லவே அது? சுனாமியில் சிக்கிய கொடி யாய் வேரற்றுப் போயிருந்தாள். அவளை அப்படி இப்படி தேற்றி, பேசி அவள் அத்தை சென்னைக்கு தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

இருபது நாட்களுக்குப் பிறகு சென்னை திரும்பிய நிவாஸும் உயிரற்ற உடலாய்தான் இருந்தான். மாலை யில் வெளியே சென்ற பொழுது தான் கால்கள் தன்னையறியாமல் ரேகாவின் அத்தை வீட்டை நோக்கி இழுத்துச் சென்றிருந்தன.

வெறுத்து வெதும்பிப் போயிருந்த ரேகா வாசலில் நின்று அவனைப் பார்த்துவிட்டாள். பாய்ந்து வெளியே வந்து அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

''பாவி! பாவி! ஏன்டா இப்படி பண்ணினே! என் னோட அம்மா, அப்பாவை கொன்னுட்டுயேடா! உன் னால அனாதை ஆயிட்டேன்டா! உனக்கு என்னடா துரோ கம் செஞ்சேன்? இப்படி என் வாழ்வை நாசமாக்கிட்டியே! நம்ப வச்சுக் கழுத்தறுத்திட்டியே!'' என கதறி அவன் கன்னங்களில் மாறி மாறி அறைந்தாள்.

கண்களில் கண்ணீர் வழிய நிவாஸ் மௌனமாய் நின்று கொண்டிருந்தான்.

''என்ன? அத்தையும், மாமாவும் இறந்து விட்டார் களா? கண்ணம்மா! உன்னிடம் மன்னிப்பு கேட்கக் கூட எனக்கு தகுதியில்லை. நீ எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.''

கை ஓயும் வரை அடித்துத் தீர்த்து விட்டாள். அவள் அத்தை தான் ஓடி வந்து அவளைப் பற்றி இழுத்தாள்.

''அம்மு வா! மனிதத் தன்மையே இல்லாதவர்களிடம் நமக்கு என்ன பேச்சு?''

ஒய்ந்து சாய்ந்து அழுதவளைப் பார்த்துக் கொண்டே நின்றான். அவர்கள் உள்ளே சென்றுவிட அவளது மாமா தான் வெளியே வந்து ''சார் போங்க! என்னென்னவோ நடந்திடுச்சு! உங்க நிலைமை எனக்குப் புரியுது. அன்னிக்கு வீட்டிற்கு உங்களைத் தேடி வந்த பொழுது உடைந்த கதவும், அறுந்த சேலையும் விபரீதத்தை உணர்த்தி விட்டன. நடந்த எதற்கும் யாரும் பொறுப் பல்ல; எல்லாம் விதிப்படி நடக்கும். யாரும் யாருக்கும் இந்த சூழ்நிலையில் ஆறுதலோ, தேறுதலோ சொல்ல முடியாது. காலம் எல்லாவற்றையும் மாற்றும். தயவு செய்து சென்று விடுங்கள்.'' என, நிவாஸ் நகர்ந்து



எப்படியோ வீடு வந்து சேர்ந்தான். அவனை அம்மா சாப்பிடச் சொல்ல... பசியில்லை என மறுத்துவிட்டு ''அம்மா, நாம் வேறு எங்காவது சென்று விடலாம்'' என்றான்.

காலையில் வந்தபொழுது செய்தித்தாளில்... அதைப் பார்த்திருந்தார்.

வரிசையாக நாள் தவறாமல் செய்தித்தாள் வீட்டி னுள்ளே வீசப்பட்டிருந்தன. அவற்றை அடுக்கும் பொழுது இருபது நாட்களுக்கு முதல் நாள் பேப்பரில் ''திருமணம் நின்ற அதிர்ச்சியில் தாய் - தந்தை மரணம்'' என கொட்டை எழுத்துக்களில் போடப்பட்டிருந்ததை எடுத்து படித்துவிட்டு மறைத்து விட்டார்.

எனவே ஊரை விட்டுச் செல்லும் முடிவிற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. மகன் தன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்தாலும் அவன் செயலில் உயிர்ப்பு இல்லை என்பது நன்றாகவே தெரிந்தது. சரியாகச் சாப் பிடுவதில்லை உறங்குவதில்லை. வெளியில் அமைதி யாக இருந்தாலும் அவனுக்குள்ளும் மிகப் பெரிய போராட்டம் நடப்பதை அறிய முடிந்தது. தான் வேண்டு மானால் கல்யாணத்தை நிறுத்தி இருக்கலாம். ஆனால் அவன் மனதில் நிலை கொண்டு விட்ட அம்முவை நிரந் தரமாகப் பிரிக்கவோ, அழிக்கவோ முடியாது என்பதை காலம் கடந்து தான் புரிந்து கொண்டார். மகனை தன்னுடன் அழைத்துக் கொண்டு உலகத்தின் எந்த மூலைக்குப் போனாலும் அவன் விரும்பியவள் அவன் அருகிலேயே தான் இருந்தாள், அதாவது மனதிற்குள்ளே தான் இருந்தாள்; இருப்பாள் என்பது மிக தாமதமாக

நிச்சயமாயிற்று. தன் பிடிவாதத்தால் சாதித்தது என்ன? எனத் தோன்றியது.

எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவன் திரு மணத்திற்கு மட்டும் பிடி கொடுக்கவே இல்லை. மேலும் அரசாங்க தேர்வு எழுதி பதவி உயர்வு பெறுவதில் தான் ஆர்வம் காட்டினான். தன்னை மறக்க வேலையிலேயே ஆழ்ந்து போனான். ஆயிரம் தப்புகள் செய்திருந்தாலும் சின்னஞ்சிறுசுகள் நன்றாக வாழட்டும் என்ற பெருந் தன்மையோடு தான் விட்டுக் கொடுத்திருக்கலாமோ? எனத் தோன்றியது. பெருந்தன்மை இல்லாததால் உயிரிழப்பு ஏற்பட்டதும் மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. நாட்கள் வருடங்களாகி உருண்டோடி விட்டன. பத்து வருடத்திற்குப் பிறகு மகனின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து, ''நீ என்றைக்காவது அந்த பெண்ணை சந்தித்தால் இதை தயவு செய்து படிக்கச் சொல்'' எனக் கூறிவிட்டு மகனின் மடியிலேயே உயிர் விட்டார்.

ரேகாவும் நிறைய மாறிப் போயிருந்தாள். வாழ்க்கை அடித்த அடி அவள் மென்மை தன்மையை நீக்கி கடினத் தன்மை நிறுவி விட்டிருந்தது. விட்ட படிப்பை தொடர்ந் தாள். எண்களுடன் விளையாட கற்றுக் கொண்டாள். ஆடிட்டர் ஆனாள். அத்தையும், மாமாவும் மகனுடன் அமெரிக்காவில் செட்டிலாக அவளையும் அழைத்ததை மறுத்துவிட்டு தன் அன்புக்குரிய தோழியுடன் தனி வீடெடுத்து தங்கிக் கொண்டாள். முதலில் நித்யாவுடன் கூட அவள் இயல்பாய் பழகவில்லை. தன்னை விட ஏழெட்டு வருடங்கள் சிறியவளாய் இருந்தாலும் அவள்



பொறுமையும், அறிவும் ரேகாவை வியக்க வைத்தன. அவளுடன் பழக ஆரம்பித்த பிறகு தான் அவளுடைய குணநலன் பிடிபட்டு நெருக்கமானாள். பக்கத்து வீட்டில் இருந்தவள் பாசத்துக்குரியவள் ஆனாள்.

தன் மடியில் சாய்ந்து அழுதவளை 'மனம் விட்டு அழட்டும்' என பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் நித்யா. ரேகாவின் 'தவறுகளைப் பார்த்தால் தண்டிக்கும் வெறிக்கு' காரணம் இன்று தெளிவாய் புரிந்தது. 'இது ஏதோ மனபாதிப்பின் வெளிப்பாடு' என்று வினய் சொன்னது எத்தனை சரியாய் இருக்கிறது என எண்ணிக் கொண்டாள்.

'பாவம் ரேகா! விதி இப்படி அவளை தண்டித்திருக்க வேண்டாம். அப்படி அவளை தூக்கி எறிந்து விட்டு செல்ல ஏதோ ஒரு காரணம் கண்டிப்பாய் இருந்திருக்க வேண்டும். அது நியாயமான காரணமாக இருந்தால் அதை எடுத்துச் சொல்லி அவள் மனக்காயத்தை ஆற்ற முயலலாம்!

''ரேகா! ஒன்றை மட்டும் சொல்! நிவாஸ் உன்னிடம் பழகிய பொழுது பொய், போலித்தனம், ஏமாற்று ஏதாவது தெரிந்ததா?''

''இல்லை! நிச்சயம் இல்லை நித்யா! என்னை பார்த்த அன்றே என் விரலில் மோதிரம் போட்டு நிச்சயம் செய்து விட்டார்.''

''திருமணத்திற்கு முதல் நாள் நிகழ்ச்சியின் பொழு தாவது ஏதாவது மாற்றம் இருந்ததா?''

''கண்டிப்பாக இல்லை! இரு; சரியாக அவர் சாப்பிட வில்லை. சற்று நேரத்திற்குப் பிறகு என்னைப் பார்க்க

வந்தார். எல்லாரும் கேலி பேசவே கண்ணால் விடை பெற்று சென்று விட்டார்.''

''நீயே இப்படிச் சொல்கிறாய்! அப்படியிருக்க அவர் தப்பு செய்திருக்க முடியுமா? கொஞ்சம் யோசித்துப் பார்!''

''எதுவாக இருந்தாலும் என்னுடன் பேசியிருக்க லாமே? என்ன சூழ்நிலை என்று விளக்கியிருக்கலாமே? என் அம்மா, அப்பாவிடம் திருமணத்தை நிறுத்துவ தற்கான காரணத்தையாவது சொல்லியிருக்கலாமே?''

''செய்திருக்கலாம். ஆனால் அவர் பேச்சு ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்குமா? அம்மாவும், அப்பாவும் அதை ஒத்துக்கொள்ள முயன்றிருப்பார்களா? அவர்கள் அதிர்ச்சி தாங்காமல் இறந்தது மிகவும் வருத்தத்திற்குரிய துரதிர்ஷ்டமான விஷயம்தான். ஏன் நீயே தான் அவர் கருத்தை ஒத்துக் கொண்டிருப்பாயா? சில நாட்களுக்குப் பிறகு அவரை பார்த்த பொழுது சட்டையை உலுக்கி அறைந்தாயே... அப்போது அவர் உன் மீது கோபப்பட் டாரா?''

''ம்ஹூம்! அவர் கண்ணீர் வழிய நீ என்ன வேண்டு மானாலும் செய்துகொள் என்பது போலத் தான் இருந் தார்.''

''அப்போ ஏதோ ஒன்று நீ அறியா விஷயம் ஆனால் தெரிந்து கொண்டிருக்க வேண்டிய முக்கியமானது இருக் கிறது. அவரைப் பார்த்ததும் இனி சண்டை போடாதே! இருவரும் பேசி உங்களுக்கிடையில் இருக்கும் பிரச் சனையின் மர்ம முடிச்சை அவிழுங்கள்!''



''மாட்டேன்; அந்த ஆள் முகத்தில் விழிக்க மாட் டேன்.''

''இப்படி ஈகோ பார்க்காதே ரேகா! வாழ்க்கை வாழ்வ தற்கே! அவர் மேல் அன்பில்லா விட்டால் நீ இன் னொருவரை மணந்து இருப்பாய். அவரும் இன்னும் யாரையும் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார். அன்றைக்கு 'அம்மு, அம்மு' என்று கூப்பிட்ட பொழுது அந்தக் குரலில் எவ்வளவு அன்பு இருந்தது தெரியுமா?''

''எத்தனை லிட்டர் வழிந்ததாம்?'' என அவள் கேலி பேசிய பொழுதே அவளை புரிந்து கொண்டாள் நித்யா.

''அம்மு குட்டி இப்ப தான் சமத்துக்குட்டி! உண்மை யிலேயே உனக்கு மிக இளகிய மனம். அதை மறைக்க கடுமை என்ற வேஷம் போடுகிறாய். அன்றைக்கு அந்தப் பையன் தப்பு செய்யவில்லை என்று தெரிந்ததும் அவனிடம் நேரில் போய் தவறுக்கு மன்னிப்பு கேட்ட துடன் அவன் படிப்பு செலவு முழுவதையும் நீயே ஏற்றுக் கொண்டாய் அல்லவா? அதனால் கடுமையாக இருப்பது போல் என்னிடம் காட்டிக் கொள்ள நினைக் காதே! இந்த பிகுவை எல்லாம் முதலில் கழட்டிப் போடு! புதிசா பூத்திட்ட பூ நீ! என எண்ணிக்கொள்.''

''ஏதேது ஆர்க்கிடெக் வார்த்தையாலே கட்டடம் கட்டி விடுவீர்கள் போலிருக்கிறது! நான் அத்தையுடன் பேசு கிறேன்.'' என்றபொழுது செல் அழைத்தது. எடுத் தவள்.

''அத்தை தான்!'' எனக் கூறிவிட்டு ஆன் செய்தாள்.

''உங்களுக்கு நூறு ஆயுசு!'' என்றவாறே பேசத் தொடங்கினாள்.

''மனசில் வன்மம் வளர்ப்பதால் எதை சாதிக்கப் போகி றோம்? தங்க சிம்மாசனமே செஞ்சு வச்சிருந்தாலும் போகும்பொழுது கொண்டு போகப் போறதில்லே! நீங்க இரண்டு பேருமே ஒருத்தருக்காக ஒருத்தர் பிறந்தவங் களோன்னு எனக்குத் தோணுது. கோபத்தை விட்டுடு. இனி என்ன செய்யறதுன்னு நல்லா யோசிச்சு முடிவெடு. முடிவு சுபமாய் இருந்தால் உன் அத்தை கடவுளுக்கு ஆயிரம் கோடி நன்றிகள் சொல்வேன்'' என்றார் அவள் அமெரிக்க அத்தை.



# 16

தீப்தி நித்யாவை பார்க்க வந்திருந்தாள், சாரா அன் றைக்கு சற்று தாமதமாக வர, ''என்ன சாரா? ஏன் லேட்? உன்னிடம் தான் செக் இருக்கிறது என்று நித்யா கூறி விட்டாள். அதனால்தான் காத்திருக்க வேண்டியதாயிற்று!''

''எதற்காக இப்ப 'செக்' வேண்டும்?''

''என்னுடைய பேமெண்ட்டிற்கு தான்.''

''இப்பொழுது அப்படி என்ன வேலை செய்தாய் தீப்தி?''

''நித்யா சொல்லி தேவன் சாருக்கு ஒரு ஆலோசனை சொன்னேன்.''

''அப்படியானால் அவரிடம் தானே நீ கேட்க வேண்டும்!''



''அவர் தருவது வேறு! நித்யா சொன்னதால் அதற் கான கன்சல்டிங் பீஸ் வேறு அவள் தான் தர வேண்டும்.''

''நீ சாப்பாட்டு வாசனைக்கே காசு கேட்பவள்! ஏன் இப்படி பணம், பணம் என்று அலைகிறாய்?'' செக்கை கையில் வாங்கிக் கொண்டே, ''பணம் இல்லாவிட்டால் உலகத்தில் எதுவும் கிடையாதம்மா! பணமும், செல்வாக் கும் இருந்தால் உலகத்தில் எதையும் வாங்கலாம்; என்ன மும் செய்யலாம்; சட்டத்தைக் கூட வளைக்கலாம்.''

''அதுதான் உன்னைப் பார்த்தாலே தெரிகிறதே! ஆனால் எல்லாரையும் பணத்தால் வாங்க முடியாது. எத்தனையோ நேர்மையான வக்கீல்களும், நீதிபதிகளும் இருக்கிறார்கள். அவர்களுக்கும், சட்டத்திற்கும் தப்பிய வர்கள் கடவுள் வழங்கும் தீர்ப்பில் இருந்து தப்பிக்க முடியாது.

''கடவுள் தீர்ப்பு? மனித தீர்ப்பு கிடைக்கவே பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இதில் கடவுள் தீர்ப்பு என்பது கையாலாகாதவன் சொல்லும் சமா ளிப்பு!''

''சரி! நீ போய் வா! எனக்கும் வேலையிருக்கிறது. இன்னும் கொஞ்சம் நேரம் பேசிவிட்டு என்னிடமே கன்சல்ட்டிங் ஃபீஸ் கேட்டாலும் கேட்பாய்.''

''இப்ப தான் சரியாக என்னைப் புரிந்து கொண்டாய். நான் வருகிறேன்'' என அவள் சிரித்துக் கொண்டே கிளம்ப சந்துருவிடம் சாரா சொன்னாள். ''இவளை வைத்து இருப்பது யானைக்கட்டி தீனி போடுவது மாதிரி! இவளை எங்கிருந்து பிடித்தாள் நித்யா?''

''இவள் பரத்தின் ஸ்கூல்மேட்! அவன் சொன்னதால் தான் இவளை வைத்துக் கொண்டாள்.''

''பரத் எளிமையானவன். சட்டென்று யாரையும் நம்பி விடுவான். எனக்கென்னவோ தீப்தி நம் அலை வரிசைக்கு ஒத்து வரமாட்டாள் என்றே தோன்றுகிறது.''

''நீ எங்களோடு இணைந்து வரவில்லையா? நமக்குள் நிறைய வேறுபாடுகள்; அப்படியிருந்தும் நாம் ஒன்றவில்லையா?''

''அப்படியில்லை சந்துரு! நம் எண்ணங்கள் நல்லவைகளாக ஒன்றாக இருக்கின்றன. அதனால் தான் இணைந்தோம். தீப்தி அந்த மாதிரி இல்லை. அவள் எண்ணமும், சிந்தனையும் வேறு. எப்படியாவது பெரும் பணக்காரி ஆக வேண்டும்! அது குறுக்கு வழியாக இருந்தால் கூட பரவாயில்லை என்று நினைக்கிறாள்.''

''சரி கவலைப்படாதே! அக்கா எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள்.''

''இப்படி எல்லா சுமையையும் அவள் தோள் மேலே சுமத்தக் கூடாது. சந்துரு நாமும் இதில் பங்குதாரர்கள். எனவே பொறுப்பை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.''

''ஓகே! ஓகே! நீ என்ன சொல்கிறாயோ? அதன் படியே செய்கிறேன் போதுமா?''

''சூரிய ஒளி மூலம் கட்டடத்தில் மின்சார தயாரிப்பிற்கு நித்யா கேட்டிருந்தவற்றை வாங்கி விட்டாயா?''

''அதற்குத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன்.''



அவன் புறப்பட்டுச் செல்ல,

நித்யா வினய்யிடம் நிவாஸைப் பற்றி விசாரிக்க வேண்டும் என எண்ணிக் கொண்டே சைட்டில் வேலைகளை செய்து கொண்டிருந்தாள்.

அப்போது அவளுக்கு ஒரு போன் வந்தது.

அருகில் இருந்தவரிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

ப்ரியா தான் பேசினாள்; ''ஏன் குரல் ஒரு மாதிரி இருந்தது? அவசரமாக எதற்கு வரச் சொன்னாள்? என்ன பிரச்சனை அவளுக்கு? பரத்திற்கு தெரியுமா? எதற்கும் அவனுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்பலாம்'' என செய்தியை அனுப்பிவிட்டுச் சென்றாள்.

அந்த நேரம் ப்ரியாவுடன் தான் பரத் பேசிக் கொண்டிருந்தான்.

''ப்ரியா, நித்யா செய்தி அனுப்பியிருக்கிறாள். நீ அவசரமாக அவளைப் பார்க்க வேண்டும் என்று போன் செய்தாயா?''

''எங்கே? நான் உங்களுடன் தானே இருக்கிறேன்! தப்பாகப் படுகிறது. இருங்கள்!'' என்று உடன் வினய்க்கு தொடர்பு கொண்டு விஷயம் சொன்னாள்.

''ப்ரியா, நீ எதைப் பார்த்தாலும் பயப்படுகிறாய், அப்புறம் சந்தேகமும் படுகிறாய்.''

''என் அனுபவம் அப்படி.''

''அதை நீ மறந்துவிடு. அதிலிருந்து வெளியே வா! கடந்த காலத்தைப் பற்றி யோசிக்காதே!''

''நான் இப்பொழுதே பாதி தூரம் கடந்து விட்டேன். ஆனாலும் மறப்பது சுலபமாயில்லை. பாதி இராத்திரி யில் தூக்கி போட்டுக் கொண்டு விழிப்பு வந்து விடுகிறது. எத்தனை நாள் பயத்தில் தூக்கம் இல்லாமல் கழித்தேன் தெரியுமா?''

''வேண்டாம்! இனி அதைப் பற்றி நீ பேசவோ நினைக்கவோ வேண்டாம்.''

வினய் நித்யா அலைபேசிக்குத் தொடர்பு கொள்ள முயன்று முடியாததால் காரை எடுத்துக் கொண்டு விரைந்தான். எப்படியும் சைட்டிலிருந்து வெகு தொலை விற்கு அவள் சென்றிருக்க மாட்டாள் என கணிப்புடனே சென்றான். சற்று ஒதுக்குப்புறமான இடத்தில் யாரோ ஓடி வருவது தெரிந்தது. ''யார் அது?'' நித்யா தான். காரை நிறுத்திவிட்டு அவன் அருகில் செல்லும் பொழுது ஒருவன் அவளை கத்தியால் குத்திவிட்டு ஓடினான். ஓடிச் சென்று அவளை தாங்கிப் பிடித்தான். கத்திக்குத்து முழங்கைக்கு சற்று மேலே பட்டிருந்தது. இரத்தம் வழிய சுடிதார் துப்பட்டாவினால் கட்டி அவளை அள்ளிச் சென்று காரில் ஏற்றினான். விரைந்து மருத்துவமனை யில் சேர்க்க...

மிக ஆழமான காயமாக இல்லாததால் சீக்கிரமே கண் விழித்தாள்.

''நீ சரியான முட்டாள் தான்! யார் கூப்பிட்டாலும் ஓடி விடுவாயா? கொஞ்சம் கூட யோசிக்க மாட்டாயா? உன்னைச் சுற்றி எவ்வளவு ஆபத்துகள் காத்திருக்கின்றன. அதையெல்லாம் கொஞ்சம் கூட சட்டை செய்ய மாட்



டாயா? சேணம் கட்டிய குதிரை மாதிரி ஒரே திசையில் தான் பயணிப்பாயா? பயணம் இலக்கை நோக்கி இருந்தாலும் நாலாபுறமும் என்ன நடக்கிறது என்ற கவனம் வேண்டும்.'' என அவன் அதட்டிக் கொண்டிருக் கும்பொழுது பரத்தும், ப்ரியாவும் வந்தனர். பரத் பதறிப் போய் விட்டான்.

''ப்ரியா பயப்பட்டது சரியாகிப் போயிற்று! யார் இப்படிச் செய்தார்கள்?''

''ஆளைப் பிடித்தாகி விட்டது. சுமனின் ஆட்கள் தான் இந்த வேலையைச் செய்திருக்கிறார்கள்!''

''எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?''

''ப்ரியா பேரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள் என்ற துமே அவன் வேலையாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன். ப்ரியாவையும், நித்யாவையும் தொடர்பு படுத்தி யோசிக்க மற்ற எதிரிகளால் முடியாது அல் லவா? மேலும் நித்யா பாதுகாப்பிற்காக நான் ஏற்பாடு செய்திருந்தவர்கள் சற்று கவனக்குறைவாக இருந்த நேரத்தில் இது நடந்து விட்டது.''

''என்ன?''

''ஆமாம்; அவள் மேல் வண்டியை மோத வந்த விஷயம் தெரிந்ததுமே அதற்கு ஏற்பாடு செய்து விட் டேன்.''

''ஓகோ! அதுதான் ஒரு ஆள் எப்போதும் என்னையே சுற்றிக் கொண்டிருந்தாரா?''

''ஏன் அண்ணா? நீ சுத்த மோசம்! இதற்கெல்லாமா அஸிஸ்டென்ட் வைத்து சுத்தச் செய்வாய்? நீ செய்ய வேண்டிய வேலையை அவர் செய்யலாமா?''

''ஐயய்யோ! உன் அண்ணன் என் பின்னால் சுற்ற வேண்டாம் ப்ரியா! அவர் ஏற்கனவே எனக்கு எக்கச்சக்க பெயர் வைத்திருக்கிறார்! இன்னும் கூடவே இருந்தால் ஆயிரம் நாமாவளி அர்ச்சனை தான்.''

''என்ன பெயர்? ரொம்ப இனிமையாக இருக்குமோ?''

''பூதக்கணத்தலைவி, முட்டாள், சேணம் கட்டிய குதிரை... இப்படி... பல... பல.''

''இனி சொல்லப் போகும் பெயர்களையும் சொல்லட்டுமா?'' என அவன் இழுக்க...

''ஆகா! நோயாளியை நோகடிக்காதீர்கள்'' என பரத் கூவினான்.

''யார் நோயாளி? உங்க தோழி புத்துணர்வோடு இருக்கிறார்! எங்க அண்ணன் தான் கவலையில் நோயாளி மாதிரி இருக்கிறார்.''

உண்மைதான்; வினய் கண்களில் கவலை தெரிந்தது. அதை நித்யா உட்பட அனைவருமே உணர்ந்தனர்.

''பரத்! கட்டட வேலையைப் பார்க்க நீ போகிறாயா? சந்துரு சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிக்கும் பேட்டரி வாங்க போயிருக்கிறான்.''

''இப்பொழுது அதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டுமா?'' என வினய் கடிந்து கொண்டான்.



''ஆமாம், ஆமாம்! உன் கவலையையும் சேர்த்துப்பட வினய் காத்திருக்கிறார்.''

''பரத்! நீங்க என்ன இப்படி அடிக்கடி கட்சி மாறுகிறீர்கள்?''

''அப்படி இல்லை ப்ரியா!''

''சும்மா அப்படித்தான் சொல்வான். அவன் எப்போதுமே நித்யா கட்சி தான்.''

''சரி, சரி! நான் சைட்டிற்குச் செல்கிறேன். உன்னுடன் மருத்துவமனையில் இருக்க இரவிற்கு ரேகா வருவாள்.''

''அப்படியே ப்ரியாவையும் வீட்டில் இறக்கி விட்டு விடு பரத்.''

''எவ்வளவு முன் ஜாக்கிரதையாய் அண்ணன் கழட்டி விடுகிறான் பார்!''

''ஏதோ புரிந்தால் சரி'' அவர்கள் விடை பெற்றனர்.

''நித்யா நான் ஒன்று கேட்கட்டுமா?''

''என்ன?'' என்பது போல் பார்த்தான்.

''இத்தனை ரிஸ்க் எடுத்து நீ தொழில் செய்ய வேண்டுமா? எல்லாப் பெண்களையும் போல ஏதோ வேலை பார்த்தோம் வாழ்க்கையை அனுபவித்தோம் என்று இல்லாமல் ஏறக்குறைய உன் தொழிலையே முழு நேர வாழ்க்கையாய் எப்படி உன்னால் வாழ முடிகிறது?''

''உங்களால் முடிவது என்னால் செய்ய முடியாதா? நான் ஆண் - பெண் போட்டியாக இதைச் சொல்லவில்லை. நீங்களும் அப்படித்தான் இருக்கிறீர்கள். ஆனால் என்னை மட்டும் கேள்வி கேட்கிறீர்கள்? நீங்கள்

தலைமுறை தலைமுறையாக தொழில் செய்து வருகிறீர்கள். ஆனால் நான் முதல் தலைமுறை பெண்! அதனால் கொஞ்சம் அதிகமாய் என்னை நிரூபிக்க போராட வேண்டியிருக்கிறது. அவ்வளவு தான்! இன்னும் நிறைய பேர் நம் நாட்டில் தொழில் செய்ய முன் வர வேண்டும். பக்கத்து மாநிலம் குஜராத்தில் மக்கள் தொகை 5% (சதவீதம்) தான். ஆனால் அவர்களுடைய ஏற்றுமதி இந்திய ஏற்றுமதியில் 20 சதவீதமாகும். நாமும் அப்படி வளர வேண்டாமா? யாரோ செய்யட்டும்; நமக்கென்ன? என்று எதிலும் இருந்து விடக்கூடாது.''

''இந்த சவாலான குணம் தான் மிகவும் கவருகிறது; நான் விண்ணப்பிக்கட்டுமா?''

''என்னிடம் வேலை எதுவும் காலியில்லை சாரே!''

''ஆனால்...'' அவன் ஏதோ சொல்வதற்குள்,

''ஹேய்! என்னாச்சு?'' என ரேகா நுழைந்தாள். அவள் கட்டிலுக்கு மிக அருகே நாற்காலியை போட்டுக் கொண்டு அமர்ந்து பேசிக் கொண்டிருந்த வினயைப் பார்த்ததும்,

''அடடா! நான் கொஞ்சம் தாமதமாக வந்திருக்கலாம் போலிருக்கிறது!'' என்றாள் புன்னகையுடன்.

''நிஜமாய் இது கனவில்லையே? இது நித்தி, நான் வினய், நீங்கள்... நீங்கள்... ரேகா தானே?'' என்ற பொழுது ''டாக்டர் உங்களை வரச் சொன்னார் சார்?'' என வார்டுபாய் வந்து கூப்பிட அவன் நகர்ந் தான்.



''நித்யா எப்படி இருக்கிறது வலி? ரொம்ப காயமில் லையே? அம்மாவிற்குத் தெரிந்தால் மிகவும் வருத்தப் படுவார்கள்.''

''ரேகா! நீ எதையும் சொல்லி விடாதே! ரொம்பவும் பயந்து கவலைப்படுவார்கள்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்க,

''பல நூறு நிறுவனங்கள் இருக்கலாம். அவர்கள் நாம் தயாரித்த பொருளையே தயாரிக்கலாம். இருந்தாலும் மற்றவர்களிடமிருந்து நாம் எங்ஙனம் தனித்து தெரிகிறோம் என்பதில்தான் வெற்றியே இருக்கிறது'' என வினய் கூறுவது கேட்டது.

''உண்மைதான் வினய்! உங்கள் பட்டு மற்றவர் களிடமிருந்து வித்தியாசப் 'பட்டு' தான் இருக்கிறது. அதுவும் 'நித்யரஞ்சனி பட்டு' எங்கள் குடும்பத்தை மிகவும் கவர்ந்து விட்டது!''

''உங்களையுமா?''

காதில் விழுந்த சொற்களால் அவள் முகம் சிவந்தது.

வினய் பேசிக் கொண்டிருந்தவரிடம் விடைபெற்று மற்றொருவருடன் அறைக்குள் வந்தான்.

வந்தது நிவாஸ்!

''வாங்க சார்!''

''என்னம்மா! காயத்தின் வலி குறைந்து இருக்கிறதா?' என்றவர் திரும்பி ரேகாவிடம் ''அம்மு நீதான் இரவு நித்யாவுடன் இருக்கப் போகிறாயா? அப்படி என்றால் இவற்றைப்படி. பொழுதும் போகும். உன் கேள்விகளுக்கு

விடையும் கிடைக்கும். என் தப்பில் இருந்த கடமையும் புரியும்.''

தன் அம்மாவின் டைரிகளையும், கடிதத்தையும் கொடுத்துவிட்டு புறப்பட்டான். நிவாஸை வினய்தான் அலைபேசியில் வரச் சொல்லி தகவல் கொடுத்தான். என்னென்னவோ பேச வேண்டுமென்றுதான் வந்தான். ஆனால் ஒன்றையுமே பேச முடியவில்லை. கவரில் இருந்த கடிதத்தைப் பார்த்தாள். பிரிக்கப்படாமல் இருந்த கடிதம் நிறம் மங்கியிருந்தது. 'அதை எழுதி வெகுநாள் ஆயிருக்கும் போல!' என எண்ணியவாறே உறையைப் பிரித்தாள். வெளிப்புறம் எதுவும் எழுதியிராததால் யார் யாருக்கு எழுதியது எனத் தெரியாமல் தான் கிழித்தாள்.

*''அம்மு!*

*என்னை மன்னித்து விடம்மா! இன்றைய உன் நிலைமைக்கு நான்தான் காரணம். என் மகன் மேல் எந்தத் தப்புமே இல்லை. அவன் எதைச் செய்தானோ, அது என் விருப்பத்திற்காக செய்யப் பட்டது. வாழ்க்கையில் அன்பையே அனுபவிக் காத அபாக்கியவதி விதி துரத்தச் செய்த மாபாதகம் தான் அது. அன்று நான் ஜெயித்ததாக எண்ணி னேன். ஆனால் உண்மையில் ஜெயித்தது நீதான் அம்மா. யாரையோ தண்டிப்பதாக என் மகனையே தண்டித்து விட்டேன். பேரனோ, பேத்தியோ கொஞ்சி விளையாட முடியாத ஏக்கத்துடனேயே இவ்வுலகை விட்டு செல்கிறேன். என்றைக்கு என் மகன் உன்னை விட்டுப் பிரிந்தானோ... அன்றி லிருந்தே அவன் ஜடமாகி விட்டான். அவனுக்கு*



*மன்னிப்பெனும் உயிர் கொடு தாயே! உன் பெற்றோர் இறப்பிற்காகவும் என்னை மன்னித்து விடம்மா!*

*இப்படிக்கு*
*எல்லார் அன்பையும் இழந்த*
*அபாக்கியவதி''*

கடிதம் எழுதப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகி இருந்தது. அதை மீண்டும் மீண்டும் படித்தாள். பின் நித்யாவிடம் படிக்க கொடுத்துவிட்டு நிவாஸ் தாயின் டைரிகளை படிக்கத் துவங்கினாள். படிக்க, படிக்க அவன் தாய்ப்பட்ட துன்பங்கள் கண்ணீரை வரவழைத் தது; சில படபடப்பையும், சில வேதனையையும் ஏற்படுத்தியது. மாத்திரையின் விளைவால் நித்யா உறங்கி விட... அவளை தொந்தரவு செய்யாமல் விளக்கை அணைத்து விட்டு வராண்டா வெளிச்சத்தில் தொடர்ந்து படித்தாள். விடியும் வரை படித்துக் கொண்டே இருந் தாள்.

# 17

**கா**லையில் கண் விழித்த நித்யாவிடம் எல்லா விஷ யங்களையும் ரேகா சொன்னாள்.

''நீ சொன்னது சரியாகி விட்டது. அவரும் மிகவும் கஷ்டப்பட்டு விட்டார். இனியும் இந்த துன்பம் வேண்டாம்.''

''நான் வினுவிடம் பேசுகிறேன். நீயும் நிவாஸும் மனம் விட்டு பேசுங்கள். எல்லாம் சரியாய் போகும்.''

அலைபேசி ஒலிக்க,

''வினு தான்!'' என்றவாறே எடுத்தாள்.

''குட்மார்னிங். நிவாஸை வரச் சொல்லுங்கள். ரேகா அவரைப் பார்க்க வேண்டுமாம்.''

''நீ எப்படி இருக்கிறாய்? அதைச் சொல் முதலில்! ஏதுடா ஒரு மனுஷன் காலை தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு மெனக்கெட்டு போன் செய்கிறானே என்ற அக்கறை இருக்கிறதா?''

''நன்றாக இருக்கிறேன். இப்பொழுதே வேலையைப் பார்க்க கிளம்பி விடலாம்.''

''ஹேய்! அவசரக் குடுக்கை! அப்படி ஏதும் செய்து வைத்து விடாதே. டாக்டர் ஒரு வாரம் ஓய்வு எடுக்கச் சொல்லி இருக்கிறார்.''

''அதெல்லாம் என்னால் முடியாது. நான் என்ன வேலை செய்யப் போகிறேன்? சும்மா மேற்பார்வையும், ஆலோசனையும் தானே! அதை செய்துகொண்டே ஓய்வு எடுத்துக் கொள்கிறேன்.''

''சொன்னாலே கேட்க மாட்டாய்! பிடிவாதக்கார நண்டு. இரு நான் வருகிறேன். என்ன செய்வது என்று நேரில் யோசிக்கலாம்.''



அவன் போனை வைத்துவிட்டு மருத்துவமனைக்குக் கிளம்பினான்.

''என்னப்பா! இவ்வளவு சீக்கிரம் எங்கே கிளம்புகிறாய்?''

''நித்தியை பார்க்கத்தான் அம்மா!''

''ஆகா! என்ன? அந்த கையைப் பற்றிக் குலுக்கிப் பாராட்ட வேண்டும்.''

''வெறுங்கையுடன் பாராட்டப் போகிறீர்கள்?''

''பரிசுப் பொருளுடன் தான் பாராட்டப் போகிறேன்.''

''இது தான் என் அம்மா!'' என்றவாறு கிளம்பினான்.

நிவாஸும், அவனும் ஒன்றாக உள்ளே சென்றார்கள்.

ஆனால் படிக்கட்டில் ரேகா இறங்கி வருவதைப் பார்த்ததும்,

''நிவாஸ் கீழே கேண்ட்டீன் இருக்கிறது. அதில் நீங்கள் இருவரும் நிதானமாக காபி குடித்துவிட்டு வாருங்கள்'' என்றான் வினய். ''ரேகா'' எனக் கூப்பிட, அருகே வந்தாள்.

இருவரும் இணைந்து கேண்ட்டீனுக்குச் சென்றனர்.

ஒரு சில வினாடிகள் மௌனமாய் கழிய, பின் இருவரும் ஒரே நேரத்தில் ''ஸாரி'' என்றனர்.

''நான் விளையாட்டுத்தனமாகப் பேசியது அத்தையின் மனதில் இவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று நினைக்கவில்லை.''

''கூடவே இருந்த நானே அம்மாவின் மன உணர்வுகளை புரிந்து கொள்ளவில்லை. அப்படியிருக்க உன்

மேல் எந்தத் தவறும் இல்லை. நான் அம்மாவைச் சரியாகப் புரிந்து கொண்டிருந்தால் இந்தப் பிரச்சனை ஏற்படாமல் ஆரம்பத்திலேயே தடுத்து இருக்கலாம். என் அத்தை, மாமா இறப்பிற்கு நானே காரணமாகி விட்டேன். அதற்கு மன்னிப்பே கிடையாது.''

''அதை விட்டு விடுங்கள். அப்பா நல்வாழ்வைப் பற்றி நிறைய கனவு கண்டார். அது நடக்காததால் ஏற்பட்ட அதிர்ச்சிதான் உயிரை பறித்து விட்டது. போனதைப் பற்றிப் பேசி பயன் என்ன? நாம் நன்றாக வாழ்ந்தாலே நம் பெற்றோர்களின் ஆன்மா சாந்தியடைந்து விடும்.''

''நன்றி அம்மு!''

சொன்னது மாதிரியே அடுத்த நாளே கைக்கட்டுடன் நித்யா வேலை நடக்கும் இடத்திற்குச் சென்று விட்டாள். ஆனால் ரேகா அவள் உடல்நலம் நன்றாக ஆன பிறகு தான் தங்கள் திருமணம் என்று பிடித்து சாதித்து விட்டாள். மிக எளிமையாக பரத், நித்யா, வினய், சந்துரு இவர்கள் துணையுடன் பதிவுத் திருமணம் நடை பெற்றது. ரேகா அவள் தந்தை அவர்களுக்காக வாங்கிக் கொடுத்த வீட்டை புதுப்பித்து அதில் குடி புகுந்தாள்.

நகைக்கடையில் ஓர் அழகான கைச்செயினை வாங்கிக் கொண்டு இராஜி வரும்பொழுது நித்யாவை பார்த்தார்.

''நித்யா! கைக்காயம் ஆறி விட்டதா?''

''சரியாகி விட்டதம்மா! வினு என்னை விட்டால் தானே? காயம் ஆறும் வரை கவனிப்பை விடவில்லை. நீங்கள் எங்கே அம்மா?''



அவருக்கு அவளிடம் விளையாடிப் பார்க்கும் ஆசை வந்தது. ''உனக்கொரு விஷயம் தெரியுமா நித்யா? என் மகன் திருமணத்திற்கு சம்மதித்து விட்டான். பெண் எல்லாம் பார்த்தாகி விட்டது. என் மருமகளுக்கு போட பிரேஸ்லெட் வாங்கிப் போகிறேன்.''

''யாரம்மா?'' என்ற போதே அவள் குரல் சற்று கம்மியது.

''என் பள்ளித் தோழியுடைய மகள்.''

''சரியம்மா! எனக்கு வேலை இருக்கிறது வருகிறேன்.'' என ஓடியவளைப் பார்த்து ''மாட்டிக் கொண்டாயா மருமகளே?'' எனச் சிரித்தாள்.

'திவ்வியமாய் மருமகள் கிடைத்து விட்டாள்' என மகிழ்ச்சியுடன் அவர் சென்ற பொழுது வீட்டில் தீப்தி அமர்ந்திருந்தாள். அவர்கள் நிலத்தை அபகரிக்க பணம் கேட்டு மிரட்டியவர்களின் மேல் வழக்குத் தொடுக்க ஏற்பாட்டுடன் வந்திருந்தாள்.

தேவன் வந்ததும், ''சார்! ஏற்கனவே, உங்களை மிரட்டி பணம் வாங்கியவர்களைப் பற்றி, நடந்ததை எழுதி பதிவு செய்து இருந்தோம் அல்லவா? அதை எவிடென்ஸாக காட்டி அவர்கள் மேல் இப்பொழுது வழக்குப் போடலாம். சூழ்நிலை கனிந்து வந்திருக்கிறது. நில அபகரிப்பு வழக்குகள் போட மக்கள் தைரியமாக வெளிவர ஆரம்பித்திருக்கின்றனர். அரசாங்க ஆதரவு இருப்பதால் தொந்தரவு எதுவும் இருக்காது. எனவே உடனடியாக வழக்கை பைல் செய்து விடலாம்.''

''சரி! ஏற்பாடு செய்யுங்கள்.''

வழக்கிற்கான ஏற்பாடுகளை முடித்துவிட்டு அமர்ந் திருந்த பொழுது சீருடைப் பணியாள் ஜூஸ் கொண்டு வந்து கொடுத்தான். ஜூஸை அருந்தியவாறே வீட்டை விழிகளால் எடைப் போட்டாள்.

'அடேங்கப்பா! வீடே இத்தனை பிரம்மாண்டமாய் இருந்தால்... அதுவும் வினய் எலிஜிபிள் பேச்சிலர்! கொஞ்சம் புத்திசாலித்தனமாய் திட்டமிட்டால்... எல் லாம் உள்ளங்கையில்.' அவள் கண்களில் தெரிந்த பள பளப்பை மாடி பால்கனியில் இருந்து வினய்கூட பார்த் தான்.

'எதற்கு இந்த ஆசைக்கனவு? இந்த வீட்டை யாரும் இவளுக்கு எழுதித் தர போவதில்லையே!'

ஏனோ இறங்கிப் போய் ஒரு 'ஹலோ' சொல்லக்கூட அவனுக்குத் தோன்றவில்லை. அவள் சென்ற அரை மணி நேரத்திற்குப் பிறகு இராஜி மேலே வந்தார்.

''நான் இன்றைக்கு என் மருமகளைப் பார்த்தேன்.''

''யாரை?''

''உனக்கு எத்தனை பேரை மணந்து கொள்ளும் யோசனை இருக்கிறது? இப்பொழுது ஒருத்தி வந்தாளே அவளும் ஓகேயா?''

''சரியான குசும்புக்கார அம்மா நீங்க!''

''எதற்கு வந்தாள்? நித்தி ஏதும் சொன்னாளா?''

''இல்லை! இவளாக அப்பாவைப் பார்க்க வந்திருக் கிறாள். நித்யா பற்றி சிறு பேச்சு கூட இவளிடம் காணோம்.''

''ஏன் வீட்டிற்கு எல்லாம் வர அனுமதிக்கிறீர்கள்? அலுவலகத்திற்கு வரச் சொல்லி பேசி அனுப்ப



வேண்டியதுதானே? நம் வீட்டில் என்றும் நல்ல எண்ண அலைகள் மட்டுமே பரவ வேண்டும்.''

''சரி! அதைவிடு! நான் சொல்ல வந்ததை மறந்து விட்டேன் பார்! இதோ பார் என் மருமகளுக்காக நான், கைச்செயின் வாங்கி வந்திருக்கிறேன்.''

கையில் கொண்டு வந்திருந்த கைச்செயினை எடுத்து அவனிடம் காட்டினார். எளிமையாய் மிக அழகாய் இருந்தது. நடுவில் சின்னதாய் ஒரு இரத்தினக்கல்.

''மிக நன்றாய் இருக்கிறது. ஆனால் இது பயன்படாது அம்மா! அவள் நகையே அணிவதில்லை. அவளுக்கு அது பிடிக்காதாம். நீங்கள் எத்தனை முறை அவளைப் பார்த்திருப்பீர்கள்? என்றாவது நகை அணிந்து வந்திருக் கிறாளா?''

''ஆமாம்; பொட்டு தங்கம் கூட இல்லாமல் ஜொலிக் கின்ற தேவதை! இப்ப இதை என்ன செய்வது?''

''நமக்கு உதவும் மனிதருக்கு பரிசாய் கொடுத்து விடுங்கள்.''

''நல்ல யோசனை தான்! ஆனால் என் மருமகளுக்கு என்ன கொடுப்பது?''

''உங்கள் அன்பையும், ஆசீர்வாதத்தையும் கொடுங் கள். அதுதான் விலை மதிப்பில்லாதது.''

தீப்தி வழக்கை பதிவு செய்து விட்டு பத்திரிகை களுக்கும் செய்தி கொடுத்து விட்டாள். அவள் அவ்வாறு செய்ததால் அந்தப் பிரபலமான ஆள் கொஞ்சம் ஆடிப் போய் விட்டார். ஏற்கனவே அவர் மேல் பல நில அபகரிப்பு, ஆக்கிரமிப்பு வழக்குகள் பதிவாகி இருந்தன.

இந்த சூழ்நிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தால் தான் அவ்வளவு தான் உணர்ந்தார். தான் வசமாக மாட்டிக் கொண்டதை தன் வக்கீல் மூலம் தெரிந்து கொண்டு வழக்கை கோர்ட்டுக்கு வெளியே சமாதானமாக பேசி முடித்துக் கொள்ள விரும்பினாள். நேரே தேவனை தொடர்பு கொண்டார்.

தேவன் யோசித்தார். வினய் ஏற்றுமதி விஷயமாக டெல்லி சென்றிருந்தான். அவன் வருவதற்கு இன்னும் ஒரு வாரம் ஆகும். நித்யாவிற்கு அவன் ஊருக்குச் சென்றது தெரியாது. அன்றைக்கு இராஜி அவனுக்கு பெண் பார்த்து விட்டதாகச் சொன்னதில் இருந்து மனதில் ஓர் ஏமாற்றம்; ஏக்கம். அவர் இயல்பாய் பழகி யதை தான் தவறாகப் புரிந்து கொண்டதாக எண்ணிக் கொண்டாள். இல்லையே! அவரது ஒவ்வொரு செயலும் உன் மேல் அன்பிருக்கிறது, ஆசையிருக்கிறது என்பதைத் தானே உணர்த்தின? என மற்றொரு புறம் மனம் கேள்வி கேட்க, அது ஆசை கொண்ட மனதின் கற்பனை! நீ அவரது கனவு கட்டடத்தை கட்டித் தரு பவள். அதனால் உன் மேல் அக்கறை காட்டி இருக் கலாம். அதற்கு மேல் உன் கனவை வளர்க்காதே! வேலையில் கவனம் வை. இலக்கை நோக்கி நட! என அறிவு உத்திரவிட தன் அலைபேசியைக் கூட ஸ்விட்ச் ஆஃப் செய்துவிட்டு வேலையில் மூழ்கிப் போனாள்.

எனவே பலமுறை அவளது அலைபேசிக்கு வினய் தொடர்பு கொள்ள முயன்றது முடியாமல் போயிற்று. தேவன் கட்டட வேலை நடந்த இடத்திற்கே வந்தார். அது பிரமிக்கத்தக்க அளவாய் வளர்ந்திருந்தது.



''நித்யா! பணம் மிரட்டி வாங்கிய ஆள் கோர்ட்டுக்கு வெளியே விஷயத்தை முடித்துக் கொள்ள முன் வந்திருக்கிறார். நீ என்னம்மா சொல்கிறாய்?''

''வழக்கு பதிவு செய்தாகி விட்டதா சார்?''

''உனக்கு விஷயமே தெரியாதா? தீப்தி சொல்லவில் லையா? அவள் உன் வக்கீல் தானம்மா?''

''வேலை பரபரப்பில் மறந்து இருப்பாள். வெளியில் முடித்துக் கொள்ள வாய்ப்பு கிடைப்பது நல்லது என்றே தோன்றுகிறது.''

''நானும் அப்படித்தான் முடிவு செய்து இருக்கிறேன். இன்றைக்கே எங்கள் வக்கீலுடன் சென்று விஷயத்தை முடித்துக் கொள்ள இருக்கிறேன்'' எனக் கூறி விட்டுச் சென்றார்.

சொன்னது போலவே அவர் செய்து கொடுத்த பணத்தை திரும்ப பெற்றுக் கொண்டார். பின் தீப்திக்கு போன் செய்து விஷயத்தைச் சொல்லி அதைப் பற்றிப் பேச அலுவலகத்திற்கு வரச் சொன்னார். தீப்திக்கு பெரிய ஏமாற்றமாகப் போய் விட்டது. அவள் நினைத் தது என்ன? நடந்தது என்ன?

''ரொம்ப நன்றி அம்மா! உன் ஆலோசனை தக்கப் பலன் தந்தது. எங்கள் பணம் திரும்பக் கிடைத்து விட்டது. அவர்கள் வாங்கிய பணம் முழுவதையும் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். எங்கள் வக்கீல் தெளிவாய் எழுதி வாங்கிக் கொண்டு விட்டார்.''

''பணத்திற்கு வட்டி போட்டு வாங்க வேண்டியது தானே சார்?''

''அவரே வட்டியுடன் தருவதாகத்தான் சொன்னார். ஆனால் நான்தான் அவரின் மோசமான வழியில் சம்பாதித்த வட்டிப் பணம் வேண்டாம் என்று மறுத்து விட்டேன். நீ வழக்கை வாபஸ் வாங்கி விடு. அப்புறம் இன்னொரு விஷயம்! இதோ உன்னுடைய பீஸ்; இத்துடன் ஓர் சிறிய பரிசும் இருக்கிறது. உன் உதவிக்கு மிக்க நன்றி.''

பீஸிற்கான செக்கைப் பார்த்தாள். தொகையும் அதிக மாக இருந்தது. அத்துடன் கூடுதலாக இரத்தினக்கல் பதித்த கைச்செயின் கூட. அவளுக்கு ஏமாற்றத்திலும் ஓர் மகிழ்ச்சிக் கீற்று!

அதை அணிந்து கொண்டு நித்யாவை பார்க்கச் சென்றாள். ''ஏன் தீப்தி வழக்கு பதிவு செய்ததை நீ சொல்ல வில்லை?'' என நேரடியாக கேட்டாள். 'இந்த பரத் ஏதாவது சொல்லிக் கொடுத்தானா? ஆனால் அவனுக்கு இதில் எல்லாம் அவ்வளவு வினை தெரியாதே? ஆனால் இந்த சாரா! எச்சரிக்கையாக இருக்க வேண்டியவள்.

அவள் ஏதும் போட்டுக் கொடுத்திருப்பாளா? இருக் கட்டுமே! இவளைச் சமாளிக்க தெரியா விட்டால் நான் என்ன வக்கீல்? என எண்ணியவாறே,

''எங்கே நித்யா? வேலையில் நான் ரொம்ப பிஸி. இங்கேயும் அங்கேயும் - சென்னை, மதுரை என கோர்ட் டுக்கு மாறி மாறி அலைந்து கொண்டிருக்கிறேன். ஏன் நீ செய்தித்தாளை பார்க்கவில்லையா? அதைப் பார்த்து தெரிந்து கொண்டிருப்பாய் என நினைத்தேன்.''

சாராவும் அப்பொழுது அங்கே தான் இருந்தாள். தீப்தி யின் பேச்சு அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை அவளது முகமே காட்டியது.



''நித்யா! இதோ பார்த்தாயா? கைச்செயின் நன்றாக இருக்கிறதா? வினய் அம்மா பரிசாகக் கொடுத்தார். அவர் என் அம்மாவின் பள்ளித் தோழியாம். இவ்வளவு வேலைகளுக்கிடையில் வினய்யை சந்திக்க வேறு நேரம் ஒதுக்க வேண்டியிருக்கிறது!'' என குருட்டாம் போக்கில் வாய்க்கு வந்த பொய்யால் அடிக்க... அதில் துரதிர்ஷ்ட வசமாய் மாங்காய்.... இல்லையில்லை... ஒரு நல்லப் பெண்ணின் மனம் கழண்டு விழுந்தது. வினய் டெல்லி சென்ற விஷயம் ஒருவருக்குமே தெரியாது. ஆனாலும் மூவரும் மூன்று விதமாய் அதைப் பற்றி வேறு விதமாய் எண்ணிக் கொண்டனர். 'எதற்கோ காய் நகர்த்துகிறாள்' என சாராவும்,

'தீப்தி தான் அவர் அம்மா சொன்ன மருமகளோ' என நித்யாவும், 'இப்படியே கதை பரப்பி எப்படி வளைக் கிறேன் பாருங்கள்' என தீப்தியும் எண்ணிக் கொண் டனர்.

பரத் நித்யாவிடம் ''இன்று மாலை நீ ப்ரீயா?''

''ஏன்? இன்னும் எவ்வளவு வேலைகள் முடிய வேண்டி இருக்கிறது! நீ எங்காவது செல்ல வேண்டியிருக் கிறதா?''

''சரி! அப்படியென்றால் நானும் போகவில்லை!''

''ஹேய்! என்னப்பா விஷயம்?''

''ப்ரியா டிசைனுக்குப் பரிசு கிடைத்திருக்கிறது. அதற்கு நமக்கு சின்ன ட்ரீட் தர விரும்புகிறாள். இப் பொழுது தான் அவள் தேறி வருகிறாள். அதனால் நாம்

போனால் சந்தோஷப்படுவாள். ஆனால் போய்விட்டுச் சீக்கிரம் வந்து விடலாம்.''

''ஒரு மணி நேரத்திற்கு மேல் என்னால் இருக்க முடியாது. சரியா?''

''ஏழு மணிக்கு தாஜிற்கு வரச் சொல்லியிருக்கிறாள். வீட்டிற்குப் போய் விட்டு வருகிறாயா? நான் வந்து பிக்கப் செய்து கொள்ளட்டுமா?''

''இல்லை. நான் ஸ்கூட்டியில் வந்து விடுகிறேன். நீ ப்ரியாவை நேரத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து விடு.''

பேபி பிங்க் நிறத்தில் மெல்லியதாய் ஜர்தோஸி வேலைப்பாடு செய்யப்பட்ட புடவையும் அதற்கு பொருத்தமான ப்ளவுஸும், காதில், கழுத்தில் செயற்கை முத்துமாய் நித்யா சரியான நேரத்திற்கு ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தாள்.

ஏற்கனவே ப்ரியாவும், பரத்தும் வந்து விட்டிருந்தனர் ரிசர்வ் செய்திருந்த டேபிளில் இருந்து ப்ரியா எழுந்து வந்தாள். ''வாழ்த்துக்கள்'' என மலர்க்கொத்தை அவனிடம் கொடுத்தாள் நித்யா.

''நன்றி'' இருவரும் நகர முற்பட்ட பொழுது...

அவர்கள் செல்லும் மேசைக்கு முன்னால் அமர்ந்திருந்த பெண், ''ஹேய்! அங்கே ஒருத்தன் உட்கார்ந்திருக்கிறான் பாரேன். அவன் தான் என் வாழ்க்கையில் விளையாடியவன். என்னை அவனுக்குத்தான் வற்புறுத்தி, மிரட்டி கல்யாணம் பண்ணி வைத்தார்கள். ஆனால் நான் கல்யாணம் முடிந்த அன்றே என் பாய்



பிரெண்ட்டை தான் விரும்புகிறேன். அவனை என்னால் மறக்க முடியாது எனச் சொல்லி விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். இப்போது கேஸ் குடும்ப நல கோர்ட்டில் இருக்கிறது. இவன் மட்டும் என்னை பெண் பார்க்க வராவிட்டால்... உங்க பெண் மட்டும் போதும் என்று ஓவர் பெருந்தன்மை காட்டுவதாய் சீன் போட்டிருக்கா விட்டால்... நான் இந்நேரம் அஸ்வினை திருமணம் செய்து ஹனிமூனிற்குப் போயிருப்பேன்.'' என பரத்தைக் காட்டிச் சொல்லி நக்கல் சிரிப்பு சிரிக்க ப்ரியா கொதித்துப் போனாள். விறுவிறுவென்று அவள் மேசைக்குச் சென்றாள்.

''உனக்கு இப்படிப் பேச வெட்கமாயில்லை? ஒருத்தனை பிடிக்கவில்லை என்றால் கல்யாணத்திற்கு முன்னரே சொல்வதற்கு என்ன? ஒரு நல்ல மனிதனின் வாழ்வில் விளையாடி விட்டு நக்கல் வேறா? சீ! எத்தனை சுயநலவாதி நீ! உன்னால் பாதிக்கப்பட்டவரை லேசாக நினைத்து விடாதே! உன்னை ஒன்றும் இல்லாமல் ஆக்க ஒரு நிமிடம் போதும்'' எனச் சீற, அதே நேரம் சீனுவும் வர அவள் கொஞ்சம் கதி கலங்கிப் போனாள். 'அண்ணன் எங்கே வந்தான்? நடந்த விஷயம் அவனுக்கு தெரிந்தால் அடித்தே கொன்று விடுவான். ஒரு மன்னிப்பைக் கேட்டு தப்பித்து விட வேண்டியது தான்.'

''ஸாரி மேடம்! ஸாரி பரத்'' என்றாள்.

''என்ன?'' என்று விசாரித்த சீனுவிடம் ''பரத் சாரைப் பார்த்தேன். நடந்ததற்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டேன். வேறு ஒன்றுமில்லை. வா போகலாம்'' என அவள்

கிளம்ப அவள் வார்த்தைகளில் காயம் பட்டுப் போயிருந்த பரத்தை, ''விடுங்க பரத்! உங்கள் அருமை அவளுக்குத் தெரியவில்லை. கற்பூர வாசனை எதற்கோ தெரியாதாம்!'' அவளையே பார்த்துக் கொண்டிருந்த நித்யா கேட்டாள்.

''ப்ரியா! நீ பரத்தைக் கல்யாணம் செய்து கொள் கிறாயா?''

''என்ன? நான்... நான்... எப்படி...?''

''ஏன் உனக்கென்ன? நீங்கள் இரண்டு பேருமே பாதிக்கப்பட்டவர்கள். ஒருவர் மேல் ஒருவர் அன்பும், மரியாதையும் வைத்திருப்பவர்கள். நீங்கள் இணைந்தால் ஆதர்ச தம்பதிகளாய் வாழ முடியும்'' அங்கு சில நிமிடங்கள் மௌனம் நிலவியது.

நித்யா மறுபடியும் பேசினாள். ''என்னடா பரத்திடம் ஒன்றுமே கேட்காமல் நான் இப்படி பேசுகிறேன் என யோசிக்கிறாயா? பரத்தைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். சிறு வயதில் இருந்து இணைந்து வளர்ந்திருக் கிறோம். அவன் உன்னிடம் பழகியது போல் வேறு எந்தப் பெண்ணிடமும் பழகியது இல்லை. இரு அவ னிடமே கேட்டு விடுகிறேன். பரத், ப்ரியாவை மணந்து கொள்ள உனக்கு சம்மதம் தானே?''

''எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் ப்ரியாவின் முழு சம்மதமும் வேண்டும் எனக்கு.''

''எல்லாம் சம்மதிப்பாள்'' எனக் குரல் கேட்டுத் திரும் பினர். வினய் நின்று கொண்டிருந்தான்.

''என்ன கொஞ்ச நாள் காத்திருக்க வேண்டும்! மனசு மாற அல்ல! கோர்ட் கேஸ் இருவருக்குமே முடிவதற்குத்



தான். இன்றைய ட்ரீட்டை பலமாகக் கொண்டாடிவிட வேண்டியது தான்'' என்றவாறே நித்யாவையே பார்த்துக் கொண்டிருந்தான். பேரர் உணவுடன் வந்தான்.

பேபி பிங்க் மென்மையாய் அவள் அழகுடன் ஒன்றியிருந்தது. ஆனால் அவளோ அவனை நிமிர்ந்தே பார்க்காமல் உணவில் கவனத்தை செலுத்திக் கொண் டிருந்தாள்.

''சாப்பாட்டு ராமி! திரும்பிப் பார்; உனக்குப் போட்டி யாக சாப்பிட பூத கணங்கள் வந்து கொண்டிருக்கின்றன'' என்றபோது கூட அவள் நிமிரவில்லை.

''ஹாய்! நித்யரஞ்சனி!'' என குரல் கேட்டுத் திரும்பி னாள்.

பூதகணத்திற்கு பதிலாக தீப்தி நின்று கொண்டிருந் தாள்.

## 18

அன்றைக்கு தீப்தி ஒரு க்ளைண்டை சந்திப்பதற் காகத் தான் ஹோட்டலுக்குச் சென்றாள். தற்செயலாய் வினய் அங்கே இருப்பதைப் பார்த்தாள். நேரே அருகே சென்று விட்டாள். நித்யா அவளிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு கை கழுவச் செல்ல வினய், ''தீப்தியிடம், ''மேடம் நீங்க யாரைப் பார்க்க வந்தீங்களோ, அவர்களை

பார்த்துவிட்டுக் கிளம்புங்கள். நாங்கள் கொஞ்சம் தனியாக பேச விரும்புகிறோம். இது சொந்த விஷயம்! நீங்கள் மறுக்கவோ, தப்பாக நினைக்கவோ மாட்டீர்கள் என நன்றாகத் தெரியும். நாகரீகமானவர்கள் சட்டெனப் புரிந்து கொள்வார்கள்'' மெதுவாய் அவளுக்கு மட்டும் கேட்கும்படி கூறினான். ஆனால் ப்ரியாவோ அவன் சொல்வது புரிந்து வெளிக்காட்டாமல் உள்ளுக்குள் நகைத்தாள்.

தீப்தி உடனே எழுந்து ''எனக்கு அவசர வேலையிருக்கிறது. நித்யாவிடம் சொல்லிவிட்டுக் கிளம்புகிறேன்'' - என அவளருகே சென்றாள்.

நித்யா கை கழுவிவிட்டு சற்று நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். தீப்தியிடம் வினய் ஏதோ குனிந்து சொல்வதைப் பார்த்தாள். எனவே இன்னும் நகராமல் நிற்க... தீப்தி அவளிடம் வந்தாள்.

''நித்யா வருகிறேன்! வீட்டிற்கு செல்கிறேன்; ஏன் தெரியுமா? போய் கிளம்பி வரவேண்டும். நானும் அவரும் அதான் வினயும் நைட் ஷோ போகிறோம். அவர் கூப்பிடும் பொழுது நான் எப்படி மறுக்க முடியும்? நீயே சொல்லு...'' நித்தி இயல்பாய் முகத்தை வைத்தவாறு ''சரிப்பா! போய் வா! ஹேவ் எ நைஸ் டைம்'' என்றாள்.

''பை'' எனக் கிளம்பினாள்.

திரும்பி வந்த நித்யா அமர வினய் நகர்ந்து இடம் கொடுத்தான். ஏதேதோ பேசியபடி ஐஸ்கிரீமை சுவைத்தனர். பரத்தும், ப்ரியாவும் தங்கள் எல்லாப் பிரச்சனைகளையும் மறந்து அந்த நிமிடத்தில் வாழ்வது போல் இனிய நேரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர்.



''கிளம்பலாமா?'' என்று வினய் கேட்டான்.

''ஆகா! நேரம் போனதே தெரியவில்லை'' என பரத் எழ,

''பரத்! நீ ப்ரியாவை அழைத்துச் சென்று வீட்டில் விட்டு விடுகிறாயா?''

''சரி! ஆனால் ஒரு மாற்றம்! முதலில் என் வீட்டிற்கு அழைத்துச் செல்லப் போகிறேன். பின் உங்கள் வீட்டில் கொண்டு வந்து விடுகிறேன்.''

''டபுள் ஓகே.''

''நானும் கிளம்புகிறேன்'' என்ற நித்யாவிடம் ''நீ எப்படி கிளம்புவாய்? உன் ஸ்கூட்டி சாவியை அவர்களிடம் கொடு; அவர்கள் செல்லட்டும்.''

'பின் நான் எப்படி செல்வது?' என எண்ணியவளுக்கு பதிலாக ''அதுதான் உன்னை அழைத்துச் செல்ல டிரைவர் நானிருக்கிறேனே!'' என்றான்.

ஒன்றும் சொல்ல முடியாமல் அவனுடன் நடந்தாள்.

காரைக் கிளப்பியவன் கார் கண்ணாடியை சரி செய்து அவளைப் பார்த்தான்.

''என்னாச்சு விளக்கெண்ணெய் குடித்த மாதிரி வருகிறாய்?''

''ஒன்றுமில்லை.''

''அது சரி! பதினைந்து நாட்களாக அலைபேசி ஸ்விட்ச் ஆஃபில் இருக்கிறது. வந்ததில் இருந்து பார்க்கிறேன்; எண்ணி இரண்டு வார்த்தைகள் பேசுகிறாய். என் மீது ஏதாவது கோபமா?''

அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''சாலையில் கவனம் வையுங்கள்.

''நீ சொல்வது ரொம்ப சரி! என் கேள்விக்கு பதில் கிடைத்த பிறகு காரை ஓட்டுகிறேன்'' என காரை ஓரமாக நிறுத்தினான்.

''ப்ளீஸ்! எனக்கு வேலையிருக்கிறது; பொழுதுபோக்க நேரமில்லை; புரிந்து கொள்ளுங்கள்.''

''நீ ஒன்றும் இயந்திரமில்லை! அதுவும் நன்றாகவே புரிகிறது.''

''உங்கள் அக்கறைக்கு நன்றி! இப்பொழுது கிளம் புங்கள். பரத்தும் இல்லை. நான் போய் வேலையை கவனிக்க வேண்டும்.''

''சரி, சரி. இப்பொழுது உன் வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து செல்கிறேன். ஆனால் போன் சுவிட்சை ஆன் செய்து வை. வீட்டிற்குச் சென்றதும் நான் பேசு கிறேன். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவாய் என நம்புகிறேன்.''

கார் கிளம்பி அவள் விரும்பியவாறே கட்டட வேலை நடக்கும் இடத்தில் இறக்கிவிட்டது பரத் அன்று வர ரொம்பவே தாமதமாகி விட்டிருந்தது. ப்ரியாவை அவன் அழைத்துச் சென்றதும் அவன் வீட்டினர் அன்பாகவே வரவேற்றனர். அவளைப் பற்றி எல்லா விஷயங்கள் தெரிந்திருந்தாலும் இயல்பாய் காயப்படுத்தாமல் பேசி னர். செயற்கைத்தனமோ, ஏமாற்றுத்தனமோ இல்லாத மனதிலிருந்து வெளிவந்த அவர்கள் அன்பு அவளை நெகிழச் செய்தது. அங்கேயே அதிக நேரம் கழிந்துவிட பின் அவ்ளைக் கொண்டு போய் அவள் வீட்டில் விட்டு விட்டு சைட்டிற்கு வர ரொம்பவே நேரமாகி விட்



டிருந்தது. ''ஸாரி நித்தி!'' என்றவனை ''ஹேய்! இப்படி நீ சொல்வது தான் கோபமூட்டுகிறது.''

''சந்துருவுடன் போ.'' ''சரி.''

வீட்டிற்குச் சென்றதும் கை கால்களை மட்டும் கழுவிக் கொண்டு உடை மாற்றி அசதியுடன் படுக்கை யில் விழுந்தாள். கை அலைபேசியை ஆன் செய்தது தன்னிச்சையாய் நடந்தது.

உடனே அழைப்பு வந்தது. வினய் தான்! கொட்டாவி விட்டவாறே ஆன் செய்தாள்.

''நைட் ஷோவே முடிந்து விட்டது; இப்பொழுது தான் வீட்டிற்கு வருகிறாயா?''

''ம்! ம்! ஆ... ஆவ்! என்ன... சொன்... னீர்கள்?'' என்றவளை, ''குட் நைட்! இனிய கனவுகள் வர வாழ்த் துக்கள் என போனை வைத்தான்.

காலையில் எழுந்ததும் ஏதோ அரை குறையாய் வினய் பேசியது நினைவிற்கு வந்தது. ''என்ன சொன் னார்? நைட்... நைட் ஷோ பார்த்துவிட்டு இப்பொழுது தான் வருகிறேன் என்றாரோ...'

இவள் இப்படி யோசிக்கையில் தீப்தி வினயின் நிகழ்ச்சி நிரலை தெரிந்து கொண்டு அவன் செல்லும் இடங்கள், விழா நிகழ்ச்சிகளில் தானும் கலந்து கொள்ள லானாள். மற்றவர்கள் கண்களில் படுமாறு அவனுடன் சிரித்து பேசி தான் அவனுக்கு மிக வேண்டியவள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தினாள். ஏதேனும் வேலையை வைத்துக் கொண்டு தேவனையும் அலுவலகத்தில் சந்தித்தாள். அது மட்டுமல்ல; வீட்டிற்கு அவள்

காரணமின்றி செல்ல முடியாததால் இராஜி கோவிலுக்கு வரும் சமயம் அறிந்து தற்செயலாய் பார்ப்பது போல் இடைவிடாமல் பார்த்து பேசி பழகலானாள். வினய் கண்டிப்பாக அலுவலகத்தில் மட்டுமே எந்த விஷயமும் பேச வரவேண்டும் என மற்றவர்களுக்கு தெளிவு படுத்துவது போல் அவளுக்கும் தெளிவுபடுத்தி இருந்தான். எனவே தான் அவன் வார்த்தையை மீறி அங்கு சென்று வெறுப்பை சம்பாதிக்கக் கூடாது என்று சற்று விட்டுப் பிடித்தாள்.

இதற்கிடையில் ஒரு நாள் காரில் இராஜி வேலை நடக்கும் இடத்திற்கு வந்தார். கட்டடம் வளர்ந்திருந்ததைப் பார்த்து பிரமித்துப் போனார். 'அடேங்கப்பா! யட்சிணி மாதிரி வேலை செய்கிறாள்' என எண்ணிக் கொண்டு, ''நித்யா, என்னுடன் ஒரு மணி நேரம் வெளியே வர முடியுமா?'' எனக் கேட்டார்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா! நான் கொஞ்சம் கல் வாங்கும் விஷயமாய் வெளியே செல்ல வேண்டியிருக்கிறது.''

''நித்யா, போகிற வழி என்றால் அப்படியே இவர்களுக்கும் உதவி விட்டு செல்லலாமே?'' என பரத் கூற,

''உனக்கு உதவி தேவைப்பட்டால் கூட ஏதாவது சாக்கு போக்கு சொல்லி விடலாம். ஆனால்... என்ன செய்வது? உன் ப்ரியாவிற்காக செய்கிறேன்'' என மெல்ல அவனிடம் முணுமுணுத்து விட்டுக் கிளம்பினாள்.

இருவரும் ஒரு பிரபலமான ஜவுளி கடைக்குள் நுழைந்தனர்.



''இங்கே ஏனம்மா?''

''வாயேன்! சொல்கிறேன். நம் கடைக்குச் சென்றால் வினய்க்கு தெரிந்து விடும். அவனுக்கு ஓர் இனிய ஆச்சரிய பரிசை கொடுக்க வேண்டும்.''

''என்ன விஷயம் அம்மா?

''அவனுக்குப் பிறந்த நாள் வருகிறதல்லவா? அதற்குத்தான். இளைஞர்களுக்கு ஏற்ற நவீன உடைகளைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? ஜீன்ஸ், டீ சர்ட் அவனிடம் நிறைய இருக்கிறது. நம் பாரம்பரியத்தை நினைவூட்டுவது மாதிரி நவீன உடை ஏதாவது வாங்கலாமா?''

''ம்! அவருக்கு ஆர்ப்பாட்டமெல்லாம் ரொம்பப் பிடிக்காது. இயல்பாய் அழகாய் இருப்பதைத்தான் விரும்புவார். வினுவுக்கு லைட் கலர் மேல் மிகுந்த விருப்பம் இருக்கும் என்று நினைக்கிறேன். பேசாமல் நீங்கள் ஷெர்வானி மாதிரி உடை வாங்கிக் கொடுங்களேன். அவருக்குக் கம்பீரமாய் இருக்கும்.''

அவர் சரி என தலையசைக்க,

''என்ன அம்மா?''

''நீதானே பேசாமல் எடுக்கச் சொன்னாய்? எனக்கு எதுவும் சம்மதம்'' வெளிர் பச்சையில் - ஆலிவ் க்ரீனில் கண்ணை உறுத்தாத அழகான கலை வேலைப்பாடுகள் செய்த ஷெர்வானி உடையை தேர்ந்தெடுத்தாள்.

'என் மருமகள் கெட்டிக்காரி தான்; சரியாய் என் மகனைப் புரிந்து வைத்திருக்கிறாள். இன்னும் என்னென்ன அவனைப் பற்றி தெரிந்து வைத்திருக்கிறாய் என் அருமை மருமகளே!'

பில்லிற்கு பணம் கொடுத்து விட்டு, காரில் ஏறிய இராஜி ''வாம்மா! உன்னை நீ போக வேண்டிய இடத்தில் இறக்கி விட்டு விடுகிறேன்'' என்றார்.

''நன்றிம்மா! நான் ஆட்டோவில் செல்கிறேன்.''

''சீக்கிரம் இவ்வளவு அருமையான பெண்ணைப் பெற்ற உன் அம்மா, அப்பாவை நான் பார்க்க வேண்டும்'' எனக் கூறி விட்டுக் கிளம்பினார்.

வினாடியில் முகம் இறுகிப் போனாள் நித்யா!

'உங்கள் ஆசை ஒரு நாளும் நிறைவேறப் போவதில்லை.'

தீப்தி அன்று நித்யாவைத் தேடி சைட்டிற்கே வந்திருந்தாள். எங்கேயும் வினயைப் பார்க்க முடியவில்லை. அவன் எங்கே சென்றிருக்கிறான் என்ற விஷயமும் அறிய முடியவில்லை. அவன் வெளிநாட்டில் 'புடவை கண்காட்சி நடத்தச் சென்றிருந்த விஷயத்தை நித்யாவும் அறிந்திருக்கவில்லை. வேலை எப்படி நடக்கிறது? என பார்க்கவாவது வந்திருக்க மாட்டானா? என்ற நப்பாசையில் தீப்தி வந்தாள். நித்யாவிடம் சும்மா பேச்சுக் கொடுத்ததில் அவள் எதுவும் அறிந்திருக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டாள். ''நித்யா இந்தப் புடவையைப் பார்த்தாயா? வர்ண ஜாலப்பட்டு! அவர் எனக்குப் பிறந்த நாள் பரிசாக இதை வாங்கிக் கொடுத்தார். புதுசாக மார்க்கெட்டிற்கு வந்திருக்கிறது!''

'நித்யாவிற்கா அந்தப் புடவையைப் பற்றித் தெரியாது? அது வினய் அவள் பெயரில் வெளியிட்ட பட்டு அல்லவா? அவள் வரும் பொழுதே அதைப் பார்த்து



விட்டாள். இருந்தாலும் இது அவன் வாங்கிக் கொடுத்ததாக இருந்தால் மனம் ஏனோ சங்கடப்படுமென்றே எதையும் கேளாமல் அமைதியாகி விட... ஆனால் தீப்தியோ அதை புரிந்து கொள்ளாமல் ஆசை கொண்ட மனதில் கத்தியைச் செருகினாள்.

'சூ! மனமே அடங்கு! அவர் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண்ணிற்கு எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொடுக்கலாம். நீயாக ஏதாவது வானக் கோட்டைக் கட்டிக் கொண்டு கனவு ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்தால் அதற்கு வினயாவா பொறுப்பு? சும்மா பொறாமைப்படாதே! உன் வாழ்க்கையை நீ முன்பு முடிவு செய்தபடி வாழ்! அவர் வாழ்க்கையை அவர் விருப்பப்படி வாழட்டும்!'

''அப்புறம் நித்தியா உனக்கொரு ரகசியம் சொல்கிறேன்; உன் மனதோடு வைத்துக் கொள். நானும், அவரும் டேட்டிங் செல்லலாம் என்று இருக்கிறோம். அவர் அதைப் பற்றிய ஏற்பாடுகள் செய்ய வெளியூர் சென்றிருக்கிறார். நானும் என் வேலைகளை முடித்துக் கொண்டு தயாராக இருக்க வேண்டும்.''

அவள் பேசிக் கொண்டே போக... நித்யாவிற்கு எதையும் கேட்காமல் அங்கிருந்து ஓடிவிட வேண்டும் போலத் தோன்றியது. அவளுக்கு திருமணத்தில் நாட்டமே இருந்தது இல்லை. தொழில் செய்ய வேண்டும். யாராலும் செய்ய முடியாததைச் செய்து காட்ட வேண்டும். வாழ்ந்ததற்கான அடையாளம் வேண்டும். கற்கோயில் கட்டி காலத்தை வென்று வாழ்ந்து கொண்டிருக்கும் சோழ மன்னனைப் போல் கட்டடங்களால்

உலகம் முழுவதும் அவள் பெயர் பொறிக்கப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அவள் நிராகரிக்கப்படாதவளாக எல்லாராலும் விரும்பப்படுபவளாக, ஏற்றுக் கொள்ளப்படுபவளாக வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டாள். எல்லாம் நன்றாகத் தானே நடந்து கொண்டிருக்கிறது? இடையில் வினயின் மேல் எப்படி ஆசை முளைத்தது? எப்போது அன்பு அரும்பியது? கனவு மொட்டு எங்ஙனம் விரிந்தது? எதுவும் அவளுக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிஜம்! விஜய் மேல் நிமிடத்திற்கு நிமிடம் அன்பு வளர்ந்து கொண்டிருப்பது உண்மை! அது எவரெஸ்ட்டை விட அதிகமாகக் கூட வளரலாம். ஆனால் அவன் மனதில் அந்த ஆசை... இல்லாதபொழுது... அவள் கனவை வளர்ப்பது தவறு அல்லவா? இன்னொரு பெண்ணிற்கு பரிசுகள் கொடுப்பவன், டேட்டிங் செல்பவன், திருமணத்திற்கு சம்மதித்தவன் எப்படி அவளை நேசிக்க முடியும்? அவள் பெயரை புடவைக்கு வைத்தது அந்தப் பெயரை பிடித்த காரணத்தினால் இருக்கலாமே தவிர அவளை பிடித்ததினால் அல்ல.

தீப்தி போய் விட்டிருந்தாள். ஆனால் இவள் கனவோ கலையவில்லை, கலைந்திருந்தால் அங்கே இரு பெண்கள் அதாவது அவளிடம் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்கள் பேசிக் கொண்டிருப்பதை கவனித்து இருப்பாள்.

''அந்தம்மா கட்டியிருந்த புடவையைப் பார்த்தாயா? ரொம்ப நல்லா இருந்தது இல்லை?''

''ஆமாம்! அதுதான் இப்ப புதுசா வந்திருக்கிற பட்டுப் புடவை. டி.வி.யிலே காண்பிச்சானே பாக்கலையா?''



''என் பொண்ணு கல்யாணத்துக்கு இது மாதிரி புடவை வாங்க வேண்டும். என்னா விலை இருக்கும்?''

''அட! நீயேன் கவலைப்படறே? புடவைக்காரர் கொண்டு வர்றார். தறி போடுற இடத்திலே இருந்தே வாங்கி வருவதால் விலையும் சல்லிசா இருக்கு. வெறும் அஞ்சாயிரம் ரூபா தான். தவணை முறையில் வாங்கி நீயும் அவர் கிட்டே மாசா மாசாம் ஐந்நூறோ, ஆயிரமோ கொடுத்து புடவைக் கடனை அடைச்சிடலாம்!''

கொஞ்சம் கவனித்து இருந்தால் நித்யாவிற்கு இரு விஷயங்கள் புரிந்திருக்கும். கடைக்கு புதிராக (பிரத்யேகமாக) விசேஷமாக பண்டிகைக்கு என தயாரிக்கப்பட்ட விலையுயர்ந்த புடவை எப்படி புடவைக்காரரால் குறைந்த விலையில் விற்க முடியும்? பணம் விஷயத்தில் மிக அல்பமான தீப்தி, விலையுயர்ந்த புடவையை எப்படி வாங்கினாள்? நிஜமாகவே அது பரிசாக வந்த புடவையா? உண்மையிலேயே அது அசல் பட்டு தானா? என யோசித்திருக்கலாம். ஆனால் அவளோ ஏமாற்றத்தினாலும், ஏக்கத்தினாலும் பாதிக்கப்பட்டிருந்தாளே? குழம்பி கலங்கியிருந்த மனத்தில் தெளிவான சிந்தனை எங்கிருந்து வரும்? அவனைப் பற்றி நினைக்கக்கூடாது என்று தீவிரமாக வேலை செய்தாலும் சில சமயம் அவளை மீறி நினைவு எழுந்தது. எல்லா பெண்களையும் வேண்டாம் என்று நிராகரித்தவருக்கு தீப்தியை மட்டும் எப்படி பிடித்தது? எதனால் என்னையும் பிடிக்காமல் போனது? எனக்கு கனவு காண மட்டும் தான் உரிமை உண்டு. ஆனால் அருமையாக வாழ்வதற்கு சிலர் மட்டும் தான் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் போல!' என என்னென்னவோ எண்ணி

தவித்துக் கொண்டிருந்தவளுக்கு ஓடிப்போய் தன் அம்மாவின் மடியில் முகத்தை பதித்துக் கொண்டு அழ வேண்டும் போல் தோன்றியது. 'சீக்கிரம்' அம்மாவை பார்க்க வேண்டும். கனிந்த குரலும், மலர்ந்த முகமும், அவர் அன்பான உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டும்! அம்மாவை கட்டிக் கொண்டாலே உலகத்து ஆதரவே அவளுக்குக் கிடைத்த மாதிரி தோன்றும்.

அவளுக்குக் கிடைத்த மாதிரி அன்னை உலகத்தில் யாருக்குக் கிடைப்பார்கள்? அவள் அம்மாவை ஊரே சுற்றும் பொழுது அம்மாவோ நித்யாவையே சுற்றினார் அல்லவா? ஊர் போற்றும் மருத்துவராக இருந்தும் தன் வளர்ச்சி, வாழ்வைப் பற்றியே அவர் நினைக்கவே இல்லையே? எல்லாவற்றையும் இவளை மையமாக வைத்து அல்லவா அமைத்துக் கொண்டார். 'மீரா அம்மா! என் அருமை மீரா அம்மா!' நினைக்கும் பொழுதே மனசுக்குள் ஓர் அமைதிப் பிறந்தது. ரேகா உடன் இருந்திருந்தால் ஏதாவது பேசி கவனத்தை திசை திருப்பி இருப்பாள். பரத்துடன் பேசுவதற்கு நேரமோ இல்லை. வேலையை இருவரும் மாறி மாறி இரவு பகல் தொடர்ந்து செய்து கொண்டிருந்தாலும் இடைவேளை கிடைத்த பொழுது பரத், ப்ரியாவை சந்திக்கச் சென்று கொண்டிருந்ததாலும் அவனுடனும் மனம் விட்டுப் பேச முடியாமல் போயிற்று. அன்னையின் நினைவே அவளை அமைதிப்படுத்தியது.

அதனால் தான் பரத் பெற்றோருடன் ப்ரியாவை பார்க்க வினய் வீட்டிற்கு சஞ்சலம் இல்லாமல் அவளால் செல்ல முடிந்தது. வினய்யும் இன்னும் ஊரிலிருந்து



திரும்பியிருக்கவில்லை. ப்ரியாவின் அப்பா, அன்று அவர்களைச் சந்திக்க ஊரிலிருந்து வந்திருந்தார். தன், அவசரமான கல்யாண முடிவால் அவள் வாழ்வே கலைந்து போனது அவரையே உருக்குலைத்து இருந்தது. மறுபடியும் தன் அருமைப் பெண்ணின் வாழ்வில் வசந்தம் துளிர்க்கும் என்ற உண்மை அவரை பேரானந் தப்படுத்தியது. வந்தவர்கள் யாரும் பழங்கதையைப் பேசவில்லை.

மனம் விட்டுப் பேசிக் கொள்ளும் நண்பர்கள் போல் உரையாடிக் கொண்டிருந்தனர். பரத்தின் தந்தை மருத்துவராய் இருந்தும் பெரிதாக அலட்டிக் கொள்ள வில்லை. அவன் அம்மாவோ முழு மனத்தோடு கணவர் சொல்வதை ஆமோதித்துக் கொண்டிருந்தார். ''எங்கள் பையனைப் பற்றி உங்களுக்கு ஏதாவது விளக்கம் கேட்க வேண்டும் என்றால் தயங்காமல் கேளுங்கள்.''

''எந்த விளக்கமும் எங்களுக்கு அவசியம் இல்லை, வினயும், ப்ரியாவும் அவருக்கு நடந்த திருமணத்தைப் பற்றி தெளிவாக விளக்கி விட்டனர். எங்கள் ப்ரியாவை உங்கள் மகனுக்கு திருமணம் செய்து கொள்ள நிஜமாக விருப்பம் தானா?''

''ஏம்மா இப்படிக் கேட்கிறீர்கள்? கல்யாணம் தவறாகிப் போனதில் அவள் குற்றம் என்ன? பெண் பாவம் பொல்லாதது; தப்பு செய்யாத பெண்ணை தண்டித்தால் உலகமே வறண்டு விடாதா? அவள் கண்ணீர் விட்டால் எதுவுமே விளங்காமல் போய்விடும்! அவள் அருமையான பெண். எங்கள் வீட்டுப் பெண்ணை இனி எப்படி விட்டுக் கொடுக்க முடியும்?''

வினயின் சித்தப்பா அழுதே விட்டார்.

''இதற்குத் தான் பாரம்பரியமானவர்களுடன் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். விளம்பரத்தைப் பார்த்து ஆள் நன்றாக இருக்கிறான், படித்திருக்கிறான். என தேர்ந்தெடுத்து, சுமனை நம்பி ஏமாந்து போனோம். அவன் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாய் இருந்தால் இப்படி மோசமான நடத்தை உடையவனாய் இருந்திருப்பானா? சேற்றில் செந்தாமரை முளைக்கும், சிப்பியில் முத்து கிடைக்கும் என்பது உண்மைதான். ஆனால் சேற்றில் முளைக்கும் எல்லாமே செந்தாமரை அல்ல; எல்லா சிப்பிக்குள்ளும் முத்து இருப்பதில்லை. நல்ல குடும்பம், பாரம்பரியம் ரொம்ப முக்கியம்'' - என இராஜி கூற...

நித்யா மனம் இறுகி பாறையாகி விட்டிருந்தது.

## 19

பரத், ப்ரியா திருமணம் ஆறு மாதங்களுக்குப் பிறகு நடத்துவது என முடிவு செய்யப்பட்டிருந்தது. அங்கு சென்று வந்ததில் இருந்து நித்யா முற்றிலும் மாறிவிட்டிருந்தாள். தன் இலட்சிய கனவை மட்டும் சுமந்தவளாய் ஆசைக்கனவை துறந்தவளாய் புதுப் பிறவி எடுத்திருந்தாள். அலைபேசியை அணைத்து வைக்கவில்லை



தான்; இருந்தாலும் வினய் கூப்பிட்டால் எடுப்பதில்லை. அப்படியே எடுத்தாலும் வேலையைப் பற்றி பேசுவதுடன் வேறு எதனைப் பற்றியும் பேசுவதில்லை. இரண்டு முறை அவளை வெளியே கூப்பிட்ட இராஜியைக் கூட மென்மையாய் ஆனால் உறுதியாய் மறுக்க முடிந்தது. இரண்டு தளங்கள் கட்டி முடிக்கப்பட்டு மூன்றாவது தளத்தின் வேலை நடந்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் அதிகமான வேலை ஆட்களை சேர்த்துக் கொண்டாள்.

தேனீக்கள் போல அவர்கள் சுறுசுறுப்பாக உழைக்குமாறு கவனமாக நிர்வாகம் செய்தாள். நேரம் காலம் பார்க்காமல் கடுமையாக உழைத்தாள். ஆனால் சில சமயம் தடங்கல் எந்த ரூபத்தில் வருமென்று தெரியாதல்லவா? அது போலவே நடந்தது. மனிதர்களால் வருவதை தடுக்க முடிந்தது போல் இயற்கையால் வருவதை தடை செய்ய முடியவில்லை. இடைவிடாது வானம் ஒரு வாரம் கொட்டித் தீர்த்தது. பகல் நேரம் உள்புற வேலைகளைப் பார்த்தாலும் இரவு நேரம் அடை மழையால் எதுவும் செய்ய முடியாது போயிற்று.

கட்டடத்தின் முன்னால் தேங்கும் நீர் குழாய் வழியாக பின்புறம் இருக்கும் நீர்க் கிணற்றுக்குள் செல்லுமாறு அமைக்கப்பட்டிருந்தது சிறந்த யோசனையாக அமைந்தது. கழிவு நீரும் உருவாகவில்லை. நீரும் நிலத்தடியில் சேமிக்கப்பட்டிருந்தது. வினய் இங்கே வரும் நேரம் எப்படித்தான் அறிவாளோ? வேறு ஏதாவது விஷயமாய் எங்காவது சென்று இருப்பாள். மழை ஓய்ந்ததும் வேலையை இன்னும் இரண்டு மடங்கு ஆட்களுடன் அதிவேகமாய் செய்ய ஆரம்பித்து இருந்தது. வினயின் குறுக்கீட்டைத்

தவிர்த்து இருந்தது. அவன் வரும் நேரம் ஓடி, ஒளிந்து, மறைந்து, வேலையில் தீவிரமாகி கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்தாள். விடுவிடென்று தளம் வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அவள் மனமோ தளர்ந்து கொண்டிருந்தது. அவளைச் சந்திக்க, பேச வினய் எடுத்த முயற்சிகள் பலிக்காமல் போனாலும் அவள் அவள் மனத்தை ஆட்டுவித்துக் கொண்டிருந்தன. அவனைத் தவிர்த்தாலும் அவன் நன்றாக இருக்க வேண்டும் என நேசித்த மனம் வேண்டிக் கொண்டிருந்தது. அதனால் அவன் வருத்தமும், கோபமும் அவளை நிறையவே பாதித்தன. அம்மாவுடன் அவள் போனில் பேசிய பொழுது அந்த பாதிப்பு தெரிந்ததோ?

''நித்திம்மா! என்னடா குரலே சரியில்லை? ஏன் வேலை ரொம்ப கஷ்டப்படுத்துகிறதா? அல்லது வேறு ஏதாவது காரணமா? நான் வேண்டுமானால் கிளம்பி வரட்டுமா?''

''வேண்டாம் அம்மா! உங்கள் நோயாளிகள் உங்களை விட்டால் தானே நீங்கள் கிளம்பி வர முடியும்? நானே அடுத்த வாரமோ, அல்லது அதற்கு அடுத்த வாரமோ கிளம்பி வருகிறேன். எனக்கும் ரெஃப்ரெஷ் ஆன மாதிரி இருக்கும்.''

''வா, வா! இங்கிருக்கும் ஈ, குருவி கூட உன்னைத் தேடிக் கொண்டிருக்கின்றன. என்னடா யாரையாவது மணந்து கொள்ளும் யோசனையோ? ஆசையோ? ஏதாவது வந்திருக்கிறதா?''

''கிடையாது! அப்படி எதுவும் கிடையாது அம்மா! என் இலட்சியம் தான் உங்களுக்கே நன்றாகத் தெரியுமே?''



''இலட்சியத்திற்கும், கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்? சே! சென்னை இளைஞர்கள் ரொம்பவும் இலட்சியவாதிகள் ஆகி விட்டார்களா என்ன? கேரியர் டெவலப்மென்ட்டில் இருக்கும் கவனத்தில் என் அழகுப் பெண்ணை கண்டு கொள்ளவே இல்லையா? சுத்த மோசம்பா! இந்நேரம் அவளைச் சீக்கிரம் எனக்குக் கல் யாணம் பண்ணி வைங்க அம்மான்னு தொண தொணக்க வைத்திருக்கக் கூடாதா?''

''அம்மா! உங்களுக்கு விஷயமே தெரியாதா? பையன்கள் எல்லாம் கல்லும், மண்ணோடும் விளை யாடும் இந்தப் பெண் எங்களுக்கு வேண்டாம் என்று ஓடி விட்டார்களாக்கும்.'' குரலில் ஏதோ கரகரப்பை உணர்ந்தவராய்,

''டேய் கண்ணம்மா! நீ மேற்படிப்பு படிக்க இலண்டன் போகிறாயா? உனக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தில் படிக்க அனுமதி கிடைத்திருக்கிறது'' என்றார்.

உடனே குரலில் உற்சாகம் தெரிய...

''கண்டிப்பாய் அம்மா! இந்த வேலை முடிந்ததும் கிளம்பி விடுகிறேன்.''

''வெரிகுட்! மனதை உழப்பிக் கொள்ளாமல் வேலையைப் பார். உனக்கு உன் அம்மா இருக்கிறேன். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் அடுத்த வாரம் மறக் காமல் வந்து சேர்.''

''காய்ச்சல் அப்படி இப்படின்னு எதுவும் சொல்லாதே! வேறு ஏதாவது காரணம் சொல்!''

''சரிம்மா! தலைவலியோ, கால்வலியோன்னு அப்ப ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்கிறேன்.''

''அப்புறம் நானே நேரில் வந்து வலிக்க, வலிக்க ஊசி போடுவேனாக்கும்.''

''என் அம்மா கைப்பட்டால் பூ மாதிரி அல்லவா இருக்கும்.''

''ஐஸ் வைக்காதே! மறவாமல் ஊர் வந்து சேர்.''

''சரிம்மா'' என வைத்தாள்.

இவள் அவனை விட்டு ஒதுங்குவது வினய்க்கு நன்றாகவே புரிந்தது. ஒரு வாரம் விட்டுப் பிடித்தான். அவன் அப்படி திடீரென்று வராமல் நின்றுவிட அவனுக்கு உடல் நலம் ஏதும் சரியில்லையோ என தவித்தாள். அந்த நினைப்பு வந்ததும் அவளால் ஏதும் சரிவர செய்ய முடியவில்லை. அவன் நலத்தை தெரிந்து கொண்டே ஆக வேண்டும் போல் தோன்றியது. துடித்த மனத்தை கட்டுப்படுத்திக் கொண்டு 'என்ன செய்யலாம்?' என யோசித்தாள். 'போன் செய்யலாமா? யாருக்கு வினய்க்கா?' ம்ஹூம் பின் வேறு வினையே வேண்டாம். பின் யாரை தொடர்பு கொள்வது? அம்மா! அதுவும் சரிவராது. 'ப்ரியா'வை கேட்டால் என்ன? அதுதான் சரி. என்று ப்ரியாவை தொடர்பு கொண்டாள். அப்போது ப்ரியாவும், வினய்யும் அவளைப் பற்றி தான் பேசிக் கொண்டிருந்தனர்.

''என்ன அண்ணா? அண்ணி க்ரீன் சிக்னல் காட்டி விட்டார்களா?''

''அது எப்படி அவ்வளவு சீக்கிரம் காட்டுவாள்.' கல்யாணம் செய்து கொள்ளும் முட்டாள்தனமான வேலையை செய்ய மாட்டேன் என முதல் நாளே என்னிடம் கூறியவள் அல்லவா?''



''அட! உங்களை மாதிரியே பேசி இருக்கிறார்களே!''

''ம்கூம்! நீ எங்களை என்னவென்று நினைத்துக் கொண்டாய்? நாங்கள் இருவரும் ஒரே மாதிரி சிந்திப்போம். ஒரே மாதிரி செயல்படுவோம் தெரியுமா? இப்பொழுது கூட அவளுக்கு போன் செய்கிறேன்; கேட்கிறாயா எங்கள் மனசு பேசுவதை!'' என்ற போது ப்ரியாவின் அலைபேசி ஒலித்தது.

''அண்ணா! உன் மனசு பேசுகிறது'' என போனை ஆன் செய்தாள். ''என்ன நித்யா? நன்றாக இருக்கிறாயா? இந்த நேரத்தில் என் நினைவு எப்படி உனக்கு வந்தது?'' அவளிடம் 'பேசியது எதையும் கூறாதே' என வினய் சைகை காட்டினான். நித்யா ஏதோ சொல்ல...

''நான் நன்றாக இருக்கிறேன். என் அப்பாவும் நன்றாக இருக்கிறார்...'' என பேசிக்கொண்டே போனை வினய் கையில் கொடுத்தாள்.

''ப்ரியா... வினு... எப்படி... இருக்கிறார். உடல்நலம் நன்றாகத்தானே இருக்கிறது? ஒரு வாரமாய் அவர் இங்கே வரவில்லையா? அதனால் வேலை விவரம் ஏதும் சொல்ல முடியவில்லை. உடம்பு சரியில்லையோ? என கொஞ்சம் கவலையாகிவிட்டது.''

சிரித்துக் கொண்டே வினய் போனை ப்ரியாவிடம் கொடுத்தான். ''என்ன கேட்டீர்கள்? அண்ணன்தானே? கொஞ்ச நேரம் முன்னாடி வரை ஒரு மாதிரித்தான் இருந்தார். ஆனால் இப்பொழுது ஜம்மென்று இருக்கிறார். அவரிடம் பேசுகிறீர்களா? கொண்டு போய் கொடுக்கட்டுமா? சரி! சரி! அவரிடம் நான் எதுவும் இதைப்

பற்றிச் சொல்லவில்லை. ஓகே! குட்நைட்!'' என வைத்தாள்.

வைத்துவிட்டு கண்சிமிட்டி சிரித்தாள். ''அண்ணா! நீங்க இரண்டு பேருமே மிகவும் பொல்லாதவர்கள்! இது என்ன விளையாட்டு சிறு குழந்தைபோல்? மனதிற்கு பிடித்திருந்தால் நேரிடையாய் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டியது தானே? மனசுக்குள் அன்பை வைத்துக் கொண்டு ஏன் இப்படி ஒளிந்து விளையாடி கொண்டு இருக்கிறீர்கள்?''

''மனசு நிறைய அன்பு இருப்பது உண்மைதான்! எனக்கு முதலில் கல்யாணம் செய்து கொள்ளும் ஆசையோ, விருப்பமோ இருக்கவே இல்லை. அம்மா கூறிய பொழுது அப்படி, இப்படி காரணம் சொல்லி தட்டிக் கழித்துக் கொண்டிருந்தேன். ஏன் தெரியுமா? பெண்கள் எல்லாரும் மோசமானவர்கள்; நவீனம், சுதந்திரம் என்ற பெயரில் ஆண்கள் செய்யும் அத்தனை தவறுகளையும் தாங்களும் செய்து பார்க்க விழைபவர்கள் என்ற எண்ணமே வலுவாய் இருந்தது. நம் பாட்டியைப் போல் சாதிக்க வேண்டும், வாழ்வில் தன் உழைப்பால் உயர வேண்டும் என நினைக்கின்ற பெண்களே இனி கிடையாது; அம்மாவைப் போல் அன்பே உருவான வளாய் எந்தப் பெண்ணும் இருக்கமாட்டாள் என முடிவு கட்டியே இருந்தேன். ஆனால் சங்கத்தமிழ் காட்டும் பெண்ணாய் என்னைத்தேடி ஓர் இனியப் பொழுதில் தென்றலாய் வந்தாள் நித்யரஞ்சனி! அவளின் இனிய மணம் இன்னும் என்னை சுற்றிக் கொண்டே மயக்கிக் கொண்டிருக்கிறது.''



''ஆகா! விட்டால் காவியமே பாடிவிடுவீர்கள் போலி ருக்கிறது! சீக்கிரம் ஒரு முடிவிற்கு வாருங்கள். பெரி யம்மா எப்பொழுது உங்கள் திருமணத்தை நடத்துவது என்று துடித்துக் கொண்டிருக்கிறார்.''

அடுத்த நாள் வினய் சைட்டிற்கு சென்றபொழுது நித்யா மூன்றாவது தளத்தில் நின்று கொண்டிருந் தாள். சந்துரு தான் கீழே நின்று கொண்டிருந்தான். வினய் வருவதை பார்த்தவள் சந்துருவிற்கு போன் செய்தாள்.

''சந்துரு, எதுவும் பேசாதே! நான் சொல்வதை மட்டும் கேள்! அவரிடம் நான் இங்கு இருப்பதாக கூறிவிடாதே; வெளியே சென்றிருப்பதாக கூறி அனுப்பிவிடு.'' என்றதை வினய்யும் கேட்டுக் கொண்டிருந்தான். சந்துரு திருதிருவென விழிக்க...

''உன் அக்காவிற்கு என்னுடன் விளையாட ஆசை... நீ ஒன்றும் திகைக்க வேண்டாம். சரி நான் போய் வருகிறேன். அவளிடம் சொல்லிவிடு'' என காரில் ஏறி காரை கிளப்பினான். கார் கிளம்பும் சத்தத்தை கேட்டாள் நித்யா; மெல்ல எட்டிப் பார்த்தாள். கார் திருப்பத்தில் சென்று மறைந்தது. பெருமூச்சுடன், 'ஏன் இப்படி என்னை படுத்துகிறீர்கள்? மறக்க வேண்டும் என்று நினைத்தால் முன்னால் வந்து வந்து நின்று பாடாய் படுத்துகிறீர்களே? என்னை என் வேலையை செய்ய தயவு செய்து விடுங்கள். இன்னும் ஒரு மாதம்தான். வேலை முடிந்துவிடும். நான் கிளம்பி இங்கிருந்து, இந்த ஊரிலிருந்து மட்டுமல்ல; இந்தியாவை விட்டே கிளம்பி விடுகிறேன். நான் லண்டனுக்கு சென்ற பிறகு நீங்கள்

தீப்தியை மணந்து கொண்டு பாரம்பரியமாய் வாழுங்கள்.''

''ஹலோ மடப்பெண்ணே!'' என்ற குரல் கேட்டு சட்டென்று திரும்பினாள். வினய் நின்று கொண்டிருந் தான். ''நான் சென்ற வழியையே எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருப்பாய், உன் கண் முன்னால் நின்று கொண்டிருக்கும் என்னை பாரம்மா!''

'இவன் எப்பொழுது? எப்படி திரும்பி வந்தான்?'

''ஜாக்கிசான் மாதிரி தாவிக்குதித்து வந்தேன். ஆமாம் இப்பொழுது அதைப்பற்றி என்ன? நான் நலமாக இருப்பது பற்றி நீ அறிந்து கொள்ள விழைகிறாய். ஆனால் நான் மட்டும் உன்னைப்பற்றி ஏதும் தெரிந்து கொள்ளக்கூடாதா?''

''ஐயோ! ப்ரியா சொல்லிவிட்டாளா?''

''ஏன் இப்படி திருதிருக்கிறாய்? ஏதோ வேலை விவரம் சொல்ல வேண்டும் என்று தேடினாயாமே? அது என்ன என்று கேட்க வந்தால் ஏன் ஓடி ஒளிந்துகொள் கிறாய்? நான் என்ன பெண் பார்க்கவா வந்திருக்கிறேன்; நீ என்னை பார்த்ததும் வெட்கப்பட? அதுதான் பெண் எல்லாம் முன்பே பார்த்தாகிவிட்டதே?''

அவன் அவளைப் பற்றிச் சொல்ல... அவளோ தீப்தியைப் பற்றி சொல்வதாக எண்ணிக் கொண்டாள். தீப்தி நினைவு வந்தாலோ என்னவோ? மனம் உறுதி யாக, தடங்கல் இல்லாமல் அவனுடன் பேசலானாள். இன்னும் இரண்டு வாரங்களில் அனைத்து தளங்களும் கட்டி முடிக்கப்படும் என அவள் சொல்லிக் கொண்டே போக...



அவன் எங்கே அதைக் கேட்டான்? அவளை அல்லவா ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான். ஜீன்ஸ் பேண்ட், காலர் இல்லாத ஜிப்பா போன்ற நீள ஷர்ட் அணிந்திருந்தாள். ஆனாலும் அவள் மெலிருந்திருந்தது நன்றாகத் தெரிந்தது. கண்களில் கனவும், ஏக்கமும் நிறைந்திருந்தன. 'இத்தனை ஏக்கத்தை வைத்துக் கொண்டு ஏன் இப்படி பொய் வேஷம் போடுகிறாய்? என எண்ணிக் கொண்டான். ஏதோ சொல்லிக் கொண் டிருந்தவள் அவன் தன் பேச்சை காதில் வாங்குகிறானா? என சந்தேகம் வர பார்த்தாள். ஆனால் அவன் அவளை பார்த்துக் கொண்டிருந்த விதம் அவளை ரோஜாவாய் சிவக்க வைத்தது அது.

''நீ சிவந்தால் எத்தனை அழகாய் இருக்கிறாய் தெரி யுமா?'' என வாய்விட்டு சொல்லி அவனை ரசிக்கவும் வைத்தது. பின் இருவரும் பேசிக் கொண்டே இருந் தார்கள். என்ன பேசினார்கள்? உருப்படியான விஷயம் ஏதாவது இருந்ததா? எனக் கேட்டால் அது அவர் களுக்கே தெரியாது. கல், மண்ணிலிருந்து ஒபாமா, புடிங் வரை எல்லாவற்றையும் பேசினார்கள். என்ன பேசினால் என்ன? எங்களுக்கு பேசிக் கொண்டிருந்தால் போதும் என்பது போல. அவனுக்கு வேலை ஏதும் இல்லை; அவளுடன் பொழுதை கழிப்பது தான் முக்கிய மான வேலையாய் தொடர்ந்து நேரம் போவது தெரி யாமல் செய்து கொண்டிருந்தான். இடையே மேலே எட்டிப் பார்த்த சந்துரு தனக்குள் சிரித்துக் கொண்டு 'போகிற போக்கை பார்த்தால் நான் இவருக்கு தான் மச்சான் ஆவேன் போலிருக்கிறதே!' என எண்ணிய வாறே சத்தம் செய்யாமல் கீழே சென்றான்.

வேலை செய்கிற பெண் வந்து ஏதோ கேட்டபொழுது தான் மயக்கத்திலிருந்து நித்யா விழித்துக் கொண்டாள். 'ஆகா! நினைத்தது என்ன? செய்தது என்ன? இவனிடம் இயல்பாய் நடந்துகொண்டால் தோற்றுப்போவோம் என அவளுக்கு நன்றாகப் புரிந்து போனது. கடுமை காட்டினால் தான் இனி சரி வரும்!

அவள் எண்ணம் மாறியதை அவன் கண்டுகொள்ளவில்லை. தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான். இவளோ வேலை செய்வது போல் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தாள்.

''சந்துரு! உன் அக்காவிற்கு கொஞ்சம் உதவேன். அவள் எவ்வளவு வேலைகள் செய்கிறாய் பார்'' என வினய் கூற,

''சரிதான் அக்கா! இன்று முழுக்க இந்த இடத்திலேயே நின்று கொண்டிருப்பதுதான் உன் முக்கிய வேலை'' என மிகவும் தீவிரமாய் அவன் பதில் சொல்ல அவளுக்குத் தான் மிகவும் வெட்கமாய் போய்விட்டது. 'சே! எல்லாரும் கேலி பண்ணும் அளவிற்கு நடந்து கொண்டு விட்டேன். இனி கவனக்குறைவாய் இருக்கக்கூடாது' என உறுதிப்பூண்டாள்.

தீப்தி டேட்டிங் சென்ற கதையை விலாவாரியாக விளக்கிக் கொண்டிருந்தாள். எழுந்து செல்ல முடியாமல் நித்யா அதை கேட்டுக் கொண்டிருந்தாள். உடன் இருந்த சாராவுக்கும் எரிச்சல் மூண்டது. ''உனக்கு வேலை எதுவும் இல்லையா தீப்தி? காலம் கார்த்தாலே கதை அளந்து கொண்டிருக்கிறாய்?'' என்றாள்.



''ஏனப்பா என் சந்தோஷத்தை தோழியுடன் பகிர்ந்து கொள்வது தவறா?''

''எல்லாவற்றிற்கும் எல்லை உண்டு. நீ கிளம்பு! எங்களுக்கு ஓய்வு எடுக்கக்கூட நேரமில்லாமல் வேலை காத்திருக்கிறது'' அவள் வேண்டாவெறுப்பாய் கிளம்பிச் சென்றாள்.

'இவளுடன் இவ்வளவு நெருக்கமாக பழகிக் கொண்டு என்னை ஏன் வினய் தொந்தரவு செய்கிறார்? ஆனால்... அவர் என்னிடம் தவறாக எதுவும் பேசவில்லையே? நட்பு முறையில் தானே பழகுகிறார். என் மனது சஞ்சலப்படுவதற்கு அவர் எப்படி பொறுப்பேற்க முடியும்? நான் தான் கடுமை காட்டி விலக வேண்டும்.'

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு சாரா சொன்னாள்.

''நித்யா, இவள் விடுகிற கதைகளை எல்லாம் நம்பாதே! இவள் பேச்சில் 1 சதவீதம் உண்மை இருக்குமா என்று கூட எனக்கு சந்தேகம் வருகிறது. இவளை நம் லாயராக வைத்திருப்பதை கூட மாற்ற வேண்டும். இவளால் நமக்கு நன்மைகள் கிடைக்கிறதோ இல்லையோ இடைஞ்சல் வராமல் இருக்குமா என யோசி. இவள் பேச்சே பொய்யில் தான் ஆரம்பிக்கிறது. வினயுடன் டேட்டிங் போனதாக சொல்கிறாளே அது என்றைக்கு என்று சொன்னாளா? ஒரு வாரம் இவள் இப்பொழுது ஊருக்குச் சென்றாளே அது எதற்கு தெரியுமா? ஒரு பள்ளி மாணவி தீக்குளித்து இறந்துவிட்டாள். அது தற்கொலையா? கொலையா? என்று விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. கொலைக்குற்றம் சாட்டப்பட்டவனை அப்பாவி போல சித்தரித்து, பெற்றோரை பெண்ணை தற்கொலைக்கு தூண்டியதாக கைது செய்து

சிறையில் அடைக்கும் வேலையை செய்துவிட்டு வந்திருக்கிறாள். இவளிடம் நேர்மை இல்லை. பணம் எப்படி கிடைத்தாலும் அவளுக்கு சரிதான். மானம், அவமானம் பற்றி எல்லாம் கவலைப்படும் ரகமில்லை இவள்! அதனால் கூசாமல் எதுவும் சொல்வாள்; செய்வாள். நம் மனநிலைக்கு தீப்தி சரிவரமாட்டாள்; பரத் சொன்னதற்காக இவளை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. பரத்திற்கு இவளைப் பற்றி தெரிந்தாலே வேண்டாம் என்று கூறிவிடுவான்.''

'எந்தப் பெண்ணாவது உறவு இல்லாமல் ஆணை இணைத்து பேசுவாளா? வினயைப்பற்றி உருகி உருகி பேசுகிறாள். நேசம் இல்லாமல் இப்படி பேச முடியுமா? வினயின் அம்மா கூட சொன்னாரே பள்ளித்தோழியின் பெண்ணை மருமகளாக தேர்ந்தெடுத்ததாக தீப்தி தானே அவரது தோழியின் பெண்! தீப்தி பணத்திற்காக எதுவும் செய்பவளாக இருக்கலாம். ஆனால் வினய் விரும்பும் பெண்ணாக இருப்பதில் என்ன தவறு இருக்கிறது? இதில் நான் ஏன் பொறாமைப்பட வேண்டும்?'

அப்போது ஓர் ஆள் வந்து கடிதக் கவரை அவளிடம் கொடுத்தான்.

*''ஹாய், இத்துடன் சினிமா டிக்கெட் இணைத்திருக்கிறேன். அவசியம் மாலையில் மாயாஜால் வந்துவிடு. உனக்காக காத்திருப்பேன்.*

*இப்படிக்கு*

*உன் வினய்''*

முடித்திருந்தது. யாரிடம் இதை கொடுக்கச் சொன்னான்? என அவளுக்கு சந்தேகம் வந்தது. கவரில் பேர் எதுவும் எழுதியிருக்கவில்லை. எனவே தன்னிடமா? தீப்தியிடமா? என யோசித்தாள். வந்தவனோ அவளிடம் தான் கொடுக்கச் சொன்னதாகக் கூறினான். ஆனால் இவளோ இது தனக்கு இல்லை என உறுதியாக நம்பினாள். எனவே கவரில் கடிதத்தையும், டிக்கெட்டையும் திரும்பப் போட்டு தீப்தியிடம் கொடுக்குமாறு முகவரி எழுதிக் கொடுத்து அனுப்பினாள். தீப்திக்கு அதைப் பார்த்ததும் மிகவும் உற்சாகமாக போய்விட்டது. மாலை வேளைக்கு அதிக எதிர்பார்ப்புடன் காத்திருந்து கவனமாக மேக்கப் செய்து கொண்டு கிளம்பினாள். லோகட் சுடிதார், சற்று தூக்கலான லிப்ஸ்ட்டிக், ருஜ் சகிதமாய் ஆட்டோவில் போய் மாயாஜாலில் இறங்கினாள். நித்யாவின் வருகைக்காக காத்திருந்த வினய், இவளைப் பார்த்து புருவம் சுருக்கினான். 'இவள் ஏன் இங்கு வந்தாள்?'

''ஹலோ வினய்!'' என அவள் அருகே வந்தாள். அதற்குள் யாருக்கோ போன் செய்தான் வினய்.

''மடையா! யாரிடம் கடிதத்தை கொடுத்தாய்? ஒரு விஷயத்தை சொன்னால் சொன்னபடி உன்னால் செய்ய முடியாதா? என்ன? உனக்கு எங்கே அறிவு போயிற்று? என்னிடம் அல்லவா வந்து கேட்டிருக்க வேண்டும்?'' என பொரிந்து தள்ளிவிட்டு அவளைப் பார்த்து திரும்பினான்.

''ஸாரி மேடம்! நான் அந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதவில்லை. என் வுட்பீ நித்யாவிற்கு எழுதினேன். அது தவறுதலாக உங்களிடம் வந்து சேர்ந்துவிட்டது. பரவாயில்லை; நீங்களே படம் பாருங்கள். நான் சென்று அவளைப் பார்த்துக் கொள்கிறேன்.''

'அவன் அவள்மேல் அனலை அல்லவா வாரிக் கொட்டி விட்டு சென்றிருக்கிறான். அவள் கண்ட கனவு என்ன? அவன் வீசிய சொற்கள் என்ன? வுட்பீ நித்யாவாமே? எப்படி இருவரும் இணைந்தார்கள்? ஊமைகோட்டான் மாதிரி இருந்து கொண்டு எவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கிறாள்? நான் அளந்த அளப்பை எல்லாம் அப்படியே நம்பிய மாதிரியே தோன்றியதே? அவள் அவ்வளவு பெரிய நடிகையா?கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்க்கலாமா?'

நித்யாவிற்கு போன் செய்தாள்.

''பாரேன் நித்யா! என்னை மாயாஜாலுக்கு வரச் சொல்லி விட்டு அவர் கோபித்துக் கொண்டு சென்று விட்டார். எதை வேண்டுமானாலும் என்னால் தாங்கிக் கொள்ள முடியும்; அவர் உதாசீனத்தை மட்டும் என்னால் பொறுத்துக் கொள்ளவே முடியாது'' என கண்ணீர் விட்டு அழுதாள்.

கோபமாகத்தான் வினய் நித்யாவை பார்க்கச் சென்றான். வினய் சைட்டில் நுழைந்த பொழுது களைத்துப் போயிருந்த நித்யாவின் முகத்தை பார்த்து ஒரு வினாடி தன் வேகத்தை கட்டுப்படுத்திக் கொண்டான். ஆட்கள் நகர்ந்ததும் அருகில் போய் ''ஏன் எதையும் புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறாய்? நான் என்ன செய்தால் என் அன்பை புரிந்துகொள்வாய்?'' தணிவாகத்தான் கேட்டான். ஆனால் நித்யா தான் பொங்கிவிட்டாள்.

''நான் ஏன் புரிந்து கொள்ள வேண்டும்? உங்கள் அன்பை புரிந்து கொள்ள வேண்டியவர்களிடம் அதை காண்பியுங்கள்!''



''சுத்த மடச்சிதான் நீ! உனக்கு நீயே ஏன் திரை போட்டுக் கொள்கிறாய்? உன்னையே புரிந்து கொள்ளா விட்டால் நீ யாரை புரிந்து கொள்ளப்போகிறாய்? நன்றாக இருக்கிறேனா என்று என்னை ஒரு வாரம் பார்க்கா விட்டால் விசாரிக்கிறாய்; என்னை பார்க்க மறுத்து விட்டு நான் சென்ற வழியையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்; என் ரசனையை, விருப்பத்தை, எண்ணத்தை புரிந்து வைத்திருக்கிறாய்; இதற்கும் மேலாக கத்திக்குத்து வாங்கி மயக்கத்தில் இருந்தபொழுது என் கைகளை பிடித்துக் கொண்டு வினு, வினு புலம்பியதும், அடிக்கடி சிவக்கின்ற உன் முகம் கூட உன்னை உனக்கு உணர்த்தவில்லையா? ஏன் இப்படி முட்டாளாக இருக்கிறாய்?

''வேண்டாம், வேண்டாம்! எனக்கு எதுவும் வேண்டாம்! தயவு செய்து இங்கிருந்து நீங்கள் சென்றுவிடுங்கள்! நான் உங்களுக்கு ஏற்றவள் இல்லை! இது சரி வராது! எல்லாம் போதும் போய்விடுங்கள்! யார் மனதிலும் கனவை வளர்த்து ஏமாற்றாதீர்கள்; போங்கள் ப்ளீஸ்!''

''ஏய்! உளறுவதை முதலில் நிறுத்து! இப்பொழுது நான் போகிறேன். அறிவு என்று ஒன்று இருந்தால் யோசித்துப் பார்! இதற்கு மேல் இங்கு நின்று வேலை செய்யும் இடத்தில் உன்னை அவமதிக்க விரும்பவில்லை வருகிறேன்'' என அவன் விறுவிறு என்று காரை நோக்கி நடந்தான்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த பரத் சிலையாகி இருந்தான். நித்யா அவன் சென்றதும் முகத்தை கைகளால் மூடிக் கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

# 20

நித்யாவும், வினய்யும் பேசிக் கொண்டிருந்தது மேல்தளத்தில். நல்லவேளை யாரும் அங்கில்லை. பரத் அவளை நன்கு அழவிட்டான். அவள் மனசுக்குள் இருந்த அத்தனை ஏக்கங்களும் தீருமளவிற்கு அழுது தீர்த்தாள். பின் பரத் அருகில் வந்தான். ''போதும் நித்யா! நீ வீட்டிற்கு கிளம்பு. உன் வீட்டிற்கு அல்ல; என் வீட்டிற்கு போ. அம்மாவும், அப்பாவும் உனக்கு தெம்பூட்டு வார்கள்.''

''சரி! பரத்'' அதற்கு மேல் ஒரு வார்த்தைக்கூட அவள் பேசவில்லை. பரத் அவளை ஆட்டோவில் அனுப்பிவிட்டு சந்துருவிடம் வந்தான். ''சந்துரு எனக்கு ஒரு முக்கிய வேலை இருக்கிறது. வினயிடம் அவசியம் பேச வேண்டும். நாளை நீதான் காலையில் வேலைகளை கவனித்துக் கொள்ள வேண்டும். சாராவையும் வரச் சொல்லிவிடுகிறேன். அவள் உனக்கு உதவுவாள்.''

மடமடவென்று ஒவ்வொரு காரியத்தையும் பரத் செய்ய ஆரம்பித்தான். தன் தந்தைக்கு போன் செய்து நித்யாவைப் பற்றி சுருக்கமாகச் சொல்லி அவளை கவனித்துக் கொள்ளச் சொன்னான். சாராவிடம் பேசிய பொழுது அவனுக்கு நிறைய விஷயங்கள் தெரிய வந்தன. நித்யா விஷயங்களை யோசித்தால் தானே



புரிந்து கொள்வாள் என உறுதியாக நம்பினான். அவளே யோசித்து முடிவு எடுக்கட்டும்! ஆனால் அவன் வின யிடம் பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன. இரவே போன் செய்து வினயிடம் பேச மறுநாள் நேரம் ஒதுக்க முடியுமா? எனக் கேட்டு நேரத்தை உறுதி செய்து கொண்டான்.

மறுநாள் வினயும் பரத்தும் காரில் மகாபலிபுரம் பீச்சிற்கு சென்றனர். ''என்ன பரத்?''

''உங்களுக்கு நித்யா மேல் எந்த கோபமும் இல் லையே?'' எனக் கேட்டான்.

''அந்த முட்டாள் பெண்ணைப் பற்றி என்ன சொல்லச் சொல்கிறீர்கள்?''

''ப்ளீஸ்! அவள் மேல் கோபம் கொள்ளாதீர்கள்! உங்களுக்கு நடந்தது எதுவும் தெரியாது. நித்யா யார் மனதும் நோகக் கூடாது என்று தான் அவள் நினைப்பாள். உங்கள் மேல் மிகுந்த நேசம் இருந்தும் நீங்கள் வேறு பெண்ணை விரும்புகிறீர்கள் என நினைத்து ஒதுங்கிப் போனாள். இவ்வளவு நாள் அவள் இலட்சியத்தை தவிர வேறு எதையும் நினைத்துக்கூடப் பார்த்தது இல்லை.''

''என்ன நான் வேறு பெண்ணை விரும்பினேனா? யார் அந்த புதிய கண்டுபிடிப்பு?''

''அப்படித்தான் கதை சொல்லி அவளை நம்ப வைத்திருக்கிறாள்!''

''யார்?'' ''தீப்தி தான்'' ''என்ன? அவள் ஆயிரம் சொல்லி இருக்கட்டும்; இவள் என்னிடம் அல்லவா விளக்கம் கேட்டிருக்க வேண்டும்.''

''அவள் தயங்க இன்னொரு காரணமும் இருக்கிறது!''

''வேறு என்ன?''

பரத் சொல்லத் தொடங்கினான்.

* * *

மதுரை அரசு மருத்துவமனையில் டியூட்டி முடிந்து மீரா வெளியே வந்தாள்.

''மீரா வா, நான் வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறேன்.''

''வேண்டாம் டாக்டர். நானே போய் கொள்கிறேன்.''

''நீ இன்னும் எங்களை மன்னிக்கவில்லையா மீரா?''

''நிஜமாகவே எனக்கு எந்த கோபமும், வருத்தமும் இல்லை.''

''இல்லை மீரா! இன்னும் என் மனது உறுத்திக் கொண்டே இருக்கிறது. என் பெற்றோரை மீறி உன்னை கரம்பிடிக்க முடியவில்லை. எனக்கு திருமணம் ஆகி பரத் பிறந்து மூன்று வருடங்களாகி விட்டன. ஆனால் நீ மட்டும் இப்படியே இருப்பது எனக்கு தண்டனை போல் இருக்கிறது.''

''நீங்கள் அப்படி எல்லாம் நினைக்க வேண்டாம். என் வாழ்க்கைக்கும் ஓர் அர்த்தம் உண்டு. அதை நானே முடிவு செய்து கொள்கிறேன். ப்ளீஸ்!''

அவள் சென்றுவிட்டாள். பரத்தின் தந்தைக்கு மீராவை திருமணம் செய்து கொள்ள மிகவும் ஆசை. மீராவுக்கும் அதில் விருப்பம் இருந்தது. ஆனால் பரத்தின் தாத்தா வின் பேச்சை மீறி அவரால் எதுவும் செய்ய முடியாது. அவர் கண் அசைவே அவர் சட்டமாகிவிடும். இருந்தும் மீராவை மணந்து கொள்ள விரும்புவதை அவர் வீட்டில் தைரியமாக சொல்லியே விட்டார்.



பரத்தின் பாட்டிக்கு ஆண் வாரிசு இல்லாத வீட்டில் பெண் எடுக்க விருப்பம் இல்லை. மேலும் தன் அண்ணன் மகளையே தன் மகனுக்கு மணமுடிக்க அச்சாரம் செய்து வைத்திருந்தார். தாத்தாவிற்கு பெண் என்றால் வீட்டில் தான் இருக்க வேண்டும்; வெளியில் வேலைக்கு எல்லாம் போகக்கூடாது என்று எழுதப்படாத சட்டமாகவே கடைபிடித்து வந்தார். அப்படிப்பட்டவர் மீராவை மறுக்க அதையே உறுதியாக கையிலெடுத்துக் கொண்டார்.

''நீ என் மகனை கல்யாணம் செய்து கொள்ளணும் என்றால் மருத்துவ தொழிலை விட்டுவிட வேண்டும்'' என கண்டிஷன் போட்டார்.

சிறுவயதிலிருந்து கனவு கண்டு போராடி படித்த படிப்பை விட்டுக் கொடுக்க மீரா தயாராக இல்லை. ''இப்போதைக்கு விட்டுக் கொடுப்பது போல் ஒத்துக் கொள். கல்யாணம் ஆன பிறகு உன்னிஷ்டப்படி செய்து கொள்ளலாம்'' என பரத்தின் தந்தை கூறியதை அவள் ஒத்துக் கொள்ளவில்லை.

''ஒரு கல்யாணம் ஏமாற்றத்திலும், பொய்யிலும் ஆரம்பிக்க வேண்டாம். நீங்கள் அவர்கள் விருப்பப் படியே திருமணம் செய்து கொள்ளுங்கள்'' என மீரா உறுதியாக மறுத்துவிட்டாள். அவரும் மாமன் மகளை கரம் பிடித்தார். ஆனாலும் மீராவை பார்க்கின்ற ஒவ் வொரு விநாடியும் தன்னால் அவள் வாழ்க்கை பாதிக்கப் பட்டது உறுத்திக் கொண்டே இருந்தது. ஆசை என்பதே இல்லாதவளாய் சேவையையே முதல் குறிக்கோளாய் மீரா செயல்பட மருத்துவமனையில் ஒவ்வொரு நோயாளி யும் 'டாக்டர் அம்மா மீரா தான் வேண்டும்' என தேடி

வர ஆரம்பித்தனர். கனிந்த வார்த்தைகள், நம்பிக்கை தரும் கவனிப்பு, மகிழ்ச்சியூட்டும் முகமுமாய் அவள் வலம் வர ஆரம்பித்தாள். எல்லாரும் நோய் பாதி குணமாகி விட்டதாகவே நம்பினர். விரைவில் 'கைராசி மருத்துவர்' என பெயர் எடுத்துவிட்டாள். அவள் கையில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் அவள் ஆசீர்வாதத்தோடு பெயர் வைத்து தான் பலர் வீட்டிற்கு எடுத்துச் சென்றனர். ஆபரேஷன் தியேட்டருக்கு போகும் நிலையில் உள்ள பெண்கள் கூட அவர் கைப்பட்டால் சுகப் பிரசவம் ஆகிவிடும் என நம்பி வந்தனர்.

* * *

''என்னடியம்மா! எங்கே கோவிலுக்கு போயிட்டு வர்றியா?'' என நிறைமாத கர்ப்பிணியான அந்தப் பெண்ணைப் பார்த்து கேட்டாள் ஒரு நடுத்தர வயது பெண்மணி.

''ஆமாம் பெரியம்மா! இந்த குழந்தையாவது ஆம்புள பிள்ளையா பிறக்கணும்னு வேண்டிக்கிட்டு வர்றேன். ஏற்கனவே ரெண்டு பொட்டைப்புள்ளை. இது ஆம்பிள பிள்ளையா பிறக்கலைன்னா அவ்வளவுதான்! என்னால நினைச்சுக்கூட பார்க்க முடியலை.''

''எந்த கோவிலுக்கு போயிட்டு வருகிறாய்?''

''மாரியாத்தாளுக்கு தான் வேண்டிக்கிட்டு இருக்கேன்.''

''ஏன்டி, அவளும் பொம்பளை ஆச்சே? பொம்புள புள்ளை வேண்டாம்னு சொல்லுவாளா?''

''இரு பெரியம்மா! ஒரு பொம்பளைக்கு தானே பொம்பளையோட கஷ்டம் புரியும்.''

''அதுவும் சரிதான். உன்னோட கஷ்டத்துக்கு ஒரு விடிவு பொறந்தா சரி. விடிஞ்சா நித்தமும் ஏச்சும்



பேச்சுமாய் உன் காலமும் ஓடுகிறது. அடியும் வசவும் வாங்கி இன்னமும் உயிரை பிடித்துக் கொண்டு உன் புள்ளைகளை நினைச்சு வாழ்ந்து கொண்டிருக்கிறாய். கடவுள் கண் தொறக்கட்டும்.''

''வரேன் பெரியம்மா! வீட்டில் நிறைய வேலை கிடக்கிறது. எல்லாம் நான் போய் தான் பார்க்க வேண்டும். பள்ளிக் கூடத்துக்கு பிள்ளைகளை அனுப்ப வேண்டும். மதியத்துக்கு மாட்டுக்கு கொடுக்க பருத்திக்கொட்டை ஆட்ட வேண்டும். துணிமணி எல்லாம் அம்பாரமாய் குவிஞ்சு கிடக்கு. அதை வேறு துவைக்க வேண்டும்.''

''பாவம் இந்த பொண்ணு! மாமியார்காரி ஒத்த ஆம்பிளை பிள்ளையை பெத்த மிதப்பில் எவ்வளவு பாடு படுத்திக்கிட்டு இருக்கிறாள். அவள் ஒரு பெண்ணை பெத்திருந்தால் பெண்ணோட கஷ்டம் புரிஞ்சிருக்கும். மகமாயி தாயே நீதான் இவ கஷ்டத்தை போக்கணும். இன்னிக்கோ, நாளைக்கோ பிள்ளை பெத்துடுவா போலிருக்கு. தாயே இவளுக்கு துணையிரும்மா.''

* * *

''பார்த்து, பார்த்து மெதுவாய் நடம்மா! என் மகனுக்கு வலிக்கப் போகிறது'' என தன் இளம் மனைவியை கைப்பிடித்து அழைத்துச் சென்றான் அந்தக் கணவன். இருவரும் மிகவும் பொருத்தமான ஜோடியாய் இருந்தனர்.

''அதெப்படிங்க பையன் என்று உறுதியாய் சொல்றீங்க'' என ஒருவர் கேட்க,

''ஜோசியக்காரர் அடித்து சொல்லி இருக்கிறார்; எனக்கு பையன்தான் பிறப்பான் என்று. மேலும் எங்க

குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாய் எல்லாருக்கும் ஆண் வாரிசு தான் மூத்ததாய் பிறந்து இருக்கு. பெண் பிறப்பது ரொம்பவும் அரிது.'' என அவன் தன் மீசையை தடவிக்கொண்டு பெருமை பேசினான்.

பாலும், பிஸ்தாவும், குங்குமப்பூவும், பழமுமாய் மனைவியை கவனித்து இருப்பான் போலிருக்கு. நிறை மாத கர்ப்பிணியான அந்தப் பெண் பளபளவென மின்னும் தோலுடன் மிகச் செழுமையாய் இருந்தாள்.

''எங்களுக்கு அடுத்தவங்க பொருளை தொடுவதே பிடிக்காது. எல்லாம் நம்ம வீட்டுதாய் இருக்கவேண்டும் என்று நினைப்போம். பால், பழம் எதை சாப்பிட்டாலும் அது எங்க குடும்பத்தில் விளைந்ததாக இருக்க வேண்டும். அடுத்தவர் வீட்டுப் பொருளை சாப்பிட்டால் அவங்க வீட்டு குணம் படிஞ்சிடும்; எங்க பரம்பரை சுத்தமாய் பிறக்கணும், இருக்கணும்னு ரொம்ப கவனமாய் இருக்கோங்க.''

''அது சரி ஐயா! பிரசவமாவது டாக்டரை பார்க்க அனுமதிப்பீங்களா? இல்லை அதுவும் வீட்டுக்குள்ளேயே தானா?''

''அதெப்படிங்க! என் பையனும், மனைவியும் நல்லா இருக்கணும் இல்லியா? அதனால டாக்டருகிட்டே தாங்க காண்பிப்போம். இன்னும் இரண்டொரு நாளில் குழந்தை பிறந்திடும்னு டாக்டர் சொல்லியிருக்காங்க. நீ என் மேலே சாஞ்சாப்பல நடந்து வாம்மா! கார்ல போயிடலாம்.''

* * *

மாலை நேரம் மீரா தான் மருத்துவமனையில் டியூட்டியில் இருந்தாள். இரு கர்ப்பிணி பெண்கள் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவள் தான் பிரசவம் பார்க்க வேண்டியிருந்தது. ஒருத்தி ''ஏம்மா! டாக்டரம்மா எனக்கு ஆம்பிளை புள்ளை தானம்மா பிறக்கும்?'' என கேள்வி கேட்டாள், அவள் ரெண்டு பெண் குழந்தைகளின் தாய். மீரா புன்னகைத்தாள்.



மற்றொருத்தியோ, ''எனக்கும் ஆண் பிள்ளைதான் என்று என் வீட்டுக்காரர் சொல்லி இருக்கிறார். நாங்க தனியார் மருத்துவமனையில் தான் காண்பிச்சுகிட்டு இருந்தோம். பிரசவம் சிக்கல்னு சொன்னாங்க. அதுதான் இந்த டாக்டர் அம்மா கைராசியானவங்க நம்மை காப்பாத்துவாங்கன்னுட்டு இங்கே வந்துட்டோம்'' என்றாள்.

மீரா இருவருக்கும் பொதுவாய், ''ஆரோக்கியமான குழந்தை பிறக்கட்டும்; நீண்ட ஆயுளுடன் வாழட்டும்'' என வாழ்த்திவிட்டு அவர்களை பரிசோதித்தாள்.

முதல் பெண்ணுக்கு பிரசவ வலி வந்துவிட அவளை லேபர் வார்டுக்கு கொண்டு சென்றனர். மீரா அவசர அவசரமாய் கையுறை மாட்டிக் கொண்டு அங்கே சென்றாள். அவளுடன் இன்னொரு மருத்துவர் சித்ராவும் உடன் சென்றாள். அந்தப் பெண் சரியான சத்துணவு சாப்பிடாமல் இருந்ததால் பிரசவத்தின் மிகவும் சிரமப்பட்டாள். முக்கி குழந்தை பிறக்க மிகுந்த சக்தி தேவைப்பட்டது. கஷ்டப்பட்டு பிறந்த குழந்தையை கூட பார்க்க முடியாமல் மயக்கமாகிப் போனாள். ''குழந்தை இன்னும் அழவில்லை டாக்டர்.

''அதுக்கு ஆக்சிஜன் சிலிண்டர் மூலம் ஆக்சிஜன் கொடுங்க.''

சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே இரண்டாமவள் வலியுடன் அந்த அறைக்குள் கொண்டு வரப்பட்டாள். குழந்தை அதிக எடையுடன் இருந்ததால்

பிறப்பதற்கு மிகவும் சிரமமாய் இருந்தது. மிகவும் போராடி வெளியே எடுத்தனர். அந்தப் பெண்ணிற்கு முதல் பிரசவமாய் இருந்ததால் பயத்திலேயே மயக்க மாகி இருந்தாள்.

"சித்ரா முதல் குழந்தைக்கு ஆறாம் எண் டோக்கனை மாட்டி அந்த அறைக்கு ஆயாம்மாவை கொண்டு விடச் சொல். இரண்டாம் குழந்தை ஒன்பதாம் எண் அறை தானே? அந்த டோக்கனை மாட்டி தாயுடன் கொண்டு விடச் சொல்" சொல்லிவிட்டு வெளியே வந்த பொழுது தொலைபேசி அழைத்தது. "டாக்டர்! உங்களைத்தான் கூப்பிடுறாங்க" மீரா அதனை எடுத்தாள். பரத்தின் தாய் தான் பேசினாள். "மீரா! எனக்கு ஒரே பயமாய் இருக்கு! சீக்கிரம் வா! அத்தையும், மாமாவும் போன கார் ஆக்ஸிடென்ட் ஆயிடுச்சு! அவரும் மெட்ராஸுக்கு போயிருக்கிறார். எனக்கு எங்க போறது? என்ன செய்யறதுன்னு தெரியலை? உடனே வா."

"கவலைப்படாதே மீனாட்சி! உடனே வருகிறேன்." சித்ராவிடம் சொல்லிவிட்டு அடுத்த டியூட்டி டாக்டரும் வந்துவிட அவசரமாய் அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு கிளம்பினாள். திண்டுக்கல்லில் விபத்து நடந்து இருந்தது. விரைந்து அங்கே புறப்பட்டவள் செல்லும் வழியிலேயே திருச்சி மருத்துவ மனைக்கு தகவல் சொல்லி வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொண்டே சென்றாள். மிகவும் பலமான அடிதான். அவள் சென்றபொழுது மருத்துவ முதல் உதவி வாகனம் வந்து சேர அவர்களை ஏற்றிக் கொண்டு திருச்சியை நோக்கி விரைந்தனர். கோல்டன் ஹவர்ஸ் எனப்படும் விபத்து நடந்து காப்பாற்ற கிடைக்கும்





பொன்னான நேரத்தில் அவர்களுக்கு உதவி கிடைத்ததால் சிறு ஊனத்துடன் தப்பி பிழைத்தனர். பரத்தின் பாட்டிக்கு தன் இரத்தத்தை வேறு கொடுத்திருந்தாள் மீரா. அவர்கள் அவளைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டனர். "நீதானம்மா எங்கள் குல தெய்வம்! எந்த மருத்துவத் தொழில் நீ பார்க்கக்கூடாது என்று தடுத்தேனோ, அதனால்தான் நீ என்னைக் காப்பாற்றி இருக்கிறாய். நீ என் குடும்பத்திற்குள் குறுகிப் போகாமல் சேவையை தேர்ந்து எடுத்துவிட்டாய். இன்னொரு ஜென்மம் இருந்தால் நாங்க உன் பிள்ளையாய் பிறந்து இந்தக் கடனை தீர்க்க வேண்டும் தாயே!"

"அம்மாடி! என் குடும்ப இரத்தம் தான் எனக்கு மருமகளாய் வரணும்னு நினைச்சேன். உன் இரத்தத்தை கொடுத்து எனக்கு தாயாகிவிட்டாய் மகளே!" என தன் தந்தையும், தாயும் மீராவை ஆசீர்வதிப்பதையும், மனமார வாழ்த்துவதையும் கண்ணீர் நிறைய பார்த்துக் கொண்டிருந்தார் பரத்தின் அப்பா.

இங்கே களேபரம் முடிந்து மதுரைக்கு சென்றபொழுது அங்கே வேறு ஒரு கலாட்டா ஆரம்பித்து இருந்தது. பிரசவித்த இரு பெண்களுமே ஆண் குழந்தை தன்னுடையது என உரிமை கொண்டாட ஆரம்பித்து இருந்தனர்.

"என்ன ஆச்சு சித்ரா? ஆறாம் எண் ஆண் குழந்தை. ஒன்பதாம் எண் பெண் குழந்தை தானே? பின் எப்படி குழப்பம் நேர்ந்தது?"

"ஆயாம்மா டோக்கன் எண்ணை மாற்றி போட்டு விட்டாள். ஆறும், ஒன்பதும் ஒரே மாதிரி இருந்ததால் குழம்பிப் போய் மாற்றி குழந்தைகளுடன் இணைத்து விட்டாள். அதனால் பிரச்சனை ஆகி போய்விட்டது

ஆறாம் எண் அறை பெண் ஆண் குழந்தை இல்லாமல் தான் வீட்டிற்கு போகமுடியாது; என் குழந்தை தான் வேண்டும் என்று அழுது தீர்த்துவிட்டாள். அவள் மாமியார் வந்து வசைமாரி பொழிந்துவிட்டாள்.''

''உண்மையில் அது அவள் குழந்தை தானே? பின் எப்படி விட்டுக் கொடுப்பாள்? அதுவும் அவளுக்கு பிரச்சனை வேறு அதிகம்.''

''ஒன்பதாம் எண் பெண் பெண் குழந்தையை அவள் குழந்தையாக ஏற்றுக் கொள்ள மறுத்ததுடன் ஆண் குழந்தைக்கு அந்தப் பெண் பால் தருவதற்கும் அனுமதிக்கவில்லை. இரண்டு குழந்தைகளுமே தாய்ப்பால் இல்லாமல் மருத்துவ பாதுகாப்பில் உள்ளன. போலீஸ் கம்ப்ளெய்ண்ட் வரை போய்விட்டது. போலீஸ் விசாரணை செய்தும் அவர்கள் முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை!''

''அட! இது என்ன அநியாயமாக இருக்கிறதே? சீஃப் டாக்டர் என்ன சொன்னார்? இரத்த பரிசோதனை செய்து பார்த்து யார் குழந்தை என்று கண்டுபிடிக்கலாம் என கூறிவிட்டார். அதற்கும் அந்த இரண்டாவது பெண் ஒத்துக் கொள்ளவில்லை. சாலை மறியல் அது இது என இறங்கிவிட்டார்கள்.''

''பின் என்னதான் ஆச்சு?''

''போலீஸ் அதிகாரி வந்து சத்தம் போட்டு விரட்டி விட்டார்.''

''இரு நான் போய் பேசுகிறேன்'' என மீரா அங்கே சென்றாள்.

''ஏம்மா! இப்படி செய்கிறாய்? முதலில் பிரசவம் பார்த்த பெண்ணிற்கு தான் ஆண் குழந்தை பிறந்தது.



உனக்கு பிறந்தது பெண் குழந்தை அம்மா! ஆயா தவறுதலாய் நம்பரை மாற்றிப் போட்டு உன்னிடம் கொண்டு வந்து கொடுத்ததால் அது உன் குழந்தை ஆகிவிடுமா? ஒரு பொழுது வைத்திருந்தற்கே நீ உரிமை கொண்டாடினால் அதற்கு சொந்தமானவள் எப்படி விட்டுத் தருவாள்? ஏற்கனவே அந்தக் குழந்தை பலவீனமாக இருக்கிறது. இப்படி தாய்ப்பால் இல்லாமல் இருந்தால் அதற்கு ஏதாவது ஒன்று வந்தால் யார் பதில் சொல்வது?''

''நீங்க என்ன சொன்னாலும் ஏற்றுக் கொள்ள முடியாது டாக்டர்! எங்கள் வீட்டு குழந்தைக்கு அந்தம்மா பால் கொடுப்பதை ஒத்துக் கொள்ள முடியாது'' என அந்தப் பெண்ணின் கணவர் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தான். அப்போது நர்ஸ் ஓடி வந்தாள்.

''டாக்டர்! அந்த ஆண் குழந்தைக்கு பிட்ஸ் வந்துடுச்சு!'' மீரா பரபரவென்று ஓடினாள். மருத்துவர்கள் குழு கடுமையாக போராடியும் அந்தக் குழந்தையின் உயிரை காப்பாற்ற முடியவில்லை. குழந்தையை பெற்றவள் ஆண் குழந்தையின் உடலைத்தான் பெற முடிந்தது.

பெண் குழந்தையை பெற்றவளோ கடைசி வரை அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ''இந்தக் குழந்தை என் குழந்தை இல்லை. எனக்கு வேண்டாம்'' எனக் கூறி விட்டு மருத்துவமனையில் இருந்து கிளம்பிவிட்டாள்.

பெற்றத்தாயாலேயே கைவிடப்பட்ட பெண் குழந்தை மீராவை விழி மலர்த்தி பார்த்தது; மென்மையாய் பூஞ்சிரிப்பு சிரித்தது.

மீராவுக்குள் தாய்மை உணர்வு விழித்துக் கொண்டது. குழந்தையை அள்ளி அணைத்துக் கொண்டாள்.

போலீசாரிடம் அந்தப் பெண் குழந்தைக்கும், அவளுக்கும் சம்பந்தம் இல்லை என எழுதிக் கொடுத்து போயிருந்தாள். அதை வைத்து சட்டப்படி குழந்தையை மீரா தத்து எடுத்துக் கொண்டாள். அதற்கும் பல்வேறு பிரச்சனைகளை சந்திக்க வேண்டியிருந்தது. அதை எல்லாம் முடித்துக் கொண்டு வேலை மாற்றல் உத்தரவுடன் குழந்தையோடு திருச்சிக்கு கிளம்பிவிட்டாள்.

''என் வாழ்விற்கும் அர்த்தம் கிடைத்துவிட்டது'' என அகமகிழ்ந்து போனாள். தெய்வம் தந்த பூவை கண்ணின் மணிபோல வளர்த்தாள். பரத்தும் பள்ளியில் படிக்க மீரா வீட்டிற்கே வந்து சேர்ந்தான். இரு குழந்தைகளும் இணைந்தே வளர்ந்தனர். ஹைஸ்கூல் இருவரும் பெங்களூரில் படித்தனர். பின் கல்லூரி படிப்பை ஆளுக்கொரு திசையில் பயின்றனர்.

''நித்யாவிற்கு மனசுக்குள் ஒரு வைராக்கியம்! தான் பெண் என்றதால் தானே பெற்றவளே ஒதுக்கிவிட்டுப் போனாள்? வாழ்க்கையில் பெரிய அளவில் உயர்ந்து பெண் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும். உலகம் பாராட்ட வேண்டும்; வரலாற்றில் இடம் பிடிக்க வேண்டும். இவளை ஏன் வேண்டாம் என்று தூக்கி எறிந்தோம் என்று அவள் பெற்றோர்கள் வருந்துகிறார்களோ இல்லையோ? எல்லாரும் இவளைப் போல பெண் இல்லையே என ஏங்க வேண்டும் என ஆசைப்பட்டாள். அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டாள். நாங்கள் ப்ரியாவைப் பார்க்க உங்கள் வீட்டிற்கு வந்த பொழுது அத்தை பாரம்பரியம் பற்றி பேசிய பிறகு ரொம்பவும் மனம் உடைந்து போனாள். எனக்கு என் பாரம்பரியம் தெரியாது தானே? மீரா அம்மா எத்தனை உசத்தியாக வளர்த்திருந்தாலும்



நான் பிறந்த இடத்தை தானே எல்லாரும் கேட்பார்கள் என புலம்பினாள்.

அப்போது எனக்குப் புரியவில்லை. உங்கள் மேல் வளர்த்திருந்த நேசம் அவளை அப்படி புலம்ப வைத்திருக்கிறது!''

பரத் சொல்லி முடித்ததும், ''நான் இப்பொழுதே என் நித்தியை பார்க்க வேண்டும்'' என்றான் வினய்.

''அவள் இப்பொழுது எங்கள் வீட்டில் இருக்கிறாள்'' இருவரும் வீட்டிற்கு சென்றனர். ஆனால் அவள் அங்கு இல்லை திருச்சி சென்றுவிட்டிருந்தாள்.

# 21

அம்மாவை கட்டிக் கொண்டு சிறு குழந்தைபோல் உறங்கிக் கொண்டிருந்தாள் நித்யா.

''டேய் கண்ணம்மா எழுந்திரி! அம்மா ஹாஸ்பெட்டல் போக வேண்டும்!''

''பேசாமல் லீவு போடுங்கள்! அம்மாவுடன் பேச உங்கள் பெண்ணே வேலைக்கு டிமிக்கி கொடுத்து விட்டு வந்திருக்கிறாள்.''

''அதுதான் என்ன விஷயம் கண்ணம்மா? வா, வா என வருந்தி அழைத்தால்கூட வராதவள் இப்படி அடித்து பிடித்து ஓடிவர வேண்டிய காரணம் என்ன? ராத்திரி

வந்தவள் ஒன்றும் பேசாமல் அரைகுறையாய் சாப்பிட்டு விட்டு ஆளை கட்டிக் கொண்டு படுத்துவிட்டாய். என்னடா விஷயம்?''

''திருச்சியில் வாழும் மக்களை பார்ப்பதற்காகவும் தான். நீங்கள் தான் அடிக்கடி சொல்வீர்களே அம்மா, இந்த மண் மட்டும் வரலாறு பெருமை வாய்ந்தது அன்று, எளிமையும், பெருமிதமும் நிறைந்த மருத்துவர்கள் மக்களுக்காகவே வாழ்ந்த, வாழும் ஊர் திருச்சி. மருத்துவ முன்னேற்றங்கள் அதிகம் இல்லாத அந்த நாளில் மருத்துவர்கள் ஜோசப், தி.வ.ரெங்கநாதன், கோ.விசுவ நாதம், அர.கணேசன், மதுரம், அனந்தகிரி எனப் பலர் புதிய முறைகளைக் கையாண்டு நோய் அகற்றிய பெருமை வாய்ந்த ஊர். அதனால்தான் நானும் இங்கே ஓடி வந்திருக்கிறேன்.''

''அப்படியா! உனக்கு எதற்கு இப்பொழுது வைத்தியம் செய்ய வேண்டும்? மனதிற்கா? உடலுக்கா?''

'என் அம்மா புத்திசாலி!' என் மனதிற்கு தான் எனர்ஜி பூஸ்ட் வேண்டியிருக்கிறது. அம்மா? இருவரும் பேசிக் கொண்டிருந்த பொழுதே காலிங்பெல் ஒலித்தது.

''நீ இரு! நான் போய் திறக்கிறேன்.''

அம்மா செல்ல, அவர் வாலை பிடித்துக் கொண்டு செல்வது போல் அவளும் உடன் சென்றாள். கதவைத் திறந்தாள்... எதிரே வினய்...

அம்மாவின் தோளில் தொற்றிக் கொண்டிருந்தவளைப் பார்த்து ''ஹாய்'' என்றான்.

''வாருங்கள்'' என்றவளை பார்த்தபடியே ''வணக்கம் ஆன்ட்டி! உங்கள் பெண் சொல்லாமல் கொள்ளாமல்



ஓடி வந்து விட்டாள். அது தான் சண்டை போட பின்னாலே துரத்திக் கொண்டு வந்தேன்.''

''ஓ! நீதான் என் பெண் தூக்கத்தில் என்னைக் கட்டிக்கொண்டு உளறிய வினுவாப்பா?''

''நீங்க வேறு ஆன்ட்டி! தூக்கத்திலும், மயக்கத்திலும் தான் அப்படி உளறுவாள். ஆனால் நேரிலும், நிஜத்திலும் என்னிடம் சண்டை போடுவாள். சரியான லூசுப் பெண்.''

''பாருங்கள் அம்மா! நீங்கள் ரசித்து எனக்கு எவ்வளவு அருமையாக பெயர் வைத்து இருக்கிறீர்கள்! இவர் என்னடாவென்றால் என்னை எப்பொழுதும் இப்படித்தான் ஏதாவது பெயர் சொல்லி மட்டம் தட்டுகிறார்.''

''பின்னே என்ன ஆன்ட்டி! எந்நேரம் கல்லை, மண்ணையும் கட்டி அழுதுகொண்டு இருக்கிறாள்! நமக்காக ஒரு பையன் ஓடி ஓடி வருகிறானே என ஏதாவது உணர்வு இருக்கிறதா பாருங்கள். இன்றைக்கு என் பிறந்தநாள்; இவளைத் தேடி நான் இங்கு வந்திருக்கிறேன். ஒரு வாழ்த்தாவது சொன்னாளா? பாருங்களேன்!''

''ஓ! பிறந்தநாள் வாழ்த்துக்கள்'' என இருவருமே இணைந்த குரலில் கூறினர். ''சும்மா வாழ்த்துக் கூறினால் பத்தாது. இன்றைக்கு எனக்கு இவள் தான் ஊரைச்சுற்றி காண்பிக்க வேண்டும்.''

''எனக்கு மருத்துவமனைக்கு செல்லவேண்டும். என் பெண் வருவாள். ஆனால் கவனம் அவளே ட்ரீட்மெண்டிற்கு இங்கே வந்திருக்கிறாள். அவள் மனசு கொஞ்சமும் நோகக் கூடாது.''

''இதே கண்டிஷனை அவளுக்கும் சொல்லுங்கள். பர்த்டே பாயின் மனசும் நோகக் கூடாது தானே!''

''சரிதான். நித்திக்குட்டிக்கு ஏற்ற மருந்து நீதானப்பா? பேசிக் கொண்டிருங்கள். காபி கலந்து கொண்டு வருகிறேன்'' அவர் நகர்ந்ததும் கேட்டான்.

''இப்பொழுது என்னை விரட்டமாட்டாய் தானே?''

''ஸாரி! நான் பேசியது தவறு. நடந்தது என்று உங்களிடம் கேட்டிருக்கலாம். தீப்தி சொன்னதை அப்படியே நம்பிவிட்டேன்.''

''விடு நித்திம்மா! நான் குளித்துவிட்டு வருகிறேன். நீயும் தயாராகி விடு.''

''அட! இன்றைக்கு என்ன என் பெண் புடவை கட்டிக் கொண்டிருக்கிறாள்! மிகவும் அழகாய் இருக்கிறாளே!'' இள மஞ்சளில் எம்ப்ராய்டரி செய்யப்பட்டிருந்த புடவை உடல் முழுவதும் சின்னதாய் தங்கப் புள்ளிகள் வேறு.

''நன்றாய் இருக்கிறதா அம்மா? என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கள் என காலில் விழுந்தபொழுது வினயும் ஓடிவந்து குனிந்து காலைத் தொட்டான்.''

''ஆகா! அருமையாக வாழுங்கள் இருவரும்'' என ஒட்டுமொத்தமாய் வாழ்த்தினார்.

பாசிப்பருப்பு பாயாசமும், தயிர்வடையும் செய்திருந்தார். சாப்பிட்டுவிட்டு வெளியே கிளம்பினர். ''நித்திம்மா! என் காரை எடுத்து போ. நான் ஆட்டோவில் சென்று கொள்கிறேன்.''

இருவரும் கிளம்பினர். ''உங்கள் ஊரும்; காவிரியும் அழகாய்த்தான் இருக்கின்றன'' என்றவனிடம்,

''எதிரியையும் வசீகரிக்கும் அழகு எங்கள் திருச்சிக்கு சொந்தமாக்கும். பல்லவ மன்னன், மகேந்திர வர்மன் திருச்சியின் வனப்பையும் செழிப்பையும் நேசிப்பதாக



சொல்லியிருக்கிறான். சிராப்பள்ளிக்குன்றில் குடைவரை கோயிலை நிர்மாணித்தவன் அவன்தான். தமிழ்நாட்டின் முதல் கங்காதரர் சிற்பமும், இந்தக் குடைவரையில்தான் நாடகக் காட்சி போல சித்தரிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட குடைவரைகள் உள்ள தமிழ்நாட்டில் நின்ற கோலத்தில் விநாயகரைப் பெற்றுள்ள ஒரே குடைவரை திருச்சி கீழ்க்குடைவரைதான்'' என சொல்லிக் கொண்டே மாணிக்க விநாயகரை பார்க்க அழைத்துச் சென்றாள். பின் முற்காலச் சோழர்களின் தலைநகரமாக இருந்த உறையூருக்கு அழைத்துச் சென்றாள்.

''சங்க இலக்கியங்கள் அனைத்திலும் உறையூர்ப் பற்றிய குறிப்புகள் உண்டு. இங்கு உள்ள பஞ்சவர்ணேஸ்வரர் கோயிலும் மிகப் பழமையானது. தொல்லியல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது கிடைத்த பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் உறையூரின் பெருமைக்கு சான்றுகள். உறையூரும், கோட்டைப் பகுதியும்தான் இன்றைய திருச்சியின் பழமையான பகுதிகள். ஆங்கிலேயர்களுக்கு திருச்சியை ரொம்பவும் பிடிக்கும். திருச்சிக்காக பிரெஞ்சுக்காரர்களுடன் பல போர்களை சந்தித்தார்கள் ஆங்கிலேயர்கள். 'மெயின் கார்டுகேட்' ஆங்கிலேயர்கள் போரிட்டுக்காத்த கோட்டையின் எச்சம்! கன்டோன்மென்ட் பகுதி ஆங்கிலேயர் உருவாக்கியது.

இராஜாஜி உப்பு சத்தியாகிரகத்தை தொடங்கியது இங்குதான். முதல் காதி வஸ்திராலயம் தொடங்கப்பட்டது. முதல் கதர் புடவை நெய்யப்பட்டது இங்கேதான். காந்தி, ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டத்துக்காக திருச்சி வந்தபோது இங்கு திரண்ட கூட்டத்தைப் பார்த்து

வியந்து போனார்'' என அவள் பாட்டிற்கு பேசிக் கொண்டே ஒவ்வொரு இடத்திற்கும் அழைத்துப் போனாள்.

பின் கல்லணைக்கு சென்றனர். கொள்ளிடம் ஆற்றின்மீது கட்டப்பட்ட மிக பழமையான அணையாகும். அதன் பெருமையை உற்சாகமாய் நித்யா விவரித்தாள். ''கல்லணையின் நீளம் 1080 அடி அகலம் 40 முதல் 60 அடி வரை உள்ளது. 15 முதல் 18 அடி ஆழத்தில் நிறுவப்பட்டது. இதை சற்று கவனியுங்களேன்; நெளிந்து வளைந்த அமைப்புடன் காணப்படும். கல்லும் களிமண்ணும் மட்டுமே சேர்ந்து ஓர் அமைப்பு 1900 ஆண்டுகளுக்கு மேலாக காவிரி வெள்ளத்தை தடுத்து நிறுத்தி வருவது அதிசயமே. 1839-இல் அணையின் மீது பாலம் ஒன்று கட்டப்பட்டது. சர்.ஆர்தர் காட்டன் கல்லணையை "Grand Anicut மகத்தான அணை'' என பெயர் சூட்டி அழைத்தார்.

கரிகாலன் கல்லணை கட்டி காவிரியின் போக்கைக் கட்டுப்படுத்திக் கழனிகளில் பாய்ச்சி செழிப்பை உண்டாக்கியதை பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை பாடல்களும், தெலுங்குச் சோழக் கல்வெட்டுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் தெரிவிக்கின்றன. மணலில் அடித்தளம் அமைத்து கல்லணையை கட்டிய பழந்தமிழர் தொழில் நுட்பம் இன்று வரை வியத்தகு சாதனை தான்.''

''அம்மாடி! ஒரு ஆர்க்கிடெக் கைடை என்னுடன் அழைத்து வந்திருக்கிறேன். ஏதோ கல்லூரியில் எஜூகேஷன் டூர் வந்திருப்பது போல் தோன்றுகிறது. ஏனம்மா! ஒருவன் வேலைமெனக்கெட்டு விமானம் பிடித்து ஓடி வந்திருப்பது இந்த மாதிரி லெக்சர் கேட்கவா? என்னை



பார்த்தால் இரக்கமே வரவில்லையா?'' என வினய் கேட்க,

அவள் கலகலவென்று நகைத்தாள்.

''இந்த சிரிப்பை கேட்க திருச்சி வரவேண்டியிருக்கிறது'' என்றவனை ஆழ்ந்து பார்த்தாள்.

''என்ன கண்மணி? இப்படி பார்த்தால் என் மனசு தாங்காது. சொல்! என்ன சொல்ல வருகிறாய்? தயங்காமல் சொல்.''

''தீப்தி சொன்னதைக் கேட்டு உங்களை விட்டு விலகிச் செல்ல வேண்டும் என்று தான் நினைத்தேன். ஆனால் உங்கள் மீது கோபம் வரவில்லை. என்னை மட்டும் ஏன் நீங்கள் விரும்பவில்லை என வருத்தமாக இருந்தது தெரியுமா? சாரா தான் தீப்தியை நம்பாதே எனச் சொல்லிக் கொண்டிருந்தாள். பரத் தீப்தியைப் பற்றி சொன்ன பிறகுதான் என்னால் ஒரு முடிவுக்கு வர முடிந்தது.''

''ஏன் அப்படி சொல்லாமல் கொள்ளாமல் ஓடி வந்தாய்? நான் எப்படி தவித்து போய்விட்டேன் தெரியுமா? தீப்தியை முதல் நாளே வீட்டினுள் சேர்க்காதீர்கள் என்று சொன்னேன். ஆனால் உன்னை என் அறைக்கே அழைத்துச் சென்று டின்னர் கொடுத்தேனே அப்பொழுதே என் அன்பு உனக்குப் புரியவில்லை. பெண்கள் என்றாலே வெறுத்த நான் உன் நேர்மையில், உழைப்பில், இலட்சியத்தில், குணத்தில் அப்படியே தலைகுப்புற விழுந்து போனேன். அடடா! ஒன்று சொல்ல மறந்து போனேன்! அது தான் உன் அற்புதமான அழகைத்தான், சொல்கிறேன். இப்பொழுது கூட பாரேன், ஏதோ தேவதையுடன் பறந்து கொண்டிருப்பது போல் தான் தோன்றுகிறது.''

ஊரெல்லாம் சுற்றிவிட்டு களைத்து திரும்பி வந் தார்கள். அம்மா சுடச்சுட அடை செய்து கொடுத்தார். அடை யும், அவியலும் அமிர்தமாய் இருந்தன. அம்மாவின் மடியில் சாய்ந்து கொண்டிருந்தவள் சலுகையாக ''அம்மா செய்தித்தாளை பார்த்தீர்களா? சென்னையில் மகனைத் தேடும் ஆஸ்திரேலிய தம்பதி பத்து இலட்ச ரூபாய் பரிசு தருவதாக அறிவித்து இருக்கிறார்கள். வெளிநாட்டு காரரே தொலைந்துபோன மகனை தேடுகிறார்கள். ஆனால் என்னை மட்டும் என் பெற்றோரே எப்படி அம்மா தொலைத்து தலை மூழ்கினார்கள்? பெண் என்றால் அவ்வளவு இளப்பமா அம்மா?''

''இல்லை கண்ணம்மா! நீ எனக்கு கிடைக்கும் வேண் டும் அல்லவா? என் வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுத்த வளே நீதான் அம்மா.''

அவரை இறுகக் கட்டிக் கொண்டாள்.

இருவரையும் வினய் பார்த்துக் கொண்டிருந்தான்.

'எத்தனை உயர்வான பெண்கள்! இவர்கள் போன்றவர்கள் இருப்பதினால் தான் இன்னும் உலகத்தில் நல்லவை நடந்து கொண்டிருக்கிறது!' என எண்ணியவாறே, ''ஆன்ட்டி நாங்கள் இருவரும் கிளம்பட்டுமா? வேலை நிறைய இருக்கிறது!'' என.

''ஆமாம் அம்மா! நானும் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு வந்து விட்டேன். பரத் தனியாக கஷ்டப் படுவான். கட்டட திறப்பு விழாவிற்கு நீங்கள் அவசியம் வரவேண்டும்.''

இருவரும் விமானத்தில் சென்னை புறப்பட்டனர். இரவே போய் சேர்ந்துவிட அவளை நேரே தன் வீட் டிற்கே அழைத்து சென்றுவிட்டான்.



''வாம்மா! என் பையன் பிறந்த நாளைக்கூட தள்ளி வைத்துவிட்டு உன்னைத்தேடி வந்துவிட்டான் பார்! உன்னைப் போய் யாருக்காவது பிடிக்காமல் போகுமா? விதிவிலக்குகள் எல்லாம் விதிமுறையில் சேராது. நீ நல்முத்து தான் வா.''

அவள் இராஜியுடன் சென்று தேர்ந்தெடுத்து இருந்த ஆலிவ் க்ரீன் ஷெர்வானியை அணிந்துகொண்டு வந்தான். அது அவனுக்கு மிக கம்பீரமாய் இருந்தது.

'எப்படி இருக்கிறது?'' ''என்ன இருந்தாலும் என் ஆள் செலக்ஷன் அல்லவா? அருமையாகத்தான் இருக்கும்.''

வீட்டில் சின்னதாய் ஒரு பிறந்த நாள் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ரேகா-நிவாஸ், பரத்-ப்ரியா, சாரா, சந்துரு, சித்தப்பா, தேவன் அனைவரும் ஹாலில் குழுமியிருந்தனர். இன்னும் சில நண்பர்களும் வந்து சேர பிறந்தநாள் கேக்கை வெட்டினான் வினய். தன் பெற்றோருக்கு முதல் துண்டு கேக்கை கொடுத்துவிட்டு நித்யா அருகில் வர...

''அண்ணா கையில் கொடுக்காதே! வாயில் ஊட்டிவிடு.'' நித்யாவை பார்த்தான். அவள் கண்களில் தயக்கம் தெரிய...

''அதெல்லாம் கல்யாணத்திற்கு பிறகுதான். அதுவும் உங்கள் முன்னாடி எல்லாம் செய்ய முடியாது'' என எல் லாரும் சிரித்தனர்.

ரேகா ஓடிவந்து நித்யாவை அணைத்துக் கொண்டாள். ''வினய் உனக்கு பொருத்தமானவர். அதனால் தயங் காமல் திருமணம் செய்து கொள். இந்த வீடு உன்னை தங்கமாய் தாங்கும். உன் ஆசைக்கனவுகள் நனவாகட் டும்! நீ ஆசைப்பட்டபடி பெரிய பெரிய கட்டடங்களை எழுப்பப் போகிறாய் பார்!''

''நன்றி ரேகா. பெண்களுக்கு என்று பெரிய ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்ட வேண்டும். அதில் கிடைக்காத பொருட்களே இருக்கக்கூடாது. புடவை, நகை, புத்தகம், வகை வகையான வளையல்கள், கலைநயம் மிகுந்த செயற்கையான அணிமணிகள், மேக்கப், உடல்நலம் தொடர்பான விஷயங்கள், அழகுநிலையம், உடற்பயிற்சி நிலையம், ஏன் செருப்பு வகைகள் கூட... அத்தனையும் ஒரே இடத்தில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இங்கே அவர்கள் உள்ளே நுழைந்து விட்டால் வேறு எதையும் வாங்க வெளியே செல்லக் கூடாது.''

அருகிலிருந்து கேட்ட வினய் கைத்தட்டினான். ''நீ சொன்னதெல்லாம் செய்து விடலாம். ஆனால் அவ்வப் போது என்னையும் கொஞ்சம் கவனித்து கொள்ளம்மா!'' அவளது முகம் வெட்கத்தால் சிவந்தது.

# 22

தீப்தி கனன்று கொண்டிருந்தாள். அன்று நடந்த அவ மானம் அவளது உள்ளத்தை சுட்டு எரித்துக் கொண் டிருந்தது. அவள் போட்ட திட்டமென்ன? ஆனால் நடந்தது என்ன? இன்னும் கொஞ்சம் நாள் வினய் விழித்துக் கொண்டிராவிட்டால் அவள் நினைத்ததை அடைந்திருப்பாள். இந்த நித்யாவிற்கு வந்த வாழ்வைப் பார்! சும்மாவே தான் அழகி என்ற நினைப்பு அவளுக்கு! அதனால் எந்த மேக்கப்பும் செய்து கொள்ளாமலே



எல்லாரையும் கவர்ந்துவிடுவாள். வெள்ளைத்தோலும், சிரிப்பும் இருப்பதால் எல்லாரும் அவள் காலடியில் விழுந்து விடுகிறார்கள். இந்த பரத்கூட படிக்கின்ற காலத்தில் என்னை கண்டு கொள்ளவேமாட்டான். எந்நேரமும் நித்யா பின்னாலேயே சுற்றிசுற்றி வருவான். இவன் அப்படி நடந்து கொண்டதற்கு நான் நித்யாவிற்கு மறைமுகமாக எத்தனை தண்டனைகள் கொடுத்து இருக்கிறேன். இப்பொழுதும் என் வாழ்க்கையில் வந்து குறுக்கிடுகிறாளே? என் கனவை கலைத்தவளை சும்மா விடலாமா? பதிலுக்கு நான் அவளை பழிவாங்க அவள் கட்டட வேலையை நிறுத்த வேண்டும்.

கட்டட வேலை நின்று போனால்... அவள் அவ்வளவு தான்! அவள் ஆசை, இலட்சியம் நொறுங்கிப்போய் மனநிலை பாதிக்கப்பட்டு 'ஒன்றுமில்லாத குப்பைக் காகிதம்' ஆகிப் போவாள். கண்டிப்பாய் அவளை முடக்கி மூலையில் போடவேண்டும். அதுதான் எனக்கு சந் தோஷம்! எனக்கு கிடைக்காத எதுவும் அவளுக்குக் கிடைக்கக் கூடாது. ஏதாவது செய்தாக வேண்டும். மூளையை கசக்கிக் கொண்டு யோசித்தாள். அப்போது அவளை பார்க்க இருவர் வந்திருந்தனர். அவர்கள் S.K. பில்டர்ஸ் ஆட்கள்தான். நித்யாவிற்கு போனில் மிரட்டல் விடுத்தும் அவளை விரட்ட முடியவில்லை. விபத்து என்ற பெயரில் ஆளே இல்லாமல் செய்ய முயன்று முயற்சியும் தோற்றுப் போனது. எந்நேரமும் அவளைச் சுற்றி பாதுகாவலாய் துப்பறியும் நிறுவன ஆள் சென்றதால் மேலும் எந்த முயற்சியும் அவர்களால் செய்ய முடியாது போயிற்று! அவளின் குழுவினுள்ளே யாரையாவது ஆளை பிடிக்க முடிந்தால் நன்றாக இருக்கும் என யோசித்தபொழுது தான் அவளுக்கு

மணல் கிடைக்க முடியாமல், கல் பெற முடியாமல், தரமற்ற இரும்பு கம்பிகளை மாற்றி ஏமாற்ற முயன்ற இன்னொரு பில்டர்ஸ் S.K. பில்டர்ஸுக்கு உதவி செய்ய வந்தனர். தீப்தி ஆஜரான கேஸ்களை கவனித்து அவள் பணத்திற்காக எதுவும் செய்வாள், என முடிவு செய்தனர். அவளை நாடி வந்தனர். அவர்கள் கணிப்பு தவறவில்லை. ஏற்கனவே பழிவாங்கும் எண்ணத்தில் இருந்தவளுக்கு அவர்களுடைய பேச்சு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்தது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! பணத்திற்கு பணம்; பழிக்குப்பழி! கரும்பு தின்ன கூலி வேறு? சிந்தித்து செயல்பட முடிவு செய்தாள். ''இப்போதைக்கு வேலை நடைபெறாமல் நிறுத்தி வைத்தால் போதுமா?''

''அது போதும் எங்களுக்கு?''

''அந்தப் பகுதியில் வசித்த, வசிக்கும் ஆள் யாரை யாவது உங்களுக்குத் தெரியுமா?''

''அதற்கென்ன? எத்தனை ஆள் வேண்டும் சொல் லுங்கள்? கொண்டு வந்து நிறுத்துகிறோம்.''

''யாராவது முக்கியமான ஆளாய் இருப்பது மாதிரி பார்த்துக் கொள்ளுங்கள். அவருக்கு ஆதரவாய் இன்னும் சிலரையும் தயார் செய்து விடுங்கள்.''

அவர்கள் விரிவாய் திட்டமிட்டனர். ஒரு பதினைந்து பேரை அவளிடம் கூட்டி வந்து என்ன செய்ய வேண் டும்? எப்படி செயல்பட வேண்டும்? எவற்றை பேச வேண்டும் என அவள் சொல்லிக் கொடுத்தது போல் செய்ய பயிற்சி தந்தனர். இத்தனை வேலைகளும் இங்கு ரகசியமாய் நடந்து கொண்டிருக்க... அதை ஒன்றும் அறியாதவளாய் நித்யா பரபரவென்று இயங்கிக் கொண் டிருந்தாள். ஐந்து தளங்களும் கட்டி முடிக்கப்பட்டு



விட்டன. இனி மற்ற வேலைகள் தான். குறித்த காலத்தில் ஒரு வேலையை செய்து முடிக்க முடிந்தால் அதனால் கிடைக்கும் மகிழ்ச்சியே தனி தான். பெற்றக் குழந்தையை பார்க்கும் தாயின் மனநிலையில் அவள் இருந்தாள்.

வேலை செய்து கொண்டிருந்த பெண்ணொருத்தி, ''அம்மா! புடவைக்காரர் ஒருத்தர் வந்திருக்கார். என் பொண்ணு கல்யாணத்துக்கு பட்டுப்புடவை எடுத்துக் கொள்கிறேன். எனக்கு கொஞ்சநேரம்... சும்மா அரை மணிநேரம் கொடுங்க. ஓடிப்போய் எடுத்துக் கொண்டு வந்துவிடுகிறேன்'' என நித்யாவிடம் அனுமதி கேட் டாள். அவளை அனுப்பிவிட இன்னும், இரண்டு மூன்று பெண்களும் அவளுடன் சென்றனர். அவர்கள் புட வையை எடுத்து வந்தனர்.

அதே வர்ணஜாலப்பட்டு! ''என்ன விலை? என விசாரித்தாள். ''அஞ்சாயிரம் ரூபா அம்மா!'' 'இது எப்படி சாத்தியம்? பதினைந்து ஆயிரம் ரூபாய் பட்டு எப்படி ஐந்து ஆயிரத்திற்கு கிடைக்கும்? இதேபோல தானே அன்று தீப்தியும் அணிந்து இருந்தாள்! ஏதோ விஷயம் இருக்கிறது' என எண்ணியவாறே அந்தப் புடவைக்கார ரிடம் வந்தாள். ''இது மாதிரி புடவை கொஞ்சம் நிறைய வேண்டி இருக்கிறது; கிடைக்குமா?''

''உங்களுக்கு எவ்வளவு வேண்டும் சொல்லுங்கள்.''

''எனக்கு பிடித்த மாதிரி டிசைன், நிறம் அமைய வேண்டுமே?''

''நீங்க எங்க கோடவுனுக்கு வாங்க; வந்து பிடிச்ச மாதிரி எடுத்துக் கொள்ளுங்கள்.''

''சரிதான்! ஆனால் எனக்கு வேலை முடிய எழு மணிக்கு மேல் ஆகிவிடுமே!''

"நீங்க எந்நேரமாய் இருந்தாலும் வாங்க. பண்டிகை காலத்தில் நாங்க கடை மூட பன்னிரெண்டு மணிகூட ஆகும்."

முகவரியை குறித்துக் கொண்டு அவனை அனுப்பி வைத்தாள். வினய்க்கு போன் செய்து விவரத்தை சொல்லலாம் என்றால் அது ஸ்விட்ச் ஆஃப் செய்யப் பட்டிருந்தது. ரேகாவிடம் இதைப்பற்றி பேசினாள். "நீ சந்தேகப்படுவது சரிதான். என்ன நடக்கிறது? என்று கண்டுபிடிக்க வேண்டும். நானும் வருகிறேன். நீ தனியாக போகாதே" என்றவள் நிவாஸிடம் சொல்ல, அவன் இன்னொரு யோசனை சொன்னான். அதைப் போலவே ரேகா தன்னுடன் மற்றொரு பெண்ணை அழைத்துக் கொண்டு நித்யாவுடன் அந்த கோடவுனுக்கு சென்ற பொழுது அந்த ஆள் வாசலிலேயே நின்று கொண்டிருந்தான். நன்கு இருட்டி வேறு விட்டிருந்தது. பல புடவைகளை எடுத்துப் பார்த்து தேர்ந்து எடுத்துக் கொண்டிருந்தனர்.

"இன்னும் நல்லதாய், வர்ணஜால பட்டை போல காண்பிப்பா."

"அதுதான் இந்த வருஷ ஸ்பெஷல்! வந்த உடனே எல்லா பீஸும் வித்து போயிடுது. வெளியில் கடையில் வாங்கினீர்கள் என்றால் கூடுதலாய் விலை கொடுக்க வேண்டிவரும். நாங்களே தறி போடுவதால் குறைச்ச விலைக்கு தருகிறோம்."

"ஏன்டா? நீ சொந்தமாய் தறி போடுகிறாயா? போன மாதம் வரை சென்ட்ரல் ஜெயிலில் களி தின்றாய். இப்ப பட்டுப்புடவை நெய்யும் பெரிய முதலாளி போல பேசுகிறாய்?" என உடன் வந்த பெண் கான்ஸ்டபிள் மிரட்ட... அதற்குள் உள்ளிருந்து இன்னொரு ஆள் வந்தான்.



"என்னடா அங்கே சத்தம்?"

"மாமா, போலீஸ் பொம்பளை..."

"அறிவு கெட்டபயலே! எத்தனை வருடமாய் இந்த தொழிலை யாருக்கும் தெரியாமல் வெற்றிகரமாய் செய்துகிட்டு வருகிறேன். ஒருத்தருக்கு இந்த முகவரியை கொடுத்து இருப்பேனா? பெரிசா வியாபாரம் செய்கிற மாதிரி வம்பை விலை கொடுத்து வாங்கிக்கிட்டு வந் திருக்கிறாய்! போலி பட்டு, திருட்டு பட்டு தான் நம்ம வியாபாரம்! அதில் ரொம்ப கவனமாய் இருக்கணும். அவனவன் காலாவதியான மருந்தை வித்தே கோடீஸ் வரன் ஆகிவிட்டான். அரசியல்வாதியை கூட்டாளி ஆக்கிக்கிட்டா எதுலே இருந்தும் தப்பிச்சிடலாம். நல்லா யோசிச்சு பார்! எந்த அரசியல்வாதியாவது தண்டனை அடைஞ்சிருக்காங்களா?" என்றவன் இவர்களிடம் திரும்பி, "உயிர் மேலே ஆசை இருந்தா ஒழுங்கு மரியாதையாய் ஓடிப் போயிடுங்க! நான் என்னை காப்பாத்திக்க எதுவும் செய்ய தயங்கமாட்டேன். முப்பது வருடமாய் அப்பாவியாய் நடித்து என் முதலாளியையே ஏமாற்றி கொண்டு வருகிறேன். இந்தாம்மா! உன் மாமூலை வாங்கிக் கொண்டு இவர்களை கூட்டிக் கொண்டு சென்றுவிடு."

"ஏன்டா நாயே! யாரைப் பார்த்து மாமூல் வாங்கிக் கொண்டு செல் என்கிறாய்? உன்னை முட்டிக்கு முட்டித் தட்டி உள்ளே தள்ளப் போகிறேன்."

அவன் கை தட்ட... அவர்களைச் சுற்றி ஆட்கள் வந்து சூழ்ந்து கொண்டனர்.

''பொட்டச்சிங்களா வந்து என்னை புடிக்க முடியும்னு நினைச்சிட்டீங்களா? உங்களை உயிரோடு விட்டால் தானே! நீங்களே வந்து வலையில் மாட்டிக் கொண் டீர்கள். உங்கள் தலைவிதி!''

அவன் பேசிக் கொண்டிருக்க...

காலரவம் கேட்டுத் திரும்பினான். சுற்றிலும் சீருடை யில் காவலர்கள்! உடன் வினயும் நின்று கொண்டிருந் தான்.

''அடப்பாவி! இன்ஸ்பெக்டர் சார்! இவன் எங்கள் கடை மானேஜர்! பல நாள் திருடன் இன்று அகப்பட்டுக் கொண்டான்.''

வசமாக மாட்டிக் கொண்டவன் அவர்களை முறைத்துக் கொண்டே சென்றான்.

''என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் ஏன் இப்படி செய்தாய் நித்தி? நான் வருவதற்கு தாமதித்து இருந்தால் என்ன ஆயிருக்கும்? அவனால் சில ஆயிரங்கள் தான் நஷ்டம்! இப்படி ஆபத்தில் மாட்டிக் கொள்ளலாமா? நல்லவேளை நிவாஸ் விவரம் சொன்னதால் உடனே வர முடிந்தது.''

அவன் பல வருடங்களாய் புதிதாக அறிமுகப் படுத்தும் புடவைகளை திருடி விற்றுக் கொண்டிருந் தான். பின் போலி பட்டுப்புடவைகளை தயாரிக்கத் தொடங்கி கடைகளில் நல்லப் புடவைகளோடு கலந்து விற்கத் தொடங்கிவிட்டான். வினய் கடை பொறுப்பை ஏற்ற பிறகு அவனால் முன்பை போல அதிகமாய் திருடுவதற்கோ, அங்கேயே போலி புடவைகளை கலந்து விற்கவோ முடியவில்லை. எனவே தான் கோடவுடனில் சேமித்து புடவைக்காரர்கள் மூலம் வீட்டிலிருக்கும்



பெண்களையும், வேலைக்குச் செல்லும் பெண்களை யும் கவரும் வகையில் சுலபத் தவணையில் விற்கத் தொடங்கினான். தீப்தியும் இப்படித்தான் புடவை வாங்கி கட்டிக் கொண்டு வினய் வாங்கிக் கொடுத்ததாக பொய் புளுகினாள். அதனால் ஏற்பட்ட புழுக்கத்தால் அன்று நித்யா அதனை கவனிக்கவில்லை. ஆனாலும் பின்னால் விழித்துக் கொண்டு விஷயத்தை சரியாக புரிந்து கொண்டு தப்பை கண்டுபிடிக்க துணிந்து செயலில் இறங்கி விட்டாள். இராஜியும், தேவனும் அகமகிழ்ந்து போனார்கள். இப்படித் தொழிலில் அக்கறை காட்டும் மருமகள் கிடைத்திருக்கிறாள் என்று.''

மறுநாள் பிரச்சனையுடன் தான் விடிந்தது. நித்யா சைட்டிற்கு சென்ற பொழுது பத்து பதினைந்து பேர் நின்று கோஷம் போட்டுக் கொண்டிருந்தனர்.

''செய்யாதே! செய்யாதே! நில ஆக்கிரமிப்பு செய்யாதே!''

''பறிக்காதே! பறிக்காதே! பொதுச் சொத்தை பறிக் காதே!''

''யார் இவர்கள்? ஏன் இங்கு வந்து கூச்சல் போடு கிறார்கள்?'' சந்துருவை கூப்பிட்டு விசாரிக்கச் சொன்னாள்.

''பாசனக்கால்வாயை ஆக்கிரமித்து நீங்கள் கட்டடம் கட்டுகிறீர்கள். அதை நாங்கள் அனுமதிக்க முடியாது. செல்வாக்கு இருந்தால் பொது சொத்தும் உங்கள் சொத்தாகி விடுமா? கட்டடத்தை இடிக்காமல் விடமாட் டோம்; என வந்தவன் கூறியதும் சந்துரு ஆவேச மானான். அவன் பேச இவன் பேச... மாறி மாறி வார்த் தைகளை வீசியது கைகலப்பில் முடிந்தது. நித்யா காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்ததால் கைகலப்பு அடிதடியாக மாறாமல் முடிவிற்கு வந்தது.

''ஏய்யா! முறைப்படி புகார் கொடுக்காமல், நீங்கள் பாட்டிற்கு போராட்டம் நடத்த வந்துவிடுவதா?'' என அவர்களை விரட்டி கலைத்து விட்டனர்.

விவரம் தெரிந்து தேவனும், வினயும் வந்தனர்.

''என்னப்பா! இங்கு அப்படி எந்த பாசன வாய்க்கால் இருந்தது?'' என வினய் கேட்டான்.

''பாசனக்கால்வாய் எதுவும் இல்லை. மழை தண்ணீர் தேங்கி இருக்கும் பொழுது அது தடங்கலில்லாமல் ஓடி ஐந்நூறு அடி தூரத்தில் இருக்கும் குளத்தில் போய் விழுமாறு அவ்வப்போது தற்காலிகமாக வெட்டி விடு வார்கள். அவ்வளவுதான்! மற்றபடி இங்கு எந்த பாசனக் கால்வாயும் இல்லை.''

''ஆனால் வருகிற 16ந்தேதி காலை பதினோரு மணிக்கு நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் சம்மன் அனுப்பி இருக்கிறார்.''

''யார் புகார் செய்ததாம்?''

''யாரோ விவசாய சங்கத் தலைவர் அழகேசன் என்று சொன்னார்கள்.''

''விடு! நம்மிடம் போதுமான ஆதாரங்கள் உள்ளன. அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால் நீ கவலைப்படாதே!''

''அவர்களால் நம்மை ஒன்றும் செய்யமுடியாது. ஆனால் நடக்கின்ற வேலையை நிறுத்தி தாமதத்தை ஏற்படுத்தி நம்மை நஷ்டப்படுத்த முடியும்!'' என மெல்ல அவர் காதில் மட்டும் விழுமாறு கூறினான். இதைப் பற்றி சொல்லி நித்யாவின் கனவை கலைத்து





கஷ்டப்படுத்த அவன் விரும்பவில்லை என்பதை தேவனும் புரிந்து கொண்டார்.

அவர்கள் இருவருமே அவள் தொழிலில், இலட்சிய கனவில் ஜெயிப்பதை மனமார விரும்பினார்கள்.

நித்யா புத்திசாலி பெண்ணாயிற்றே? அவர்கள் சொல் லாமலே என்ன நடக்கிறது? என புரிந்து கொண்டாள். கலெக்டர் ஆபீஸில் இருந்து சம்மன் வந்திருக்கிறது. மக்கள் சார்பில் விவசாயிகள் என்ற போர்வையில் போராட்டம் நடக்கிறது. இவையெல்லாம் அவள் வேலையை பாதிக்கும் என அவள் அறிந்து கொண்டாள். வினயின் தந்தை எந்த தவறான வழியிலும் சொத்து வாங்கியிருக்கமாட்டார் என்று நம்பிக்கை அவளுக்கு இருந்தது. அதனால் கைகட்டிக் கொண்டு சும்மா வேடிக்கை பார்க்காமல் என்ன செய்யலாம் என யோசித் தாள். வினய் அவர்கள் குடும்ப வக்கீலை கலந்து ஆலோ சிக்க நித்யாவோ தலைமை செயலகத்தில் வேலை பார்க் கும் நிவாஸை பிடித்தாள். நிவாஸ் உடனே செயல்பட்டு பிரச்னை எந்த நிலைமையில் உள்ளது என்பதை விசாரித்துச் சொன்னார்.

''மாவட்ட வருவாய் அதிகாரி கந்தவேலுவை விசாரணை நடத்தும்படி கலெக்டர் உத்திரவிட்டிருந்தார். அவர் நாளை விசாரணைக்கு நேரில் ஆய்வு செய்ய வருகிறார். அவர் ரொம்ப நேர்மையானவர். உங்கள் தரப்பில் தவறு இல்லை என்றால் நீங்கள் தைரியமாக இருங்கள்'' என நம்பிக்கை ஊட்ட,

குடும்ப வக்கீல் தேவையான ஆவணங்களை முறைப் படுத்தி கொடுத்தார். எதிரிகள் மாட்டிக் கொண்டான்

வினய் என கொக்கரித்துக் கொண்டிருந்த நேரத்தில் வினய் அமைதியாக காய்களை நகர்த்திக் கொண்டிருந்தான். கந்தவேல் நேரில் வந்து ஆய்வு நடத்தி தன் அறிக்கையை கலெக்டரிடம் சமர்ப்பித்தார். இவையெல்லாம் எல்லாருக்கும் தெரியும்படி நடக்குமாறு வினய் பார்த்துக் கொண்டான். இரண்டு நாட்கள் அங்கு எந்த வேலையும் நடைபெறாதது போன்ற தோற்றம் S.K. பில்டர்ஸை குதூகலிக்க வைத்தது. அந்த குதூகலம் நாகாக்க மறந்து வினயை வழிமறித்து ''என்ன மண் குதிரை வேகமாக ஓடுகிறதா?'' என கேட்க வைத்தது. வினய் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இயல்பாய் புன்னகையுடன் ''அவசியம் கட்டட திறப்பு விழாவிற்கு வந்துவிடுங்கள். பத்திரிகை அனுப்புகிறேன்'' என்றான்.

'முதலில் கட்டி முடி! பின் திறக்கலாம்' என எண்ணியவாறே அவர் நகர,

தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து தங்கள் மேல் எந்த தவறும் இல்லை; எந்த நிலத்தையோ, குளத்தையோ, கால்வாயையோ தாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பதை சர்வே எண் போன்ற சான்றுகளுடன் விளக்கினர்.

கலெக்டரும் மிகவும் நேர்மையான மனிதராய் இருந்தார். வருவாய் அதிகாரியின் விசாரணையும், இவர்கள் சமர்ப்பித்த சான்றுகளும் அவர்கள் மேல் எந்தக் குற்றமும் இல்லை. யாரோ அழுக்காறால் செய்த சதி என்பதும் தெளிவாய் தெரிந்து போயிற்று. மேலும் நிவாஸ் விரைவாய் விசாரணையை முடித்து தருமாறு தனிப்பட்ட



முறையில் வேண்டிக் கொண்டதும் துரிதமாய் பிரச்சனையை தீர்க்க உதவியது.

நித்யா தாமதிக்காமல் தொழிலாளர்கள் உதவியுடன் கட்டடத்தின் அனைத்து வேலைகளையும் எதிர்பார்த்த மாதிரியே மிகவும் திறம்பட செய்து முடித்தாள். கன கம்பீரமாய் கட்டடம் நித்யாவின் வெற்றியை பறை சாற்றிக் கொண்டு பிரம்மாண்டமாய் எழுந்து நின்றது. சூரியக்கதிர்கள் தன் கரத்தால் அதனைத் தொட்டு ஆசீர்வதித்தன. 'வெற்றி எட்டு திக்குமென கொட்டு முரசே' என கண்ட கனவில் வென்றாள் நித்யரஞ்சனி.

## 23

''பாக்யலெஷ்மி சில்க்ஸ்'' பொன்னிற எழுத்துகளால் பொறிக்கப்பட்ட வாசகம் மின்ன ஐந்து தளங்களுடன் கம்பீரமாய் நின்றது நித்யா கட்டிட ஆத்மார்த்தமான கட்டடம். மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு நட்சத்திரங்களுக்கு போட்டியாய் மின்னிக் கொண்டிருந்தது.

தரைத்தளம் முழுவதும் பட்டுப்புடவைகளுக்கானது. இரண்டாவது தளம் ஆண்களுக்கான உடைகளையும், அதன் தொடர்புடைய பொருள்களையும் கொண்டது. மூன்றாவது தளத்தில் இரண்டு ரெஸ்ட்டாரண்டுகளும்,

ஒரு மினி தியேட்டரும் இருந்தன. நான்காவது தளம் இளைஞி. இளைஞர்களுக்கான ஆயத்த ஆடைகள். அனைத்து தரப்பினருக்கு ஏற்ற விதவிதமான உடைகள் அங்கு இருந்தன. மேல் தளம் சிறுவர், சிறுமியருக்கானது. விளையாட்டுச் சூழலில் அது அமைக்கப்பட்டிருந்தது. பேட்டரி பொம்மை கார்களில் ஏறி இங்கும் அங்கும் அலைந்து உடைகளை தேர்ந்தெடுக்கலாம். முழு கட்டடத்திற்கு தேவைப்படும் மின்சாரம் ஸ்பேஸிங் மெக் கானிசம் எனப்படும் சூரிய ஒளி மூலம் கிடைக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. உடை வாங்க வருபவர்கள் உணவிற்கு இங்கும் அங்கும் அலையாமல் அங்கேயே தரமான உணவை உண்ண இரண்டு உணவகங்கள் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் அங்கு உணவு பரிமாறல் மட்டும்தான். சமையல் எல்லாம் கீழே இருக்கும் அவுட்ஹவுஸ் போன்ற சிறிய கட்டிடத்தில்தான். எல்லாம் எலெக்ட்ரானிக் சிஸ்டம் போல் தாமதம் இல்லாமல் விரைந்து தரமாய் இயங்கின. அதேபோல் சுத்தத்திற்கு மிகவும் முக்கியத் துவம் தரப்பட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து போகும் இடத்தில் அசுத்த குறைவோ, குப்பைக் கூளமோ சேராமல் இருக்க தகுந்த ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. நித்யா கட்டடத்தில் அசத்தியிருந்தால் வினய் அவற்றில் தங்கள் ஆடைகளை வகைப்படுத்தி மக்களுக்கு இதைத்தவிர சிறந்தது வேறு எதுவும் இல்லை, என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதில் பிரமிப்பையே உண்டாக்கிவிட்டான்.

ஒரு உடை போல் இன்னொரு உடை இல்லாமல் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு இருந்தன.



இளைஞர்களுக்கான பகுதியில் புத்தகங்களும் அழகாய் அடுக்கப்பட்டு விற்கப்பட்டன. குழந்தைகளுக்கான பகுதியில் அவர்களுக்கான புத்தகங்கள், மற்றும் பொம்மைகளும் விற்பனைக்கு இருந்தன.

தேவனுக்கு மிகவும் பூரிப்பாய் இருந்தது. தன் தாயைப் போல ஓர் அருமையான மருமகள் கிடைத்ததை தான் செய்த புண்ணியமாக கருதினார். மறுநாள் திறக்கப்பட விருந்த கட்டடத்தை நிறைவாய் பார்த்துவிட்டு வீட்டிற்கு கிளம்பினார். வினயுடன் நித்யா ஒவ்வொரு கோணத்திலும் நின்று தான் கட்டிய முதல் கட்டடத்தை பார்த்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். முதல் முதலாய் ஒரு சாதனை செய்யும் பொழுது அதில் வெற்றி அடையும் பொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க... எடுத்துச் சொல்ல முடியாத பரவச நிலையில் அவள் இருந்தாள். வாழைமரங்களும், மாவிலை தோரணங்களும் கட்டப்பட்டு மங்களகரமாய் இருந்தது. உள்ளே நுழையும் இடத்தில் 'ரங்கோலி மலர்களால் போட்டால் நன்றாக இருக்கும்' என நித்யா சொல்ல,

உடனே சாரா மலர்கள் வாங்கி வர விரும்பி புறப் பட்டுச் சென்றாள். அவள் சென்ற சிறிது நேரத்திலேயே சந்துரு ரங்கோலி போட ஒரு பெண்ணுடனும் பூக் களுடனும் வந்து சேர்ந்தான். நித்யா ஆச்சரியப்பட, ''உன் ஆள் தான் அக்கா! ஏற்கனவே என்னிடம் சொல்லி விட்டார்.''

''பார்த்தாயா? நம் எண்ண பொருத்தத்தை!'' என் றவன்,

''சந்துரு! இன்னும் ஏன் என்னை தள்ளியே நிறுத்துகிறாய்? உரிமையுடன் கூப்பிட என்ன தயக்கம்?''

அவன் சிரித்துக் கொண்டே நித்யாவைப் பார்த்தான்.

''ஏன் அவளை பார்க்கிறாய்? அவளிடம் பர்மிஷன் எல்லாம் எதிர்பார்க்காதே! என்னைப் பார்! அவளை திட்டுவதற்கு கூட நான் அனுமதி வாங்குவதில்லை.''

அவன் பேச்சை மாற்றும் விதமாக ''சாரா எங்கே?'' என, ''பூ வாங்கச் சென்றாள். இன்னும் காணவில்லை''

''சரி! நான் போய் பார்த்து வருகிறேன்'' என சந்துரு கிளம்பினான்.

பூ வாங்க சென்ற சாரா செல்லும் வழியில் தீப்தியைப் பார்த்தாள். ஆனால் அவள் இவளை கவனிக்கவில்லை. தீப்தி S.K. பில்டர்ஸ் காரில் ஏறுவதைப் பார்த்தாள். இவள் எங்கே செல்கிறாள். சந்தேகப் பொறித்தட்ட ஆட்டோவை அந்தக் காரை பின்தொடரச் சொன்னாள். அவர்கள் சென்ற கார் குடிசைப்பகுதிகள் நிறைந்த இடத்திற்குச் சென்றது. ''மாரி இருக்கானா?''

காரில் இருந்தவர் கேட்க...

''எந்த மாரியை கேட்கிறீங்க?''

''அதான்பா! வெடிகுண்டு மாரி!''

''ஓ! அவனா? அப்பால ரெண்டு வீடு தள்ளி போ! அவன் இருப்பான்.''

அவர்கள் செல்ல,



சாரா வழி சொன்னவனிடம் கேட்டாள், ''யாருப்பா வெடிகுண்டு மாரி?''

''இன்னாம்மா இதுகூட தெரியாம இருக்கிறாய். எங்கியாச்சும் கமுக்கமாய் குண்டு வச்சு காலி பண்ணனும் என்றால் நம்ம வெடிகுண்டு மாரியைத்தான் தேடி வருவார்கள். மாரி கைய வச்சா எதுவும் ராங்காதான் போகும்.''

சாரா அரண்டு போனாள். இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? யாரை அழிக்கத் திட்டமிடுகிறார்கள்? விஷயத்தை தெளிவாய் தெரிந்து கொள்ள விரும்பினாள். அவர்கள் மாரியை காரில் ஏற்றிக் கொண்டு திரும்பிச் சென்றனர். சாராவும் அவர்களை பின் தொடர்ந்தாள். தீப்தியின் வீட்டிற்குச் சென்று ஏதோ பேசி முடிவு செய்து விட்டு வெளியே வந்தனர். உள்ளே என்ன பேசினார்கள் என அறிய முடியாமல் தவித்தாள். தீப்தியை தவிர மற்றவர்கள் கிளம்பினர். மறுபடியும் அவர்களை பின் தொடர்ந்தாள். ஆட்டோவில் செல்லும் பொழுதே வினய்க்கு குறுஞ்செய்தி அனுப்பினாள். ஒதுக்குப்புறமான வீட்டினுள் அவர்கள் செல்ல... ஆட்டோவை அனுப்பிவிட்டு இவள் மெல்ல அந்த வீட்டினுள் நுழைய பின்னாலிருந்து முரட்டுக்கரம் வாயை பொத்தியது; மூக்கினுள் ஏதோ நெடி ஏறியது.

''தீப்தி சொன்னது சரிதான்! இவள் ரொம்ப நேரமாய் நம்மை நோட்டம் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறாள். இவளை தூக்கி அந்த அறையில் அடைத்துப்போடு. நாளை அந்த நல்லச் செய்தியை இவள் காதார கேட்ட பிறகு பரலோகம் செல்லட்டும்'' என்றதை அரைகுறை

யாய் கேட்டவாறே மயக்கமானாள். அவளை அறைக்குள் போட்டு பூட்டினர். ''மீரா கன்ஸ்ட்டிரக்ஷன்' வளர்ந்தால் தாங்கள் அடியோடு அவ்வளவுதான் என அவர்களுக்கு நன்கு புரிந்து போயிற்று. பொய் கணக்கு, போலிக் கணக்குக் காட்டி தரமற்ற பொருட்களை பயன்படுத்தி பல நாட்களுக்கு இழுக்கப் போட்டு மார்க்கெட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு இருப்பது போல் காட்டி கொள்ளை இலாபம் சம்பாதித்து வந்தவர்கள் அவர்கள். விஷயம் தெரிந்தவர்கள் கண்ணிலேயே விரலை விட்டு ஆட்டி விடுவார்கள். அப்படியிருக்க அப்பாவிகள் மாட்டினால் சுத்தமாக மொட்டை தான். பாக்யலெஷ்மி குருப் மாதிரி பெரிய கோடீஸ்வரர்களை சுலபத்தில் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை.

எனவே தான் அவர்களுடன் மோதாமல் நித்யாவிற்கு இடைஞ்சல்கள் ஏற்படுத்தி வந்தனர். ஆனால் எல்லா வற்றையும் தன் துணிச்சலான முடிவினாலும், தீர்க்கமான சிந்தனையாலும் நித்யா வெற்றி கொள்ள அவர்களால் சகிக்க முடியாமல் போயிற்று. இனி பாக்யலெஷ்மி குருப்பையும் விடக்கூடாது என்று நில ஆக்கிரமிப்பு விவகாரத்தை பொய்யாய் உருவாக்கி கலவரம் ஏற்படுத்த முயன்றனர்.

ஆனால் அதிலும் தப்பியதுடன் இவர்கள்தான் செய்திருப்பார்கள் என வினய் கண்டு கொள்ள இவர்தம் பேச்சே காரணமாக அமைந்தது. அவன் தன் செல்வாக்கை பயன்படுத்தி இவர்களின் கள்ளமார்க்கெட் சிமெண்ட் பற்றி தகவல் கூறி நடவடிக்கை எடுக்க வைத்துவிட்டான். அதனால் பல இலட்சங்கள் நஷ்டமானது. எனவே



தான் அவனை அழித்துவிடும் வெறியோடு வெடிகுண்டு மாரியை துணை கொண்டு புதிய கட்டடத்திற்கு குண்டு வைத்து தகர்த்துவிட ஏற்பாடு செய்தனர்.

சந்துருவால் சாரா எங்கு சென்றாள் என கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் அலைபேசியில் தொடர்பு கொள்ள இயலவில்லை; கழட்டி போடப்பட்ட சிம்கார்டை எங்ஙனம் தொடர்பு கொள்ள முடியும்? அவள் தங்கி இருந்த ஹாஸ்ட்டலில் இருந்து பல இடங்களில் தேடியும் தகவல் ஒன்றும் கிடைக்காமல் நித்யாவை பார்க்க வந்தான். விவரம் சொன்னதும் பதறிப் போனாள்.

''எங்காவது விபத்தில் மாட்டிக் கொண்டாளா? இல்லாவிட்டால் இப்படி தொடர்பு கொள்ளாமல் இருக்க மாட்டாள். அவள் மிகவும் கவனம் மிகுந்தவள். என்ன வாயிற்று? பரத் போலீசில் சொல்லிவிடலாமா?''

''கண்டிப்பாக சொல்ல வேண்டும். அவர்களுடன் சேர்ந்து நாமும் தேடும் பொழுது சீக்கிரம் கண்டுபிடித்து விடலாம்.''

இவர்கள் இப்படி கலவரத்தில் இருந்தபொழுது வெடி குண்டு மாரி வேலை ஆட்களோடு வேலை ஆளாய் கலந்து உள்ளே சென்றான். வெடிகுண்டை பொறுத்தி விட்டு அவன் வெளியே வந்தபொழுது போன் ஒலித்தது. ''காரியம் கச்சிதமாய் முடிந்துவிட்டது. என்னோட செட்டில்மெண்ட் எப்படி? யார்கிட்டே...? தீப்தி பொண்ணுக்கிட்டயா பணத்தை கொடுத்து விடுறீங்க? சரி நான் வாங்கி கொள்கிறேன்'' என்றான்.

அரைகுறையாய் கவனித்த சந்துரு ''யாரது?'' என குரல் கொடுக்க... ''ஒண்ணுமில்லேங்க' என்றவன் பதுங்கி மறைந்தான்.

''யாரிவன்? இதற்கு முன் இவனை பார்த்தது இல்லையே?'' என யோசித்தான். காவலர்களிடம் புகார் சொன்னதும் அவர்கள் விசாரிக்க வந்தனர். வெளியே சென்றிருந்த வினயும் அப்போதுதான் வந்து சேர்ந்தான்.

''நித்தி! என் செல்லை விட்டுவிட்டு சென்று விட்டேன். நீ பார்த்தாயா?''

''என் கைப்பையில் தான் எடுத்து வைத்தேன்'' என அதைப் போய் எடுத்து வந்தான். பரத் விவரம் சொல்ல.

''என்னாச்சு? சாராவை காணலியா?'' என்றவன் செல்லை வாங்க 'புதிய குறுஞ்செய்தி' 'க' என எழுத்துகள் வர பட்டனை அமுக்கினான்.

அதில் ''வெடிகுண்டு மாரி - சேவ் த பில்டிங்'' என சாராவின் குறுஞ்செய்தி வந்திருந்தது.

''என்ன குண்டு? எங்கே வைத்திருக்கிறார்கள்? இந்த கட்டடத்திற்கா? எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டுமே! அவர்கள் சாராவை கடத்தி போய்விட்டார்களா என்ன?'' என வினய் வாய்விட்டே சொல்லிவிட,

நித்யா அதிர்ந்து போனாள். ''வெ..டி.... வெடி குண்டா? ஐயோ! அம்மா... என் கனவு கட்டடம் தரை மட்டமாகப் போகிறதா...? இதை... என்னால் தாங்கவே... முடியாது... இதற்கு... எதுவும்... நேர்ந்தால்... நான் உயிரை விட்டுவிடுவேன்.''

''முட்டாள்தனமாய் பேசாதே நித்தி'' என அதட்டிய வினயின் கைகளிலேயே மயங்கி விழுந்தாள்.

சந்துருவிற்கு தான் பார்த்த சந்தேகமான ஆளைப் பற்றிய நினைவு வந்தது. அவன் என்ன போனில் பேசினான்? என ஞாபகப்படுத்திப் பார்த்தான். யாரையும் கலவரப்படுத்தாமல் வெடிகுண்டு எடுக்கும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். அவன் 'தீப்தியிடம் பணம் கொடுத்து விடுங்கள்' என சொன்னது சந்துருவிற்கு ஞாபகம் வந்தது. அதை உடனே சொல்ல, ''அப்படியென்றால்... தீப்தியும் இந்த சதித்திட்டத்தின் உள் ஆளாய் தான் இருக்க வேண்டும்'' உடனே காவலர்கள் அவள் வீட்டிற்கு சென்றனர். அவளை பிடித்ததும், ''நீங்க ஒரு பெண்ணை இரவு நேரத்தில் கைது செய்ய முடியாது. பின்னால் பிரச்சனை வரும்'' என மிரட்டினாள்.



பரத் முன் வந்தான். ''உன்னோட சதி எல்லாம் வெளிவந்துவிட்டது. நீ எங்களுடன் ஒத்துழைத்தால் உன்மேல் பழி வராமல் உன்னை வெளியே விட்டு விடுவோம். இல்லாவிட்டால் நீயும் சேர்ந்து கம்பி எண்ண வேண்டிவரும்.''

அவனுக்கு கோபம் வந்து தீப்தி பார்த்ததே இல்லை. மேலும் தன் நிலைமையைப் பற்றி யோசித்தாள். தான் மாட்டிக் கொள்ளாமல் தப்பிக்க வேறு வழி எதுவும் இல்லை என்பதும், வினய் வந்திருந்தால் இந்தளவு கருணை கூட காட்டியிருக்கமாட்டான் என்றே தோன்றியது. வெடிகுண்டு வைத்த இடத்தையும், S.K. பில்டர்ஸ் திட்டம் பற்றியும் சொன்னதும் விரைவாய் வேலைகள் முடிந்தன. வெடிகுண்டு நிபுணர்கள் குண்டை கைப்பற்றி செயல் இழக்கச் செய்தார்கள். காவலர்கள் S.K. பில்டரை கைது செய்து சாராவை விடுவித்தார்கள். வினய் நித்யாவை விட்டு அந்

தண்டை, இந்தண்டை நகராமல் ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான்.

''என் அருமை கண்ணம்மா! உன் காதலை இப்படி உயிரற்ற கட்டடத்தின் மேல் வைக்காதே! அதை என் மேல் வை. மண்ணுக்காக உயிரை கொடுக்க நினைக்காதே, மனிதருக்காக கொடு.''

மறுநாள் கோலாகலமாய் திறப்பு விழா நடந்தேறியது. மீரா, இராஜி, தேவன் இவர்கள் மனம் நிறைந்து ஆசீர்வதிக்க தன் மனம் கவர்ந்த கண்மணியின் கரம் பற்றி புதிய கட்டடத்தினுள் அடியெடுத்து வைத்தான் வினய்.

அவள் பூவாய் மலர்ந்து போனாள்.